بسم الله الرحمن الرحيم

# முஸ்லிம் அத்வைத மூலமொழி
# துஹ்பத்துல் முர்ஸலா

என்னும் தௌஹீது பொக்கிஷங்களை
உருது, அறபி பாஷைகளிலிருந்து

நெல்லிக்குப்பம்

மௌல்வி முஹம்மது அப்துர் ரஹ்மான் ஸாஹிபு

அவர்களால் உரை படுத்தப்பட்டு

இவற்றுடன் ஷெயார் திராவிட அத்வைத
நூல்களிலிருந்து எடுத்தெழுதிய

## இந்துமத வேதாந்த பகுதி

என்பதையும் சேர்த்து ஒரே புத்தகமாகவும், அதனோடு

## ஞான உணர்ச்சிக்கு அஸ்திவாரம்

என்னும் விளக்க உரையுடன் அச்சிட்டு விளங்கி வந்ததை
ஷெ உரையாசிரியா அவர்களின் குமாரர்களிடம்

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

அவர்கள், மீண்டும் ஒரு பதிப்புக்கு அனுமதி பெற்று
தங்களது சொந்த பொருளைக் கொண்டு தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

---

மூன்றும் பதிப்பு காப்பிகள் 2000.

1962

*Translation Registered Copy-right*

பிஸ்மில்லாஹி.

# விளம்பரம்.

இதனால் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில்:—முஸ்லிம் அத்வைத மூலமொழி, துஹ்பத்துல் முர்ஸலா, இந்துமத வேதாந்த பகுதி எனனும் முப்பெயருடன் அச்சியற்றப்பட்ட இப்புத்தகம் 1867-ஹு 25-வது ஆக்ட், 20-வது பிரிவு, 8-வது விதியின் பிரகாரமும், புதிய 1957-ஹு காப்பிரைட் விதிகளின்படியும் இந்திய யூனியனில் காபிரைட் (ரிஜிஸ்டர்) செய்யப்பட்டிருக்கிறது.

ஆகையால் இந்தப் புத்தகம் முழுவதையுமாவது இதிற் சில பாகத்தையாவது அடியில் கையொப்ப மிட்டிருக்கிற (உரையாசிரியரின் குமாரர்களான) இப்புத்தக உரிமையாளர்களின் உத்திரவின்றி ஒருவரும் அச்சிடக்கூடாது. மீறி அச்சிட்டால், மேற்படி ஆக்டில் சொல்லி யிருக்கிறபடி கோர்ட்டின் மூலமாய் அதனாலுண்டாகும் கஷ்டநஷ்டமனைத்தும் வசூல் செய்யப்படும்.

டைட்டில் பேஜில் எங்கள் கையெழுத்து இல்லாத புத்தகம் கள்ளர்களால் வெளிவந்த தாகையால் அக்கள்ளர்களைக் காண்பிப்பவர்களுக்குத் தக்க இனாம் கொடுக்கப்படும்.

இப்புத்தகம் தேவையுள்ளவர்கள்

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
ஹமீதிய்யா பில்டிங்ஸ், நெ. 20, ஹைரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

என்ற விலாசக்காரரிடம் கை விலைக்கும் வி. பி. பார்சல் மூலமாயும் பெற்றுக் கொள்ளலாம்.

கெல்லிக்குப்பம் மௌல்வி முஹம்மது அப்துர் ரஹ்மான் ஸாஹிப் அவர்களின் புத்திரர்கள் தெரிவிப்பதாவது:—

உர்து, அறபி பாஷைகளிலிருந்து எங்கள் தகப்பனார் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு ரிஜிஸ்டர் செய்யப்பட்டு பல முறை வெளிவந்துள்ள இப்புத்தகத்தை மீண்டும் ஒரு முறை அச்சிட்டு விற்[illegible] செய்துகொள்ள சென்னை, திருவல்லிக்கேணி, ஹாஜி எம்[illegible] ஹமீது அண்டு ஸன்ஸ் அவர்களுக்கு அனுமதி [illegible]றோம்.

டைட்டில் பேஜில் (எங்கள் முன் வழக்கங்கள் போல்) A. முஹம்மது அப்துல்லா, A. அப்துர் ரஹீம் என்ற இருவரில் ஒருவர் கையொப்பமேனும் அவசியம் இருந்து வரும். மேற்கண்ட எங்களல்லாத மற்றவரெவரும் இப்புத்தக சம்பந்தமான விவகாரங்கள் செய்ய உரிமையாளர்களல்ல என்பதையும் இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

[illegible]னம்
A. முஹம்மது அப்துல்லா.
A. அப்துர் ரஹீம்.
(உரிமையாளர்கள்)

தைக்கால் வீதி
கெல்லிக்குப்பம்.
1962

# அத்வைத ஞான உணர்ச்சிக்கு அஸ்திவாரம்.

## முஸ்லிம் அத்வைத மூலமொழியைப்பற்றிச் சிலர் தோஷங்கூறல்.

1924 ஹு அச்சியற்றப்பட்டு முஸ்லிம் அத்வைத மூலமொழி என்ற நாமத்துடன் வெளிவந்துலாவும் வேதாந்த நூலில் சிலர் தோஷங்கூறித் தூஷிப்பதாகச் செவியுற்று வந்தேன். தமிழுலக முஸ்லிம்களில் அத்வைத ஞானமுள்ள அறிஞர் எவரும் அவ்வாறு குற்றங்கூறார்களென்றும் அந்த ஞான உணர்ச்சி கிஞ்சித்து மில்லாதவர்களுக்கு அதை உற்றுணரும் ஆற்றலில்லாமையால் அதில் கூறியுள்ள அத்வைத மொழிகளை அவர்கள் காணும்போது "ஓ! இது நமது மார்க்கத்துக்கு விரோதமான புத்தக" மென்று தோஷங்கூறி மறுப்பார்களென்றும் அத்தகையினர்க்கு இது பயன்படாது என்றும் அத்வைத ஞானமுள்ளவர்களே இதை ஆவலுடன் ஏற்று ஆதரிப்பார்களென்றும் ஏற்கனவே எனக்குத் தெரியும். இதற்குச் சாக்ஷிகளாகச் சிலர் ஷை புத்தகத்தைச் சிலாகித்துப் புகழ்ந்தும் சிலர் குற்றங்கூறி இகழ்ந்தும் எனக்குக் கடிதங்களெழுதி யிருக்கிறார்கள். பினாங்கு வாசியாகிய எனது நண்பரொருவருக்கும் எனக்கும் இது விஷயத்தில் தபால் மூலமாகத் தர்க்கம் நடந்துவருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் நானது

1925௵ பிப்ரவரிமீ த்துடன் நிகழும் றஜபுமீ த்திய தாஜுல்
இஸ்லாம் மாசிகை 16-வது பக்கத்தில் முஸ்லிம் அத்வைத மூல
மொழி என்ற தலையங்கத்தின் கீழ் ஒரு சாலிக்கு செவ்வாய்ப்
பேட்டை (சேலம்) என்று கையொப்பமிட்ட கனவானொருவர்
ஷை புத்தகத்தில் தோஷங்கூறப் புகுந்து சில பல வரைந்து
கடைசியில் "தவறான கிதாபுகளை எழுதி ஜனங்களை அபாயத்திலாக்
காதிருக்கும்படியாக அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்"
என்று மரியாதை தந்து முடித்திருக்கிறார். இதை ஆமோதித்து
பத்திராதிபரும் "இத்தகைய மார்க்க விரோதமான புத்தகம்
என்னால் வெளி வந்ததே என்று ஆச்சரியப்பட நேர்ந்தது" என்று
தமது குறிப்பில் காட்டி யிருக்கிறார். பத்திராதிபர் போலவே
சாலிக்கு அவர்களும் சிறந்த ஆலிமாயிருப்பார்க ளென்று நம்பு
கிறேன். சாமானியப் படிப்பாளிகளைக் காட்டிலும் ஆலிம்களுக்கு
அத்வைத ஞானம் அதிகமா யிருக்கு மென்பதிற் சந்தேகமில்லை.
இத்தகைய உலமாக்கள் என் புத்தகத்தில் கவனம் செலுத்தி
அதில் தவறுக ளிருப்பதாகக் கண்டு அப்படிப்பட்ட மார்க்க
விரோதமான புத்தகங்களை வெளியாக்கக்கூடா தென்று மரியாதை
யுடன் எனக்குச் சற்புத்தி போதிக்க முன்வந்ததைப் பற்றி நன்றி
பாராட்டுகிறேன். அந்தத் தவறுகளைத் திருத்தி உண்மையை
வெளிப்படுத்தவேண்டு மாதலால் அது சம்மந்தமாக எனக்குத்
தோன்றும் ஆக்ஷேபங்களைச் சொல்லி அவர்களிடம் சமாதானம்
பெறவேண்டிய நிமித்தம் ஒரு தர்க்கம் தொடங்கி நெடுநாள்
வளர்ந்து கடைசியாகத் தமிழுலக முஸ்லிம்களுக்கும் பெரும்
பயனை விளைப்பதாகவே அந்தத் தர்க்கம் முடிவுபெறக் கூடு
மென்று நம்புகிறேன். இந்தத் தர்க்கத்துக்காக தாஜுல் இஸ்லாம்
மாசிகையில் இடந்தரவேண்டுமென்று பத்திராதிபரைக் கேட்
டிருக்கிறேன். என்னால் ஷை புத்தகம் வெளிப்பட்டதைப் பற்றி
பத்திராதிபர் ஆச்சரியப் பட்டதனால் முந்தி அதற்குக் காரணம்
சொல்லிவிட்டு அதன் பிறகு அவசர நிமித்தம் தற்போது இதிலே
தேர்க்கத்தை ஆரம்பித்துக் கொள்ளுகிறேன். வபில்லாஹித்
தவ்பீகு.

---



## முஸ்லிம் அத்வைத மூலமொழி வெளிவந்த காரணம்.

எல்லா மார்க்கங்களிலும் இஸ்லாம் மார்க்கமே சிறந்த மார்க்க
மென்று எதிர்மதவாதிகளுக்கு முன் நாம் பறைசாற்றி வருகிறோம்.
அந்தச் சிறப்புக்கு மூலகாரணமா யிருப்பது முதற் பொருளான
றக்கு தஆலாவை ஒன்றுபடுத்த லென்னும் தவ்ஹீதாகிய அத்வை
தந்தான் என்பது மறைந்ததன்று. இந்துமதத் தவ்ஹீதாகிய
அத்வைதம் வேதாந்த நூல்களில் மாத்திரம் கூறப்பட்டிருக்கிறதே
தவிர மற்றப்படி அனுஷ்டானம் அதற்கு மாறாகத் தானிருக்கிறது.
இஸ்லாம் மார்க்கத்தில் தவ்ஹீதை, மனம், வாக்கு, காயம்
என்னும் திரிகரணங்களும் ஒத்துச் சாதிக்கின்றன. அதாவது:—
இருப்ப தொன்றே என்னும் ஏக தெய்வக் கொள்கையும் ஏகதெய்வ
விண்ணப்பமும் ஏகதெய்வ வணக்கமும் ஆகிய இம்மூன்றும்
இஸ்லாம் மார்க்கத்தில்தான் இசைந்து இயங்குகின்றன. இந்த
இயக்கந்தான் இதர மதஸ்தரை இஸ்லாமில் இழுக்கக் கூடிய
யந்திரமா யிருக்கிறது. அன்றியும் தத்துவ விசாரணை புரிந்து
தான் யார், தன் தலைவன் யார், என்று ஆராய்ந்து தலைவனில்
தன்னை ஐக்கியம் செய்வதற்குரிய முத்தி சாதனத்துக்கு நேரான
மூலமந்திரமாகிய லாஇலாஹ இல்லல்லாஹு என்னும் கலிமாவை
பண்டிதர் பாமரர் எல்லோருக்கும் பொதுவாகப் போதிக்க வேண்டு
மென்று இஸ்லாம் மார்க்கந்தான் கட்டளை யிடுகிறது. இம்மார்க்
கத்தில் தோன்றி மறைந்த மஹான்களான ஆரிபீன்கள் இயற்றி
யுள்ள அத்வைத நூல்கள் அநந்தமிருக்கின்றன வென்பதை அறி
யாதார் சங்கியை அற்பமே.

அப்படியிருக்க எதிர் மதவாதிகளான இந்துக்கள் இஸ்லாம்
மார்க்கமானது கர்மம், பக்தி என்னும் இருவித சாதனங்களை மாத்
திரம் போதிக்கிறதே யொழிய முத்திசாதனமாகிய ஞானம் அதில்
அறவே கிடையாதென்றும் தத்வ ஆராய்ச்சிசெய்து தன்னையும்
தலைவனையும் அறிந்து தலைவனே தானாயிருக்கிற உண்மையை
விளக்கிக்காட்டுகிற ஞானநூல் ஒன்றும் இஸ்லாம் மார்க்கத்தில்
போர்கள் நகப் புலப்படவில்லை யென்றும் தங்கள் வேதத்தில் கர்ம
அதனால் சக்திகாண்டம், இவைகளுடன் ஞானகாண்டம் இருப்ப
சொல்கிறார்க ஆதாரமாகக் கொண்டு தங்கள் மதாச்சாரிகள்

அநேக அத்வைத நூல்களை இயற்றி இருக்கிறார்களென்றும் சமஸ்
கிருத பாஷையிலிருந்து அவை தமிழ் பாஷையில் செய்யுள்களாக
வும் வசனரூபமாகவும் மொழிபெயர்க்கப் பட்டு நீண்டகாலமாக
நிலவிவருவதால் தங்கள் மார்க்கத்தார் அதைப் படித்து ஞானிக
ளாகி முக்தியடைந்திருக்கிறார்க ளென்றும் தற்போதும் அந்த
கைய ஞானிகள் தங்களுக்குள் ஆயிரக்கணக்கா யிருக்கிறார்க
ளென்றும், இஸ்லாம் மார்க்க வேதத்தில் ஞானகாண்டமு மிருந்
தால் அம்மார்க்கத்தி லுதித்த மஹான்கள் அதை அகத்தியம்
வெளிப்படுத்தி யிருப்பார்களென்றும் அப்படி இல்லாமை
யினாலேயே இஸ்லாம் மார்க்கத்தில் அத்வைத ஞானம் சுத்த
சூன்யமா யிருக்கிறதென்றும் என்ன செய்வார்கள் பாவம்! முதல்
நூலிலிருந்தால்தானே சார்பு நூல் பிறக்கு மென்றும் ஆதாரமே
இல்லாதபோது ஆதேயம் எங்கிருந்து வரும் என்றும், இன்னு
மிவை போன்ற ஏளனமான வார்த்தைகளையும் வாயால் பேசியும்
கையால் எழுதியும் வந்ததை நான் கேட்டும் பார்த்து மிருக்கிறேன்.
இதனால் எனக்கு மதாபிமானச் சார்பாக ரோஷம் பிறந்து அப்
ஸோஸ்! அப்ஸோஸ்!! ஆரம்பத்திலேயே அத்வைத ஞானத்துக்கு
அஸ்தி வாரமான மூலமந்திரத்தை அனைவருக்கும் உபதேசிக்க
வேண்டு மென்று தாராளமாகக் கட்டளை யிடுகிற நமது மார்க்கத்
தின் பெருமை தலைகீழாகப் புரண்டு ஞானமே இல்லாத மார்க்க
மென்று ஏளனம் செய்யக்கூடிய நிலைமைக்கு வந்து விட்டதே
யென்று ஏங்கிப் பெரு மூச்செறிந்து சற்று நிதானித்து யோசித்
தேன். கடவுளுக்கும் உலகத்துக்கு முள்ள சம்பந்தம் இன்னவித
மென்றறியாமல் ஜகத் கர்த்தனும் சர்வசக்தனும் சர்வக்ஞனும்
சர்வாதீனனுமான கடவுள் ஒருவன் உண்டென்று மாத்திரம் பரோ
க்ஷமாக ஒப்புக் கொண்டு அவனுக்கு வழிபடுவதுதான் தவ்ஹீ
தாகிய அத்வைத மென்றும் அப்படி யொப்புக்கொண்டு வழிபடு
கிறவனே முவஹ்ஹிதாகிய அத்வைதி யென்றும் கடவுளையும்
உலகத்தையும் ஏகமாக்கி எல்லாம் அவனாயிருக்கிறான் என்று
ஆரிபூன்கள் சொல்கிற தவ்ஹீதாகிய அத்வைதம் சுத்தப் பயித்
திய மென்றும் எண்ணிக் கொண்டு வஹ்மாகிய மருளிற் சிக்குண்டு
அத்வைத உண்மையை ஏற்கக்கூடாமல் அதை
லாஹிரு உலமாக்கள் அத்வைதக் கொள்கை
என்றும் ஆரிபூன்களுடைய கிதாபுகளைப் பார்ப்



கெட்டுப் போவார்களென்றும் அவைகளைப் பார்க்கக்கூடா
தென்றும் கிதாபுகளை எழுதிப் பரத்தினதனாலேயே அந்தக்
கொள்கையில் ஜனங்களுக்குத் துவேஷமுண்டாகி எவரும் அத்
வைதத்தை ஆதரிக்கவும் அதைப் படிக்கவும் எதிர்மதவாதி
களிடத்தில் அதைப்பற்றித் தீரமாகச் சம்பாஷிக்கவும் இந்தச்
சத்தியம் எங்கள் வேத சுருதிகளால் நிலைநாட்டப்பட்ட தென்று
ஸ்தாபிக்கவும் ஏதுவில்லாமல் போய்விட்டதென்று என் மன
துக்குப் புலப்பட்டது.

பிறகு நான் சிந்தித்ததாவது:—அத்வைதக் கொள்கையை
சத்தியமென்று ஏற்பவரும் அதை அசத்திய மென்று மறுப்பவரு
மான இருவகுப்பாரும் இருக்கும்போது அத்வைத நூல்களைப்
பார்க்கக் கூடாதென்ற தீர்மானம் மறுப்போர் கக்ஷியைத்தான்
கட்டுப்படுத்தும், ஏற்போர் கக்ஷி அதை இலக்ஷியம் செய்யாது.
மறுப்போர் தங்கள் கொள்கைக்கு விரோதமான நூலைப் பார்வை
யிட்டாலும் இது தவறென்று தள்ளிவிடுவார்களே யொழிய
அதனால் தங்கள் கொள்கையை விட்டு விட மாட்டார்கள். ஆனால்
அத்வைதத்தை உள்ளபடி உணர்ந்துகொள்ளக் கூடிய பூரசித்தக்
காரர் பாரபக்ஷமில்லாமல் உண்மையைக் கைக்கொள்ள வேண்டு
மென்ற எண்ணத்துடன் ஆய்ந்து நோக்குவார்களாகில் அவர்
களின் துவிதக்கொள்கை நீங்கி அத்வைதக் கொள்கை குடியேறக்
கூடும். அத்வைத நூல்களைப் பார்க்கக் கூடா தென்று தங்கள்
பக்ஷத்தாரை அவர்கள் கட்டுப்படுத்தின போதிலும் அவைகளை
வெளிப்படுத்தக் கூடாதென்று அத்வைதிகளைத் தடைசெய்ய
அவர்களுக்கு அதிகாரமில்லை. "அத்வைத மதம் மார்க்க
விரோதம்", என்று வாதிக்கின்ற இவர்களிடத்தில் இந்துமத
வேதாந்தி எவரேனும் வந்து அத்வைத சம்பாஷணை செய்ய நேர்ந்
தால் இவர்கள் எங்கள் வேதத்தில் அத்வைதக் கொள்கை இல்லை
யென்றே சாதிப்பார்கள். அப்போது இஸ்லாம் மதவேதம் அத்
வைத ஞானமில்லாத அற்ப வேதமென்று அவர்கள் ஏளனம் செய்
வதற்கு இவர்கள் அவர்களுக்குப் பக்கபலமான சாக்ஷிகளா யிருப்
பார்கள். இன்னும் அத்வைதக் கொள்கையைச் சத்தியமென்று ஏற்
போர்களிலும் சிலர் அதை வெளிப்படுத்தக் கூடாதென்றும்
அதனால் சாமானிய ஜனங்கள் வழிகெட்டுப் போவார்களென்றும்
சொல்கிறார்கள். இதானது ஒருவன் தன் தந்தையின் ஆதீனத்

ணைத் தம்பிமார்கள் அடைக்கால் துர்வினியோகம் செய்து
கெட்டுப் போவார்க ளென்று அதை அவர்களுக்குக் காட்டாமல்
தானே அமுக்கி வைத்துக் கொள்வது போலிருக்கிறது. இது
கதவை மூடிக் கழுத்தை அறுத்த லென்னும் வஞ்சகத் தொழிலே
யல்லாது வேறல்ல. அத்வைத ஞானத்துக்கே ஆதி வித்தாக
அமைக்கப்பட்ட அல்கலிமத்துத் தையிபாவை அனைவர்க்கும்
போதிக்கவேண்டு மென்று நமது மார்க்கம் விதிக்கும்போது
அதை வெளிப்படுத்தக்கூடா தென்பது மார்க்க விரோதமேயாம்.
பிறர் அபிப்பிராயம் இதற்கு மாறு பட்டிருந்தாலு மிருக்கட்டும்,
இதற்குத் தக்கவிதமான பரிகாரம் செய்ய வேண்டுமென்று என்
மனம் எனக்கு ஆலோசனை சொல்லிற்று. அதன்படி எனது
சத்திய வேதத்தின் முக்கிய கருத்து அத்வைதந்தா னென்று
அதன் பெருமையை வெளிப்படுத்தவும் அத்வைதக் கொள்கையை
ஆதரிக்கவும் அதைத்தழுவி யனுஷ்டிக்கும் தமிழுலக முஸ்லிம்
களுக்கு அத்வைத ஞான உணர்ச்சியை உண்டாக்கவும் **கலிமத்**
**துல் ஹக்கி** என்னும் கிதாபிலிருந்து முக்கியமான சில பாபுகளை
மொழிபெயர்த்து **முஸ்லிம் அத்வைத மூலமொழி** என்று
பெயரிட்டு அதற்குச் சார்பாக **துஹ்பத்துல் முர்ஸலா** என்னும்
ஓர் அரபு வேதாந்தநூலைத் தமிழ் படுத்தி அத்துடன் சேர்த்
திருக்கிறேன். இன்னும் இந்துமத அத்வைதிகளில் எவரேனும்
வந்து நம்மவரிடத்தில் அத்வைத சம்பாஷணை செய்ய நேர்ந்தால்
அவர்கள் பிரயோகிக்கும் சொற்களை அறிந்து விடையளிப்பதற்கு
அவர்களுடைய வேதாந்த பரிபாஷை நம்மவர்க்குத் தெரிந்திருக்க
வேண்டு மென்றும் அவர்களுடைய வேதாந்தமும் நம்முடைய இர்
பான் நூலும் எந்தெந்த அம்சங்களில் ஒத்திருக்கின்றன வென்
பதை ஊகித்தறிய உதவியா யிருக்கவேண்டு மென்றும் **இந்துமத**
**வேதாந்த பகுதி** என்பதையும் இறுதியில் இணைத்திருக்
கிறேன். மேலே கூறிவந்தவைகளே யான் இப்புத்தகத்தை அச்சி
யற்றி வெளிப்படுத்தினதற்கு முக்கிய காரணங்களென்றறிக.
இப்புத்தகத்துக்குச் சிறப்புப் பாயிரமாக இந்துமத அத்வைத
ஞானி யொருவர் இயற்றிய செய்யுள்களில் அடியிற் கண்ட 2
செய்யுள்கள் யான் இப்புத்தகத்தை வெளி யிட்டதில் எனது
நோக்கம் இது வென்பதை நன்குவிளக்கும்.



அத்துவித நூலுணர்ச்சி முஸ்லீம்கள்
மதத்தினுமுண் டறிமி னென்றே
நித்தியமா மறிவுணர்த்தும் அறபிமொழி
நூலொன்றை நெடுநா ளாய்ந்து
வித்தகமாந் தமிழ்மொழியில் யாவருமே
வெளிதுணர விளக்கி னானல்
சித்தநிறை மகிழ்ச்சியினால் நெல்லிநக
ருறையுமொரு செம்ம லம்மா. (4)

வல்லவர்கள் புகழ்ந்தேத்தும் அத்தகைய
நூலின்பெயர் வழுத்தக் கேண்மோ
தொல்லுலகி னிலைமுஸ்லீம் அத்துவித
மூலமொழி தொகுத்துச் சொன்னோன்
கல்வியினிற் பேரறிவிற் கலைகளிலே
செல்லுகின்ற கருத்து வாய்ந்தோன்
நல்லவர்க ளினமகளால வப்துல்ரகி
மானெனுஞ்சீர் நாவல் லோனே. (5)

மு. அப்துர் றஹ்மான்,
நெல்லிகுப்பம்.

---

## முஸ்லிம் அத்வைத மூலமொழியைப்பற்றிய தர்க்கம் ஆரம்பம்.

ஹிஜ்ரி 1343ஹு ரஜபுமீ° திய தாஜுல் இஸ்லாம் மாசிகை
16-வது பக்கத்தில் முஸ்லிம் அத்வைத மூலமொழி என்ற மகுடத்
தின் கீழ் ஷை புத்தகத்தைப்பற்றி ஆக்ஷேபமாக ஒரு சாலிக்கு
செவ்வாய்ப்பேட்டை (சேலம்) என்பவர் ஷை புத்தகத்தையும்
அத்துடன் சேர்க்கப்பட்டிருக்கும் புத்தகங்களையும் பார்த்ததாகவும்
அதில் இந்துமத வேதாந்த பகுதியும் சேர்த்து முஸ்லிம்களின்
அத்வைதத்துடன் ஒத்துப்பார்க்க ஏதுவா யிருக்கிறதென்று
சொல்லி யிருக்கிறதாகவும் இந்துக்கள் பண்டிதர்களா யிருந்த
போதிலும் அவர்களுக்கு ஹுலூல் (கடவுள் ஒரு வஸ்துவில்
கலந்திருத்தல்) இத்திஹாதுடைய மஸ்அலாவே தெரியாதென்பது

வெளிப்படை யென்றும் அப்படி இருக்க இஸ்லாம் மார்க்கத்துடன் ஒத்துப் பார்க்க இந்து மார்க்கத்துக்கு என்ன ஹகீகத்து இருக்கிற தென்பது தெரிய வில்லை என்றும் பிறவும் எழுதியிருக்கிறார்.

---

## இதன்மேல் நமது ஆக்ஷேபம்.

சாலிகு என்பவர் எதைக் கருதி இதை எழுதினார் என்பது புலப்படவில்லை. இந்துமத பண்டிதர்களுக்கு ஹுலூல் இத்திஹா துடைய மஸ்அலா தெரியாமையே அவர்களுடைய மார்க்கத்தில் இஸ்லாமை ஒத்துப்பார்க்கும் ஹகீகத்து ஒன்றுமில்லை என்பதற்கு அத்தாட்சியா? அந்த மஸ்அலா அவர்களுக்குத் தெரிந்திருந்தால் இஸ்லாமை அவர்களுடைய மார்க்கத்துடன் ஒத்துப்பார்க்க அதில் அந்த ஹகீகத்து இருக்குமா? ஒன்றை மற்றொன்றுடன் ஒத்துப் பார்ப்பதற்கும் ஹுலூல் இத்திஹாதுகளுடைய மஸ்அலாவுக்கும் என்ன சம்பந்த மிருக்கிறது? இரண்டு வர்த்தகர் தங்கள் லேவா தேவி கணக்குகளை ஒத்திட்டுப் பார்க்கவேண்டு மென்றால் கொடுக்கல் வாங்கல்கள் இருவர் கணக்கிலும் சரியா யிருக்கின்றனவா, மாறுபடுகின்றனவா என்பதைத்தானே கவனிக்க வேண்டும்? அவர்களுக்கு ஹுலூல் இத்திஹாது மஸ்அலாவே தெரியாதிருக்க அவர்களுடைய கணக்கை ஒத்துப்பார்க்க எவர் கணக்கிலும் என்ன ஹகீகத்து இருக்கிறது என்று சொல்லலாமா? சொல்லலா மென்றால் அது அர்த்தமில்லாத வெறுஞ்சத்தியமே யாம். சாத்தன் என்பவனுக்கு ஒருகடையும் கொத்தன் என்ப வனுக்கு ஒரு கடையுமிருப்பதாக வைத்துக் கொள்வோம். சாத் தன்கடை நெய்யும் கொத்தன் கடை நெய்யும் ஒரே இனம்தான். இரண்டையும் மாதிரி பாருங்கள் என்று ஒருவன் சொன்னால் மற் றொருவன் அவனை மறுத்து சாத்தனுக்குச் சர்க்கரை என்பதே இன்னதென்று தெரியாதே அப்படி யிருக்க அவன் கடை நெய் யுடன் கொத்தன்கடை நெய்யை மாதிரிபார்க்க அவன் கடைக்கு என்ன தத்துவமிருக்கிறது என்று சொல்வது போலிருக்கிறது சாலிக்கு அவர்களின்வாதம். இவர் ஒத்துப்பார்க்க அதில் என்ன ஹகீகத்து இருக்கிறதென்பது தெரியவில்லை என்



றாரே அதைத் தெரிவிப்பது நமது கடமைதான். ஒரு அங்கத்தி லுள்ள அம்சம் மற்றொரு அங்கத்திலும் பொருந்தியிருக்கிறதா என்று ஆராய்வதே ஒத்துப்பார்த்தலாம்; உதாரணமாக:—சாத்தன் என்பவன் நிறத்தில் சிவப்பனும் வளர்ச்சியில் நெடியனும் படிப்பில் புலவனுமா யிருக்கிறான். இந்த மூன்று அம்சங்களிலும் கொத் தனும் அவனுடன் ஒத்து சிவப்பனும் நெடியனும் புலவனுமா யிருக்கிறான். ஆனால் சாத்தன் குருடனும், கொத்தன் கண்ணனு மாக மாறுபட்டிருந்தாலும் மேலே கண்ட மூன்று அம்சங்களிலும் அவர்க ளிருவரும் ஒத்திருக்கிறார்களென்று சொல்லத் தடை யில்லை. மார்க்கத்துக்குரிய பல அம்சங்கள் ஒவ்வொரு மார்க்கத் திலுமுண்டு. ஞானம், பக்தி, கர்மம் என்பவைகளே அந்த அம்சங்களின் மூலங்களாம். இப்போது மற்ற மார்க்கங்களை விட்டு இஸ்லாம் மார்க்கம், இந்துமார்க்கம் ஆகிய இரண்டு மார்க்கங் களிலும் மேலே கண்ட மூன்று மூலங்களும் இருக்கின்றனவா என்று உற்று நோக்கின் உண்டென்றே ஒப்பவேண்டும். ஞான மென்பது ஜகத்கர்த்தாவாகிய கடவுளின் இருப்பை உள்ளபடி உணர்ந்து அந்தக் கடவுளுக்கும் உலகத்துக்கு முள்ள சம்பந்தம் எப்படிப்பட்ட தென்று ஆராய்ந்து சிந்தித்துத் தெளிவதாம். பக்தி என்பது அந்தக் கடவுளிடத்தில் பேரன்பு வைத்து அவ னுக்கு அச்சப்படுவதாம். கர்மம் என்பது மனம் வாக்கு காயம் ஆகிய திரிகரணங்களும் ஒத்து அந்தக் கடவுளுக்கு வழிபடுவ தாம். இவைகளில் பக்தியும் கர்மமும் இந்துமார்க்கத்தில் ஒரு விதமாகவும் இஸ்லாம் மார்க்கத்தில் வேறு விதமாகவும் மாறு பட்டிருக்கின்றன வென்பது வெளிப்படை. ஞானம் அப்படி யில்லை.

இஸ்லாம் மார்க்கத்தி லுதித்த ஆரிபூன்களாகிய அத்வை திகள் கடவுளின் உண்மையை விளக்கிக் காட்டினதில் அந்தக் கடவுளென்ற வுஜூது ஒன்றே எதார்த்தமான வுஜூதென்றும் சர்வ சிருஷ்டிகளும் மண்ணில் கடம்போல் பொன்னில் பணிபோல் கடலில் அலைபோல் கானலில் ஜலம்போல் அந்த ஒரே வுஜூதில் தோன்றி ஒடுங்குகிற கற்பனையான வுஜூதுகள் என்றும் கானலே ஜலமாகத் தோன்றுவது போல் அந்த வுஜூதே உலகமாகத் தோன்றுகிற தென்றும் ஜலமாகத் தோற்றுகிற கானல் தனது சுயவடிவம் கெடாமல் தானிருந்தபடி இருப்பதுபோல் உலமாகத்

தோற்றுகிற வுஜூது தனது தத்சொரூபமான தாத்து கெடாமல் தானிருந்தபடி பரிசுத்தமா யிருக்கிற தென்றும் வுஜூதே உலகமாக வெளியாயிற்றென்றாலும் உலகத்தை அந்த வுஜூதுதான் என்றாவது வுஜூதுக்கு வேறு என்றாவது சொல்வதற்கு சாத்தியப்படாமல் (லாஐனுன் வலாகைருன்) வுஜூது தானுமல்ல வுஜூதையன்றி வேறுமல்ல என்கிற இலக்கணத்தை உடையதாயிருக்கிறது. உலகம் என்னும் ஆயத்து அஹாதீசு முதலான சுருதிகளாலும் யுக்தியின் தர்க்கந்தாலும் தங்கள் ஆராய்ச்சியின் அனுபவத்தாலும் தெளிந்து சித்தாந்தப்படுத்தி யிருக்கிறார்கள். இதேபோல் இந்து மார்க்கத்தில் தோன்றிய அத்வைத வேதாந்திகள் பிரம்மம் ஒன்றே சத்துப் பொருளா யிருக்கிற தென்றும் பிரமனாதி திரிமூர்த்திகளும் மற்ற சிருஷ்டிகளும் அசத்துப் பொருள்கள் என்றும் பிரமம் தனது சுயவடிவத்துக்குத் தோஷமில்லாமல் தானிருந்தபடி பரிசுத்தமா யிருந்து கொண்டு தானே எல்லாமாய் விருந்திருக்கிற தென்றும் பிரம்மத்தை யன்றி உலகம் ஓர் தனிமுதல் அல்லவென்றும் பிரம்மமே உலகாக விரிந்த போதிலும் உலகம் அந்தப் பிரம்மந்தானுமல்ல பிரம்மத்துக்கு வேறுமல்ல வென்றும் இன்னதன்மைத் தென்று சொல்லவாராத அநிர் வசனீயம் என்கிற இலக்கணத்தை யுடையதாயிருக்கிறது. உலகம் என்னும் பிரம்மத்துக்கும் உலகத்துக்குமுள்ள சம்பந்தம் பழுதைக்கும் அதிற்றோன்றிய பாம்புக்குமுள்ள சம்பந்தம் போல்வது அல்லது கானலுக்கும் அதில் தோன்றும் ஜலத்துக்குமுள்ள சம்பந்தம் போல்வது அல்லது மனதுக்கும் அதில் தோற்றுகிற கனா உலகத்துக்குமுள்ள சம்பந்தம் போல்வது என்று அவசரத்துக்குத் தக்கபடி பல உபமானங்களைக் கூறி அதன் உண்மையை விளக்கிக் காட்டி யிருக்கிறார்கள். இந்த ஹகீகத்தும் இதன் சார்புகளும் இந்துமத வேதாந்தத்திலு மிருப்பதனால்தான் முஸ்லிம் அத்வைத மூலமொழியுடன் இந்துமத வேதாந்தப் பகுதியைச் சேர்த்து இதை நம் இஸ்லாம்மார்க்க அத்வைதத்துடன் ஒத்துப் பார்க்க எதுவாயிருக்கு மென்று எழுதியதென்பதை சாலிக்கு இப்போது தெரிந்து கொள்வாராக.

ஹூலூல் இத்திஹாதுடைய மஸ்அலாவே இந்துமதப் பண்டிதர்களுக்குத் தெரியாதென்கிறார். மெய்தான், ஹூலூல் இத்திஹாது மஸ்அலா என்று நாம்சொல்லும் சத்தரூபமான அறபிவாக்



கியம் அவர்களுக்குத் தெரியாதுதான். ஆனால் அதன் அர்த்தரூபமான பொருளைப்பற்றின வாதம் அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். அவர்களுக்கு அது தெரியாதென்றே வைத்துக் கொள்வோம். அது சம்பந்தமாக நமக்குத் தெரிந்து விட்டதைப் பற்றி நாம் பேசுவோம். ஹூலூல் என்பதற்குக் கடவுள் ஒரு வஸ்துவில் கலந்திருத்தல் என்று அர்த்த மெழுதி யிருப்பது சரிதானா? அந்தக் கலந் திருத்தலுக்கு உபமானங் கூறவேண்டுமாயின் பாலும் நீரும் கலந்திருத்தல் அல்லது கடுகும் சீரகமும் கலந்திருத்தல் அல்லது குடத்தில் மண் கலந்திருத்தல் அல்லது மேகத்தில் ஜலம் கலந்திருத்தல் போல் என்று சொல்லலாமா? சொல்லலாமெனின் ஹூலூலுக்கு ஹால்லு ஒன்றும் மஹல்லு ஒன்றுமாக இரண்டு வஸ்துக்கள் வேண்டுமே? பாலும் நீரும் கலந்திருத்தல்போல் என்ற உபமானத்தில் ஹால்லு எது? மஹல்லு எது? கடுகுஞ் சீரகமும் கலந்திருத்தல் போல் என்ற உபமானத்தில் ஹால்லு எது? மஹல்லு எது? ஹால்லையும் மஹல்லையும் வெவ்வேறாகப் பிரிக்கக்கூடுமா? கூடாதா? ஹால்லு இருக்குமிடத்தில் மஹல்லு இருக்குமா? குடத்தில் மண் கலந்திருத்தல் போல் என்ற உபமானத்தில் மண்ணைவிட்டுக் குடத்தை வேறாகப் பிரித்து வைக்கலாமா? மேகத்தில் ஜலம் கலந்திருத்தல் போல் என்ற உபமானத்தில் மேகம் ஒரு பொருள் என்றும் ஜலம் அதற்கு வேறான ஒரு பொருள் என்றும் சொல்லலாமா? குடம், மேகம் என்ற இஸ்முகளுக்கு முஸம்மாக்களான பொருட்கள் எவை? கடவுள் கலந்திருக்க அவனையன்றி அவனுக்கு அன்னியமாக ஒரு வஸ்துவுண்டா? ஹூலூலுக்குக் கடவுள் ஒரு வஸ்துவில் கலந்திருத்தல் என்று எழுதிவிட்டதால் அதன் அர்த்தம் தெரிந்து விட்டது. இனி இத்திஹாது என்பதற்கு உபமானத்துடன் அர்த்தமும் மேலே காட்டியுள்ள வினாக்களுக்கு விடைகளும் தரவேண்டுமாய் சாலிக்கு அவர்களை மிக்க பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். வஸ்ஸலாம் (விடைகள் வந்தபின் விஞ்சியவை தொடரும்.)

மு. அப்துர் றஹ்மான்,
கெல்லிகுப்பம்,

PRINTED AT

SHAHUL HAMEEDIA PRESS,

MADRAS.

திருவாளர்

சென்னை கா. சி. சிவசங்கர முதலியாரவர்கள்

இ ய ற் றி ய

# சிறப்புப் பாயிரம்.

நீரிடைத் தோன்று மலையெலா மந்த
நீரினை யன்றிவே றில்லை
பாரிடைத் தோன்றுங் கடமெலா மண்ணைப்
பார்க்கின்வே றில்லையே யந்த
சீரினை யுணர்ந்துங் கடவுளின் வேறு
திருட்டிக ளென்பது மழகோ
கூறிய மதியா லுணருமி னென்றே
கொடுத்தன னொரு நூலே. (1

வே று .

கானலினீர் பொய்யெனினுங் கட்புலனால்
மெய்யாகக் காண்டல் போலும்
ஊனமிலா வறிவினுக்குப் பிரமமே
மெய் யெனினும் உலகந்தானே
ஆனபடி பலவடிவாய் விழியினுக்குங்
காணுமதை யறிவா லோர்ந்தே
ஞானவடி வடைமின்கள் இன்பமுறு
வீரெனவே னவிலு மந்நூல். (2)

வே று .

மதங்களின் பேதமெல்லாம் வகைவகை
யெடுத்துக் காட்டி
இதமுடன் பிரமந்தானே யெவையுமாய்
விளங்கு மென்னும்
விதவித மாகத் தோன்றும் விரிந்தவிவ்
வுலகந் தானே
அதனிடத் தோற்ற மல்லா லதற்குவே
றல்ல வென்னும் (3

## சிறப்புப் பாயிரம்.

வேறு.

அத்துவித நாவுணர்ச்சி முஸ்லீம்கள்
மதத்தினுமுண் டறிமி னென்றே
நித்தியமா மறிவுணர்த்தும் அரபிமொழி
நூலொன்றை நெடுநா ளாய்ந்து
வித்தகமாத் தமிழ்மொழியில் யாவருமே
வெளிதுணர விளக்கி னானால்
சித்தநிறை மகிழ்ச்சியினால் நெல்லிநக
ருறையுமொரு செம்ம லம்மா (4)

வல்லவர்கள் புகழ்ந்தேத்தும் அத்தகைய
நூலின்பெயர் வழுத்தக் கேண்மோ
தொல்லுலகி னிலைமுஸ்லீம் அத்துவித
மூலமொழி தொகுத்துச் சொன்னேன்
கல்வியினிற் பேரறிவிற் கலைகளிலே
செல்லுகின்ற கருத்து வாய்ந்தோன்
நல்லவர்க ளினமகலா வப்துல்ரகி
மானெனுஞ்சீர் நாவல் லோனே. (5)

---

# முகவுரை.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

**அல்லாஹு முஹம்மதுன் பீஜமீஇ அப்ஆலிஹி
வமுஹம்மது னில்லாஹு முஸல்லின் அலைஹி
மஅ ஸஹ்பிஹி வஆலிஹி.**

சத்துப்போலியான சகல பிரபஞ்சங்களுக்கும் ஆதார சத்தாய் எக்காலத்தும் அழிவில்லாது சதோதயமாய் விளங்குவது எதுவோ அதுவே வுஜூது என்று வழங்குவர். ஆரிபுகள் என்னும் அத்வைத ஞானிகள் இப்பொருளைத் தழுவியே பூர்வ காலப் பெரியார் குர்ஆனும் ஹதீசுகளுமான சுருதிப் பிரமாணங்களை மேற்கோளாகக் கொண்டு அறபி பார்ஸி பாஷைகளில் அனந்தம் அத்வைத நூல்களை இயற்றி யிருக்கிறார்கள். ஆனால் வஹ்மு என்னும் பேத புத்தியின் மிகைப்பானது இந்த உண்மையை ஒப்புவதற்குத் தடையா யிருக்கிறது. கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்னும் அரிய முயர்ச்சியால் அந்தத் தடையைத் தகர்த்து சத்தியத்தைச் சாதிக்கும் அருளில்லாத அறிவாளர் மலிந்து கிடக்கின்றனர்.

ஆகவே அவர்கள் ஹக்கும் கல்கும் ஏகமென்ற அத்வைதம் பிரத்தியக்ஷ விரோதம் என்றும் அதை ஒப்புவது கூடாதென்றும் வாதிக்கின்றார்கள்.

இன்னும் சிலர் அத்வைதமானது சாமான்ய ஜனங்களின் புத்தியில் நுழையா தென்றும் அதை வெளிப்படுத்துவது அவர்களின் வழிகேட்டுக்குக் காரணமா மென்றும் சொல்லுகிறார்கள்.

இன்னும் சிலர் ஹக்குக்கு கல்கு வேறு என்ற துவித சித்தாந்தமே உம்மத்துடைய உலமாக்கள் ஒன்றுகூடி ஒப்புக்கொண்ட சித்தாந்தமா யிருக்கிற தென்றும் இதுவே அநுஷ்டிக்கத் தக்கது என்றும் சொல்லுகிறார்கள்.

இன்னும் சிலர் காண்பான், காக்ஷி காக்ஷிப்பொருள் என்கிறவுணர்விறந்த ஸ்தானமாகிய பலுவுடைய மகாமை அடைந்தவன் எவனோ அவன் மாத்திரம் அத்வைதத்தை பிரஸ்தாபிக்கலாம் என்று சொல்லுகிறார்கள்.

இன்னும் ஒருவன் எந்த வுருவமெடுக்க நாடுகிறானோ அந்த வுருவமாக மாறவும் பின்பு பழையபடி தன் மனித வுருவத்துக்கு வந்து விடவுமான சித்தியைப் பெறுவானாகில் அவனே அத்வைதத்தை வெளிப்படுத்த அருகன் என்று சிலர் சொல்லுகிறார்கள்.

இன்னும் சிலர் அத்வைதத்தை மனதால் மாத்திரம் உண்மையென்று ஒப்பவேண்டுமே தவிர அதை வாக்கால் பிரஸ்தாபிப்பது கூடாது என்று சொல்லுகிறார்கள்.

பாசிலியின் உண்மையைப் பகுத்தறிய வேண்டுமென்கிற சுபேச்சையென்னும் வித்தானது முளையரும்பத் துவக்கிய இக்காலத்தில் இச்சொற்களெல்லாம் அம்முளையை அழிக்க ஏதுக்களாயிருக்கின்றன.

அத்வைதத்தின் உண்மையைக் கேட்டவாறு சிந்தித்துத் தெளியாமலும் குர்ஆனிலும் ஹதீசுகளிலும் வருகிற அதன் மூலமும் சார்புகளுமான நிடப்பிரமாணங்களை உற்றுணராமலும் வெற்றுரையாகச் சொல்லும் மேற்கண்ட சொற்களுக்கும் இவை போன்ற இன்னும் பல ஆக்ஷேபங்களுக்கும் முஸ்லிம் அத்வைத மூலமொழி என்னும் இந்நூலில் போதிய ஆதாரத்துடன் தக்க சமாதானங்கள் வரையப் பட்டிருக்கின்றன. இந்நூலுக்குப் பக்கபலமாக துஹ்பத்துல் முர்ஸலா என்னும் ஓர் அரிய அறபி அத்வைத நூலின் முழுமூலத்தையும் அதன் சில வியாக்கியானங்களையும் உரைபடுத்தி இத்துடன் இணைத்திருக்கிறது.

இவ்விரண்டும் நந்தமிழ் நாட்டு முஸ்லிம்களுக்குப் பயன்படுமாறு முந்தியதை அறபீ மூலமும் பார்ஸி உரையுமாக அச்சியற்றப்பட்ட கலிமத்துல் ஹக்கி என்னும் கிதாபிலிருந்தும், பிந்தியதை **துஹ்பத்துல் முர்ஸலா** என்னும் கிதாபிலிருந்தும், தமிழில் உரைபடுத்தி இவற்றுடன் திராவிட அத்வைத நூல்களிலிருந்து எடுத்தெழுதப்பட்ட இந்துமத வேதாந்தப் பகுதி என்பதையும்



'சர்த்து ஒரே புத்தகமாக ஹிஜ்ரீ 1342-ம் ஆண்டில் அச்சியற்றப்பட்டது.

முன்பதிப்பில் இந்நூலில் இடையிடையே வருகிற ஆயத்து ஹதீசு முதலியவைகளின் பொருளுக்கு மூலமாகிய அறபி வாக்கியங்களையும் பார்சி பைத்துகளையும் அவ்வப்பாஷைக்குரிய எழுத்துக்களால் எழுதி யச்சிட்டு அவை அமைந்திருக்கும் பக்கங்களின் நெம்பர்களையும் குறிப்பிட்டு ஒரு அட்டவணை சேர்க்கப்பட்டிருந்தது. இப்பதிப்பில் அவசியமான தானத்திலேயே அரபால் அச்சிடப்பட்டிருக்கிறது. பார்க்கக்கூடியவர்கள் பார்த்துக் கொள்ளலாம்.

இங்ஙனம்,

**முஹம்மது அப்துர் றஹ்மான்.**

# முஸ்லிம் அத்வைத மூலமொழி

## விஷய அட்டவணை.


| விஷயம் | பக்கம் |
|---|---|
| பார்சி முதர்ஜிம் இயற்றிய பாயிரம். | 1 |
| இஸ்லாம் மதஸ்தர்களில் சித்த சுத்திபெற்ற சில மஹான்கள் தவிர ஏனையோரெல்லோரும் கலிமாப் பொருளை உள்ளபடி உணரவில்லை என்பது. | 29 |
| பீடிகை:-கலிமாவின் கருத்தை விளக்க சில முன் எச்சரிக்கைகள். | 36 |
| முதலாவது எச்சரிக்கை:- முஷ்ரிகு எதனால் முஷ்ரிகாயிருக்கிறானென்பதை ஆராய்தல் | ,, |
| இரண்டாவது எச்சரிக்கை கலிமாவில் கருதிய பொருள் என்னவென்பது. | 42 |
| மூன்றாவது எச்சரிக்கை பேதிக்காத சுத்த புத்தியை வஹ்மு என்னும் பேதபுத்தி மறைத்திருக்கிற தென்பது. | 49 |
| ...ச்சரிக்கை கலி... ...க்குதஆலா ...ர் விளங்கல் சில காரியங்களைப் பொருத்து நிற்கிறது | 53 |
| 1-வது பிரகரணம்:—கலிமா தையிபாவில் பொதிந்துள்ள அம்சங்களின் தொகுப்பு. | 57 |
| உசூலுல்பிக்ஹு என்னும் நியாய சாஸ்திர மூலசூத்திரங்களில் குர்ஆன் சம்மந்தமாக எடுத்தாளும் சில பரிபாஷை. | 61 |
| முதலாவது அத்தியாயம் கலிமாவுடையவும் அதன் சார்பான தலிஆகளுடையவும் பொருளும் வியாக்கியானமும். | 67 |
| இரண்டாவது அத்தியாயம் லவ்கான பீஹிமா ஆலிஹத்துன் போன்ற ஐந்து ஆயத்துக்கள் கலிமாவுடன் கட்டுண்டிருக்கின்றன வென்பதும் அவைகளின் வியாக்கியானமும். | 81 |
| மூன்றாவது அத்தியாயம் வஹ்மு என்னும் பேதபுத்தியால் ஜனித்த சந்தேக விபரீதங்களைச் சங்கரித்தல். | 87 |





| விஷயம் | பக்கம் |
|---|---|
| அநுபந்தம் ஐந்து பயன்கள் முதலாவது பயன் வஹ்தத்துல் வுஜூதை வெளிப்படுத்தக் கூடாதென்ற ஆக்ஷேபமும் அதற்குச் சமாதானமும். | 108 |
| இரண்டாவது பயன் இலாஹானது அல்லாவின் வேறு என்ற கொள்கையில்தான் ஷிர்க்கு கட்டுண்டிருக்கிற தென்பதற்கு அத்தாக்ஷியான ஓர் ஆயத்து. | 122 |
| மூன்றாவது பயன் கலிமாவில் இலாஹுவை வேறு பொருளில் மாற்றி அதற்கு மவ்ஜூதுன் என்ற தொக்கிய பயனிலையொன்றை அமைத்துக் கொள்வது உம்மத்துடைய உலமாக்கள் ஒருங்கு சேர்ந்து ஒப்புக் கொண்ட ஓர் காரியமென்பதற்கு மறுப்பு. | 124 |
| நாலாவது பயன் கலிமாவானது ஷரீஅத்தென்னும் குர்ஆனுக்கு பிஸ்மில்லாவாயிருக்கிற தென்பது. | 127 |
| ஐந்தாவது பயன் உலமாக்கள் லாஇலாஹ இல்லல்லாஹுவின் அமைப்பையும் பொருளையும் மாற்றிவிட்டிருந்தாலும் அவர்கள் முஹம்மதுர் ரஸூலுல்லாஹியின் மேல் வைத்திருக்கும் ஈமானுக்குள் தவ்ஹீதின் ஈமான் மறைந்திருக்கிற தென்பது. | 128 |
| நூலாசிரியர் நூன்முகம். | 131 |
| ஹக்கு தஆலாவே வுஜூதென்பது. | 133 |
| வுஜூது இருந்தபடி பரிசுத்தமாயிருப்பதுடன் அதுவே பல கோலங்களாய் வெளிப்பட்ட தென்பது. | 133 |
| சந்தேக நிவர்த்திக்காக ஒரு சுவாலும் அதற்கு ஜவாபும். | 134 |
| வுஜூதின் ஏழு மர்த்தபாக்கள். | 137 |
| அல்லாஹு தஆலா தனக்கோர் கலீபாவை உண்டாக்கினா னென்பது. | 140 |
| இன்சான் ஏழும் உன்னத மர்த்தபாக்களில் அவனுக்கு வெளியாகும் சித்திகள். | 143 |
| ஹக்கும் கல்கும் ஏகமென்றால் ஹக்குடைய நாமங்களை கல்குக்கும் கல்குடைய நாமங்களை ஹக்குக்கும் சொல்லலாமா? என்ற வினாவுக்கு விடை | 144 |
| கல்குடைய மர்த்தபாவுக்கு ஹக்கு இறங்குவதென்றால் இது அவனது தூய்மைக்குத் தோஷமாகுமே என்ற சந்தேகைக்கு சமாதானம். | 145 |

| விஷயம் | பக்கம் |
|---|---|
| வுஜூது ஒன்றன் ஊடே நுழைந்திருப்பதும் ஒன்றுடன் கலந்து ஏகமாயிருப்பது மில்லை. | 148 |
| ஹக்கும் கல்கும் ஏகமென்றால் கல்குகள் அடையும் இன்பதுன்பங்கள் ஹக்கையும் சாரும் என்ற சங்கைக்குச் சமாதானம். | 149 |
| சிருட்டிகளை வுஜூது சூழ்ந்திருப்பது அல்லது வியாபித்திருப்ப தெப்படி? | 151 |
| சிருட்டிகள் அஃராறு என்னும் ஆதேயங்களாயும் வுஜூது அவைகளுக்காதாரமான நிலைக்களமாயு மிருக்கிறதென்பது. | 153 |
| வுஜூதின் மூலமாகவே வஸ்துக்கள் உரைப்படுகின்றன வென்பது. | 156 |
| வுஜூதை ஷுஹூது செய்தல் இருவகை என்பது. | ,, |
| ஹக்குடைய சமுகத்தை அடுத்த லென்னும் இரண்டு குருபுகள். | 158 |
| ஹக்கை கல்கிலே ஷுஹூது செய்தவன் பக்கம் மனதைத் திருப்புகிற வழிகளில் ஒன்று. | 160 |
| சமஸ்த பிரபஞ்சங்களும் அவனாகவே யிருக்கினும் அவைகளின் சுத்த அசுத்தங்கள் அவனைத் தீண்ட மாட்டாரென்பது. | 161 |
| வஹ்தத்துல் வுஜூதுக்கு ஆதாரமான ஆயத்துகளும் ஹதீசுகளும். | 162 |
| ஹக்கிலே ஐக்கியமாக விரும்புகிறவன் அனுஷ்டிக்க வேண்டிய கடமைகள். | 165 |
| முறாகபா செய்யும் முறை | 166 |
| அஸ்ஸய்ருல் பாத்தினு என்னும் ஞான பூமிகள். | 167 |
| **ஹிந்துமத வேதாந்த பகுதி.** | 169 |
| அத்தியாரோபமும் அபவாதமும். | 170 |
| சிருட்டிவந்த வகை. | 171 |
| முக்குணவியக்தம். | ,, |
| ஈசஜீவர்களின் காரணசரீர உற்பத்தி. | ,, |
| சூக்கும சரீர உற்பத்தி. | 172 |
| தூலசரீர உற்பத்தி. | 174 |
| சிருட்டிகள் ஒடுங்கும் முறை. | 177 |
| 36தத்துவங்களின் விபரம். | 178 |
| சில வினாக்களும் விடைகளும். | 180 |
| ஞானபூமிகளின் விபரம். | 185 |


*ஹுவல்லாஹு அஹத்.*

# முஸ்லிம் அத்வைத மூலமொழி.

பார்ஸி முதர்ஜிம் இயற்றிய

## பாயிரம்.

بسم الله الرحمن الرحيم الله محمد في جميع افعاله ومحمدن الله
صل عليه مع صحبه واله

*பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.*

எல்லாப்புகழும் لا اله الا الله **லாஇலாஹ இல்லல்லாஹு** என்னும் அத்வைத மூலமொழியால் ஆரிபுகளுடைய இருதயங்களைப் பிரகாசிக்கச் செய்தவனும் لا حول ولا قوة الا بالله **லாஹவ்ல வலாகுவ்வத்த இல்லா பில்லாஹி** என்னும் உப மொழியால் ஆஷிகுகளுடைய நெஞ்சுகளை விரிவாக்கினவனுமாகிய அல்லாஹு தஆலாவுக்காம்.

بیت

ازبرای ثبوت وحدت خویش - گفت خود لا اله الا الله
ماسوا را بیک نفس زمیان - برد لا اله الا الله

### பார்ஸி பய்த்து.

*அஸ்பராயே சுபூத்தெ வஹ்தத்தெ கிஷ்*
*குப்த்குத் லாஇலாஹ இல்லல்லாஹ்*
*மாஸிவாரா பஎக்நபஸ் ஸெமியான்*
*மீபாத் லாஇலாஹ இல்லல்லாஹ்*

இதன்பொருள்:—அல்லாஹு தஆலா தன்னுடைய வஹ்தத்தென்னும் ஏகத்துவம் தரிபடுத்துவதற்காக தானே லாஇலாஹ

இல்லல்லாஹு என்று எடுத்தோதினன். லாஇலாஹ இல்லல்லாஹுவானது அவனின் வேறு உண்டென்பதை இடையிலிருந்து ஒரே மூச்சில் ஒழித்துவிடும் என்பதாம்.

இன்னும் ஸலவாத்தும் ஸலாமும் எந்த நாயகமவர்களை அல்லாஹு தஆலா தவ்ஹீது கலிமாவுடன் அனுப்பி அதை ஸ்தாபிக்கும்பொருட்டு தன்னுடைய கலாமுல் மஜீதாகிய குர்ஆனைக் கொண்டு அவர்களுக்குப் பலத்தைக் கொடுத்தானோ அந்த நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் பேரிலும் இன்னும் பாக்கியமும் பரிசுத்தமுமுள்ள அவர்கள் கிளையார் தோழமார்பேரிலும் உண்டாவதாக.

بيت

آمدہ از پے رسالت خویش - غیر رسل بدان رسول الله
خود فرستندہ خود فرستادہ - سوے خود شد روان رسول الله

## * பார்ஸி பய்த்து.

ஆமதா அஸ்பயே ரிஸாலத்தெகிஷ
கைரெமுர்ஸில் பிதான் ரஸூலுல்லாஹ்
குத்பிரிஸ்திந்தா குத்பிரிஸ்தாதா
சூயெகுத் ஷுத்ரவான ரஸூலுல்லாஹ்

இதன்பொருள்:—தூதனுப்பினவன் வேறின்றி தங்கள் தூது வேலையின் பொருட்டாக ரஸூலுல்லா வந்தார்களென்றறி. அனுப்பினவனும் தானாய் அனுப்பப்பட்ட ரஸூலும் தானாய் (கல்காகிய) தன்னிடத்திற்கே ரஸூலுல்லாஹ் எழுந்தருள் செய்தார்கள் என்பதாம்.

அல்லாஹு தஆலாவைப் புகழ்ந்து அவனுடைய ரஸூல் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் பேரிலும் அவர்கள் கிளையார் தோழமார்கள் பேரிலும் ஸலவாத்துரைத்த பின்னர் சத்தியார்த்தமும் சந்தேகமற்ற திடஞானமும் உள்ளவர்கள் (தவ்ஹீதென்னும் அத்வைத வயலில் நின்றும்) கொய்து

* மேலே இரண்டு விடங்களிலும் காட்டியுள்ள பார்ஸி பய்த்துகளின் பொருள் இந்நூல் முழுவதையும் ஆராய்ந்து நோட்டமிடுவதினால் ஐயமறத் தெளிவாக விளங்கும் மயக்கமொழிக.



குவித்த போரிலிருந்து கதிர்களை ஆயும் அடியானாகிய **முஹம்மது நூருல்லா** என்பவனும் முஹம்மது முகியுத்தீன் என்பவருடைய குமாரனும் ஷாஜிஹான் ஆபாதென்னும் ராஜதானியின் ஓர் ஜில்லாவான சம்பலம் என்னும் நகரத்தைச் சேர்ந்த ஆஜம்பூரில் வசிப்பவனுமாகிய நான் எல்லாத் தெள்ளிய அறிவாளரின் சமுகத்தில் அதினும் முக்கியமாகிய இஸ்லாமைத் தழுவும் எல்லா முஸ்லிம்களின் மேலான சமுகங்களில் செய்துகொள்ளும் விண்ணப்பம் யாதெனில்:—

இஸ்லாமென்னும் பிரகாச ஒளிவுக்கும் குபுரு என்னும் அந்தகார இருட்டுக்கும் நடுவில் பிரிப்பது **அல்கலிமத்துத் தையிபா**வேயன்றி வேறொன்றுமில்லை யென்று ஆதம் அலைஹிஸ்ஸலாம் முதல் இதுவரையில் எக்காலத்திலும் தீனையுடையவர்கள் எல்லாரும் ஒரே வாக்காக ஒப்பினார்களென்பது தெரிந்த ஓர் காரியமாயிருக்கிறது.

இன்னும் بني الاسلام علي خمس **புனியல் இஸ்லாமு அலாகம்ஸின்** என்கிற ஹதீதினாலும் விளங்குகிறதென்னவென்றால் ஈமானுக்கு முக்கிய ருகுனும் முந்திய தூணுமாயிருப்பது ஹக்குடைய தவ்ஹீதைக்கொண்டு சாக்ஷி சொல்வதென்பதுதான். அதாவது:— வஹ்தத்துல் முத்லக் என்னும் தனி முதலான ஹக்கு தஆலா ஒருவன் மாத்திரமே உண்டென்று அவனது ஏகத்துவத்தை உள்ளது உள்ளபடி மனதால் உணர்ந்து உண்மைகொண்டு அதன்படி நாவால் சாக்ஷி கொடுப்பதாம். இப்படி உணர்ந்து உண்மை கொள்ளாமல் நாவால் மாத்திரம் **அல்கலிமத்துத் தையிபாவை** மொழிவது சாக்ஷியமாகாது. ஆகா தாகவே தங்களை இஸ்லாம் மதஸ்தர் என்று பிரஸ்தாபிக்கிற எல்லாரும் **அல்கலிமத்துத் தையிபாவின்** சுயமான பொருளையும் உண்மையான கருத்தையும் அறிவதில் ஆழ்ந்து நோட்டமிடக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.

அப்படியிருக்க சம்பவம் எப்படியாய் விட்டதென்றால் இஸ்லாம் மதஸ்தர்களில் சிற்சில மஹான்கள் தவிர மற்ற எல்லா முஸ்லிம்களும் **லாஇலாஹ இல்லல்லாஹு** என்பதன் பொருளையும் கருத்தையும் உள்ளது உள்ளபடி தெரிந்து கொள்ளாதவர்களாயிருக்கிறார்கள். மேலும் தற்போது வழங்கும் இல்முகளில் முயற்

சிப்பவர்களான ஆலிம்களும் **அல்கலிமத்துத் தையிபா** எதற்காக சொல்லப்பட்ட வாக்கியமென்றும் அதன் எதார்த்தமான பொருளும் கருத்தும் என்னவென்றும் அறியாதவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் மாத்திரமல்ல. தெள்ளிய அறிவும் நிர்ந்த விசாரணையுமான ஸ்தாவங்களைக் கடந்த சலபுகளான சில ஆண்சிங்கங்களும் கலபுகளான சில நுண்ணறிவாளரும் தவ்ஹீதைப் பொருந்திய **அல்கலிமத்துத் தையிபாவின்** மஃனாவை விளக்கி இது தவுஹீது இது இஷ்ராக்கு என்று விளங்கும்படிக்கும் ஹக்குடைய மஃரிபாவின் பக்கம் (அதாவது அல்லாவை அறிவதற்கு) ஓர் வழியுண்டாகும்படிக்கும் அவ்வளவு விபரமாகத் துலக்கிச் சொன்னார்களில்லை. இதற்குக் காரணம் யாதெனில், ஒவ்வொரு வாக்கியத்திலும் பொதிந்த பொருளை அறிவதும் விளங்கிக்கொள்வதும் அந்த வாக்கியத்தின் பாகுபாடான பதங்களை அறிவதைப் பொருத்திருக்கிறது.

**அல்கலிமத்துத் தையிபாவில்** "**லா**" என்னும் ஹர்பும் "**இல்லா**" என்னும் இஸ்திஸ்னாவும் தவிர இன்னும் இரண்டு பதங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று "**இலாஹு**"வும் மற்றொன்று "**அல்லாஹு**"வுமாம். இந்த நான்கு பதங்களும் பொருந்திய வாக்கியத்தின் சுயார்த்தத்தை அறிய வேண்டிய விதிப்படி அறிவதற்கும் இதன் தர்க்கீபு என்னும் புணர்ச்சியை உள்ளபடி உணர்வதற்கும் ஒருவராவது முயலவில்லை. அவரவரும் வெவ்வேறு விதமான ஒவ்வொரு வழியில் செல்பவர்களானார்கள்.

அதெப்படியெனில்:—இலாஹு என்ற பதத்தின் விசாரணையில் ஒரு சாரார் செய்துகொண்ட தீர்மானமாவது **அல்கலிமத்துத் தையிபாவில்** இலாஹு என்றதைக் கொண்டு கருதிய பொருள் المعبود بالحق (அல்மஃபூது பில்ஹக்கி) நியாயமாக வணங்கப்படுகிற கடவுளேயாம் என்பதே. இன்னும் சிலர் المعبود مطلق (அல்மஃபூது முத்லகன்) நியாயமாகவோ நியாயமல்லாமலோ மொத்தமாக வணங்கப்படுகிற மஃபூதே இலாஹு என்றதில் கருதியபொருளென்கிறார்கள். இன்னும் சிலர் அதைக் கொண்டு கருதிய பொருள் مستحق للعبادة (முஸ்தஹக்குன் லில் இபாதத்தி) வணக்கத்துக்குப் பாத்திரமானவன் என்கிறார்கள். இன்னும் சிலர் அதில் கருதிய பொருள் ما تسمونه الها و تزعمونه معبودا



(மாத்துஸம் மூனஹு இலாஹன் வதஸஉமூனஹு மஃபூதன்) நீங்கள் எதற்கு இலாஹு என்று பெயரிட்டு அதை வணக்கத்துக்குரியது என்று நினைக்கிறீர்களோ அதுவே என்கிறார்கள். இன்னும் சிலர் அதைக்கொண்டு கருதியபொருள் வாஜிபுல்வுஜூதாகிய அல்லாஹு தஆலா என்று குறிப்பிடுகிறார்கள். ஆனால் அல்லாஹு தஆலாவுடைய கலாம் என்னும் வேதவாக்கியமோ இலாஹு என்பது மும்கினாகிய கல்குக்கும் வாஜிபாகிய ஹக்குக்கும் பொதுவாகச் சொல்லப்பட்ட (முஷ்தரக்கான) பலபொருட்கொரு சொல்லான ஒரு பதமாயிருக்கிறதென்று அறிவிக்கின்றது.

இனி இலாஹுவில் எப்படியோ அப்படியே லா என்றதன் விசாரணையிலும் **அல்லாஹ்** என்றதன் பொருளிலும் அவர்களுக்குள் விகற்பமிருக்கிறது. அதெப்படியெனில், தஹ்ரிய்யா என்னும் காலவாதிகள் காலமே கடவுள் என்றும் ஜகமாதி சிருஷ்டிகள் உண்டாவதும் அழிவதும் அந்தக் காலத்தைக் கொண்டே சம்பந்தப்பட்டிருக்கிறதென்றும் சொல்கிறார்கள். சூபஸ்தாயிய்யா என்ற கூட்டத்தார் சிருட்டிகர்த்தாவும் சிருட்டியுமாகிய இவ்விரண்டிலும் சந்தேகமுள்ளவர்களாயிருக்கிறார்கள். இவ்விரண்டிற்கும் யாதொரு சுயப்பொருள் இருப்பதாக அவர்கள் எண்ணுவதில்லை. மஜூஸீகளோ, சிருட்டிகர்த்தர் இரண்டுபேர் உண்டென்று ஒப்புவதுடன் நன்மையைச் சிருட்டிப்பவன் **யஜ்தான்** என்றும் தீமையைச் சிருஷ்டிப்பவன் **அஹ்ரமன்** என்றும் பேரிடுகிறார்கள். பலாசிபா என்னும் பூதவாதிகள் ஒன்றுக்கொன்று பேதமாயும் பிரிந்ததாயுமிருக்கிற வுஜூது பஸீத்து என்னும் விரிந்தபூதங்களால் உலகம் உற்பத்தியாகின்றது என்கிறார்கள். முஜஸ்ஸிமா என்னும் ஜடவாதிகள் அல்லாஹு தஆலாவை தஷ்பீஹில் மாத்திரம் மட்டுண்டவன் அதாவது சிருட்டிகளின் கோலங்களாய் மாத்திரம் விரிந்திருப்பவன் என்கிறார்கள். முத்தகல்லிமுகளோ அவன் தன்ஜீஹில் மாத்திரம் மட்டுண்டவன் அதாவது சிருட்டிகளின் வேறான தூய்யவன் என்கிறார்கள். அல்லாஹு தஆலாவுடைய கலாமும் ரஸூலில் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய ஹதீதும் ஆகிய சுருதிகளோ **ஹமவோஸ்த்** (எல்லாமவனே) என்று சூபியாக்களான அத்வைதிகள் சொல்வதற்குச் சார்பாக சாக்ஷி பகர்கின்றன. இப்படியே

كل حزب بما لديهم فرحون **அந்தந்த சார்பாரும் அவரவரின்**
**கொள்கையைக் கொண்டு மகிழ்பவர்களா யிருக்கி**
**றார்கள்.** இதுதான் அல்கலிமத்துத் தையிபாவின் பாகுபாடுகளை
விளங்கி யறிந்த வரலாறு.

இனி **அல்கலிமத்துத் தையிபாவில்** பொதிந்துள்ள
பொருளை உள்ளபடி உணர்வதில் கவனம் செலுத்த வேண்டுவது
அவசியம். பின்னர் **லாஇலாஹ இல்லல்லாஹு** என்னும் கலி
மாவானது இஷ்ராக்கை (இணையாக்கலை) நிவர்த்திப்பதா யிருக்கிற
தென்று இஸ்லாமையுடைய உலமாக்கள் எல்லாரும் ஒரே தீர்ப்பாக
ஒப்புக்கொண்ட பிறகு தவ்ஹீது (ஏகமாக்கல்) டைய அர்த்தத்
தில் அவர்களுக்குள் விகற்பமிருக்கிறது. சிலர் உலூஹியத்தில்
தவ்ஹீது செய்வது அதாவது நாயகத்தன்மையை ஏகமாக்கல்
ஈமானின் ஒரு பகுதி என்கிறார்கள். இதன் விபரமாவது:—அல்
லாஹு தஆலா ஒருவன் மாத்திரமே நாயகன் என்று அறிவ
தும் அவனுடைய நாயகத்தன்மையில் மற்றொருவரை கூட்டாக்
காமலிருப்பதும் ஆகிய இதுவே உலூஹியத்தில் தவ்ஹீதாம்.
ஆகவே இந்த வகையில் இஷ்ராக்கு என்பது இதன் மாற்றத்தில்
மட்டுண்டாயிருக்கிறதாகத் தெரிகிறது. அதாவது:—அல்லாஹு
தஆலா ஒருவன்தான் நாயகன் என்று அறியாமலிருப்பதும் அவ
னுடைய நாயகத்தன்மையில் மற்றொருவரை அவனுக்கு இணையாக்
குவதும் இஷ்ராக்காகின்றது. இந்த இஷ்ராக்கு சனவிய்யா முஸல்
லிஸா வென்னும் எஹூது நஸாராக்களில் தவிர மற்ற (அறபு)முஷ்
ரிகுகள் எவருடைய மனதிலும் ஊசாடுவதல்ல. ஆதலால் இதை
ரத்து செய்ய அவ்வளவாகத் தேவையிருந்ததில்லை. ஏனெனில்,
மேலே சொல்லிவந்தபடி எல்லாரும் அல்லாஹு தஆலா ஒருவனே
உண்டென்று ஒருவாறு ஒப்புகிறவர்களா யிருக்கிறார்கள். இதை
மறுப்பவர்கள் எவருமில்லை. அறபு முஷ்ரிகுகள் மேற்சொன்ன
இஷ்ராக்குள்ளவர்களா யிருந்ததில்லை என்பதற்கு அல்லாஹு
தஆலாவுடைய கலாமே சாக்ஷியாயிருக்கிறது. இப்படி உலூஹி
யத்தில் அவர்களிடத்திலும் இஷ்ராக்கில்லை என்ற வகையில்
மூமின்களுக்கும் முஷ்ரிகுகளுக்கும் நடுவில் யாதொரு வித்தியா
சம் வெளியாகவில்லை.

இன்னும் சிலர் இபாதத்தில் தவ்ஹீது செய்வது ஈமானின்
ஒரு பகுதி என்கிறார்கள். அதாவது:—அல்லாஹு தஆலாவைத்



தவிர மற்றொருவரை அல்லது மற்றொன்றை வணக்கத்திற்குப்
பாத்திரமென்று எண்ணுவது இஷ்ராக்கா யிருக்குமென்பதாம்.
இபாதத்தில் தவ்ஹீது என்றதில் கருதியபொருள் இதாகவே
யிருந்தால் இதன்படி பார்த்தாலும் மூமின் முஷ்ரிகுகளுக்கு நடு
வில் யாதொரு வித்தியாசம் தென்படவில்லை. அல்லாஹு
தஆலா அல்லாததை அல்லாஹ்வாக எண்ணி அதை வணங்குவ
தும் களப்படுத்துவதும் இஷ்ராக்காயிருக்கு மென்றால் அப்
போது விக்கிரகவணக்கக்காரரும் முஷ்ரிகாக மாட்டார்கள்.
ஏனெனின் அவர்கள் ஆலிஹத்து என்னும் தெய்வங்களை அல்லா
வாக எண்ணி அவைகளை வணங்கவில்லை, அப்படிச் செய்கிறவர்
களுமல்ல; மேலும் ما نعبدهم الا ليقربونا الى الله زلفى **ஆலி**
**ஹத்துகள் எங்களை அல்லாஹு தஆலா வினிடத்தில்**
**நெருக்கிச் சேர்ப்பதற்கே யன்றி மற்றபடி அவைகளை**
**நாங்கள் வணங்குகிறதில்லை** என்று அவர்கள் சொல்வதாக
குர்ஆன் கூறுகின்றது.

இன்னும் இபாதத்தில் தவ்ஹீது என்பதைக்கொண்டு கரு
தியபொருள் அல்லாஹு தஆலா அல்லாததை யாதொரு காரி
யத்தில் அல்லாஹு தஆலாவுடன் கூட்டாக்காம லிருப்பதென்
றால் இந்த அர்த்தப்படி தவ்ஹீது மூமின்களிலும் காணப்பட
வில்லை. ஏனெனில், மூமின்கள் சகல வஸ்துக்களையும் அல்லாஹு
தஆலா அல்லாத பிரத்தியேகமான மவுஜூதென்று நிர்ணயங்
கொண்டிருக்கிறார்கள். ஆகவே மூமின்கள் சர்வலோகத்தையும்
உளதெனப் பொருள்படுகிற வுஜூதில் அல்லாஹு தஆலாவுக்
கிணையாக்கினார்கள். இதில் தீர்க்கபக்ஷம் அல்லாஹு தஆலா
வினது வுஜூதை உத்தம வுஜூதென்றும் அதை நோக்க மற்
றெல்லா வஸ்துக்களின் வுஜூதை அதம வுஜூதென்றும் அவர்கள்
சொல்லலாம். என்றாலும் இதனால், உஜூதில் இணையாக்கல்
என்னுந் தோஷம் நிவர்த்தியாகாது. இதைப் பற்றிய வாதம்
பின்னால் வரும்.

இனி அல்லாஹு தஆலா அல்லாதது லாபகஷ்டங்களை
யுண்டாக்குமென்று எண்ணாம லிருப்பது தவ்ஹீதும் அப்படி
எண்ணுவது இஷ்ராக்குமா யிருந்தால், இந்தப் பொருளிலும்
மூமின் முஷ்ரிக்கு இருவரும் சமமாகிறார்கள். அதாவது:—முஷ்
ரிகுகள் எப்படித் தங்கள் தெய்வங்கள் குணமாக்குமென்றும்

லாபந் தருமென்றும் கஷ்ட முண்டாக்குமென்றும் எண்ணுகிறார்களோ அப்படியே மூமின்களும் (உவமையில்) நெருப்பு சுட்டதென்பதுபோல் குணப்பாட்டையும் லாப கஷ்டங்களையும் அல்லாஹு தஆலா அல்லாதவரின் பக்கம் சேர்க்கிறார்கள். ஆனால் மூமின்கள் வஸ்துக்களின் குணப்பாடு அவற்றின் சிருட்டி கர்த்தாவாகிய அல்லாஹு தஆலாவினால் உண்டாகிற தென்று எண்ணுவதாயும் முஷ்ரிகுகள் அதற்கு மாறாகக் குணப்பாடு செய்யும் சக்தி தங்கள் தெய்வங்களுக்குச் சுயமாக உண்டு என்று எண்ணுவதாயும் அதேபோல் மூமின்கள் நபிமார்களின் ஷபா அத்திற்கு அல்லாஹு தஆலாவுடைய உத்திரவு வேண்டுமென்று எண்ணுவதாயும் முஷ்ரிகுகள் தங்கள் தெய்வங்களின் ஷபா அத்திற்கு உத்திரவு தேவையில்லை என்று எண்ணுவதாயும் இதனால் மூமின் முஷ்ரிகுகளுக்கு நடுவில் வித்தியாச மிருக்கிற தென்றும் வாதித்தால் இது ஏற்கத்தக்கதல்ல. ஏனெனில் முஷ்ரிகுகளும் விக்கிரகவணக்கக்காரரும் வானங்களையும் பூமியையும் படைத்தவன் அல்லாஹு தஆலா என்றும் அவனே சகல சிருட்டிகளுக்கும் குணப்பாட்டைக் கொடுப்பவன் என்றும் எண்ணுவ தாகவும் அவர்கள் அவன் சமுகத்தை அடுப்பதற்கு விக்கிரகங்களை வசீலாவாக மாத்திரம் நிர்ணயித்துக் கொள்வதாகவும் அவனிடம் சிபார்சு செய்வதற்கு அவைகளை உதவிகளாக எண்ணுவதாகவும் குர்ஆனில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எங்களுக்கு ஷபாஅத்து செய்கிற தெய்வங்கள் அல்லாஹு தஆலாவினிடம் உத்திரவு தேடவேண்டியதில்லை என்றாவது அவன் விதித்த விதிக்கு விரோதமாக லாபகஷ்டங்களை யுண்டாக்குவார்க ளென்றாவது அவர்கள் சொல்கிறதில்லை.

இனி முவஹ்ஹிதுகளான சூபியாக்களென்னும் அத்வைத சித்தாந்திகள் (தவுஹீதுன் பில்வுஜூதி) வுஜூதை ஒன்றாக்கல் என்கிறார்களே அதன் பொருள் என்னவென்றால் அல்லாஹு தஆலாவினது வுஜூது * மாத்திரம் உண்டு என்று ஒப்புவதும் அவனல்லாத ஒரு மவுஜூது உண்டு என்று எண்ணாமலிருப்பதுமாம். இது சுத்தசத்தியமான தவுஹீதாயிருக்கிறது. என்கினும்

* உஜூது என்பதற்கு அர்த்தமும் அதன் வகைகளும் இந்நூலுடன் அண்டித்திருக்கும் துஹ்பத்துல் முர்ஸலாவில் விபரமாக எழுதப் பட்டிருக்கிறது. அங்கு கண்டு தெளிக.



உம்மத்துடைய உலமாக்களும் முத்தகல்லிமுகளும் முபஸ்ஸிருகளும் முஹத்திசுகளும் முப்திகளும் அடியானுக்கு இந்த தவுஹீது விதிக்கப்படவில்லை என்றும் மேலும் ஷரஉறில் இது சுத்த ஷிருக்கா யிருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள். **மார்க்கம் எங்கிருந்து எங்கே போய் விட்டதென்ற வித்தியாசத்தைப் பாருங்கள்.**

ஆகவே இந்தப் பாவியாகிய நான் சலபு கலபுகளின் கிதாபுகளை ஆராய்ந்து தவுஹீது விஷயமாகக் கூறியுள்ளவைகளை கோட்டமிட்டேன். அதாவது ஹுகமாக்களான பண்டிதர்களுடையவும் உலமாக்களான சாஸ்திரிகளுடையவும் உரபாக்களான ஞானிகளுடையவுமான மதுஹபுகளைச் சீர்தூக்கிப் பார்த்தபின் மன்கூலாகிய சுருதிப்பிரமாணத்துடன் மஃகூலாகிய யுத்திப்பிரமாணத்தைப் பொருத்துவதற்கும் ஒன்றை மற்றொன்றினும் மேலாகக் கொள்வதற்குக் கூடாமல் கஷ்டமா யிருக்கக் கண்டேன்.

ஆதலால் **அல்கலிமத்துத் தையிபாவின்** பொருளை விசாரித்துத் தெளிவதற்காக பாவான்களான உலமாக்கள் பெருமை பொருந்திய சூபியாக்கள் இவர்களில் நின்றும் அனேகருடைய சமுகங்களில் ஹாஸிராகி இதைக் குறித்து அவர்களிடம் விசாரித்தேன். இதற்காக ஷாஜிஹான் ஆபாதிலிருந்து கல்கத்தா வரையில் யாத்திரை செய்தேன். காலத்தின் அறிவாளர்கள் தவுஹீதின் உண்மை வெளியாவதற்குப் பூர்வகால ஹுகமாக்களான பண்டிதர்களுடைய நூல்களைப் பார்க்கும்படி அவைகளைக் குறிப்பிட்டார்கள். உலமாக்களோ முதகத்திமீன்களுடைய கிதாபுகளையும் பத்வாக்களையும் பார்க்கும்படி சொன்னார்கள். சூபியாக்களான மஷாயிகுகள் கலிமத்துத் தௌஹீதின் பொருள் முவஹ்ஹிதுகளுக்குத் திடப்பட்டது எதுவோ அதன் இல்மு இரகசியத்தில் மனதுக்கு மனதாக வந்து கொண்டிருக்கிற தென்றும் ளாஹிரு ஷரீஅத்தானது அதற்கு விரோதமா யிருக்கிறதென்றும் வஹ்தத்துல் வுஜூதின்மேல் வெள்ளிய தலீலுகளாயிருக்கிற

هو الاول والاخر والظاهر والباطن - وهو معكم اينما كنتم -
اينما تولوا فثم وجه الله - ما لكم من اله غيره -

**ஹுவல் அவ்வலு வல்ஆகிறு** போன்ற அனேகம் குர்ஆன் ஆயத்துகளுக்கு அவற்றின் வெளிப்படையான பொருளை விட்டு

ஷரஹுக்குப் பொருத்தமாக மாற்றிப் பொருள் கொள்ளவேண்டுமென்றும் சொன்னார்கள். இதென்ன புதுமை! சத்தியமுள்ள ஹக்கான ஷரீஅத்தானது கலிமத்துத் தவ்ஹீதின் பொருளுக்கு விரோதமாக வந்திருக்கிறதென்றும் லாஹிரு குறுஆனும் ஹதீசும் அதைப் புறக்கணிக்கின்றனவென்றும் நம்பவேண்டுமென்றால் இது வெகு விந்தையான ஈமானாயிருக்கிறது.

ஆகக்கூடி உலமா, ஹுகமா, மஷாயிகு இவர்களில் ஒருவராவது என் பிணியைத் தீர்க்கவில்லை. ஷரீஅத்தானது தரீகத்துக்கு விரோதமாக ஏன் வந்ததென்பதையும் அவர்கள் அறிவிக்கவில்லை. பின்னர் அநேகமாகத் தேடித்திரிந்து கடைசியாக ஹிஜ்ரி ஆயிரத்து இருநூற்று முப்பத்திரண்டாம் ஆண்டு கல்கத்தாவிலிருந்து பிரயாணப்பட்டு லக்னோ நகரம் வந்து சேர்ந்தேன். அல்லாஹு தஆலாவின் மறைந்த நல்லுதவியாலும் வழிகாட்டலாலும் மேலான ஒரு ஆலீஜனாபு அவர்களின் சமுகத்தை அடுத்து காரியசித்தி யடைந்தேன். மகிமை பொருந்திய அந்த மஹானோ தஜல்லியாத்து ரஹ்மானிய்யும் புயூலாத்து றப்பானிய்யுமாகிய அருளிறை நிறைந்தவர்; மஆரிபுகளை அறிந்தவர்; ஹக்கை தரிசிப்பவர்; ஹக்கை தெரிசிப்பிப்பவர் வஹ்தத்தும் வரஉமாகிய ஸ்தானத்தில் நிலையுற்றவர்; நூரும் இர்பானுமாகிய ஞானச்சுடருக்குப் பளிங்கு தீபம் போன்றவர்; தவ்ஹீதும் ஈமானுமாகிய அத்வைத பொக்கிஷத்தின் திறவுகோலானவர்; கலாமும் மஜீதென்னும் வேதவாக்கியங்களில் நேர்கிற கஷ்டமான மயக்கங்களை மாய்ப்பவர்; கலிமத்துத் தௌஹீதென்னும் சுயமான பொன் நாணயத்தில் கலந்துபோன போலி நாயணங்களைப் பரிக்ஷித்தறியும் நோட்டக்காரர்; பரஜோதி என்னும் பெருங் கடலில் மூழ்கினவர்; **லாஇலாஹ இல்லல்லாஹு** என்ற சொல்லில் உண்மையுள்ள முவஹ்ஹிது என்னும் அத்வைத சீலர் ஜின் மனு வென்ற இரு வகுப்பாருக்கும் சன்மார்க்க போதகர்; மக்கா மதீனா என்னும் இரண்டு மஹா ஸ்தலங்களுக்குப் புண்ணிய யாத்திரை செய்து ஹஜ்ஜும் ஜியாரத்துமான அரிய வணக்கங்களை இயற்றியவர். آلموفق من الله المنان قطب زمان **அல்முவப்பகு மினல் லாஹில் மன்னான் குதுபுசமானாகிய** இவர்களின் நாமதேயம் யாதெனில்,



جناب مولانا سيد شاه عبد الرحمن - مد الله تعالى ظل كماله

على مفارق الطالبين و افاض فيضه و بره على العلمين -

ஜனாப் மவுலானா ஹலரத்து **ஸெய்யிது ஷாஹ் அப்துர் ரஹ்மான்** என்பதேயாம். **மத்தல்லாஹு தஆலா லில்லகமாலிஹி அலாமபாரிகித் தாலிபீன் வஅபால பைலஹு வபிர்ரஹு அலல் ஆலமீன்.**

நல்லாசிரியரான இந்த மஹானுடைய சன்னிதானத்தில் சிறிதுகாலம் சிரவணம்செய்து **அல்கலிமத்துத் தையிபாவின்** பொருளையும் வஹ்தத்துல் வுஜூதுடைய மஸ்அலாவின் நுட்பத்தையும் விசாரித்துத் தெளிவதில் பாட மோதிப் பயனடைந்தேன். ஆலீஜனாபு ஹலரத்து மவுலானா அவர்களின் அருள் தங்கிய நாவிலிருந்து உதிர்ந்த முத்துக்களென்னும் சத்தியவாக்குகள் ஒவ்வொன்றும் சந்தேகமில்லாத கலாமுல் மஜீதென்னும் வேதசுருதிகளின் வியாக்கியானமாயிருந்தது. பின்னர் அவர்கள் இயற்றிய நூல்களில் நின்றும் **கலிமத்துல்ஹக்கி** என்னும் ஓர் அரியநூலை இந்த மிஸ்கீனுக்கு நன்கொடையாகக் கொடுத்து ஆக்கியாபித்ததென்னவென்றால், **அல்கலிமத்துத் தைய்யிபா**வின்பேரில் வருகிற சந்தேகங்களை நீக்குவதற்கும் அதில் பொதிந்துள்ள உண்மைப் பொருளில் திடஞானம் உண்டாவதற்கும் அது சம்பந்தமான தலீலுகளென்னும் பிரமாணங்களுடன் வரையப்பெற்ற இந்த சில ஏடுகள் போதியவைகளாயும் பூர்த்தியுள்ளவைகளாயுமிருக்கின்றன. ஆதலால் முந்தி இதைப் பார்வையிட்டு இதில் வரைந்துள்ள விஷயங்களை நன்குணர வேண்டும், அதன் பிறகு அல்லாஹு தஆலா உதவி புரிந்தால் பார்ஸி பாஷையில் இதற்குச் சுருக்கமாகவும் விளங்கக்கூடிய விதமாகவும் தர்ஜுமாசெய்து ஆகிரத்துடைய சவாபைச் சேகரித்துக் கொள்ளவேண்டும். இதை ஓதுகிற அனேகம் தாலிபுகளான மாணவர்கள் துஆசெய்வார்கள். அந்த துஆவோ கபூல்செய்யப்படுகிற பதவியை அடையும். மூமின்களுக்குப் பயன்படவேண்டுமென்ற நல்லெண்ணமாகிய வித்து மனதிலிருந்தால் அது விருக்ஷமாகிக் கனியைத் தரும் என்பதே.

எனக்கிருந்த பலவேலைகளின் கவலை இந்தப் பெரிய வேலைக்கு எவ்வளவோ தடையாயிருந்தது. என்றாலும், ஈமானைப் பொருத்த

விஷயமாயிருந்ததினால் அதில் முயல்வது கடமை யெனக் கண்டேன். ஆதலால் அந்த அரிய நூலைப் பார்த்துத் தெளிவதில் பராக்கானேன். அதன் வாசகம் முழுவதையும் பார்வையிட்டு நன்குணர்ந்தேன். அதன் பிறகு ஜனங்களில் சாமானியரும் சிறந்தோரும் **வஹ்தத்துல்** வுஜூதுடைய மஸ்அலா சம்பந்தமாகப் பொதுவாகவும் ஜனாபு மவுலானா அவர்களுடைய வாக்கிய சம்பந்தமாகக் குறிப்பாகவும் காதைத் துளைக்கும்படி பேசிவந்த சந்தேகங்கள் தூஷணங்கள் முழுதும் நீங்கிவிட்டன. அதெவ்வாறெனின், ஜனாபு மவுலானா அவர்களுடைய கலாமின்பேரில் ஜனங்கள் குற்றங்கூறுவதற்குக் காரணம் அந்த ஜனங்கள் விளக்கப் பிசகிலும் மதிமாறாட்டமான இருட்டிலும் சிக்குண்டிருப்பதேயாம். அன்றியும் மவுலானா அவர்களுடைய கருத்தும் பொருளும் அந்த ஜனங்களுக்கு எட்டவில்லை. இல்லாவிட்டால் மவுலானா அவர்கள் எழுதிய எழுத்திலாவது பேசிய வார்த்தைகளிலாவது மறுக்கவும் நிராகரிக்கவும் தகுதியான யாதொரு விஷயமும் இல்லை.

ஜனாபு மவுலானா அவர்களுடைய வாக்கியங்களைப்பற்றி ஜனங்கள் குற்றங் கூறுவதற்குப் பல காரணங்களுண்டு. அக்காரணங்கள் முழுதும் அந்த ஜனங்களில் இல்மில்லாமையும் விளக்கம் போதாமையுமான குறையே தவிர வேறல்ல.

முதலாவது காரணம்:—வஹ்தத்துல் வுஜூதுடைய மஸ்அலாவாகிறது, மன்கூல் மஃகூல் என்னும் சுருதி யுக்திகளுக்கு விரோதமானதென்றும் அது மவுலானா அவர்களால் கற்பனை செய்யப்பட்டதென்றும் அனேக ஜனங்கள் நினைக்கிறார்கள். உண்மை அப்படியல்ல. எல்லா சமயவான்களும் இஷ்ராகிய்யூன் * மஷ்ஷாயிய்யூன்களான ஹுகமாக்களும் முற்காலத்து முத்தகல்லிமுகளும் தீர்க்க விசாரணையும் திட அறிவுமுள்ள எல்லாரும் வஹ்தத்துல் வுஜூதின் உண்மையை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அப்படியே ஹிக்மத்துடைய கிதாபுகளும் தஸவ்வுபுடைய கிதாபுகளும் அதன் விபரத்தால் நிறைந்திருக்கின்றன.

* பூர்வகால ஹுகமாக்களான பண்டிதர்களில் சிலர் வஸ்துக்களின் ஹகாயிகு என்னும் தத்துவங்களைத் தங்கள் சுயப்பிரயாசையான தெண்டிப்பினால் மன வெளிச்சமடைந்து அதனால் தெரிந்துகொண்டவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் தாம் இஷ்ராகிய்யூன் (வெளிச்சமுற்றவர்) என்பவர்கள். அப்லாதூன் பகராத்து முதலியவர்கள் இந்த வகுப்பினரேயாம், இன்னும் சிலர் தங்கள் சுயதெண்டிப்பினாலல்லாமல் ஆசான்களைத் தேடித்தேடித் தூரப்பிரயாணஞ்சென்று ஆசான்களை அடைந்து அவர்களிடம் வஸ்துக்களின் ஹகாயிகுகளைக் கேட்டுத் தெளிந்தவர்களா யிருக்கிறார்கள். இவர்கள் ஆசான்களைத் தேடித்தேடி நடப்பவர்களா யிருந்தபடியால் இவர்களுக்கு மஷ்ஷாயிய்யூன் (மிக்க நடப்பவர்) என்று பெயர் வழங்கப்படுகிறது.



இரண்டாவது காரணம்:—வஹ்தத்துல் வுஜூது உண்மையேயாயினும் அதை சாமானியர்களுக்கு வெளியிடக்கூடாதென்றும் ஆனால் மவுலானா அவர்கள் அப்படி வெளிப்படுத்துவது ஆகுமெனக் காண்கிறார்களென்றும் இது ஷரஹுக்கு விரோதமாயிருக்கிறதென்றும் அனேக ஜனங்கள் நினைக்கிறார்கள். வஹ்தத்துல் வுஜூதை வெளியாக்கக்கூடாதென்ற இந்த வாதமே குர்ஆனுக்கும் ஹதீசுக்கும் விரோதமென்பதை இவர்கள் அறியாமலிருப்பது ஓர் புதுமை! வஹ்மிய்யென்னும் மதிமாறாட்டமான ஒரு கியாசேயல்லாமல் அந்த வாதத்தின்மேல் அவர்களுக்கு யாதொரு தலீலுமில்லை. அந்த வாதத்துக்கு மறுப்பு இந்த ரிஸாலாவின் அனுபந்தத்தில் அதற்குமேல் அதிகமில்லை யென்கிற அவ்வளவு நல்லவிதமாகப் போதிய பிரமாணங்களுடன் வரையப்பட்டிருக்கிறது.

மூன்றாவது காரணம்:—ஜனாபு மவுலானா அவர்கள் மற்ற உலமாக்களுக்கு விரோதமாக சில அறபிய்யத்தான காயிதாக்களை அமைத்துக் கொண்டார்க ளென்று அந்த ஜனங்கள் நினைக்கிறார்கள். உண்மை அப்படியல்ல. அவர்கள் புதிதாக யாதொரு காயிதாவையும் ஏற்படுத்தவில்லை. மேலும் அல்கலிமத்துத்தையிபாவானது எந்த காயிதாவின்மேல் பொதிந்திருக்கிறதோ அந்த பழைய காயிதாவையே இதற்குமுன் எவரும் எடுத்து விளக்காத அவ்வளவு நல்ல விதமாக விரித்து விளக்கி இருக்கிறார்கள்.

நாலாவது காரணம்;—சூபியாக்களின் சொற்கள் தூஷணங்களுக்குட்படாத துய்யவைகளா யிருக்க ஜனாப் மவுலானா அவர்கள் சில சூபியாக்களான உலமாக்களின்மேல் குற்றங்கூறி தூஷித்திருப்பதாக அந்த ஜனங்கள் நினைக்கின்றார்கள். மவுலானா அவர்களின் காரியமோ இவர்கள் எண்ணும் எண்ணத்துக்கு வெகுதூரமானது. எல்லா சூபிய்யாக்களிடத்திலும் உம்மத்தின் உலமாக்களிடத்திலும் ஜனாப் மவுலானா அவர்கள் கொண்டிருக்

கிற அவ்வளவு நல்ல எண்ணம் மற்ற எவரும் அந்த ஸூபியாக்க
ளிலும் ஆலிம்களிலும் மிகச்சிறந்தவரா யிருப்பவரிடத்திலும்
கொண்டிருக்கமாட்டார்கள். மவுலானா அவர்கள் முஸ்லிம்களில்
ஒரு சின்ன மனிதனையும் எப்போதாவது இழிவாக அல்லது
இலேசாக எழுதினார்க ளென்றாவது பேசினார்க ளென்றாவது
எவரும் சொல்லமுடியா தென்றால் அருமைவாய்ந்த பெரியோர்
களைக்குறித்து அதிகமாக அவர்கள் என்ன சொல்லக்கிடக்கிறது?
மெய்தான்; அல்கலிமத்துத் தையிபாவின் புணர்ப்பிலும் பொரு
ளிலும் ஸூபியாக்களுடையவும் உலமாக்களுடையவும் சிலவாக்கி
யங்கள் குர்ஆனுக்கும் ஹதீசுக்கும் விரோதமாயும் உரூலுக்கும்
பலாகத்துக்கும் மாற்றமாயு மிருந்ததைக் கண்டு கட்டாயம்
அதைத் திருத்துவதில் பராக்கானார்கள். நேரான மார்க்கம் இது
வென்று வெளியாக்குவதில் அகத்தியம் மேல்சொன்ன வாக்கி
யங்களின் தப்புகள் வெளிப்படும். இப்படியான வாதப்போர்
பூர்வத்திலிருந்து ஹுகமாக்களுக்கும் உலமாக்களுக்கும் முஜ்த
ஹிதுகளுக்கும் முகல்லிதுகளுக்கும் நடுவே நடைபெற்றுவருவது
மறைந்ததல்ல.

ஐந்தாவது காரணம்:—இஸ்லாம் மதத்தைத் தழுவுகிற உயர்ந்
தோர் இழிந்தோர் எல்லாரும் **அல்கலிமத்துத் தையிபாவில்**
சர்வலோகத்தையும் அல்லாஹு தஆலா அல்லாத வேறு பொருள்
என்றும் அல்லாஹு தஆலா தன்ஜீஹில் மாத்திரம் மட்டுண்
டவன் என்றும் டெ ருள்படுத்தியே ஈமான் கொண்டிருக்கிறார்கள்.
மவுலானா அவர்க ிடத்திலோ இந்தப் பொருள் சுத்த ஷிருக்
காயிருக்கிறது. ஆகலால் மவுலானா அவர்களுடைய கொள்கை
யில் இஸ்லாம் மதஸ்தர்களில் அனேகம்பேர் ஈமான் என்னும்
செல்வத்தை அடைந்தவர்களா யிருப்பதில்லை என்றும் இந்தக்
கொள்கையில் பெரிய கெடுதி யிருக்கிறதென்றும் பெரும்பாலார்
நினைக்கிறார்கள். இப்படி நினைப்பவர்களின் சந்தேக நிவர்த்திக்
காக ஜனாபு மவுலானா அவர்கள் இந்த ரிஸாலாவின் அனுபந்தத்
தில் எழுதியிருப்பதாவது:—லாஇலாஹ இல்லல்லாஹுவைக்
கொண்டுள்ள மொத்தமான ஈமானாகிறது **அல்கலிமத்துத்தையி
பாவின்** மற்றொரு பகுதியாகிய முஹம்மதுர் ரஸூலுல்லாஹி
யில் அதுர்ப்புதமாய் உள்ளடங்கி எல்லா முமின்களுக்கும் உண்
டாய்விடுகிறது என்பதே. ஆனால் அல்லாஹு தஆலாவுடன்



அவனல்லாத வேறுபொருள் உண்டென்று கொள்ளும் கொள்
கையான ஷிருக்கென்பது ஒரு காரியமா யிருக்கிறது. இதில்
அனேகம் சாமானியரும் சிறந்தோரும் சிக்குண்டிருக்கிறார்கள்.

وما يؤمن اكثرهم بالله الا وهم مشركون اوليک کا لانعام بل هم اضل

**அவர்களில் அநேகர் அல்லாவைக்கொண்டு ஈமான் கொள்கிறார்களில்லை என்கினும் அவர்கள் முஷ்ரிகுகளா யிருக்கிறார்கள்.** என்கிற இது அல்லாஹு தஆலாவுடைய திரு
வசனமாயிருக்கிறது, சில ஹதீசுகளும் இதைப்பற்றி அறிவிக்
கின்றன.

ஆறாவது காரணம்:—ஜனாபு மவுலானா அவர்கள் விக்கிர
கங்கள் முதலான வஸ்துக்களை அல்லாஹு தஆலா அல்லாத வேறு
பொருள் என்று கொள்ளாமல் அவை அல்லாஹ் தான் என்று எண்
ணுகிறார்களாதலால் அவைகளை வணங்குவது ஆகுமென்றும் மவு
லானா அவர்கள் எண்ணியிருக்கலாமென்று சிலர் நினைக்கிறார்கள்.
இந்த நினைப்புள்ளவர்கள் **உலாயிக கல்அன்ஆமி** என்ற ஆயத்
தின் விதிப்படி மதிகெட்ட மிருகங்களா யிருக்கிறார்கள். ஜகமாதி
சிருட்டிப்பொருள் அல்லாவாகவே யிருக்கிறதென்று நிர்ண
யம் வைப்பது ஷராஹின்படி சுத்த ஈமானாயிருக்குமென்பதும்
குறிப்பான ஒரு பொருளுக்கு வணக்கத்தின் பாத்தியதை
உண்டென்று நிர்ணயங்கொள்வது பெரிய குபுரும் மீறலுமாயிருக்கு
மென்பதும் ஆகிய இவ்விரண்டில் முந்தியது விதியும் பிந்தியது
விலக்குமாயிருப்பதை அவர்கள் அறிகின்றார்களில்லை. மவுலானா
அவர்களுடைய கொள்கையோ ஷராஹுக்கு மயிர் முனையளவும்
மாறு பட்டதல்ல.

ஏழாவது காரணம்:—நஸாறாக்கள் அல்லாவை (பிதா குமா
ரன் பரிசுத்த ஆவியென்று) மூன்றாக்கினதால் காபிரானார்களென்
றும் மஜூசுகள் (யஜ்தான் அஹ்ரமன் என்னும்) இரண்டு சிருஷ்
டிக்கர்த்தர் உண்டென்று கொண்டதினால் முஷ்ரிகானார்களென்றும்
பின்னர் சர்வலோகத்தையும் அல்லாஹு என்று சொல்லு
கிறவன் ஏன் காபிரும் முஷ்ரிகும் ஆகமாட்டான் என்றும் சொல்
லுகிறார்கள். இந்த அறிவீனர்கள் நஸாராக்களுடையவும் மஜூ
ஸுகளுடையவும் குபுருஷிருக்குகளுக்குக் காரணம் அவர்கள்
அல்லாஹு தஆலாவை மூன்று அல்லது இரண்டு என்னும்

கணக்கில் அடக்கினதா யிருக்குமென்பதை அறிகிறார்களில்லை. ஜனாபு மவுலானா அவர்களும் மற்ற முவஹ்ஹிதுகளான அத்வைதிகளும் அல்லாஹு தஆலாவை ஒரு வஸ்துவிலும் மட்டுப் படுத்துகிறதில்லை. அவனைத் தன்ஜீஹில் மட்டுபடுத்துவதுங்கூட ஷிர்க்காயிருக்கிறதென்று அவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் எந்தப் பொருளை நாடி ஜகமாதி சிருஷ்டிகளை அல்லாதான் என்று சொல்லுகிறார்களென்றால் முபர்ரிகூன் என்னும் துவித சித்தாந்திகள் எந்த வஸ்துவை மவுஜூது என்னும் அல்லாஹ்வின் வேறான தனிப்பொருள் என்னும் எண்ணுகிறார்களோ அந்த வஸ்துவுக்கு நாமரூபங்கள் தவிர எதார்த்தமாக யாதொரு உஜூதில்லை. உண்மையில் அந்த மவுஜூது அல்லாஹு தஆலாவினது உஜூதையே ஆதாரமாகக் கொண்டது என்ற பொருளைக் கருதியேயாம்.

இனி ஜனாபு மவுலானா அவர்களும் மற்ற முவஹ்ஹிதுகளான அத்வைதிகளும் ஜகமாதி சிருஷ்டிகளுக்கு வஹ்மும் கியாலுமாகிய மருண்டபுத்தியும் மாறியநினைவுமே தவிர சுயம்பாக யாதொரு உஜூதில்லை என்று அறிந்திருக்கிறார்கள். இது. حقائق الاشياء ثابتة - **ஹகாயிகுல் அஷ்யாயி சாபிதத்துன்** என்ற அகீதாவுக்கு (அதாவது நெருப்பினது சூடும் நீரினது குளிர்ச்சியும்போல் வஸ்துக்களின் தத்துவங்கள் எதார்த்தமாயுண்டு என்னும் கொள்கைக்கு) விரோதமானதென்று துவிதசித்தாந்திகள் நினைக்கிறார்கள். இப்படி நினைப்பதற்கும் காரணம் அத்வைதிகளுடைய கருத்து அவர்களுக்கு விளங்காமையும் எட்டாமையுமேயாம். அத்வைதிகள் ஜகமாதிசிருட்டிகள் எப்போதும் உளதென்றாவது அறவே இலதென்றாவது வெறும் நினைவென்றாவது ஒருபோதும் எண்ணுகிறதில்லை. மேலும் ஜகமாதிசிருட்டிகள் ஒன்றுக்கொன்று பேதமாயும் வேறாயும் தோற்றுகிற தோற்றத்தையே (இஃதிபாரிய்யுன் வஹ்மிய்யுன்) கற்பனை என்னும் மருக்ஷியென்றும் எண்ணுகிறார்கள். அலையாதிகற்பித ரூபங்களுக்குக் கடல்நீரே ஆதாரமா யிருப்பதுபோல் ஜகமாதி கற்பித சிருஷ்டிகளுக்கு சதோதயமாய் விளங்கும் அல்லாஹு தஆலாவே ஆதாரமென்றும் அந்த ஒரு உஜூதே சகல வஸ்துக்களின் ஹகீகத்தான தத்துவமா யிருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள்.



ஆனால் உணர்ச்சியாலும் நாமரூபங்களாலும் உலகப்பொருள் பலவாயும் ஒன்றுக்கொன்று பேதமாயும் விரோதமாயும் இருப்பதை ஒப்புக்கொள்ளாமலிருக்க விடமில்லை யென்று எவரும் ஆக்ஷேபித்தால், அதற்கு ஜவாபாவது:—இது அல்லாஹு தஆலாவுடைய நாட்டத்தில் அடங்கியுள்ள அவ்வியக்கப் பொருளாதலால் **கன்ஜுல் மக்பிய்யி** என்னும் அந்த அவ்வியக்கப் புதையல் வியக்கமாவதும் (வெளிப்படுவதும்) உலகத்தை அடுக்காகக் கோப்பதும் றஸூல்மார்களை அனுப்புவதும் கிதாபுகள் சுஹுபுகள் இதுகளை ஒன்றன்பின் ஒன்றாக அனுப்புவதும் அம்ரு நஹ்யு என்னும் விதிவிலக்குகளை நடத்துவதும் சவாபு அதாபுகளை முறையே புண்ணிய பாவங்களுக்குப் பலனாக்குவதும் ஷரீஅத்துடைய சகல ஹுக்குமுகளென்னும் சக்கரத்தை ஆட்டுவதும் (இலைஹில் மர்ஜிஉ வல்மஆபு) அல்லாவினிடத்திலேயே ஐக்கியமும் அடக்கமும் என்ற பொருள் உண்மையாவதும் ஆகிய இவையாவும் உணர்ச்சியாலும் நாமரூபங்களாலும் ஒன்றுக்கொன்று பேதப்பட்டு பலவாயிருத்தலைப் பொருந்து நிற்கிறது. ஆதலால்

اليه المرجع والماب - صنع الله الذي اتقن كل شئ -

**சுன் அல்லா ஹில்லதீ அத்கனகுல்ல ஷைஇன்** என்ற ஆயத்தின் விதிப்படி உறுதிபட்டு நீங்காமலிருக்கிற வஹ்மிய்யாகிய நாமரூபாதி பேதங்கள் உண்டென்று ஒப்புவது சுத்த ஈமானாயிருக்கிறது.

ஆகவே பூமியைப் பூமியென்றும் வானத்தை வானமென்றும் இன்சானை இன்சான் என்றும் ஹைவானை ஹைவான் என்றும் அனாசிராகிய மண்ணாதி மஹாபூதங்களை அனாசிர் என்றும் அறிவதும் சொல்வதும் அத்வைதிகளிடத்தில் சுத்த ஈமானாயிருக்கிறது. ஆனால் இவையடங்கலின் ஹகீகத்துகளுக்கு ஆதாரம் அல்லாஹு தஆலாவினது உஜூதாகவே யிருக்கிறதென்று அவர்கள் நிச்சயித்திருக்கிறார்கள். அதெவ்வாறெனின்; கப்பாரும் கஹ்ஹாரும்போல், நாபிஉம் லார்ரும்போல், ஹாதியும் முலில்லும்போல் * ஒன்றுக்கொன்று நேர்மாறான குணபேதங்களையுடைய இந்த

* மேற்கண்ட கப்பார், கஹ்ஹார், நாபிஉ, லார்ரு. ஹாதி, முலில்லு என்ற சொற்களுக்கு முறையே மிக்க இரங்கி மன்னிப்பவன், மிக்க கடிந்து காய்பவன், லாபங்கொடுப்பவன் நஷ்டமுண்டாக்குபவன் நல் வழி காட்டுபவன் வழிதப்பச் செய்பவன் என்பது அர்த்தமாதலால் அவை ஒன்றுக்கொன்று நேர்மாறான குணங்களென்னப்பட்டன.

ஸிபத்துகளெல்லாம் எல்லோருடைய ஒற்றுமைப்படி ஒரே தாத்தாயிருப்பதுபோல் சகல வஸ்துக்களின் பலவகையான குணபேதங்களும் அவ்வாறு இருப்பதாக அவர்கள் எண்ணுகிறார்கள். எதுபோலெனில் (நவ்உ, ஜின்சு, பஸ்லு,) சுஜாதி, விஜாதி, சுகதம் ஆகிய இவைகளில் தோன்றுகிற பேதம் வெறுங்கற்பனையாயிருந்துகொண்டு எதார்த்தமாக உள்ளதெனக் காட்டுவது போலவாம்.

இன்னுமிப்படியே அந்த ஜனங்களுக்கு முவஹ்ஹிதுகளுடைய சித்தாந்தத்தைப்பற்றிப் பொதுவாகவும், ஜனுப் மவுலானா அவர்களுடைய கலாமைப்பற்றிக் குறிப்பாகவும் வருகிற சந்தேகங்கள் தூஷணங்கள் ஒவ்வொன்றும் **கலிமத்துல் ஹக்கி** என்னும் ரிஸாலாவைப் பார்வையிடுவதினால் தக்கவிதமாக ஜவாபு கிடைக்கும். இன்னுமதைப் பொறுமையுடன் கவனித்து நோட்டமிடுவதினால் ஜனுப் மவுலானா அவர்கள் **அக்கல்லிமத்துத் தையிபாவின்** பொருளையும் புணர்ப்பையும், விரித்து விளக்கினதிலும் அதன் மேல் அதன் தலீலுகளான பிரமாணங்களைப் பொருத்திக் காட்டினதிலும் மற்ற எவரும் அவர்களை மிஞ்சக்கவில்லை என்றும் முதகத்திமுகள் முதஅக்கிருகளில் நின்றும் ஒருவராலும் அவிழ்த்துவிடப் படாத கெட்டியான முடிகளை ஜனுப் மவுலானா அவர்கள் அவிழ்த்து விட்டார்களென்றும் நன்கு புலப்படும்.

உண்மையாகக் **கலிமத்துல் ஹக்குடைய** பொருளும் வாக்கியங்களும் (இல்ஹாமாத்துர் ரப்பானிய்யி) றப்புடைய பக்கத்தினின்றும் உதித்த உதிப்புகளாயும் அவனருளிய ஆயத்துகளாயுமிருக்கின்றன. இனி மவுலானா அவர்களுடைய கலாமின் பொருளுக்கும் மற்ற உலமா, உரபாக்களுடைய கலாமின் பொருளுக்கும் பெரிய தாரதம்மியம் உண்டென்னும் உண்மையை ரூபிக்க அடியிற் சில ஞாயங்கள் வரையப்படுகின்றன.

முதலாவது:—முவஹ்ஹிதுகளான எல்லா சூபிய்யாக்களின் சித்தாந்தம் ஹக்குக்கு கல்கு வேறல்ல, ஹக்குதான் என்பதாயிருக்கிறது. அவனன்றி வேறில்லை என்பதன்மேல் அறிவிக்கிற அத்தாக்ஷி அல்**கலிமத்துத் தையிபா**வேயாம் என்று அவர்கள் எல்லாரும் ஓர்மித்திருக்கிறார்கள். என்றாலும் அதன் தப்ஸீருகளில் ஒருவருடைய தப்ஸீரினாலாவது **அல்கலிமத்துத் தையிபா** தாவீல் * செய்யப்படாமல் ஐனிய்யத்துடைய மக்சதுக்கு, அதாவது ஹக்கும் கல்கும் ஒன்றுதான் வேறல்ல என்னும் கருத்துக்குக் கொண்டுபோகவில்லை. தஃவீல் செய்த பிறகுங்கூட அந்தக் கலிமா வானது × இலாஹு மாத்திரம் அல்லாஹ்தான் என்று அறிவிக்கின்றது. இலாஹு வல்லாத பூமியும் வானமும் மற்ற சிருட்டிகளும் அல்லாஹ்தான் என்பது அவர்களுடைய எண்ணப்படி ஒரு சயிக்கினையைக் கொண்டேயன்றி வெளிப்படையாக அந்தக் கலிமாவினால் விளங்காது. மவுலானா அவர்களின் அழகான தப்சீரினால் **லாஇலாஹ இல்லல்லாஹு** வானது தாவீல் செய்யப் படாமலே இலாஹு அல்லாஹ்தான் என்பது இபாரத்துன் நஸ்ஸாகிய சத்தப் பிரமாணத்தினாலும் மற்ற எல்லா வஸ்துக்களும் அல்லாஹ்தான் என்பது தலாலத்துன் நஸ்ஸாகிய அருத்தாபத்தியாலும் அறிவிக்கின்றது.

இரண்டாவது'—தவுஹீதுடைய (தலீலுகளென்னும்) பிரமாணங்களாக வந்திருக்கிற ஆயாத்து பய்யினாத்தாகிய வெள்ளிய சுருதிகளை அவைகளின் (மதுலூல்) பிரமேயமாகிய லாஇலாஹ இல்லல்லாஹுவின் மேல் தாவீல் இல்லாமலும் பொருளைப் பேதப்படுத்தாமலும் சரபு நஹ்வு மன்திகு மஆனி இதுகளின் காயிதாக்களின் பிரகாரமும் குர்ஆனிலும் ஹதீஸிலும் வந்த வாசகப்படிக்கும் மவுலானா அவர்கள் பொருத்திக் காட்டியிருப்பதுபோல் முதகத்திமுகள் முதஅக்கிருகளில் நின்றும் ஒருவராவது பொருத்திக் காட்டவில்லை.

மூன்றாவது:—**அல்கலிமத்துத் தையிபா** வானது எல்லாருடைய சம்மதப்படி இஷ்ராக்கென்னும் இணையுண்டாக்கலை நீக்குவதாயிருக்கிறது. ஆகவே அந்தக் கலிமாவுக்குப் பொருள் எப்படியிருப்பதில் எல்லாவகை இஷ்ராக்கும் நீங்கிவிடுமோ அப்படியாக அதன் பொருள் இருக்கவேண்டும். ஆனால் லாஹிரு உலமாக்கள் அந்தக் கலிமாவுக்கு அமைத்துள்ள பொருளால் இபாதத்தில் ஷிருக்கு என்னும் ஒருவகை ஷிருக்கு மாத்திரம் நீங்குகிறது. மற்ற நாலுவகை ஷிருக்குகள் அதாவது:—வுஜூதில்

---

* தாவீல்—வலிந்துரை கோடல் × இலாஹு—வணங்கப்படுகிற சுவாமி.

இஷ்ராக்கும் தஃசீரில் (குணங் கொடுப்பதில்) இஷ்ராக்கும் அல்
லாஹு த-ஆலாவைத் தன்ஜீஹில் மட்டுப்படுத்த லென்னும் இஷ்
ராக்கும் அவனைத் தஷ்பீஹில் மட்டுப்படுத்தலென்னும் இஷ்ராக்கும்
ஆகிய இந்த ஷிருக்குகளெல்லாம் அவர்களமைத்துள்ள பொரு
ளால் நீங்கமாட்டா. மவுலானா அவர்களுடைய தப்ஸீரான பொரு
ளின்படி அதாவது:—அல்லாஹ் தவிர அன்னியமாக யாதொரு
பொருளில்லை என்ற அர்த்தப்படி எல்லா வகை இஷ்ராக்கும் லாஇ
லாஹ என்கிற ஒரே நப்யாகிய எதிர்மறைச் சொல்லைக்கொண்டு
ஒரே முறையில் நீங்கிவிடும். ஏனெனில் அவனல்லாத வேறு
பொருளுக்கு வுஜூதே யில்லையென்றாகும் போது பின்பு அந்த
வேறு பொருளில் வுஜூது, தஃசீரு, தன்ஜீஹு, தஷ்பீஹு
இவைகளில் ஒன்றேனும் பெறப்படாமையினா லென்க.

நாலாவது:—முவஹ்ஹிதுகளான சூபியாக்கள் அவனன்றி
வேறொன்றில்லை யெனக் கொள்வதே சுத்த ஈமானாயிருக்கிற
தென்று சித்தாந்தப்படுத்தி யிருப்பதுடன் அந்த சூபியாக்களில்
அனேகர் குர்ஆனுடைய பல ஆயத்துகள் ஹக்குக்கு கல்கு வேறா
யிருப்பதாகவும் அறிவிக்கின்றன வென்று சொல்லியும் எழுதியும்
போயிருக்கிறார்கள். இதுவோ உண்மையல்லாத வெறும் பேச்சா
யிருக்கிறது. ஜனாப் மவுலானா அவர்கள் அல்லாஹு த-ஆலாவுடைய
கலாமில் நின்றும் ஒரு ஆயத்தாவது ரஸூல் ஸல்லல்லாஹு
அலைஹி வஸல்லமவர்களுடைய ஹதீசுகளில் நின்றும் ஒரு ஹதீ
சாவது சத்தம், திருஷ்டாந்தம், அனுமானம், உபமானங்களாகிய
நால்வகைப் பிரமாணங்களில் ஒன்றினாலும் ஹக்கு வேறு கல்கு
வேறென அறிவிப்ப தில்லை என்று உஸூல்காயிதாவின் அத்தாக்ஷி
களைக் கொண்டு நிரப்படுத்தியிருக்கிறார்கள். இந்தக் காரணங்கள்
தான் மவுலானா அவர்களை இது விஷயத்தில் தனித்தவர்க ளென்
றாக்கி விட்டன.

இதுவுமன்றி **கலிமத்துல் ஹக்கு** என்னும் ரிஸாலாவை
ஆழ்ந்து நோட்டமிட்ட பிறகு மவுலானா அவர்களுடைய மதுஹ
பானது முதகல்லிமுகளுடைய மதுஹபைப் சார்ந்த சூபியாக்கள்
உலமாக்கள் இவர்களுடைய மதுஹபுகளைக் காண பலவிதத்
திலும் மேலிட்டிருப்பதாகத் தெரியவந்தது.

அவைகளில் ஒன்று:—முத்தகல்லிமுகளுடைய மதுஹபின்
படி அல்லாஹு த-ஆலாவின் பேரில் ஈமான் கொள்வதென்பது



அறவே புத்தியில் அமையாது. ஏனெனில் ஒரு வஸ்து உண்டென்று உண்மை கொள்வதும் அதற்கு வழிபடுவதும் அதன் ரூபம் மனதுக்குப் புலப்படுவதைப் பொருத்ததா யிருக்கிறது. அல்லாஹு த-ஆலா உடைய குன்ஹுதாத்தாகிய தத்சொரூபத்தை ரூபகரப்படுத்துவது எவரிடத்தும் முடியாத காரியம். ஆனால் ஒரு விதத்தில் முடியுமென்றால் முதகல்லிமுகளுடைய மதுஹபின் படி அவ்விதமாக ரூபகாரப்படுத்த விடமே யில்லை. ஏனெனில் அவர்களுடைய மதுஹபில் அல்லாஹு த-ஆலா ஜவ்ஹருமல்லாத அர்லுமல்லாத அருஷி லுமில்லாத பருஷி லுமில்லாத காலத்திலு மில்லாத தேசத்திலுமில்லாத புத்தியிலும் அமையாத வஹ்மிலும் வராத இத்தன்மையான ஒரு நிலைமையில் மட்டுண்டிருக்கிறான். இதுவுமன்றி அவன் சர்வ சிருட்டிக்கும் புறம்பில் வேறாகவும் சகல வஸ்துக்களையும் சூழ்ந்தவனாகவு மிருக்கிறான் என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

ذ الك قولهم با فوا ههم بما ليس في قلوبهم

(தாலிக கவ்லுஹும் பிஅப்வாஹிஹிம் பிமாலைச பீகுலூபிஹிம்) இதுவோ அவர்கள் மனதில் இல்லாத வெருஞ் சொல்லா யிருக்கிறது. ஏனெனில் அவர்களுடைய கொள்கைப்படி **மாசிவல்லாஹி** என்று அவர்கள் அருத்தப்படுத்துகிற பொருட்களைத் தவிர புறம்பில் வேறாக ஒரு மவுஜூதில்லை என்பது பிரத்தியக்ஷமாதலினா லென்க.

மவுலானா அவர்களுடையவும் மற்ற முவஹ்ஹிதான் குத்திஸத் அஸ்ராருஹும் அவர்களுடையவும் ஹாலைப்பற்றி நான் சந்தோஷப்படுகிறேன் **ஐனமா துவல்லு பஸம்ம வஜ்ஹுல்லாஹி** என்ற மஹா வாக்கியத்தின் பொருளை உண்மையாக்கி வைப்பவர்களாயும் **லா இலாஹ இல்லல்லாஹு** என்ற அத்வைத மூலமொழியின் கருத்தைக் கண்டறிந்தவர்களாயும் இருப்பவர்கள் இவர்கள் தாம். (ஹர்குஜா மீநிகரம் ரூயெத்துரா மீபீனம்) நான் பார்க்கிற ஒவ்வொரு இடத்திலும் உன் தீதாரை தெரிசிக்கிறேன் என்னும் உண்மைக்கு உறைவிடமா யிருப்பவர் இந்த பரிசுத்த மார்க்கத்தாரேயாம்.

இரண்டாவது:— அல்லாஹு த-ஆலாவுடைய சிபத்துகளை உண்மையாக்கி வைப்பதும் ஹக்கான அகிதாக்களுக்கு வழிபடு

வதும் எப்படி உண்டாகவேண்டுமோ அப்படி உண்டாவது முத்த கல்லிமுகளுடைய மதுஹபில் ரூபகாரப்படாது. உதாரணமாக,

وهوا لسميع البصير وهو السميع العليم

**வஹுவஸ் ஸமீஉல் பஸீர். வஹுவஸ் ஸமீஉல் அலீம்.** என்னும் ஆயத்துகளில் சொல்லப் பட்டிருப்பதுபோல் (சம்உ, பஸரு, இல்மு) கேள்வியும் பார்வையும் அறிவும் ஆகிய இந்த சிபத்துகளை அல்லாஹு த.ஆலாவில் மாத்திரம் கட்டுப்படுத்துவதும் மற்றவரில் இந்த சிபத்துகள் காணப்படாம லிருப்பதும் முவஹ்ஹிதூன் குத்திஸத் அஸ்ராருஹூம் அவர்களுடைய மதுஹபில் அல்லாமல் முதகல்லிமுகளுடைய மதுஹபில் ரூபகாரப்படாது. ஏனெனில் (சமீஉன், பஸீருன்) கேட்பவன் பார்ப்பவன் என்பதன் பொருள் இன்சானில் காணப்படுகிறது. பின்பு சம்உ, பஸ்ரு என்னும் சிபத்துகளை அல்லாஹு தஆலாவில் மட்டுப் படுத்தல் எங்கேயிருக்கிறது? அவனே இன்சானுக்கு ஏற்பட்டுள்ள வெளிப் புலன்களும் உட்புலன்களுமாகிய ஞானேந்திரிய பஞ்சம், அந்தக்கரணபஞ்சம் என்னும் தசகருவிகளையும் விட்டுப் பரிசுத்தமாயிருக்கிறான். ஆகவே அல்லாஹு த.ஆலாவுடைய சிபத்துகளைக் கொண்டு ஈமான் கொள்வதென்பதும் மேற்சொன்ன ஆயத்துகளை உண்மையாக்கி வைப்பதென்பதும் முத்த கல்லிமுகளுடைய மதுஹபில் வாய்க்காது. ஆனால் மவுலானா அவர்களுக்கும் மற்ற முவஹ்ஹிதூன் குத்திசத் அஸ்ராருஹூம் அவர்களுக்கும் இந்தச் செல்வம் சிக்கியிருக்கிறது. அவர்கள் ஐனுல்யகீன் என்னும் திடஅறிவாகிய கண்ணில் பீயபுசுர் (என்னைக் கொண்டே பார்க்கிறான்) என்னும் சுர்மாவைத் தீட்டிக் கொண்டும் **பீயஸ்ம.:** (என்னைக் கொண்டே கேட்கிறான்) என்னும் பொருளைக் காதுகள் தோறும் கேட்டுக் கொண்டு மிருக்கிறார்கள். அவன் பார்க்கிறதைப் பார்க்கிறார்கள். அவன் கேட்கிறதைக் கேட்கிறார்கள். அவர்கள் மாத்திரமா! நீயுந்தான்.!!

## பார்ஸி பைத்துகள்.

ஸுர்மயே கர்ஜெநூரெ பீ யப்ஸுர்
பிகஷீ தர்தொ சஷ்மெ பூர்ஜங்கார்
ஜெந்தரூ ஞேபெரூ நிஷேபொ பிராஜ்
அஸ்பஸோ பேஷொ அஸ் யமீனெயஸார்



ஷாஹிதே லா இலாஹ இலலாஹு
பேஷெத்தூ பர்த கிரத் அஸ்ருக்ஸார்
ஸும்ம வஜ்ஹுல்லா.ஆய தத்பநஜர்
வஹுவ மஅகும் நுமாய தத்தீதார்.

بیت

سرمه گر ز نور بے ببصر — بکشي درد و چشم پر زنگار
ز ندرون و برون نشیب و فراز — از پس و پیش وازیمین و یسار
شاهد لا اله إلا هو — پیش تو پرده گیرد از رخسار
ثم وجه الله آیدت بنظر — وهو معکم نمایدت دیدار

இதன் பொருள்:—பீயப்ஸுர் என்னும் ஒளியில் நின்றுமுள்ள சுர்மாவை (ஹக்கு வேறு கல்கு வேறு என்று கொள்ளும் கொள்கையான) தூசு நிறைந்த இரண்டு கண்களிலும் தீட்டிக்கொள்வாயாகில் அப்போது உள்ளாலும் புறம்பாலும் கிழாலும் மேலாலும் பின்னாலும் முன்னாலும் வலப்பக்கத்தாலும் இடப்பக்கத்தாலும் அவனன்றி யாதொரு மவுஜூதில்லை யென்று சாக்ஷி கொடுக்கிற **லாஇலாஹ இல்லாஹு** வானது உன்னை மூடிக் கொண்டிருக்கிற திரையை உன் முகத்தி லிருந்து எடுத்துவிடும். அப்போது **அங்கு அல்லாவுடைய முக மிருக்கிறது** என்னும் உண்மை உனக்குத் தெரியவரும். இன்னும் **அவன் உங்களோடிருக்கின்றான்** என்பது உனக்கு நீதாரைக் காட்டி விடும் என்பதே.

மூன்றாவது:—அல்லாஹு தஆலாவுடைய லிகாவைத் தெரிசிப்பது உண்மையென்று ஈமான் கொள்ளுதல் ஹக்கான அகாயிதுகளின் தொகையில் ஒன்றாயிருக்கிறது. முத்தகல்லிமுகளுடைய மதுஹபின்படி அதில் நம்பிக்கை வருவது அசாத்தியம். ஏனெனில் தெரிசனை உண்டென்று நம்பிக்கை வருவதற்கு தெரிசிக்கப்பட்ட பொருளின் உருவம் புத்தியில் அமையவேண்டும். உருவமும் கோலமும் இல்லாமல் சுத்தமாயிருக்கிறவனைத் தெரிசிப்பதென்பது மனதுக்குப் புலப்படாத ஓர் பேச்சாயிருக்கிறது. இதனால்தான் முஃதஸிலாக்களும் ராபிலிகளும் இஸ்லாம் மதஸ்தர்களில் இன்னும் அநேக வகுப்பாரும் அல்லாஹு தஆலா

வுடைய லிகாவை தெரிசிப்பதில்லை யென்று இன்காரு செய்கிறார்கள். அஷாயிராக்களும் முத்தகல்லிமுகளும் அது உண்டென்று ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆனால் அதில் மனம் நிலைப்பதற்கு ஏதுவான மஃகூல் என்னும் யுக்திப் பிரமாணத்தால் அதன் கைபியத்தை (இன்னவித மென்பதை) பயான் செய்கிறார்களில்லை. முகல்லிதுகளாயும் முத்தகல்லிமுகளாயு மிருக்கிற ஸூபியாக்களான ஹலரத்துமார்கள் தெரிசனையை கஷ்பின்பேரிலும் பனாவுடைய மகாமில் சேர்வதின் பேரிலும் சொந்தமாக்குகிறார்கள். இன்னும் ஆகிரத்தில் தெரிசனை அசாத்தியமென்னும் பாவனையில் அது உண்டாகலா மென்னும் நிர்ணயம் கொண்டிருக்கிறார்கள். ஆகவே முத்தகல்லிமுகளுடையவும் அவர்களைப் பின்பற்றினவர்களுடையவும் மதுஹபின்படி அகஸ்ஸுல் கவாஸ்ஸுகள் தவிர மற்ற எல்லா முஸ்லிம்களான அவாம்முகளுக்கும் கவாஸ்ஸுகளுக்கும் தெரிசனை மஸ்அலாவில் இல்முல் யகீனும் வாய்க்கவில்லை. பின்பு ஐனுல்யகீனையும் ஹக்குல் யகீனையும் குறித்து என்ன சொல்லக்கிடக்கிறது.

சுவால்:—முவஹ்ஹிதுகளுடைய மதுஹபின்படி அல்லாஹுத ஆலாவுடைய தெரிசனை ஒவ்வொருவருக்கும் துன்யாவிலும் ஆகிரத்திலும் ஹாசிலாயிருக்கிற தென்று நீர் சொல்லும் சொல்லானது ஷரீஅத்துக்கு விரோதப்படுகிறது. ஏனெனில் யாராவ தொருவன் துன்யாவில் நான் விழித்திருக்கையில் முகக் கண்ணைக் கொண்டு அல்லாஹுத ஆலாவைப் பார்த்தேன் என்று சொல்லுவானாகில் அவன் பொய்யனும் ஜின்திகுமா யிருக்கிறான் என்று ஷரகில் வெளிப்படையாக வந்திருக்கிறதென்று எவராவது சொன்னால் அதற்கு,

ஜவாபு:—குர்ஆனிலும் ஹதீஸிலும் இம்மாதிரி வெளிப்படையான சொல் வந்திருப்பதில்லை. எவ்விடத்திலாவது மேற்சொன்ன வாசகத்தால் சரிக்கை செய்யப்பட்டிருந்தால் அதன் கருத்து: தப்புல் இஸ்லத்தாகிய அல்லாஹுத ஆலாவின் தன்ஜீஹ் உடைய மர்த்தபா என்று சொல்லப்படுகிற தாத்து மாத்திரமான வுஜூதுல் முத்லக் என்பதாகும். ஒளி, ஓசை, ஊறு, சுவைநாற்றம் என்னும் மஹ்ஸூசாத்துகளை உணருந்தன்மையுள்ள ஐயறிவுகள் அந்தப்பரிசுத்த தாத்தைக் கண்டடைய முடியாது. இதே தவிர அல்லாஹு



த ஆலாவை துன்யாவில் ஒரு சாயலாகவோ சாயலல்லாமலோ அறவே எவ்விதத்திலும் காண முடியா தென்பதில்லை. இந்தப் பொருளும் கருத்தும் சரி யென்பதின் பேரில் ஸூரத்து புஸ்ஸிலத்தின் கடைசியில்,

الا انهم في مرية من لقاء ربهم الا انه بكل شيء محيط

**அலாஇன்னஹும் பீமிர்யத்தின் மின்லிகாயி றப்பிஹிம் அலா இன்னஹு பிகுல்லிஷையின் முஹீத்து** என்கிற உறுதியான தலீல் இருக்கிறது. இதற்கு மாறாக வாதிப்பவர் தமது வாதத்தின் மேல் ஆதாரமாக குர்ஆனில் நின்றும் ஒரு பிரமாணத்தைக் கொண்டு வரக்கடவர்.

ஜனாப் மவுலானா அவர்களுடையவும் மற்ற முவஹ்ஹிதான் **தாமத்** பரகாத்துஹும் **இலாயவ்மித்தீன்** அவர்களுடையவும் மதுஹபின்படி தெரிசனை என்னும் இந்தச் சிறந்த செல்வமானது ஒவ்வொருவருக்கும் துன்யாவிலும் ஆகிரத்திலும் உண்டாயிருக்கிறது. ஹக்கு வேறு கல்கு வேறு என்னும் மருட்சியில் மருண்டு கிடப்பவர் தம்மைப் பாராதவரா யிருந்தாலும் இருக்கட்டும். ஆனால் அல்லாஹுதஆலாவே பார்க்கிறவனா யிருக்கிறான். பார்க்கப்படுவதற்கு உண்மையில் அவனன்று வேறு பொருள் இல்லை. ஹலரத்து அத்தார் அலைஹிர்றஹ்மத்துல் கப்பார் அவர்கள் சொல்லுகிறார்கள்:—

## பார்ஸி பைத்துகள்.

காஜிரே குத்குதாஸ்த்தோ குத்மன் ஜூர்
குத் தமாஷா வகுத்த மாஷா கார்
ஆஷிகே குத் குதாஸ்தொ குத் மஃஷூக்
குத் தபீபே குதஸ்தொ குத்பீமார்
அஸ்பாராயே பரேபெ குத் குத்கஷ்த்
ஜல்வதர் கத் வதர் கதம் ரப்தார்
தாப்தர் ஜூல்பொ வஸ்ம பர்அப்ரூ
சுர்மதர் சஷ்மொ காஸ பர்ருக்ஸார்
ரங்குதர் ஆபொ ஆப் தர்யாகூத்
போய் தர்மிஷ்கொ மிஷ்க் தர்தாத்தார்

*றப்பி அரினீ பகோஷெ குத் குத்குப்த்*
*குத் பகுத் கரத் ஹஸாத் தேதிதார்*
*பாஸ்குத் குப்த் லன்தரானீ ஜமீத்*
*பஹ்ரெச்சே பஹரொ கர்மி யேபாஜார்.*

بيت

ناظرخود خود است وخود منظور    خود تما شا وخود تما شا کار
ما شق خود خود است وخود معشوق خود طبیب خود است خود بیمار
ازبراي فریب خود خود گشت    جلوه در قد ودر قدم رفتار
تاب در زلف ووسمه برابرو    سرمه در چشم وغازه بررخسار
رنگ در آب وآب دریا قوت    بوي در مشک ومشک در تاتار
رب ارني به گوش خود خود گفت    خود بخود کرد حسرت دیدار
باز خود گفت لن تراني زود    بهر چه بهر گرمي بازار

இந்த பைத்துகளில் பொதிந்துள்ள பொருட்களின் சாரம் என்ன வென்றால்:—அல்லாஹு தஆலாவானவன் பார்க்கிறவனும் தானாய் பார்க்கப்படுவதும் தானாய் ஜாலக்காக்ஷியும் தானாய் ஜாலவித்வானும் தானாய் ஆஷிகும் தானாய் மஃஷூகும் தானாய் வயித்தியனும் தானாய் வியாதியஸ்தனும் தானாய் விளங்குகிறான் என்பதும், அவன் தன் ஜாலசக்தியினால் தானே தேகாதி பிரபஞ்சங்களில் வெளியாகி சர்வமும் தானாகியிலங்குகிறான் என்பதும், தானே (மூஸா அலைஹிஸ்ஸலாமாகித்) தீதாரை தெரிசிக்க ஆவல் கொண்டு என் **ஆண்டவனே உன்னை எனக்குக் காட்டு** என்று தன் காதுக்குத்தானே சொன்னான் என்பதும், பிறகு தானே நீ **என்னைப் பார்க்கவே** மாட்டாய் என்று சொன்னான் என்பதும், இவையாவும் எதற்காக வென்றால் பிரபஞ்ச விவகாரங்கள் நடைபெறுவதற்கேயாம் என்பதுமாம்.

இன்னுமிதுபோலவே துவித சித்தாந்திகளும் முத்தகல்லிமுகளுமான இவர்களுடைய மதுஹபின்படி கவாஸ்ஸுகளும் அவாம்முகளும் கால்சருகும் தானமாகிய **மஜல்லத்துல் அக்தாமி** என்னும் ஜப்ருகத்ருடைய மஸ்அலாவும் மற்ற கஷ்டமான மஸ்அலாக்களும் **கலிமத்துல் ஹக்கி** என்னும் ரிஸாலாவின் கருத்துகளை ஆழ்ந்து நோட்டமிட்டபின் கல்லவிதமாக விளங்கிவிடும் கபிய்யும்



ஜலிய்யு மாகிய ஷிருக்குகளைவிட்டும் கரைசேர்க்கும் அந்த ரிஸாலாவைப் பார்த்துத் தெளிந்தவர்கள் இல்முல் யகீனாகிய பரோக்ஷ ஞானமென்னும் விசாலித்த ஞான பூமியைக் கடந்து ஐனுல் யகீனாகிய அபரோக்ஷஞான மென்னும் அகண்ட வெளிக்கும், பின்பு ஹக்குல் யகீனாகிய பரவெளிக்கும் செல்வார்கள். இன்னும் பலவாகக் காண்டலை விட்டு ஒன்றாகக் காணத்துணிவார்கள். எம்மட்டென்றால் குபுரு, இஸ்லாம் என்ற துவேஷாபிமானங்களினின்றுங் கழன்று விடுதலும் பெறுவார்கள்.

## பார்ஸி பைத்து.

*பாரிகஸ் ரஸ்மொ ரஹே கப்ரொமுசல் மாங்கர்தீ*
*முர்ஷிதா கிர்தெத்து கர்தம்கெ செஇஹ் சாங்கர்தீ*

بيت

فارغ ازرسم وره گبر ومسلمان کردي
مرشد اگرد توکردم که چه احسان کردي

இதன் பொருள் எனக்குச் சன்மார்க்கத்தை யுபதேசிக்க வெழுந்தருளிய ஞானாசிரியரே! என்னை (இரண்டு கர்த்தாக்கள் உண்டென்னும் கொள்கையையுடைய) மஜூசிகளின் மார்க்கத்தினின்றும் (ஹக்கு வேறு கல்கு வேறு என்ற கொள்கையையுடைய) முசல்மான்களின் மார்க்கத்தினின்றும் விடுவித்த பேருதவிக்காகத் தேவரீருடைய திருமேனியை வலசாரியாகச் சூழ்ந்து துதிக்கிறேன் என்பதே.

ஹாசிலுல் கலாம்:—கலிமத்துல் ஹக்கைப் பார்த்துத் தெளிந்தபின் ஜனாப் மவுலானா அவர்களுடைய ஆக்ஞைப்படி அதைப் பார்ஸி பாஷையில் எளிய நடையில் தெளிவாகத் தர்ஜுமா செய்வதில் பாக்கியவானானேன். விரிவஞ்சி வியாக்கியானஞ் செய்யாமல் விடுத்தேன். ஆனால் சுருங்கிய சில வாக்கியங்களுக்கு அவற்றின் கருத்தையும் சாரத்தையும் எடுத்து விளக்கியிருக்கிறேன். உரை எழுதி முடிந்தபிறகு ஜனாப் மவுலானா அவர்களின் பார்வைக்குக் கொண்டு போனேன். அவர்களின் மகிமைதங்கிய மனதுக்கும் அது மக்பூலாய் விட்டது. (அல்ஹம்து லில்லாஹி அலா இஹ்சானிஹி) இந்தப் புல்லறிஞனின் சின்முயற்சியும் பெரிய மதிப்பை அடைக்

தது. மவுலானா அவர்களின் அங்கீகாரத்தினால் இந்த ஷா ஆனது மத்தனுபோல் ஆய்விட்டது. ஆதலால் இதற்கு **நூருல் முத்லகி பீதர்ஜ்மத்தி கலிமத்தில் ஹக்கி**, என்று பேரிடப் பட்டது. ஜனாப் மவுலானா அவர்கள் இந்த அரிய நூலின் மத்தனு ஷறஹுகளில் அல்கலிமத்துத்தய்யிபாவின் விஸ்தரிப்பு தவிர வேறெதுவும் புகக்கூடாதென்ற நோக்கமுள்ளவர்களா யிருந்த படியால் அந்த சத்திய நிலையுள்ள அத்வைத பெருமானின் அற்புதத்தினால் மாத்திரம் லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி என்னும் கலிமாவே இவ்வுரை பூர்த்தியான ஆண்டைக் குறிக்கும் கருவாய் அமைந்தது. அடியில் வரைந்துள்ள பைத்துகள் அவ்வாண்டைத் தெரிவிக்கும். அதாவது ஹிஜ்ரீ ஆயிரத்து இருநூற்று முப்பத்தைந்தாம் ஆண்டு என்பதே. (அந்த பய்த்துகள் இங்கு எழுதாமல் விடப்பட்டன.)

ஹக்கு தஆலா இந்த முத்தர்ஜிமை **லாஇலாஹ இல்லல் லாஹுவின்** பரக்கத்தைக் கொண்டு தவுஹீதும் இருபானுமாகிய பொக்கிஷத்தின் திறவுகோலாக்கு வானாகவும் இன்னும் **முஹம் மதுர் ரஸூலுல்லாஹியின்** ஹுர்மத்தைக் கொண்டு வாய்வாத மென்னும் பதவியினின்றும் சமாதிநிலை யென்னும் மேலான பதவி யில் சேர்ப்பானாகவும்.

இப்போது நான் என் வேலையை ஆரம்பிக்கின்றேன். ஆரம் பித்தது முதல் முடிவு பெறும் வரையில் அல்லாஹு தஆலா இந்த வேலையில் எனக்கு உதவி புரிபவன் என்று அவன் மேல் ஆதரவு வைக்கின்றேன். ஜனாப் மவுலானா தாம வில்லுஹும் அவர்கள் கலிமத்துல் ஹக்கி யென்னும் **முஸ்லிம் அத்வைத் மூல மொழியை** விளக்கிச் சொல்லத் தொடங்குகிறார்கள்.

# முஸ்லிம் அத்வைத மூலமொழி.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

அன்பு பாலிப்பவனும் அருள்புரிபவனுமான அல்லாஹு தஆலாவினது நாமத்தினால் கிதாபைத் தொடங்குகிறேன்.

புகழடங்கலும் அல்லாஹு தஆலாவுக்கே உரித்தானவை. அவனே.

نحن اقرب اليه من حبل الوريد

عسي ان يبعثك ربك مقاما محمودا

நமது பிராணநரம்பினும் அதிகமாக நெருங்கி நம்மை அடுத் திருப்பவன் இன்னும் நிறைவான ஸலவாத்தும் நிலையான ஸலாமும் புகழுக்குரிய தானத்தை அதாவது ஷபாஅத்தின் பதவியை உடை யவர்கள் பேரில் உண்டாவதாக. (அவர்கள் யாரெனில் **அஸா அன்யப் அதக** என்ற ஆயத்தில் அல்லாஹு தஆலா அருளிய வாக்குறுதிப்படி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் தாம்.) இன்னுமந்த ஸலவாத்தும் ஸலாமும் அவர் களுடைய கிளையார் தோழமார்மீதும் உண்டாவதாக. அவர்களுக் குச் சொர்க்க பதவியின் நல்மாராயமும் இன்னுமதிகமாக ரஹ்மா னுடைய லிகாவாகிய தெரிசனையு முண்டாகுக.

இனி ஹம்து ஸலவாத்துகளை ஓதிய பின்னர் **அப்துர் ரஹ் மான்** என்னும் பகிர் சொல்லுகிறான் அவனைக் குற்றப்படுத்துகிற காரியங்களினின்றும் அல்லாஹு தஆலா அவனைக் காப்பானாக, சொல்வது யாதெனில்:—திடனாகத் தவுஹீதாகிறது ஈமானுடைய ருகுனுகளில் நின்றும் முதன்மையான ஒரு ருக்னாயிருக்கிறது. இன்னும் **லாஇலாஹ இல்லல்லாஹு** என்னும் தவுஹீது கலி மாவானது இஸ்லாமின் எடுப்புகளாக விதிக்கப்பட்ட ஐந்து பர்லு களில் முந்தின பர்லாயிருக்கிறது.

(இது அப்துல்லா ஹிப்னு உமர் றலியல்லாஹு அன்ஹுமா அவர்களால் மிஷ்காத்தில் ரிவாயத்து செய்யப்பட்டிருக்கிற சஹீ

ஹான ஹதீசினுல் ஏற்படுகிறது: அது வருமாறு: அல்லாஹு
தஆலாவே தவிர வணங்கப்படுகிற இலாஹு வேறல்ல என்றும்
மெய்யாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அவ
னுடைய அடியாராயும் ரஸூலாயு மிருக்கிறார்க ளென்றும் சாக்ஷி
பகர்வதும் தொழுகையை நிலைப்படுத்துவதும் சகாத்து கொடுப்
பதும் ஹஜ்ஜும் றமலானுடைய நோன்பும் ஆகிய இவ்வைந்து
காரியங்களின் பேரில் இஸ்லாம் எடுக்கப்பட்ட தென்று ரஸூல்
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானுர்கள் என்ப
தாம்.)

ஆகவே அந்தக் கலிமாவை அறிவதும் அதிற் பொதிந்துள்ள
பொருள் உண்மையென்பதை நம்புவதும் முஸ்லிமாகிய ஆண்
பெண் அனைவர் பேரிலும் விதியாயிருக்கிறது. (அப்படியிருக்க)
அல்உம்மத்துல் மர்ஹூமத்தாகிய அஹ்லுல் இஸ்லாம்களில்
நின்றும் சித்தசுத்தி பெற்ற சூபிய்யா வென்னும் ஒரு சாரார் தவிர
மற்றவ ரெல்லாரும் அல்கலிமத்துத் தைய்யிபாவுக்கு அல்லாஹு
தஆலா ஒருவன் என்பதும் வணக்கத்துக்குப் பாத்திரமானவன்
என்பதுமே யன்றி அதற்கு வேறு பொருள் இல்லை யென்று நிர்
ணயங் கொண்டிருக்கிறார்கள். , காரியம் அப்படி யல்ல (அதாவது
கலிமாவுக்குப் பொருளும் கருத்தும் முஸ்லிம்களில் பெரும்பாலார்
கொண்டிருக்கிற படியல்ல) ஏனெனில் அறபு முஷ்ரிகுகளான
காபிருகளும் அல்லாஹு தஆலா ஒருவன் என்பதை உறுதியாக
நம்பினவர்களாயும் அவனே வணக்கத்துக்குப் பாத்திரமானவன்
என்பதை ஒப்புக் கொள்கிறவர்களாயும் இருந்தார்கள். அவர்
களுடைய அகிதா இப்படியே இருந்த தென்பதற்கு குர்ஆனில்
அனேகம் தலீலுகள் இருக்கின்றன.

ما نعبدهم الا ليقربونا الي الله زلفي • وهؤلاء شفعا ئنا عند الله

அந்த முஷ்ரிகுகளில் ஒருவராவது அக்காலத்தில் விக்கிர
கங்களாகிய புத்துகளில் ஒரு புத்தையும் இதுதான் சர்வலோகத்
தையும் பரிபாலிக்கிற அல்லாஹ்வா யிருக்கிறதென்று சொன்ன
தில்லை. இதற்கு சாக்ஷி அவர்கள் சொல்லிய வாக்கியமேயாம்.
அதாவது (நாங்கள் வணங்கும் தெய்வங்கள்) எங்களை அல்லாஹ்
வினிடம் நெருக்கிச் சேர்ப்பதற்கே யல்லாமல் மற்றப்படி நாங்கள்
அவைகளை வணங்குவதில்லை யென்றும் அந்த சுவாமிகள் எங்களுக்
காக அல்லாஹு தஆலாவினிடம் ஷபாஅத்துச் செய்பவர்களா



யிருக்கிறார்க ளென்றும் அந்த முஷ்ரிகுகள் சொன்னார்க ளென்ப
தாம். (அவர்கள் இப்படிச் சொன்னதை அல்லாஹு தஆலா
குர்ஆனில் எடுத்துக் கூறுகின்றான்.)

மேற்சொன்ன பொருள் மாத்திரமே அல்கலிமத்துத் தைய்யி
பாவின் கருத்தாயிருந்தால் (அதாவது அல்லாஹ் ஒருவன் என்ப
தும் வணக்கத்துக்குப் பாத்திரமானவன் என்பது ஆகிய இதுதான்
அதற்குப் பொருள் என்றால்) அப்போது முஷ்ரிகுகளுக்கும் முஸ்
லிம்களுக்கும் நடுவில் யாதொரு வித்தியாசமில்லை. (ஏனெனில்
இதன்படி இருதாரத்தாருக்கும் அல்லாஹ்வைப் பற்றியுள்ள நிர்
ணயம் சரியாயிருப்பதினு லென்க.)

இன்னும் நிடனாக **லாஇலாஹ இல்லல்லாஹு** என்னும்
கலிமாவானது முஷ்ரிகுகளுடைய கொள்கையை மறுப்பதற்காகவே
இறங்கிற்று என்பதிலும் நபிமார்கள் அலைஹி மிஸ்ஸலாத்து வஸ்
ஸலாமவர்கள் அனைவரும் அதைப் பொதுவாகத் தங்கள் உம்மத்து
களுக்கு எடுத்தோதும்படி ஏவப்பட்டார்க ளென்பதிலும்
யாதொரு சந்தேக மில்லை.

அதாவது:—முன்னுள்ள நபிமார்களும் அல்கலிமத்துத்
தையிபாவில் பொதிந்துள்ள இந்தப் பொருளையே அவரவர்களு
டைய உம்மத்துகளின் பாஷையில் எடுத்தோதும்படி கட்டளை
இடப்பட்டிருந்தார்கள். அந்தக் கட்டளைப்படி முன்னுள்ள நபி
மார்கள் ரஸூல்மார்கள் ஒவ்வொருவரும் தங்கள் உம்மத்துகளுக்கு
அதை எடுத்தோதின வகையை அல்லாஹு தஆலா குர்ஆனில்
தெரிவித்திருக்கிறான். அது வருமாறு:—

ولقد ارسلنا نوحا الي اقومه فقال يقوم اعبدو الله ما لكم من اله غيره

ஆயத்து:—நிடனாக நாம் நூஹு நபியை அவருடைய கவுமு
களிடம் அனுப்பினோம். பின்பு அவர் ஓ என் கவுமுகளே! நீங்கள்
அல்லாஹ்வை வணங்குங்கள் உங்களுக்கு அவனல்லாத யாதொரு
இலாஹும் இல்லை என்று சொன்னார்.

والي عاد اخاهم هودا قال يقوم اعبدو الله ما لكم من اله غيره

ஆயத்து:—இன்னும் ஆதுக்கூட்டத்தினிடம் அவர்களின்
சகோதரரான ஹூது நபியை அனுப்பினோம். அவர் ஓ என் கவுமு
களே! நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள் உங்களுக்கு அவனல்
லாத யாதொரு இலாஹும் இல்லை என்று சொன்னார்.

والي ثمود اخاهم صالحا قال يقوم اعبدوا الله ما لكم من اله غيره

ஆயத்து:—இன்னும் சமூது கூட்டத்தினிடம் அவர்களின் சகோதரரான சாலிஹு நபியை அனுப்பினோம். அவர் ஓ என் கவுமுகளே! நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள் உங்களுக்கு அவனல்லாத யாதொரு இலாஹும் இல்லை யென்று சொன்னார்.

والي مدين اخاهم شعيبا قال يقوم اعبدوا الله ما لكم من اله غيره

ஆயத்து:—இன்னும் மதுயன் கூட்டத்தாரிடம் அவர்களின் சகோதரரான ஷுஐபு நபியை அனுப்பினோம். அவர் ஓ என் கவுமுகளே! நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள், உங்களுக்கு அவனல்லாத யாதொரு இலாஹும் இல்லையென்று சொன்னார். (அலா நபிய்யினாவ அலைஹி முஸ்ஸலாத்து வஸ்ஸலாம்) இப்படியே ஒவ்வொரு நபியும் தம் கூட்டத்தாரை நோக்கி அல்லாவுக்கு வேறாக சுயம்பான யாதொரு தெய்வம் உங்களுக்கில்லை யாதலால் நீங்கள் அவனையே வணங்குங்கள் என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள். எதுவரையி லென்றால்;

நம்முடைய நபியாயும் நமக்கு ஷபாஅத்து செய்பவர்களாயும் அவதரித்த முஹம்மதுர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும் ஜனங்கள் லாஇலாஹ இல்லல்லாஹு (அல்லாஹ்வையன்றி இலாஹு வேறல்ல) என்று சொல்லுகிற வரையில் அவர்களுடன் போர் செய்யும்படி எனக்குக் கட்டளை பிறந்திருக்கிற தென்று திருவுளமானார்கள். ஆகவே அல்கலிமத்துத் தய்யிபாவின் பொருளும் கருத்தும் முன்சொன்ன தல்ல வென்றும் வேறு பொருள் இருக்கிறதென்றும் அப்பொருளை முஷ்ரிகுகள் ஒப்பாமல் கடினமாக மறுத்தார்க ளென்றும் அதற்கு மாறான கொள்கை வைத்திருந்தார்களென்றும் தெரியவந்தது. அந்தக் கொள்கையோ, ஆலிஹத் தென்னும் சுவாமிகளும் மற்றுமுண்டான வஸ்துக்களும் அல்லாஹு தஆலா அல்லாத அன்னியப் பொருள்களா யிருக்கின்றன வென்னுங் கொள்கைதான். ஆதலால் அவர்களுடைய அந்தக் கொள்கையை ரத்து செய்வதில் **லாஇலாஹ இல்லல்லாஹு** என்ற கலிமா இறங்கிற்று.

أمرت ان اقاتل الناس حتي يقولوا لا اله الا الله لا اله الا الله اي
لا اله غير الله يعني كلما توهمتموه غير الله ليس بغير الله بل عينه



அதாவது **லாஇலாஹ கைறுல்லாஹி** ஒரு இலாஹும் அல்லாஹ்வின் வேறல்ல என்பது கலிமாவின் அர்த்தம். இதன் கருத்தாவது, அல்லாஹ் அல்லாத வேறுபொருள் என்று நீங்கள் உங்கள் மருண்டபுத்தியால் நினைக்கிற ஒவ்வொரு பொருளும் அல்லாஹ் அல்லாததல்ல மேலும் அது அல்லாவாகவே யிருக்கிறது என்பதாம்.

## பார்ஸி பைத்துகள்.

ஹர்நக்ஷகெ பாத்தக்தயே ஹஸ்தீபய் தாஸத்
ஐனஸூரத்தே ஆங்கஸஸ்த் கின்நக்ஷாராஸ்த்
தர்யாயெ குஹன் கேமீஜனத் மவுஜேநௌ
மௌஜெ கானந்தர் ஹகீகத் தர்யாஸ்த்

بیت

هر نقش که بر تخته هستي پيدا است
اين صورت آنكس است كين نقش آراست
درياے كہن كه ميزند موجے نو
موجے خوانند در حقيقت درياست

இதன் பொருள்:—உளதெனும் படத்தின்மேல் தோற்றுகிற ஒவ்வொரு சித்திரமும் அதைச் சித்தரித்தவனுடைய உருவமாயிருக்கிறது. தொன்று தொட்டு பழையதாயுள்ள கடலானது புதிதாக அலைத்து வீசினால் அதை அலை யென்று சொல்கிறார்கள். உண்மையில் அது கடலேயாம் என்பது. இன்னும் (சர்வமும் அல்லாவாகவே இருக்கிறது என்ற) இந்தப் பொருள் சரியென்பது சமீபத்தில் (இன்ஷா அல்லாஹு தஆலா) அதற்குமேல் அதிகமில்லாத அவ்வளவு துலக்கமாக வெளியாகும். இன்னும் அறபுகள் அப்பாஷையை உடையவர்களா யிருந்தார்கள். அவர்களொருவரோ டொருவர் சம்பாஷிப்பதில் வழங்கும் பொருளை கஷ்டமில்லாமல் சுலபமாக விளங்கிக் கொள்கிறவர்களா யிருந்தார்கள். ஆகவே கலிமாவின் கருத்தாகிய பொருளை அவர்கள் நன்குணர்ந்தார்கள். பின்பு அதை நம்பினவர்கள் ஈமான் கொண்டார்கள். முஷ்ரிகுகள் அதை ஒப்பாமல் மறுத்தார்கள். இன்னும்,

واذا قيل لهم لا اله الا الله يستكبرون وقالوا اجعل الالهة الها
واحدا ان هذا لشيء عجاب

அல்லாஹு தஆலா அல்லாத யாதொரு இலாஹும் இல்லையென்று அவர்களுக்குச் சொல்லப்பட்டால் அவர்கள் பெருமையடிப்பவர்களாயும், இன்னும் எல்லாத் தெய்வங்களையும் (முஹம்மது) ஒரே தெய்வமென்று ஆக்கிவிட்டார்? ஆ! இது வெகுவிந்தையான பேச்சாயிருக்கிறது என்று சொல்கிறவர்களாயுமிருந்தார்கள்."

இன்னும் மேற்சொன்ன பொருளே (அதாவது எல்லாம் அவனென்பதே) கலிமாவுக்குப் பொருத்தமான பொருளாயும் சுயமான அர்த்தமாயுமிருந்தபடியால் அஸ்ஹாபுகள் தாபிஈன்கள் அலைஹிமுர்ரிழுவான் இவர்களில் ஒருவராவது தபஉத்தாபியீன்களும் அவர்களுக்குப் பின்னால் வருகிறவர்களும் கலிமாவின் பொருளை விளங்கிக் கொள்வார்களென்று ஐயப்படவில்லை. ஆகலால் கலிமாவுக்கு ஷறகு செய்யவும் அதன் பொருளை விரித்துரைக்கவும் அவர்கள் சூழவில்லை. பின்பு எந்தக் காலத்தில் பொய் பரவுமென்று ஹதீசில் சமிக்கை செய்யப்பட்டிருக்கிறதோ அந்தக் காலத்தில் கலிமாவின் கருத்தை விளங்குவதில் மறதியும் பிழையும் வெளிப்படத் தொடங்கின. (காலத்தில் தன்மையைக் குறித்து சமிக்கை செய்து வந்திருக்கிற ஹதீது யாதெனில்:—

خيرا لقرون قرني ثم الذين يلونهم ثم الذين يلونهم ثم يفشوا الكذب

காலங்களில் நல்ல காலம் என் காலமும் பிறகு என் காலத்தவர்களை அடுத்தவர்களின் காலமும் பிறகு அவர்களை அடுத்தவர்களின் காலமுமாம், பிறகு பொய் பரவி விடும் என்று ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள் என்பதே.)

கைசேதத்தினும் பெரிய கைசேதமென்ன வென்றால் திடனாக பெரிய பெரிய உலமாக்களில் நின்றும் கீழ்நாட்டார், மேல்நாட்டார், ஸலபுகள், கலபுகள், முஹத்திசுகள், முபஸ்ஸிருகள், முஜ்தஹிதுகள், முகல்லிதுகள், முதகல்லிமுகள், முத்தபக்கிஹுகள், இவர்கள் எல்லாரும் அல்கலிமத்துத் தையிபாவை அதன் தானங்களில் நின்றும் புறட்டி விட்டார்கள். இன்னும் அதை முஹ்கமில் நின்றும் முத்தஷாபஹின் பக்கம் திருப்பி விட்டார்கள் (இதன் கருத்து லாஇலாஹ இல்லல்லாஹு என்னும் கலிமாவானது நேரே பொருள் தரக்கூடிய சுருதிகளில் ஒன்றாயிருக்க பொருள் பொருந்தாமல் இடர்படுகிற சுருதிகளில் ஒன்றாக அதை மாற்றி விட்டார்களென்பதாம்) இன்னும் அதில் பொதிந்துள்ள



பொருளைக் கெட்ட பொருளாகப் பேதப்படுத்தி விட்டார்கள் அதாவது லாஇலாஹ இல்லா கைருல்லாஹி அல்லாவுக்கு வேறாக வேயன்றி அல்லா தானாக யாதொரு இலாஹும் இல்லையென்பதாம். இதன் விஸ்தரிப்பு பின்னால் வரும் இன்ஷா அல்லாஹு தஆலா.

பின்பு அந்தப் பெரிய பெரிய உலமாக்கள் லாஇலாஹ இல்லல்லாஹு என்று மொழிந்ததினால் தங்கள் நாவை ஷிர்க்கில் நின்றும் காத்துக்கொண்டார்கள். அவர்கள் அறியாத புரத்தில் லாஇலாஹ இல்லா கைருல்லாஹி என்று நிர்ணயங் கொண்டதினால் தங்கள் கல்பைக்கொண்டு ஷிர்க்கு செய்தார்கள் (தாங்கள் கொண்டிருக்கும் வேறென்பதும் பலவென்பதுமான அகீதாவானது லாஇலாஹ இல்லல்லாஹு வுக்கு விரோதமென்பதை அவர்கள் அறியவில்லை. இது மாத்திரமா! எதை அவர்கள் குபுரும் ஷிர்க்குமாயிருக்கிறதென்று நினைக்கிறார்களோ அந்த எல்லாம் ஏகமென்பதுதான் லாஇலாஹ இல்லல்லாஹுவில் கருதிய பொருள் என்பதையும் அவர்கள் தெரிந்து கொள்ள வில்லை.) வேறு என்பதும் பல என்பதுமான இந்தக் கொள்கையை விட்டு அல்லாஹ்வினிடத்தில் நாம் காவல் தேடுகிறோம்.

திடனாக அல்கலிமத்துத் தையிபாவிலும் அதன் தலீலுகளாகிய பிரமாணங்களிலும் நாளுக்கு நாள் பிழையும் மாற்றலும் திருப்பலும் பரவி வந்து கடைசியாக எல்லா முஸ்லிம்களுடைய எண்ணத்தில் தவுஹீது ஷிர்க்காயும் ஷிர்க்கு தவுஹீதாயும் மாறிவிட்டது. ஆனால் எந்த சில ஜனங்களுக்கு அல்லாஹு தஆலா ஹிதாயத்து செய்ய நாடினானோ அவர்கள் கலிமாவின் கருத்தைக் கண்டறிந்தார்கள். மேற்சொன்ன பிழையாதி குற்றங்களை நான் அறியும்படி அல்லாஹு தஆலா எனக்கு நல்லுதவி புரிந்து அவனிடத்தில் அதன் கருத்து எதுவோ அதை எனக்கு இல்ஹாம் செய்த (உதிப்பித்த) போது ஒரு பீடிகையும் பல பிரகாணங்களும் மூன்று அத்தியாயங்களும் ஒரு அநுபந்தமுமாக ஒழுங்கு படுத்தி **கலிமத்துல் ஹக்கி** என்று பெயரிட்டு அதை விரித்து விளக்குவதில் முயற்சி என்னும் இடுப்பை வரிந்து கட்டினேன்.

# பீடிகை.

அறிந்துக்கொள் அல்கலிமத்துத் தைய்யிபாவின் கருத்தை விளங்கிக்கொள்வது சில எச்சரிக்கைகளைப் பொருத்திருக்கிறது.

## முதலாவது எச்சரிக்கை.

முஷ்ரிகுகளில் ஷிருக்கு என்னும் சக்கரம் ஆடுவதற்கு ஆதாரமான அச்சு இதுதான் என்று குறிப்பிடுவதில் பேசுவது. (அதாவது முஷ்ரிகு எந்தக் கொள்கையைக் கொண்டு முஷ்ரிகாய் இருக்கிறான் என்பதை ஆராய்தல்) திடனாக **லாஇலாஹ இல்லல்லாஹு** என்னும் கலிமாவை எடுத்தோதி எதிர் நோக்கிப் பேசப்படுகிறவர் எல்லா மனிதருமா யிருந்த போதினும் அவர்களில் குறிப்பானவர்கள் அறபுகள் தாம் என்பது மறைந்ததல்ல. ஏனெனில் திடனாக (அதை எடுத்தோதும்படி ஏவப்பட்ட) ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அறபியாயிருந்ததினாலென்க. அன்றியும் பேசுகிற முத்தகல்லிமாகிய அல்லாஹு தஆலா பேச்சு நாகரீகமுள்ள எல்லாரினும் மிக்க நாகரீக முள்ளவன் என்பதும் அவன் முகாதபாகிய முன்னிலையின் தேட்டத்துக்குத் தக்கவாறே யல்லாமல் பேச்செடுத்துப் பேசான் என்பதும் மறைந்ததல்ல. இன்னும்.

قل من رب السموات السبع ورب العرش العظيم

(ஓ முஹம்மது ஸல்அம்!) ஏழு வானங்களைப் படைத்தவனும் அர்ஷை உண்டாக்கியவனுமாகிய நாயகன் யார் என்று நீர் அந்த முஷ்ரிகுகளைக் கேளும். அல்லாஹ்தான் என்று அவர்கள் சொல்வார்கள் என்பதாகவும், இன்னும்.

سيقولون الله ولئن سئلتهم من خلق السموات والارض ليقولن
خلقهن العزيز العليم

"வானங்களையும் பூமியையும் படைத்தவன் யார் என்று நீர் அவர்களைக் கேட்டால் அஜீஜும் அலீமுமாகிய அல்லாஹ் அவைகளைப் படைத்தான் என்று அவர்கள் சொல்வார்கள்" என்பதாகவும் அல்லாஹு தஆலா அருளிய திருவாக்கியங்களானவை அறபுகள் அல்லாஹு தஆலாவுடைய வுஜூதையும் அவன் ஒருவனென்



பதையும் சிருட்டிகர்த்தா என்பதையும் ஒப்புகிறவர்களா யிருந்தார்களென்று துலக்கமாக அறிவிக்கின்றன. (அதாவது அல்லாஹ் ஒருவனென்பதை அவர்கள் மறுத்ததில்லை. சர்வலோகத்தையும் சிருட்டிப்பவன் அவன்தான் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள் என்பதாம்.)

இன்னும் அல்லாஹு தஆலாவுடைய கலாமாகிய சுருதிப் பிரமாணத்தினாலும் யுக்திப் பிரமாணத்தினாலும் **வாஜிபுல் வுஜூது** பலவாயிருத்தல் கூடாதென்றும் எல்லா விதத்திலும் அதற்கு உபமானம் இழந்திருக்க வேண்டுமென்றும் திடனாக அறபுகள் ஒப்புக் கொள்வதாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இப்படியிருப்பதுடன் அவர்கள்மேல் முஷ்ரிகூன் என்னும் பதத்தை நடத்தினான். இன்னும் அவர்களை நோக்கி.

انما الله اله واحد ليس كمثله شيئ

"அல்லாஹ் என்பதெல்லாம் ஒரே இலாஹுதான்" என்றும் "அவனை யொத்த பொருள் ஒன்றுமே யில்லை" என்றும் வார்த்தையை எடுத்துரைத்தான் (இப்படி முகாதபாகிய முன்னிலையானவன் மறுக்காததும் அவன் வேண்டாததுமான ஒரு வார்த்தையை அவனுக்கு எடுத்துரைப்பது பலாகத் தென்னும் நாகரீகத்துக்குத் தூரப்பட்டதா யிருக்கிறது.)

ஆகவே ஷிருக்குக்குக் காரணமாக முஷ்ரிகுகளில் வேறு ஏதோ ஒரு காரிய மிருப்பதாகத் தெரியவந்தது. அந்தக் காரியம் இன்னதென்று ஆராய்ந்தறியவேண்டும். அப்படி ஆராய்ந்து பார்த்த பிறகு முஷ்ரிகுகளில் சில காரியங்கள் தென்பட்டன.

அவற்றுள் முதலாவது காரியம்:—அல்லாஹு தஆலாவையும் முஜர்ரது, மாத்தாக்கள் என்னும் சூக்கும தூலங்களைப் பொதிந்த மற்ற வஸ்துக்களையும் வேறு பிரித்து அவன் வேறு அவைகள் வேறு என்று கொள்ளுங் கொள்கையாம்.

இரண்டாவது காரியம்:—மலக்குகளை அல்லாஹு தஆலாவுடைய பெண் மக்கள் என்று அவர்கள் சொன்னதினாலும்,

صف لنا ربك يا محمد من اى شيئ هو من ذهب او فضة

"ஓ முஹம்மது! (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) உம்முடைய ஆண்டவனின் வர்ணிப்பை எங்களுக்குச் சொல்லும் அவன்

எந்த வஸ்துவால் ஆனவன்? பொன்னினுலா? அல்லது வெள்ளியி னுலா'? என்று அவர்கள் கேட்ட கேள்வியினுலும் அல்லாஹு தஆலா தஷ்பீஹில் மாத்திரம் மட்டுண்டவன் என்று அவர்கள் கொள்ளும் கொள்கையாம்.

மூன்ருவது காரியம்:—புத்துகளாகிய விக்கிரகங்களை வணக் கத்துக்குப் பாத்திரமானவைகள் என்றும் குணங்கொடுப்பவைக ளென்றும் தாமே அறிந்தோ அல்லது,

انا وجدنا آباءنا علے ذالک

(இன்னு வஜத்னு ஆபாஅனு அலாதாலிக்க) என்று அவர் களில் சிலர் சொல்கிறபடி அவர்களின் பிதாக்களைப் பின்பற்றியோ சஜ்தாவைக்கொண்டு அந்த விக்கிரகங்களை அவர்கள் வணங்குவ தாம்.

நாலாவது காரியம்:—அவர்கள் தங்கள் விக்கிரகங்களுக்கு 'இலாஹு (சுவாமி) கள் என்று பேர் வைப்பதாம்.

ஐந்தாவது காரியம்:—"எங்கள் சுவாமிகள் எங்களுக்காக அல்லாஹு தஆலாவினிடம் ஷபாஅத்து செய்யு" மென்று அவர்கள் சொன்னதினுல் அந்த சுவாமிகளிடத்தில் அவர்கள் ஷபாஅத்தின் ஆதரவு வைத்திருந்தார்களென்பதாம்.

(அல்லாஹு தஆலாவுடைய கலாமினுலும் புத்தியின் ஆராய் தலாலும் குபுரு ஷிருக்குகளுக்கு இந்த ஐந்து காரியங்கள்தான் காரணங்களாகக் காணப்படுகின்றன. இனி இந்த ஐந்து காரியங் களில் நின்றும் எந்தக் காரியம் ஷிருக்குக்குக் காரணமாகும்? ஒவ் வொன்றும் தனித்தனியாகவா? அல்லது எல்லாம் சேர்ந்தா? என்று மனதில் ஒரு கேள்வி பிறக்கிறது. இதற்கு ஜனுப் மவு லானு அவர்கள் விடையளிக்கிருர்கள். அது வருமாறு:—)

ஐந்தாவது காரியம்:-(அதாவது முஷ்ரிகுகள் தங்கள் சுவாமி களிடத்தில் ஷபாஅத்தின் ஆதரவு வைப்பது)ஷிருக்குக்குக் காரண மல்லவென்பது மறைந்ததல்ல. ஏனெனில் அல்லாஹு தஆலா வல் லாத அன்னியரிடத்தில் ஷபாஅத்தை ஆதரவு வைப்பது ஷரகின் படி ஆகும். நபிமார்கள் அலைஹி மிஸ்ஸலாமவர்கள் நமக்காக அல்லாஹு தஆலா வினிடத்தில் ஷபாஅத்து செய்பவர்களா யிருக்கிருர்கள்.



(அல்லாஹு தஆலா வல்லாத அன்னியரிடத்தில் என்று ஜனுப் மவுலானு அவர்கள் தங்கள் மத்தனு என்னும் மூலவாக்கியத் தில் கொண்டுவந்த இந்தச் சொல்லானது அன்னியம் உண்டென் பவர்களின் மதத்தைத் தழுவும் பாவனையாக அவர்களுக்கு எடுத் துக்காட்டின மறுக்கமுடியாத அத்தாக்ஷியா யிருக்கிறது. அதா வது லாஹிரு உலமாக்களின் கொள்கைப்படி அன்னியம் உண்டென் பது ஷிருக்குக்குக் காரணமாகாவிட்டால் அவர்கள் கொள்கைப் படி அல்லாவுக்கு வேருயிருக்கிற நபிமார்கள் அலைஹிமிஸ்ஸலாம் தங்கள் உம்மத்துகளுக்கு ஷபாஅத்து செய்வார்களென்று அவர் களிடத்தில் ஆதரவுவைப்பது ஷரகின்படி ஆகுமா யிருக்கிறது. ஆகவே அன்னியரிடத்தில் ஆதரவு வைப்பதில் முஷ்ரிகுகளும் மூமீன்களும் சரிசரியா யிருக்கிருர்கள்)

நாலாவது காரியமும் (அதாவது விக்கிரகங்களுக்கு இலாஹு என்ற பெயரை வழங்குவதும்) ஷிருக்குக்குக் காரணமாயிருக்க முக்கியமானதல்ல. ஏனெனில் இலாஹு என்னும் மொழியானது பலபொருட்கொரு சொல்லான ஒரு பதமா யிருக்கிறது. சமயத்துக் குத் தக்கவாறு ஒருகால் அல்லாஹு தஆலாவுக்கு ஒருகால்(மனிதர் மன்ற ஜீவர் தாவரம் காது முதலான) சிருட்டிகளில் நின்றும் வணங்கப்படுவதாயிருக்கிற பொருளுக்கும் இலாஹு என்ற பதத்தை வழங்கப்படும். அல்லாஹு தஆலாவுக்கே உரிதான தென்று குறிக்கப்படாத நாமங்களை அவனல்லாத அன்னியருக்குச் சொல்வதில் ஷிருக்கில்லை. ஏனெனில் அல்லாஹு தஆலா

ان الله بالناس لرؤف رحيم لقد جاءكم رسول من انفسكم عزيز
عليه ما عنتم حريص عليكم بالمؤمنين رؤف رحيم

**இன்னல்லாஹ பின்னுசி** என்ற ஆயத்தில் எப்படித் தனக்கு **ரஊபுன் ரஹீமுன்** என்று பேர் சொன்னுனே அப் படியே **ஹரீஸுன் அலைக்கும்** என்ற வாக்கியத்தில் தன் ஹபீபு முஹம்மது அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்களுக்கும் **ரஊபுன் ரஹீமுன்** என்று பேர் சொல்கிருன். ஆகவே விக்கிரகங்களுக்கு இலாஹு என்று பேர் சொல்வதற்குப் பொருள் வணங்கப்படுகிற சிருட்டி யென்பதாம் இதில் யாதொரு ஷிருக்கில்லை.

மூன்ருவது காரியமும் (அதாவது விக்கிரகங்களை வணங்கு வதும்) ஷிருக்குக்குக் காரணமா யிருப்பதற்கு ஊன்றுதல் உள்ள

தல்ல. ஏனெனில் விக்கிரகங்களை வணங்குகிறவர்கள் அவைகளை அல்லாஹ்வாக எண்ணி அவைகளுக்கு சஜ்தா செய்கிறதில்லை. இதற்கு தலில் மேலே சென்று விட்டது (அதாவது:—சிருட்டிகளைப் படைப்பவனும் பரிபாலிப்பவனும் அல்லாஹுத் தஆலா தான் என்று அவர்கள் அறிந்திருப்பதும் எங்கள் சுவாமிகள் எங்களை அல்லாஹ்வினிடம் நெருக்கிச் சேர்க்கவே யல்லாது மற்றப்படி நாங்கள் அவைகளை வணங்குகிற தில்லை யென்று அவர்கள் சொல்வதுமாம்.) மேலும் அவைகளைக் கனப்படுத்தும் வந்தனமாக அவைகளுக்கு சஜ்தா செய்கிறார்கள். ஒரு சிருட்டி மற்றொரு சிருட்டிக்கு சஜ்தா செய்ததாக திடனுகக் குருஆனில் வந்திருக்கிறது. அதெவ்வாறெனின்

واذ قلنا للملئكة اسجدوا لآدم فسجدوا وخروا له سجدا وطعام
الذين اوتوا الكتب حل لكم وطعامكم حل لهم والمحصنات من
المؤمنات والمحصنات من الذين اوتوا الكتاب من قبلكم
اذا اتيتموهن اجورهن انما المشركون نجس ولا تنكحوا المشركات
حتي يؤمن ولامة مؤمنة خير من مشركة ولو اعجبتكم

"ஆதமுக்கு ஸஜ்தா செய்யுங்களென்று மலக்குகளுக்கு நாம் சொன்னபோது மலக்குகள் எல்லாரும் சஜ்தா செய்தார்கள்" என்றும் "யாகூபு யூசுபு அலைஹிமஸ்ஸலா மிவர்களுக்கு (இவர்களின் பிள்ளைகளும் சகோதரர்களும்) ஸஜ்தாவில் சாஷ்டாங்கமாக விழுந்தார்கள்" என்றும் குர்ஆனில் வந்திருக்கிறது.

இரண்டாவது காரியமும் (அதாவது அல்லாஹுத் தஆலாவை தஷ்பீஹில் மாத்திரம் மட்டுப்படுத்துவதும்) ஷிருக்குக்குக் காரணமாயிருக்க முக்யமானதல்ல. ஏனெனில் அஹ்லுல் கிதாபிகளாகிய யஹூதி நஸாராக்களும் அல்லாஹுத் தஆலாவைத் தஷ்பீஹில் மாத்திரம் மட்டுப்படுத்தி யஹூதிகள் உஜைரு அலைஹிஸ்ஸலாமை அல்லாஹ் உடைய மகன் என்று சொன்னார்கள். நஸாராக்கள் மசீஹு அலைஹிஸ்ஸலாமை அல்லாவுடைய மகன் என்று சொன்னார்கள். ஆனால் அவர்களுக்கு முஷ்ரிகூன் என்று அல்லாஹுத் தஆலா பெயரிடவில்லை. (அதாவது முஷ்ரிகு என்ற சொல்லை அவர்கள் மேல் நடத்தவில்லை) மேலும் முஷ்ரிகுகளுக்கும் அஹ்லுல் கிதாபிகளுக்கும் நடுவில் சில ஹுகுமுகளைக் கொண்டு பிரித்திருக்கிறான்.



அந்த ஹுகுமுகள் எவை என்றால் "கிதாபைக் கொடுக்கப்பட்டவர்களின் (யஹூதி நஸாராக்களின்) உண்டி உங்களுக்கு ஹலாலாயும் உங்களுடைய உண்டி அவர்களுக்கு ஹலாலாயு மிருக்கிறது" என்றும் "மூமினாத்தாகிய பெண்களில் முஹ்சனத் தானவர்களும் உங்களுக்குமுன் கிதாபைக் கொடுக்கப்பட்டவர்களில் நின்றும் முஹ்சனத்தானவர்களும் ஆகிய இவர்களுக்கு நீங்கள் அவர்களின் மஹரைக் கொடுப்பீர்களாகில் அவர்கள் உங்களுக்கு ஹலாலாவார்கள்" என்றும், இன்னும் காபிர்களுடைய தன்மையைக் குறித்து "முஷ்ரிகுகள் நஜ்சானவர்கள்" என்றும் "முஷ்ரிகத்தான பெண்களை அவர்கள் ஈமான் கொள்கிறவரையில் நீங்கள் நிகாஹு செய்யவேண்டாம்" என்றும் "மூமினத்தான அடிமைப்பெண் முஷ்ரிகத்தான பெண்ணைக்காண கைரானவள் அவள் உங்களை ஆச்சரியத்திலாக்கினாலும் சரியே" என்றும் அல்லாஹுத் தஆலா திருவுளமா யிருக்கிறான்.

பின்னர் மேலே பேசிவந்த இந்த முகத்தமாவினால் அல்லாஹுத் தஆலாவுக்கு அன்னியமாக ஒரு பொருள் உண்டென்று எண்ணுவதும் அல்லாஹுத் தஆலாவுக்கும் இலாஹுகள் முதலான இதரசிருஷ்டிகளுக்கும் நடுவில் வேறு பிரித்து அவன் வேறு அவை வேறு என்று கொள்வதுமாகிய இதுதான் ஷிருக்குக்கு முக்கிய காரணமாயிருக்கிறதென்று வெளியாயிற்று. இந்த ஷிருக்கை நீக்குவது கொண்டு எல்லா ஷிருக்கும் நீங்கிவிடும். அது வெளிப்படையான ஷிருக்கா யிருந்தாலும் மறைவான ஷிருக்கா யிருந்தாலும் மற்ற எதாயிருந்தாலுஞ் சரி. ஏனெனில் அவனுக்கன்றி வேறொன்றுக்கு உஜூதில்லை யென்றொழிப்பதில் அந்த வேறொன்றை விட்டு மஃபூதியத்து, முவஸ்ஸரிய்யத்து, காலிகிய்யத்து (வணங்கப்படல், குணங்கொடுத்தல், சிருட்டித்தல்) முதலான எல்லாக் குணங்களையும் ஒழித்த தென்றாகும். ஒரு வஸ்துவுக்கு மற்றொரு வஸ்துவைத் தரிப்படுத்தினால் அந்த மற்றொரு வஸ்து அதற்கு உபவஸ்துவென்றாகும். வஸ்துவே யில்லையென் றொழித்தால் உபவஸ்து எது? (இதன் கருத்து குணியில்லையாயின் குணமில்லை என்பது. உதாரணம்:—பாலைவனக் கானலில் தோற்றுகிற ஜலத்துக்கு உண்மையில் வுஜூதில்லை. இல்லையாகவே குளிர்ச்சி நெகிழ்ச்சி என்ற அதன் குணங்களும் தணித்தல் இழுத்தல் என்ற அதன் தொழில்களும் அதற்கில்லை யென்றாயின.)

## இரண்டாவது எச்சரிக்கை.

அல்கலிமத்துத் தையிபாவின் கருத்து இன்னதென்பதில் பேசுவது. **லாஇலாஹ இல்லல்லாஹு** என்னும் கலிமாவைக் கொண்டு கருதியபொருள் என்னவென்றால், ஜகமாதி சகல வஸ்துக்களும் அல்லாஹு தஆலாவுக்கு வேறாயிருப்பதாக முஷ்ரிகுடைய எண்ணத்தில் மருளாக ஏற்பட்டிருக்கிற வேற்றுமையை ஒழிக்க வேண்டுமென்பதுதான். (அதாவது சர்வலோகத்தையும் அல்லாவின் வுஜூதல்லாத பிரத்தியேகமான வுஜூதென்று முஷ்ரிகுகள் தங்கள் மருக்ஷியினால் கொண்ட கொள்கையை மாய்க்கவேண்டுமென்பதாம்.) இல்லையாயின் உண்மையில் அவன் வேறாயும் வஸ்துக்களின் ஹகாயிகுகள் வெவ்வேறாயிருப்பதில்லை. ஆகவே உண்மையில் இல்லாத வேற்றுமையை இல்லையென மறுக்கத் தேவையில்லை. இதன் உண்மை விளங்குவது வஹ்தத்துல் வுஜூதைத் தரிபடுத்துவதின் பேரிலும் அல்லாஹு தஆலாவுக்கும் மற்ற சிருட்டிகளுக்கும் நடுவில் வருகிற பலவென்பதும் வேறென்பதுமான மருக்ஷியை நீக்குவதின் பேரிலும் நிலைபெற்றதாயிருக்கிறது. ஏனெனில் ஒன்றென்பதும் பலவென்பதும் ஆகிய இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று நேர்மாறாயிருக்கிறது. ஆகவே ஒன்றென்பது இன்னவிதமென்று ஏற்படாத வரையில் பலவாயும் வேறாயும் காண்கிற பேதத்தை மாய்த்தலென்பது மனதில் எப்படி அமையும்?

## வஹதத்துல் வுஜூது.

இனி நாம் வஹ்தத்துல் வுஜூதை (நக்லு என்னும் சுருதிப் பிரமாணத்தால் ரூசுப்படுத்தலைப் பின் நிறுத்தி அதை) அக்லு என்னும் யுக்திப்பிரமாணத்தால் முந்தி ரூசுப்படுத்துவோம். பின்னர் அறிந்துகொள்:—நிடனுக அகாபிருல் ஹுகமா என்னும் பெரிய பெரிய பண்டிதர்கள் வஸ்துக்களுடைய ஹகாயிகு என்னும் தத்துவங்களின் மூலங்கள் **வாஜிபு** என்றும் **இம்திநாஉ** என்றும் **இம்கானு** என்றும் மூன்றாயிருக்கின்றன வென்று கொண்டிருக்கிறார்கள். இதுவோ பிசகான கொள்கையாயிருக்கிறது. ஏனெனில் அவர்களிடத்தில் இந்தப் பாகுபாடென்னும் சக்கரத்துக்கு கடுமுளையாயிருப்பது பின் கூறும் யுக்தியாம். அதாவது எது அறியப்படுவதும் அதன் பண்பாதி குணங்கள்



அறிவிக்கப்படுவதுமாயிருக்கிறதோ அது (ஷைவுன்) வஸ்துவாம். அது இருந்தால் தனது உண்மையை வேண்டுவதாயிருக்கும். அல்லது தனது இன்மையை வேண்டுவதாயிருக்கும். அல்லது உண்மை இன்மைகளில் ஒன்றையும் வேண்டாததாயிருக்கும். பின்னர் முந்தினது (உண்மையை வேண்டுவது) வாஜிபும் இரண்டாவது (இன்மையை வேண்டுவது) மும்தனிஉம் மூன்றாவது (உண்மை இன்மைகளில் ஒன்றையும் வேண்டாதது) மும்கினுமாம் என்பதே. இந்தப் பாகுபாட்டில் மேல் நீங்காத இரண்டு சந்தேகங்கள் வருகின்றன.

அவற்றுள் ஒன்று யாதெனில், வாஜிபு (தனது வுஜூதை வேண்டலால்) தாத்தென்னும் தத்சொரூபஸ்தானத்தில் அதற்கு வுஜூதில்லையென்றொழிவதாம். இதுவோ சந்தேகமின்றி அசங்கிதமாம். இரண்டாவது யாதெனில் நபிமார்கள் அலைஹிமிஸ்ஸலாம் தங்கள் வருகைக்குக் காரணமான **லாஇலாஹ இல்லல்லாஹு** (அல்லா வல்லாத யாதொரு இலாஹும் இல்லை) என்ற கலிமாவைக் கொண்டு வந்த திருஷ்டாந்தத்தினால் வேண்டல் அல்லது தேட்டமென்பது, வுஜூதினது பாஉ என்னும் புடைபெயர்ச்சியாயிருக்கிறது. இது பிரத்தியக்ஷம். பின்பு ஒரு பொருள் தனது தாத்தென்னும் தத்சொரூபஸ்தானத்தில் உளதுமல்லாமல் இலதுமல்லாமல் இரண்டையும் விட்டு ஒழிந்திருக்கிறதென்றால் இது எப்படி ரூபகரமாகும்? இதுவுமன்றி உளதுமல்லாமல் இலதுமல்லாமல் ஒரு மாஹியத்தான சுயம்பு உண்டென்பது ஒன்றுக்கொன்று நேர்மாறான இருவித தன்மையுமின்றி ஒரு பொருளிருத்தல் கூடாதென்ற ஞாயப்படிக்கும் பிசகாகும். ஆகவே இந்த யுக்தியின் மேல் எடுக்கப்பட்ட மேற்சொன்ன பாகுபாடு தப்பாய் ஒழிந்தது, (ஒழியவே ஒரே வுஜூதைக் கொண்டு மவுஜூதான மாஹியத்து முத்லகா என்ற ஏக சொரூபம் இருந்தபடியே தன்னிலையில் தரிபட்டது.)

(இனி வுஜூது என்பது தாத்துதானா? அல்லது வேறா? ஒரு ஜாதியுள் ஒன்றா? அல்லது ஜாதியற்ற தனிமுதலா? அகத்திலாவது புறத்திலாவது ஒன்றுக்கொன்று பேதமான தனித்தனி பொருள்களை உடையதா? அல்லவா? என்பதை விசாரித்தறிய வேண்டியது பாக்கியாயிருக்கிறது. இதைக் குறித்து மவுலானா அவர்கள் சொல்கிறதாவது.)

பின்னர் அறிந்துகொள்:—நிடனாக வுஜூதாகிறது ஜாதியற்ற சுயம்பான தனிமுதலா யிருக்கிறதென்றும் ஒன்றல் கூட்டத்தில் அடங்கிய ஓர் பொருளல்ல வென்றும் ஒன்றுக்கொன்று பேதமாய் வேறுபட்ட தனித்தனி பொருள்கள் அதன் அகத்திலுமில்லை புறத்திலுமில்லை யென்றும் இல்முல் ஹிக்மத்தென்னும் தத்துவ சாஸ்திர விசாரணையில் தரிபடுத்தப்பட்டிருக்கிறது.

இன்னுமந்த இல்முல் ஹிக்மத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாவது:—வுஜூதுக்கு தாத்து இன்றியமையாத வாஜிபாயிருக்கிறது. (ஆதலால் வுஜூதே தாத்தும் தாத்தே வுஜூதுமாம்.) அந்த வுஜூது தானல்லாத பிறிதொன்றை வேண்டாது. வேண்டினால் அதம் என்னும் இல்லாமையை வேண்டுவதாகும். இது புத்தி ஒப்புக் கொள்ளாத விஷயம். ஆகவே யுக்திப்பிரமாணப்படி வாஜிபுல் வுஜூது பலவாயிருத்தல் கூடாதாகையினால் அது ஒன்றாகவே இருக்கவேண்டுவது அவசியமாயிற்று.

இனி சிருஷ்டிகளில் புறப்படுகிற பலவென்பதும் வேறென்பதுமான பேதம் எதார்த்தமானதல்ல. ஏனெனில் இரண்டு வஸ்துக்களுக்கு நடுவே பேதங் காணப்படுவதற்கு அவ்விரண்டிலுமாவது அவைகளில் ஒன்றிலாவது ஒரு மூன்றாவது காரியம் சேர வேண்டும். அப்படிச் சேராதவரையில் பேதங் காணப்படாது. ஆனால் ஒரு வஸ்து அது தானாகவே யிருக்கிற தன்னோடு சேராதென்பது வெளிப்படை. பின்னர் அந்த மூன்றாங்காரியம் இருந்தால் வுஜூதாய் (உளதாய்) அல்லது அதமாய் (இலதாய்) இருப்பதை விட்டு ஒழியாது. வுஜூதாயிருந்தால் அது தானாகவே இருக்கிற தன்னோடு சேராது, அதமா யிருந்தால் அதுவும் வுஜூதுடன் சேராது. சேர்ந்தால் ஒன்றுக்கொன்று நேர்மாறான இரண்டு முரண்படு தன்மைகள் ஒன்றில் அமைவது வந்து பூணும். இதுவே அசாத்தியம்.

ஆகவே எதனால் பேதம் தோற்றுகிறதோ அது (தோன்றியழிகிற) செயற்கையாகிய ஒரு அதமா இருக்கவேண்டுவது அவசியமாயிற்று. அதுவே கழன்றுபோவதும் வெறுங்கற்பனை மாத்திரமுமான ஒரு காரியமா யிருக்கிறது. புறம்பில் அதற்குச் சுயமாக யாதொரு வுஜூதில்லை. ஆனால் மருண்ட புத்தியில் கற்பனையாகக் காணப்படுகிறது. கற்பனாரூபமான இந்தப் பேதம் வுஜூது ஒன்



றென்பதை இல்லையெனப் பாதிக்காது. ஆகவே வஹ்தத்துல் வுஜூது எதார்த்தமாகத் தரிபட்டது.

(இனி வஹ்தத்துல் வுஜூது தரிபடுவது கொண்டு மவுஜூதாத்தாகிய சிருட்டிகளில் காணப்படும் பேதம் நீங்கமாட்டாதென்ற சந்தேக நிவர்த்திக்காக ஜனாப் மவுலானா அவர்கள் சொல்லுகிறதாவது:—)

வுஜூதானது மவுஜூதை விட்டுக் கடக்காது. கடந்தால் அது இலதென்னும் மஃதூமில் கடந்ததாகும். அப்படியானால் ஒன்றுக்கொன்று நேர்மாறான இரண்டு முரண்டுகள் ஒன்றில் அமைவது வந்து பூணும். இதுவே அசாத்தியம். இன்னுமிது போலவே மவுஜூதென்னும் சிருட்டியானது வுஜூதுக்குமேல் அதிகரிக்காது. அதிகரித்தால் அதமென்னும் இன்மையைக் கொண்டே அதிகரிக்கும் இதுவும் இரண்டு முரண்கள் ஒன்றில் அமைதலென்னும் குற்ற மாகும். ஆதலால் வுஜூதுக்கும் மவுஜூதுக்குமிடையில் சொல்லால் மாத்திரமே யன்றி பொருளால் யாதொரு பேதமில்லையென்று வெளியாயிற்று. ஆகவே மவுஜூதாத்தின் வஹ்தத்தும் அது பலவல்ல வென்பதும் தரிபட்டது.

பின்னர் வுஜூதானது புறம்பாகவும் உள்ளாகவும் காலமாகவும் இடமாகவும் விகர்ப்பித்துக் காட்டுகிற பேதமும் இதேபோல் மவுஜூதாத் தென்னும் வானம், பூமி, இவ்விரண்டுக்கு மிடையிலுள்ள பஸாயித்தென்னும் அனாஸிராகிய விரித்த பூதங்கள் முரக்கபாத்து என்னும் பௌதிகங்கள் ஆகிய சிருஷ்டிகளில் காணப்படும் பேதமும் இவையடங்கலும் வெறுந்தோற்றமான கற்பனையா யிருக்கிறது. எதுபோலெனில் பாலை வனத்திலுற்ற கானலைத் தவன முள்ளவன் ஜலமென்று எண்ணுவது போலவாம். ஆகவே **ஹகீகத்து** என்றும் தாத்து என்றும் மாஹியத்து என்றும் வழங்கப்படுகிற இந்தச் சொல்லை வுஜூதுக்கு மாத்திரம் எதார்த்தமாகவும் வுஜூதுக்கு நேர்மாறான அதமுல்மஹ்லு, மும்தனிஉ இவைகளுக்கு இரவலாகவும் நடத்தப்படுகிறது.

ஆகவே வுஜூது சகோதயமாய் விளங்குவதாம். அதாவது அது எப்போதும் அழிவை யடையாது. இலது மாகாது. இல்லாவிட்டால் அதன் மாஹியத்து என்னும் சுயம்பு கெட்டு மற்றொன்றாக மாறுவது வந்து பூணும். இது கூடாது. பின்னர் சதாவா

யிருக்கும் மவுஜூதுக்கும் இன்னும் எதனுடைய வஹ்தத்து அறி யப்பட்டதாயும் புத்தியினிடத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டதாயு மிருக்கிறதோ அந்த வாஜிபுல் வுஜூதுக்கும் நடுவில் யாதொரு வித்தியாசமுமில்லை. ஆதலால் ஒவ்வொரு மவுஜூதும் அது சிருட்டி கர்த்தாவா யிருந்தாலும் சிருட்டியாயிருந்தாலும் சரியே அதன் வுஜூது எப்போது முள்ளதேயாம். வுஜூதுக்கும் மவுஜூதுக்கு மிடையில் காணப்படுகிற பேதம் வெறுங் கற்பனையா யிருக் கிறது.

நீ பார்க்கவில்லையா? உவமையில் ஜெய்தைப்போல் மும்கினுல் வுஜூது என்று பேர் வைக்கப்பட்ட பொருளானது மடித்துப் போன எலும்பாயும் எலும்பிலிருந்து மண்ணாயும் மண்ணிலிருந்து நீராயும் நீரிலிருந்து காற்றாயும், காற்றிலிருந்து தீயாயும் மாறி மாறி வந்து கொண்டிருந்தபோது அதன் இருப்பு நீங்காமல் நிலைத்திருக் கக் காணப்பட்டது. ஆகவே அது நித்தியமாக வாஜிபுல் வுஜூதா யிருக்கும். அனாதியாகவும் வாஜிபுல் வுஜூதா யிருந்தது. பின்பு ஒரு மர்த்தபாவில் நின்றும் மற்றொரு மர்த்தபாவுக்கு மாறி மாறி கடைசியில் பிள்ளையாகப் பெறப்பட்டு ஜெய்து என்று பேரிடப் பட்டது. அந்த வுஜூது அனாதி நித்தியமாக எப்போது மிருந்து வருவதென்பது மறைந்ததல்ல. ஏனெனில் எப்போது மிருந்து 'ருவதென்பதற்குப் பொருள் எதுவென்றால், எதன் இருப்பு வசியமாயும் அந்த இருப்பு அதைவிட்டு நீங்குவது கூடாதாயு மிருக்கிறதோ அதுவேயாம். ஜெய்துடைய வுஜூது என்பது **மப்தவுல் ஆதாரி** அதாவது பல பண்புகளும் குணங்களும் வெளிப்படுவதற்கு ஸாதனமா யிருக்கிற ஓர் பொருளாம். அந்த வுஜூது மேற் சொன்ன மாறுதல்களில் ஒன்றிலாவது ஜெய்தை விட்டு அறவே நீங்கவில்லை. இது வெளிப்படை. அந்த வுஜூதை விட்டு நீங்கின தெல்லாம் குறிப்பான பண்புகளே தவிர வேறல்ல. அந்தப் பண்புகள் பொருளல்லாத வெறும் நாம ரூபங்களான கற்பனை மாத்திரமா யிருக்கிறது. அது அழிவதினால் வுஜூது அழியாது எது போலெனில் ஜெய்துடைய ஜீவகாலத்தில் பிள்ளைப் பருவத்திலிருந்து வாலிபத்துக்கும் வாலிபத்திலிருந்து கிழத் தன் மைக்கும் அவன் மாறிக்கொண்டிருந்தபோது அவன் வுஜூது அழியாதது போலவாம். அவன் ஒரு பண்பிலிருந்து மற்றொரு பண்புக்கு மாறுவது அவன் வுஜூதையும் அதன் நித்தியத்து



வத்தையும் சேதப்படுத்தாதென்று வெளியாயிற்று. இம்மா திரியான மாறுதலுக்கும் வெறுந்தோற்றமான விகாரத்துக்கும் **இம்கானுல் காஸ்ஸு** என்று சொல்லப்படும். இல்லையாயின் அந்த வஸ்து அனாதி என்றாகாதவரையில் அது வுஜூதில் வராது (இருந்து தான் வரவேண்டும் இல்லாதது வராது.)

இனி நக்லு என்னும் சுருதிப் பிரமாணத்தால் வஹ்தத்துல் வுஜூதுடைய தரிபாட்டுக்கு ஆதாரமாக குர்ஆனில் நின்றும் அல்லாஹு தஆலா அருளிய திருவாக்கியங்களில் ஒன்று இது:—**ஹுவல் அவ்வலு வல்ஆகிரு, வல்லாஹிரு, வல்பாத்தினு** இதன்பொருள்:—அவனே முன்னவன் அவனே பின்னவன் அவனே வெளியாயிருப்பவன் அவனே உள்ளீடா யிருப்பவன் என்பதாம். சகல வஸ்துக்களும் இந்த நாலில் அடங்கி யிருக்கின்றன. அவை ஜாதியுள்ள பொதுப் பொருளா யிருந்தாலும் ஜாதியற்ற தனிப் பொருளா யிருந்தாலும் ஜாதிப் பொருளின் சம்பந்தியா யிருந்தாலும் தனிப்பொருளின் சம்பந்தியா யிருந்தாலும் ஐயறி வுக்குப் புலப்படுவதா யிருந்தாலும் புத்திக்குப் புலப்படுவதா யிருந் தாலும் நல்லதா யிருந்தாலும் கெட்டதா யிருந்தாலும் சரி, ஒன்றையும் அவன் இந்த ஆயத்தில் புகுத்தாமல் விடவில்லை. அன்றியும் இந்த ஆயத்தில் **"ஹுவ"** என்னும் பயனிலையை **"அல்அவ்வலு"** என்னும் எழுவாய்க்கு முன் கொண்டு வந்த தானது அறபி இலக்கணப்படி தேற்றப்பொருளின் நயத்தைத் தருவதால் மேற்சொன்ன முன், பின், புறம், அகம் என்னும் நாலு சிபத்துகளும் அல்லாஹு தஆலாவிலேயே மட்டுண்டவைக ளென்று அறிவிக்கின்றது.

இன்னும் வஹ்தத்துல் வுஜூதின் மேல் அறிவிக்கின்ற ஆயத்துகளில் இன்னுமொன்று:—**லாஇலாஹ இல்லல்லாஹு** என்னும் உபதேச வாக்கியமாம். இதன் பொருள்:—அல்லாஹு தஆலா வல்லாத யாதொரு இலாஹும் இல்லை என்பதாம்.

இன்னுமொன்று:— ما لكم من اله غيره

உங்களுக்கு அவனல்லாத யாதொரு இலாஹும் இல்லை யென் பதாம்.

இன்னுமொன்று:— لو كان فيهما آلهة الا الله لفسدتا

வானம் பூமிகளாகிய அவ்விரண்டிலும் அல்லாஹு தஆலா வல்லாத இலாஹுகள் இருக்குமாயின் அவ்விரண்டும் கேட்டை யடைந்திருக்கும் என்பதாம்.

இன்னுமொன்று:—

لو كان معه آلهة كما يقولون اذا لابتغوا الى ذى العرش سبيلا

அவர்கள் சொல்வதுபோல் அவனுடன் பல இலாஹுகளிருந்தால் அப்போது அந்த இலாஹுகள் அருஷையுடைய அந்த ஆண்டவன் பக்கம்போக ஒரு வழியைத் தேடியிருப்பார்கள் என்பதாம்.

இன்னுமொன்று:— ما كان معه من اله اذا لذهب كل اله بما خلق

அவனுடன் அவனல்லாத யாதொரு இலாஹும் இருப்பதில்லை. அப்படியிருந்தால் அந்த இலாஹுகள் தங்கள் சிருஷ்டிகளைக் கொண்டு போயிருப்பார்கள் என்பதாம்.

இன்னுமொன்று:— لو كان هؤلاء آلهة ما وردوها

அந்த சுவாமிகள் (அல்லாஹு தஆலா வல்லாத) இலாஹுகளாயிருந்தால் அவை நரகத்துக்கு வரமாட்டா என்பதாம்.

இன்னுமொன்று:— فاينما تولوا فثم وجه الله

நீங்கள் எங்கு திரும்பினாலும் அங்கு அல்லாஹுடைய முகமிருக்கிறது என்பதாம்.

இன்னுமொன்று:— ليس كمثله شيء

அவனைப்போல யாதொரு வஸ்துவுமில்லை என்பதாம்.

இன்னுமொன்று:— الا انه بكل شيء محيط

நிடனுக அவன் எல்லா வஸ்துக்களையும் சூழ்ந்தவனாயிருக்கிறான் என்பதாம்.

இன்னுமொன்று:— وهو السميع العليم

அவனே கேட்கிறவனும் அறிகிறவனுமா யிருக்கிறான் என்பதாம்.

இன்னுமொன்று:— وهو الله السموات وفي الارض

அவனே வானங்களிலும் பூமியிலும் அல்லாஹ்வாயிருக்கிறான் என்பதாம்.

இன்னுமொன்று:— وهو الذي في السماء اله وفي الارض اله



அவனே வானத்திலும் இலாஹாய் பூமியிலும் இலாஹாய் இருப்பவன் என்பதாம்.

இன்னுமிதே போல் தவுஹீதின்மேல் அறிவிக்கின்ற மற்ற ஆயத்துகளையும் ஊகித்தறிந்துகொள்.

இனி ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய ஹதீசுகளில் நின்றும் வஹ்தத்துல் வுஜூதின் மேல் அறிவிப்பது لا اله غيرك லாஇலாஹகைருக நீ யல்லாத யாதொரு இலாஹும் இல்லை யென்பதும் ஒன்றும்.

இன்னும், والذي نفس محمد بيده لو انكم دليتم بحبل الى الارض السفلى لهبط على الله

"முஹம்மதுடைய உயிர் யார் வசமிருக்கிறதோ அந்த நாயகன் மேல் ஆணையாக நீங்கள் நீர் மொள்ளும் பாத்திரத்தை ஒரு கயிற்றிற் கட்டி கீழ் பூமியாகிய பாதாளத்துக்கு இறக்குவீர்களாகில் அது அகத்தியம் அல்லாவின் மேல் விழும் என்கிற ஹதீசும் ஒன்றும்.

இன்னும், لا تسبوا الدهر فان الدهر هو الله

நீங்கள் காலத்தைத் திட்டவேண்டாம் நிடனுகக் காலமாகிறது அல்லாஹ் தானாகவே யிருக்கிறது என்கிற ஹதீசும் ஒன்றும்.

இதுகளல்லாத இன்னும் அநேக ஹதீசுகள் ஹக்கையும் கல்கையும் ஒன்றாக்குவதின் பேரில் தெளிவாக வந்திருக்கின்றன.

## 3-வது எச்சரிக்கை.

நபிமார்கள் அலைஹிமிஸ்ஸலாம் நீங்கலாக மற்ற மனிதர்களுடைய அக்லு என்னும் அபேதபுத்தியை வஹ்மு என்னும் பேதபுத்தி மிகைத்திருக்கிறது. ஆனால் அல்லாஹு தஆலா நாடின சிலருடைய அக்லானது அவர்களின் வஹ்மை மிகைத்திருக்கிறது. புத்தியால் உணரப்படுகிற பொருட்களுக்கும் வஹ்மால் தோற்றப்படுகிற பொருட்களுக்கும் நடுவில் பகுத்தறிதல் நிடனுக அநேகருக்குக் கஷ்டமாய் விட்டதென்பது மன்கூல் மஃகூல்களான சுருதியுக்திகளைப் படித்தவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. இதனால்தான் ஹஜரத்து பரீதுத்தீன் அத்தார் றஹிமஹுல்லா அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள்.

أي برادر عصاي تو وهم است — كه همي افتي از سر ديوار
نه هنگام رفتنت به زمين — زير پا آيد همان مقدار

## பார்சி பைத்துகள்.

*அய்பிராதர் அஸாயெ தூ வஹமஸ்த்*
*கேஹமீ உப்தியஸ் ஸரே தீவார்*
*வர்ன ஹங்காமெ ரப்தனத் பஜமீன்*
*ஜெரொப்பா ஆயதத் ஹமா மிக்தார்*

இதன் கருத்து:—சகோதரவே! உன் தேகமான தடியானது வஹ்மா யிருக்கிறது. ஆதலால் அதை நானென்று கருதும் பேத புத்தியாகிய அபிமானத்தை விட்டுவிடு; இல்லையாயின் நீ ஞான பூமியிற் செல்லும் போது அந்த அபிமானத்தளவான வாசனு நிழல் உன்னை விடாமல் தொடர்ந்து வரும் என்பதே.

இனி அல்கலிமத்துத் தையிபாவில் கருதிய பொருள் ஹக்கும் கல்கும் வேறு என்ற துவிதத்தை நீக்கி அவ்விரண்டையும் ஏக மாக்க லென்பதேயாம். இந்தப் பொருளோ வஹ்மு என்னும் பேத புத்திக்கு விரோதமா யிருக்கிறது. ஆகையினுல்தான் அந்தப் புத்தி அதை ஒப்புகிறதில்லை. இதுவுமன்றி **லாஇலாஹ இல்லல்லாஹு** (அல்லாஹு தஆலா வல்லாத மவுஜூது ஒன்றுமே யில்லை) என்பது வஹ்முக்குப் பிரத்தியக்ஷமாயு மிருக்கிறது. இத னுலேயே பெரிய பெரிய உலமாக்கள் தையிபா வென்னும் மணம் பொருந்திய அந்தக் கலிமாவை கபீசா என்னும் மணங்கெட்ட கலிமாவாகும்படி அதாவது **லாஇலாஹ இல்லா கைருல்லாஹி** என்றாகும்படி திருப்பி விட்டார்கள். இதன் பொருள் அல்லா வுக்கு வேருகவே யன்றி அல்லாவாக யாதொரு மவுஜூதில்லை யென்பதாம்.

ஆனுல் தவுஹீதும் இன்னும் இஸ்லாமுடைய மற்ற ஹுகு முகளில் நோன்பு, தொழுகை, சக்காத்து, ஹஜ்ஜு, ஜிஹாது, மஆது முதலான அநேகம் ஹுகுமுகளும் அக்லுக்காகிலாகிய வஹ்முக்கு முரணுகவே விதிக்கப்பட்டன வென்பதையும் அவை களை இருந்தபடி அப்படியே விட்டுவிட வேண்டு மென்பதையும் அதாவது மார்க்க விதிகளை வஹ்முக்கு ஒத்திருக்கும்படி தஃவீல்

பிரத்யட்சம் – Evidently, clearly, An appearece to the sense.



செய்து திருப்பக்கூடா தென்பதையும் அந்த உலமாக்கள் அறிய வில்லை.

இஸ்லாமுடைய தவுஹீது முதலான விதிகள் வஹ்முக்கு விரோதப்படாமல் ஒத்திருந்தால் பின்பு அன்பியாக்களை அனுப்பின தில் என்ன நயமிருக்கிறது? அப்படி அனுப்பினதும் அவர்களால் முஹ்ஜிஸாத் தென்னும் அற்புதங்களை வெளிப்படுத்தினதும் வீணென்றாகும். மனிதர்களின் வஹ்மை நீக்கவும் அவர்களின் இன்காரான நிராகரிப்பைப் போக்கவுந்தான் முஃஜிஸாக்களை வெளிப் படுத்தினது. ஏனெனில் முஃஜிஸாவும் அக்லுக்கு முரணுன ஓர் காரியமா யிருக்கிறது. ஆகவே அக்லுக்கு முரணுன விதி எதுவோ அதுவும் அக்லுக்கு முரணுன முஃஜிஸாவைக் கொண்டே யொழிய தரிபடாதாகையினு லென்க. உதாரணமாக:- நபி அலைஹிஸ்ஸலாமவர்கள் அல்லாஹு தஆலா மெய்யாகவே கபுரிலிருப்பவர்களை எழுப்புவான் என்றும் மவுத்தானவர்களை ஹயாத்தாக்குவான் என்றும் அக்லுக்குப் பிரத்தியக்ஷ விரோத மாகப் பிரஸ்தாபித்தார்கள். ஹயாத்தாக்கல் என்னும் இந்த முஃஜி ஸாவை அல்லாஹு தஆலா ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களால் வெளியாக்கினபடியால் மனிதர்கள் தங்கள் வஹ்மு நீங்கி அதை உண்மை யென்று ஒப்புக் கொண்டார்கள்.

இன்னு மிதுபோலவே தவுஹீதும் அக்லுக்காகிசாகிய வஹ் முக்கு மாற்றமா யிருந்தபடியால் **லாஇலாஹ இல்லல்லாஹு** என்று அதாவது அல்லாஹு தஆலா வல்லாத யாதொரு இலா ஹும் இல்லை யென்று முஷ்ரிகுகளுக்குச் சொல்லப்பட்ட போது அவர்கள் வியப்படைந்து எல்லா இலாஹுகளையும் முஹம்மது ஒரே இலாஹு என்று ஆக்கி விட்டார்? ஆ! இது ஒரு விந்தை யான பொருளாகவே யிருக்கிறதென்று சொன்னுர்கள். பிறகு அல்லாஹு தஆலா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர் களுடைய கையின் பேரில் தொடர்ச்சியாக முஃஜிஸாக்களை வெளி யாக்கினபடியால் அவர்களின் வார்த்தையை உண்மை யென்று நம் பினவர்களுடைய வஹ்மு நீங்கி விட்டது.

பின்னர் **தவ்ஹீது** என்னும் பதமானது வஹ்தத்து என்னும் சொல்லடியாப் **தப்ஈலு** என்னும் ஒலிநிறையில் பிறந்த ஓர் மொழியா யிருக்கிறது. எதுபோ லெனில் **இஷ்ராக்கு** என்பது

ஷிருக்கு என்னும் சொல்லடியாய் **இப்ஆலு** என்னும் ஒலி நிறையில் பிறந்த ஓர் மொழியா யிருப்பது போலென்க. (தப்ஈலுன், இப்ஆலுன் என்ற ஒலியளவைகளால் நிறுத்தெடுத்த வினைப் பெயர்ச் சொற்கள் பிறவினைப் பெயர் சொற்களாம்.)

ஆகவே தவுஹீது என்பதற்குப் பொருள் பலவை அல்லது பலவாக்கலை ஒன்றாக்கல் என்பதாம். இதுபோல் இஷ்ராக்கு என்பதற்குப் பொருள் ஒன்றை அல்லது ஒன்றாக்கலைப் பலவாக்கல் என்பதாம். அதாவது தனது தாத்தென்னும் தத்சொரூபத்தால் அகண்ட பரிபூரணமாய் அனாதி நித்தியத்துவங்களைப் பொருந்தியும், தன் சொரூபங் கெடாமல் தன்னிடத்தில் சுயம்பல்லாத நாமரூபங்களான குறிப்புகளாகவும் கண்டங்களாகவும் ஜகமாதி சிருஷ்டிகளைக் கற்பனையாக நிருபிப்பதாயும் இருக்கிற ஒரே வுஜூதான அல்லாஹுதஆலாவை அச்சிருட்டிகளினின்றும் வேறு பிரித்து அவைகளை அவனின் வேறான தனி முதல்களென மருண்டு அந்த மருக்ஷி காரணமாக முஷ்ரிகு தன் நினைவில் வுஜூதைப் பலவாக்கிக் காண்கிறான். அது எதைப்போலெனில் அஹ்வல் என்னும் சாரக்கண்ணன் உண்மையில் ஒன்றாயிருக்கிற ஒரு பொருளை இரண்டாகக் காண்பது போல்வாம். அதாவது பொருளல்லாத வெறுந் தோற்றத்தைத் தனது மருளால் பொருளெனக் கருதுகின்றான் என்பதாம்.

இந்த உபமானத்தில் உபமேயப் பொருத்தமாவது அஹ்வல் என்னும் சாரக்கண்ணன் ஒரு பொருளை இரண்டாகக் காண்கிறான், இதுபோல் முஷ்ரிகு எதார்த்தத்தில் ஒன்றாயும் கற்பனையில் பலவாயும் விரிந்திருக்கிற ஒரே வுஜூதைப் பலவுஜூதென்று காண்கிறான். ஆகவே **லாஇலாஹ இல்லல்லாஹு** என்னும் கலிமத்துத் தைய்யிபாவானது முஸ்லிமுடைய மனதில் ஹக் வேறு கல்கு வேறு என்று இரண்டாகத் தோற்றும் மருக்ஷியை தெளித்து உண்மையில் அது எப்படியோ அப்படியே ஹக்கும் கல்கும் ஒன்றே என்னும் திடஅறிவைக் கொடுக்கிறது. அதாவது:—சுயம்புவல்லாத நாமரூபங்களாய் மாத்திரம் தோற்றுகிற ஜகமாதி சிருட்டிகளை சுயம்புவான அல்லாஹுதஆலாவில் அடக்கி உள்ளது ஒன்றுதான் என்னும் மெய்யறிவைக் கொடுக்கிறது, லாஇலாஹ இல்லல்லாஹு என்னும் கலிமா என்பதாம்.

இலாஹ் ⇒ இல்லு மஃபூத்
வழிப்படுதல் — வணங்குதல்
ஒன்றுக்கு அசமாகுதல் } மஃபூத்



இதனால் அதற்குத் தவுஹீது கலிமா என்று பேரிட்ட காரணம் வெளியாயிற்று.

இதன் மொத்தக் கருத்தென்ன வென்றால் வேறு என்பதை இல்லை யென் றொழிப்பதில்தான் தவுஹீது என்பதின் அகராதி அர்த்தம் பொருந்துகின்றது. அப்படிக்கில்லாமல் வேறு உண்டெனக் கொள்வதில் தவுஹீது என்ற பதத்துக்கு அர்த்தம் பொருந்தவில்லை. லாஹிரு உலமாக்களுடைய சொல்லின்படி **லாஇலாஹ இல்லல்லாஹு** என்னும் கலிமாவாகிறது அல்லாஹு தஆலாவினது வுஜூதில் எண்ணிறந்த பொருட்களை அவனுக்கு இணையாக்குவதால் அந்தக் கலிமாவுக்கு இஷ்ராக்குடைய கலிமா வென்று பேரிட்டிருக்க வேண்டும். ஏனெனில் ஏக பரிபூரணத்தில் இன்னு மொன்றுண்டெனக் கொள்ள வேண்டு மாதலினாலென்க.

இன்னுமதற்கு **அல்கலிமத்துத் தைய்யிபா** என்று பேரிட்ட காரணமும் வெளியாயிற்று. அதென்ன வெனில் **தைய்யிபா** என்ற சொல்லானது நல்ல மணம் என்று பொருள் பொருந்திய **தீபுன்** என்ற சொல்லடியாய்ப் பிறந்த ஓர் சொல்லா யிருக்கிறது. ஆகவே சகலமும் தானாய் சகலமும் தன்னிடத்தில் ஐக்கியமா மென்ற நல்ல மணம் அக்கலிமாவினின்றும் மோக்கப்படும். ஆகவே தவுஹீதுன், இஷ்ராக்குன் என்ற பதங்கள் முறையே ஒன்றாக்கல், இணையுண்டாக்கல் என்ற பொருள்களைத் தருவனவாம். இதற்கு மாற்றமாக கலிமத்துல் இஷ்ராக்கியாகிய அல்கலிமத்துல் கபீசாவில் நின்றும் வேறு என்பதும் பிரித்தல் என்பதுமான கெட்ட மணம் மோக்கப்படும். இதன் உண்மையை **இன்னமல் முஷ்ரிகூன நஜசுன்** இணைவைப்பவர் அருவருப்பான நஜ்சுகளே யாவர் என்னும் வேதவாக்கியம் நமக்கு விளக்குகிறது. நஜ்சுக்கு ஆபாசமான துர் நாற்ற மிருக்கவேண்டிய தவசியம். அந்த நாற்றம் யாதெனில், வுஜூதில் அல்லாஹு தஆலாவுக்கு மற்றொன்றை இணையாக்கல் என்னும் ஷிருக்கேயா மென்க.

## நாலாவது எச்சரிக்கை.

அறிந்துகொள்:—**அல்கலிமத்துத் தைய்யிபாவில்** ஹக்கு தஆலா நாடிய கருத்தான பொருள் எதுவோ அதை உற்றறிவது சில காரியங்களைப் பொருத்து நிற்கிறது.

அவற்றுள் முதலாவது காரியம்:—வஹ்மு என்னும் பேத புத்தியில் தோற்றப்படுகிற பொருள்களுக்கும் அக்லு என்னும் சுத்த புத்தியால் உணரப்படும் பொருள்களுக்கும் இடையில் பகுத்தறிவதாம். இரண்டாவது பிறர் சொல்லை நம்பிப் பின்பற்றலென்னும் தக்லீதாகிய கயிற்றைத் தறிப்பதும் குர்ஆன் ஹதீஸுகளில் நின்றும் முஹ்கமாத்து என்னும் திடப்பிரமாணங்கள் அறிவிக்கிறபடி அதன் உண்மையை அறிய வேண்டுமென்ற உறுதியான நாட்டம் வைப்பதுமாம். மூன்றாவது கலிமாவுடைய பொருளின் வியாக்கியானத்தில் உலமாக்களுக்கும் சில சூபியாக்களுக்கும் பிழைகள் நேர்ந்ததற்குக் காரணம் என்னவென்பதைக் கண்டறிவதாம். இதன் விபரம் பின்னால் வரும். நாலாவது குர்ஆன் ஹதீசுகளில் நின்றும் முஹ்கமாத்தான தலீலுகளை உண்மையென்று ஏற்பதும் ஒப்புக் கொள்வதுமாம். கலிமாவுடைய பொருளைத் திருத்தியும் பொருத்தியும் காட்டுவதற்கு நாம் எடுத்துக் கொண்ட பிரமாணங்கள் அந்த முஹ்கமாத்தான தலீலுகளேயாம். இதன் கருத்தென்னவென்றால், குர்ஆனையும் ஹதீசையும் நம்புகிறவர் எவரோ அவரையே நாம் முன்னிலையாக்கிப் பேசுகிறோம் என்பதும் அதை மறுப்பவரிடத்தில் நமக்குப் பேச்சில்லையென்பதுமாம். ஐந்தாவது நம்முடைய தாவா என்னும் வாதத்தை சரியென்று நம்புவதாம். அந்த தாவா என்னவென்றால் அல்லாஹு தஆலாவையும் மற்ற வஸ்துக்களையும் வேறு பிரித்து அவன் வேறு அவை வேறு என்பதின் பேரில் அறவே குர்ஆனும் அறிவிக்காது, யாதொரு ஹதீசும் அறிவிக்காது. இன்னும்,

عبارة النص دلالة النص اشارة النص اقتضاء النص

இபாரத்துந் நஸ்ஸினாலும் அறிவிக்காது. ஏனெனில் இபாரத்துன்னஸ்ஸு என்பது சொல்லக் கருதிய பொருளை அதற்கு நேர்சம்பந்தமான சத்தத்தால் எடுத்துரைப்பதாம். குர்ஆன் ஹதீசுகளில் ஒன்றிலாவது ஹக்கு வேறு கல்கு வேறு என்ற பொருளை அதற்கு நேர் சம்பந்தான சத்தத்தால் எடுத்துரைக்கப் படவில்லை. தலாலத்துந் நஸ்ஸு இஷாரத்துந் நஸ்ஸு இக்திலாவுந்நஸ் ஆகிய இந்தப் பிரமாணங்களில் ஒன்றினாலாவது அறிவிக்குமா வென்றால் அதனாலும் அறிவிக்காது. ஏனெனில் தலாலத்துந் நஸ்ஸு என்பது வாசக நடையில் கருதிய பொருள்



நேரில் விளங்காதபோது அதை விளக்கும் பொருட்டு அந்த நடையிலிருந்து பிரிகிற அதன் சார்பான ஒரு திருஷ்டாந்தமாம். நடையே இல்லாதபோது அதிலிருந்து பிரிவதென்பது மில்லாமலொழிந்தது. மற்ற இரண்டு பிரமாணங்களும் அங்ஙனமேயாம். இதுதான் நம்முடைய தாவா.

மெய்தான் வஹ்மு என்னும் மருண்ட புத்தியால் ஹக்கு வேறு கல்கு வேறு என்று தோற்றப்படும். குர்ஆன் ஹதீசுகளில் நின்றும் ஒவ்வொரு வாசக நடையும் ஹக்குக்கு கல்கு வேறென்று அறிவிக்காத பொருளில் நடத்தப் பட்டிருக்கிறது. ஆனால் வஹ்மானது ஹக்குக்கு கல்கு வேறு என்ற பொருளில் அதைத் திருப்பமுந்துகிறது. உதாரணமாக:—வேறென்பதில்லாத பொருள்களில் நடத்தப்பட்டவைகளும் அவைகளில் வேறென்பதுண்டென்னும் மருகூஷி யுண்டாகிறவைகளுமான ஆயத்துகளில் ஒன்று:—

لعنة الله علي الكذبين

“அல்லாவுடைய லஃனத்து பொய்யர்கள் பேரிலாயிருக்கும்” என்பதும், இன்னமொன்று

فان الله عدو للكافرين

“திடனாக அல்லாஹு தஆலா காபிர்களுக்குப் பகைவனாயிருக்கிறான்” என்பதும், இன்னு மொன்று “இபுராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) விக்கிரகங்களைத் துண்டு துண்டாக்கி விட்டார்கள்” என்பதும், இன்னு மொன்று

فجعلهم جذاذا فانهم عدو لي الارب العلمين

“சர்வலோகங்களையும் பரிபாலிப்பவன் தவிர திடனாக விக்கிரகங்கள் எனக்குச் சத்துருக்களா யிருக்கின்றன” வென்பதும், இன்னுமொன்று

انكم وما تعبدون من دون الله حصب جهنم

“திடனாக நீங்களும் நீங்கள் வணங்குகிற விக்கிரகங்களும் நரகக் கட்டைகள் தாம்” என்பதும் இன்னு மிவை போன்ற மற்ற ஆயத்துகளுமாம்.

இந்த ஆயத்துகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளில் நடத்தப்பட்டிருக்கிறது. அதெப்படி யெனில் பொய்யன் பேரில் லஃனத்து வருவதும் காபிர்களுக்கு அல்லாஹு தஆலா பகைவனா

யிருப்பதும் விக்கிரகங்கள் துண்டு துண்டாய்ப் போவதும் அவை இப்ராஹீம் அலைஹிஸ்ஸலா மவர்களுக்குச் சத்துருவா யிருப்பதும் நரகக்கட்டைகளா யிருப்பதும் போலவாம். இந்தப் பொருட்களில் ஹக்குக்கு கல்கு வேறு என்று அறிவிக்கிற பொருள் உண்மையில் ஒன்றுமே யில்லை. இது வெளிப்படை. இந்த வஸ்து அல்லாஹுத்ஆலா அல்லாத வேறு வஸ்து வென்று நேர்சத்தத்தில் வாக்கிய மிருந்தால் தான் வேறு என்ற பொருளில் வாசகமடை நடத்தப் பட்டதென்றாகும். மேற்சொன்ன பொருட்களில் ஒரு பொருளாவது அல்லாவுக்கு வேறாயிருக்கிற தென்பதின் பேரில் அந்த ஆயத்துகள் அறிவிக்கவில்லை.

ஆனால் எல்லாம் அவனே என்பதில் லஃனத்துச் செய்கிறவனும் தானாய் லஃனத்தை அடைகிறவனும் தானாய் அல்லது தானே தனக்குப் பகைவனாய் அல்லது தானே தன்னை வேதனைக்குள்ளாக்குகிறவனாய் அல்லது தானே தன்னை இழிவு படுத்திக் கொள்ளுகிறவனாய் இருக்கிறான் என்பது வந்து லபிப்பதால் அப்படி யிருப்பது கூடாதென்று வஹ்மு மறுக்கின்றது. ஆகவே அந்த வஹ்மானது அல்லாஹ் வேறு என்றும் அவனின் எதிராகச் சொல்லப்பட்ட சிருட்டிகள் வேறு என்றும் இரண்டுக்கும் நடுவே வேற்றுமையை குறிக்கின்றது. ஆதலால் அவாம்மு என்னும் சாமானிய ஜனங்கள் இப்போது சொல்லி வந்த ஆயத்துபோல் கொத்தவை அல்லாஹ் வேறு ஜகமாதி சிருஷ்டிகள் வேறு என்பதை வெளிப்படையாக அறிவிக்கின்றன வென்று விளங்கி கொள்ளுகிறார்கள். என்றாலும் இவ்விதமான விளக்கம் பிசகென்பது உசூலுடைய காயிதாக்களையும் குருஆனுடைய சொல்லடுக்கான கோர்வையின் காரணங்களையும் தலாலத்தின் வழிகளையும் அறிந்த அறிவாளரான கலைக்ஞானிகளுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது.

ஆதலால் நம்முடைய வாக்கியங்களில் தர்க்கம் பேசுகிறவர் எவரோ அவர் குருஆன் ஹதீசுகளல்லாத மற்றொன்றால் வாதிக்க வராமல் குர்ஆனில் நின்றும் ஹதீசுகளில் நின்றும் முஹ்கமாத்துகளைக் கொண்டு ஹக்குக்கு கல்கு வேறு என்பதை ருசுப்படுத்தக் கடமைப் பட்டவராவார். காபிர்கள் சொல்லிக் கொண்டிருந்தது போல்,

هذا ما وجدنا عليه آباءنا



**எங்களுடைய இந்த மார்க்க மானது நாங்கள் எங்கள் பிதாக்களை இதன்மேல் இருக்கக்கண்ட ஒரு மார்க்கமா யிருக்கிறது** என்று இம்மாதிரியான வார்த்தைகளைக் கொண்டும் வஹ்மும் தக்லீதுமாகிய பாசவலையி லிருந்து நீங்காத உலமாக்களுடையவும் சூபியாக்களுடையவு மான வாக்கியங்களைக் கொண்டும் வாதிக்காமலிருக்கவும் கடமைப் பட்டவராவார்.

ஏனெனில் திடனாக நாம் சித்த சுத்திபெற்ற சூபியாக்களை வலது பக்கத்திலும் உலமாக்களை இடது பக்கத்திலும் விபரீத வஹ்முகளை நமது காலடிகளுக்குக் கீழேயும் தவ்ஹீதில் மாத்திரம் நடத்தப்பட்ட குர்ஆனையும் ஹதீசையும் நீர்ப்பளிக்கும் நீதிபதியாக நமக்கு முன்னாலேயும் ஆக்கிக் கொண்டு குர்ஆன் ஹதீசுகளில் நின்றும் முஹ்கமாத் தென்னும் திடப்பிரமாணங்களைக் கொண்டு தவ்ஹீதின் சார்பான ஆதாரங்களுடன் அதைத் தரிப்படுத்தினோம். உலமாக்களின் மீதும் சில சூபியாக்களின் மீதும் ரத்துசெய்வதில் முயற்சி யென்னும் இடுப்பை நாம் வரிந்து கட்டின தெல்லாம் எதற்காகவெனில் சத்தியத்தையும் சன்மார்க்கத்தையும் வெளிப்படுத்து வதற்கு நான் நாடின நிலையாம். உலமாக்களுடையவும் சில சூபியாக்களுடையவும் மர்தூதான சில வாக்கியங்கள் சத்தியத்தையும் சன்மார்க்கத்தையும் தெரியவொட்டாமல் மறைப்பவைகளா யிருக்கின்றன. ஆதலால் அந்த மறைப்பை நீக்கி சத்தியத்தை வெளிப்படுத்துவது நம் பேரில் விதியாயிற்று. அந்த மர்தூதான வாக்கியங்களை மறுப்பது கொண்டே யொழிய மற்றப்படி அந்த மறைப்பை நீக்குவதென்பது ரூபகரப் படாது. இந்த அவசியத்துக்காகவே மேற்சொன்ன வாக்கியங்களை மறுக்கு முறையாகத் தர்க்கத்தைத் தொடுத்தோம். இல்லையாயின் ஒருவர் விஷயத்தில் பொல்லாங்கு பேசுவதையும் துர்வாதம் செய்வதையும் குற்றங் கூறுவதையும் விட்டு நாம் நீங்கி யிருக்கிறோம். மேலிட்டு உலமாக்களையும் சாலிஹீன்களையும் நாம் குற்றங்கூறுவ தெங்ஙனம்?

## கலிமா தையிபாவில் பொதிந்துள்ள அம்சங்களின் தொகுப்பு

இந்தப் பிரகரணமானது அல்கலித்துத் தையிபா எந்த அம்சங்களைப் பொதிந்திருக்கிறதோ அந்த அம்சங்களை மொத்தமாகத் தொகுத்துச் சுட்டுவதா யிருக்கிறது.

அறிந்துகொள், திடனாக அல்கலிமத்துத் தையிபாவானது பல அம்சங்களைப் பொதிந்திருக்கிறது. அவைகளில் அநேக அம்சங்கள் கீழ்நாட்டார், மேல் நாட்டார், சலபுகள், கலபுகள். ஆகிய இவர்களில் பெரிய பெரிய உலமாக்களும் தெரியாமல் மறைந்து கிடந்தன. அந்த அம்சங்களில்,

முதலாவது:—ஜின்ஸியத்தை நப்யு செய்வதற்குள்ள "லா" என்னும் மொழியாம் (அதாவது:—ஒரு ஜாதிப் பெயர்ப் பொருளெல்லாவற்றையும் பொதுவாக இல்லை யென மறுக்கும் எதிர்மறைச் சொல் என்பதாம். உதாரணம்:—லாறஜுல பித்தாரி, லாபர்ஸ பில்இஸ்தப்லி, லாஷஜர பில்அர்ளி. இவற்றின் அர்த்தம் முறையே இந்த வீட்டில் ஒரு புருஷனும் இல்லை, இந்த லாயத்தில் ஒரு குதிரையு மில்லை, இந்தப் பூமியில் ஒருமரமுமில்லை என்பது.)

இரண்டாவது அதன் மன்கூரான இலாஹு என்னும் இஸ்மாம் (அதாவது:— ஒரு ஜாதிப் பொருள்களெல்லாவற்றையும் பொதுவாகக் காட்டக் கூடிய பொதுபெயர் என்பதாம். உதாரணம்:—இன்சானுன்; பர்சுன், ஷஜருன். மனிதன், குதிரை, மரம் முதலியவை.) இலாஹு என்ற பெயரும் இவ்வகையிற் சேர்ந்தது தான்.

மூன்றாவது அந்த இஸ்மின் மஹ்தூபாகிய கபராம் (அதாவது:-அந்த எழுவாய் பெயர்க்குத் தொக்கிய பயனிலை என்ன என்பதாம். உதாரணம்:-அவன் பிறன் அல்லன். இதில் அவன் என்ற எழுவாய்ப் பெயர்க்கு "ஜெய்துதான்" என்னும் பயனிலை தொக்கி யிருக்கிறது.)

நாலாவது அது மஹ்தூபு என்பதின் பேரில் அறிவிக்கிற கரீனா என்ன வென்பதாம். அதாவது:-பயனிலை தொக்கிய தென்பதற்கு நெருங்கிய அத்தாக்ஷி என்ன வென்பதாம். உதாரணம்:- "உனக்குப் படிப்பித்தவர் யார்"? என்னும் வினாவுக்கு விடையாக "என் தந்தை" என்றால், இது எழுவாய்ப் பெயராகிறது. இதில் "படிப்பித்தார்" என்னும் பயனிலை தொக்கியதற்கு நெருங்கிய அத்தாக்ஷி வினவினார் விளங்கிக் கொள்ளும் விளக்கமேயாம்.

ஐந்தாவது இஸ்திஸ்னாவுக்குள்ள இல்லா என்னும் கலிமாவாம், அதாவது:- அன்றி, தவிர, ஒழிய என்பது போன்ற நீக்கப் பொருளைக் குறிக்கும் சொல் என்பதாம். உதாரணம்:-ஜாஅனில் கவ்மு இல்லா ஜெய்தன். ஜெய்து தவிர அக்கூட்டத்தார் எல்லாரும் என்னிடம் வந்தார்கள். இதில் தவிர என்னும் சொல் ஜெய்தை நீக்கப் பொருளாகக் குறிக்கிறது.



ஆறாவது முபர்ரகு உடைய விளக்கமாம். அதாவது ஒரு வாக்கியப் புணர்ப்பில் நீக்கப் பொருளா யிருப்பதற்கு அது நீங்கி வந்த விடந் தோன்றாம லிருந்தால் அந்த வாக்கியம் முபர்ரகு என்று சொல்லப்படும் ஆகவே லாஇலாஹ இல்லல்லாஹுவில் இதன் விபரத்தை விளங்கி அறிய வேண்டு மென்பதாம்.

ஏழாவது அல்கலிமத்துத் தைய்யிபா வானது சிபத்தின் மேல் மவுசூபை கஸ்ரு செய்கிற வகையில் சேர்ந்ததே யல்லாமல் மவுசூபின் மேல் சிபத்தை கஸ்ரு செய்கிற வகையில் சேர்ந்ததல்ல வென்பதும் அந்த கஸ்ருங்கூட கஸ்ருல் இப்ராதியும் கஸ்ருத்த அய்யுனியுமா யிராமல் கஸ்ருல் கல்பியா யிருக்கிற தென்பதுமாம்.

சிபத்தின்மேல் மவுசூபை கஸ்ரு செய்வதென்பது குணத்தின் மேல் குணியைச் சொந்தப்படுத்துவதாம். உதாரணம் சுடுகை யுள்ளது நெருப்புதான். கைப்புள்ளது உப்புதான். இதில் சுடுகை நெருப்புக்கே சொந்த மென்றும் கைப்பு உப்புக்கே சொந்த மென்றும் குணங்களுக்குக் குணிகளைச் சொந்தப்படுத்திய வாறு காண்க.

மவுசூபின் மேல் சிபத்தை கஸ்ரு செய்வதென்பது குணியின் மேல் குணத்தைச் சொந்தப்படுத்துவதாம். உதாரணம்:- காக்கையின் நிறம் கறுப்புதான். கிளியின் நிறம் பச்சைதான், இதில் காக்கைக்குரியது கறுப்பு நிறந்தான் என்றும் கிளிக்குரியது பச்சை நிறந்தான் என்றும் குணிகளுக்குக் குணங்களைச் சொந்தப் படுத்தியவாறு காண்க.

கஸ்ருல் இப்ராதி என்பது, ஒருவன் மற்றொருவனில் நிச்சயித்த இரண்டு அம்சங்களில் வேறொருவன் ஒன்றை மறுத்து ஒன்றுதான் உண்டென்று அவனுக்கு விளக்குவதாம். எதுபோலெனில் ஜெய்து காதிபும் புலவனுமா யிருக்கிறா னென்று ஒருவன் நிச்சயிக்க மற்றொருவன் அதை மறுத்து ஜெய்து காதிபும் புலவனு மல்லன், காதிபு மாத்திரந்தான் என்று அவனுக்குச் சொல்வது போலவாம்.

கஸ்ருத் தஅய்யுனி என்பது இரண்டு அம்சங்களில் எதையும் நிச்சயிக்காமல் இதுவோ அதுவோ என்று சந்தேகிக்கும்

போது அவ்விரண்டில் ஒன்றைக் குறிப்பிட்டு சந்தேகத்தை நீக்குவதாம். எதுபோலெனில் ஜெய்து காதிபோ அல்லது புலவனோ என்று ஒருவன் சந்தேகிக்க மற்றொருவன் ஜெய்து புலவனல்லன் காதிபு தான் என்று குறிப்பிட்டு அவன் சந்தேகத்தை நீக்குவது போலவாம்.

கஸ்ருல் கல்பி என்பது உள்ள அம்சத்தை இல்லையாக எண்ணி யிருப்பவனுக்கு அதையே மாற்றி உள்ளதாகக் கூறுவதாம். எதுபோலெனில் காதிபாயிருக்கிற ஜெய்தை காதிபல்லன் என்று ஒருவன் நினைக்க, மற்றொருவன் அந்த எண்ணத்தை மாற்றி ஜெய்து காதிபு அல்லனல்லன் அவன் காதிபுதான் என்று அவனுக்குச் சொல்வது போலவாம்.

எட்டாவது அல்கலிமத்துத் தைய்யிபாவானது ஈஜா பிசல்பி என்னும் இரண்டு ஹுகுமுகளைப் பொதிந்திருக்கிற தென்பதாம். (அதாவது தழுவற்பாலது தள்ளற்பாலது என இரண்டு விதிகளை அடக்கிக்கொண்டிருக்கிறது என்பதாம். உதாரணம் லாபித்தாரி இல்லஸ்ஸிப்யானு, இந்த வீட்டில் சிறுவரேயன்றி இல்லை என்றால் அந்த வீட்டில் சிறுவர் உண்டெனத் தழுவலும் மற்றவர் இல்லையெனத் தள்ளலும் பெறப்பட்டவாறு காண்க.)

ஒன்பதாவது அல்கலிமத்துத் தைய்யிபாவானது சாலிபா முஜீபா என்ற இரண்டு குல்லிய்யாவான ஹுகுமுகளின் பக்கம் மீளுமென்பதாம். (அதாவது அல்ல இல்லை, ஆம் உண்டு என்னும் இரண்டு பொதுவிதிகளில் வந்து அடங்குமென்பதாம். இதன் விபரத்தை 1-வது அத்தியாயத்தில் காண்க.)

பத்தாவது அல்கலிமத்துத் தைய்யிபாவானது குர்ஆனுடைய கோர்ப்பின் வகைகளில் நின்றும் முஹ்கமாத்தல்லாத தாயிராமல் முஹ்கமாத்தில் ஒரு முஹ்கமா யிருக்கிற தென்பதாம். (அதாவது:—பொருள் பொருந்தாமல் இடர்படுகிற ஐயப்பிரமாணங்களில் ஒன்றாயிராமல் நேரே பொருள் தருகிற திடப்பிரமாணங்களில் ஒன்றா யிருக்கிற தென்பதாம்.)

ஆகவே நஹ்விலும் மஆனியிலும் பயானிலும் பலாகத்திலும் உசூலுடைய பன்னிலும் மன்திகுவிலும் தப்ஸீரிலும் ஹதீதிலும் தேர்ச்சை யடைந்த அறிவைக் கொண்டு அல்கலி



மத்துத் தைய்யிபாவை அதன் தலீலுகளுடன் ஆராய்ந்தறிவது அவசியமாகும்.

## தமிழ் முதர்ஜிமின் ஓர் அறிவிப்பு.

(2-வது முதல் இறுதி எட்டாவது பிரகரணம் வரையில் மேலே முதலாவது பிரகரணத்தில் தொகுத்துச் சொன்னவைகளை நூலாசிரியர் வகுத்துக் காட்ட புகுந்து அவைகளில் அல்கலிமத் தைய்யிபா வென்னும் மூலப்பிரமாணத்தில் பொதிந்துள்ள எதார்த்தமான பொருள் **எல்லாம் அவனே** என்பது தான் என்று வாதித்து அதற்குச் சார்பான பிரமாணங்களாலும் சர்பு நஹ்வு மன்திகு மஆனி முதலிய அறபி காயிதாக்களாலும் திருஷ்டாந்தப்படுத்தி வெகுநிதானமாக ஸ்தாபித்திருக்கிறார்கள். அவை அறபி பாஷையில் பாண்டித்ய முள்ளவர்களுக்கே யன்றி அதில் அறை குறையா யிருப்பவருக்குங்கூட விளங்க மாட்டா. எனவே ஏனையோர் விளங்கிக் கொள்வ தெங்ஙனங்கூடும்? கூடாத தாகையால் அவை முழுவதும் தமிழில் உரை செய்யப்படாமல் விடப்பட்டன. ஆனால் அந்தப் பிரகரணங்களால் ஏற்பட்ட சாராம்சங்களான முடிவு ஒவ்வொன்றையும் நூலாசிரியர் எட்டாவது பிரகரணத்தின் இறுதியில் எண்ணிட்டுத் தொகுத்துக் காட்டியிருப்பதை இந்நூலில் எடுத் தெழுதப்பட்டிருக்கிறது, அதை சமீபத்தில் 63-வது பக்கத்தில் காணலாம்.)

(அடியில் காட்டியிருக்கும் விஷயங்கள் மூலப்பிரதியின் எட்டாவது பிரகரணத்திலிருந்து எடுத்தெழுதப்பட்டவைகள்.)

**லாஇலாஹ இல்லல்லாஹு** என்னும் கலிமாவானது குர்ஆனுடைய முஹ்கமாத் தென்னும் திடப்பிரமாணங்களில் ஒன்றா யிருக்கு மென்பதற்குச் சில நியாயங்கள் வரையப்படுகின்றன.

அறிந்துகொள்:—**லாஇலாஹ இல்லல்லாஹு** என்னும் கலிமாவானது தஃவீல் என்னும் வலிந்துரை கோடலை ஏற்கிற தென்றும் ஆதலால் அது குர்.ஆனுடைய முத்தஷாபஹாத் தென்னும் ஐயப்பிரமாணங்களில் சேர்ந்த தென்றும் உலமாக்கள் எண்ணுவது பிசகென்பதை விளக்கும் பொருட்டு **உசூலுல் பிக்ஹி** என்னும் தர்மசாஸ்திர மூலசூத்திரங்களின் பரிபாஷையில் சிலவற்றைப் பிடிகையாக எடுத்துக் கூறுவோம்.

குர்ஆனுடைய சொல்லடுக்கான அதன் வாசக அர்த்தம் வெளிப்படையாயிருந்து அந்த அர்த்தத்துக்கு நேர் நடையாக அந்த வாசகம் நடத்தப்பட வில்லையானால் அந்த வாக்கியம் **நல்மு லாஹிரு** என்று சொல்லப்படும்.

துரிதமாகவும் வெளிப்படையாகவும் பொருள் தரும்படி வாசக நடை நடத்தப்பட்டு பின்பு அது தக்சீசு என்னும் விசேடக் குறிப்பையும் தஃவீலு என்னும் வலிந்துரை கோடலையும் ஏற்பதா யிருந்தால் அந்த வாக்கியம் **நஸ்ஸு** என்று சொல்லப்படும்.

தஃவீலுக்கு இடமில்லாததாயும் துரிதமாகப் பொருள் தருவ தாயுமிருந்து மன்ஸூகாயு மிருந்தால் அதாவது வேறொரு வாக்கியத் தால் மாற்றப்பட்டதா யிருந்தால் அது **முபஸ்ஸரு** என்று சொல் லப்படும்.

தஃவீலுக்கும் தக்சீசுக்கும் இடமில்லாததாயும் மன்ஸூகல்ல வாயு மிருப்பதுடன் துரிதமாக வெள்ளிய பொருளைப் பயக்குவது எதுவோ அது **முஹ்கமு** என்று சொல்லப்படும்.

ஆகவே முஹ்கமுடைய வகையில் ஷாத்தாகிறது வாக்கியத் தில் கருதிய பொருள் வெளிப்படையா யிருப்பதும் வாசகநடை அந்தப் பொருளுக்கு நேர்நடையாயிருப்பதும் தஃவீலு தக்சீசு நுஸ்கு என்னும் வலிந்துரை கோடல், குறிப்பித்தல், மாற்றப் படல் ஆகிய இவை அதில் கூடாதிருப்பதுமாம்.

இனி குர்ஆனில் நின்றும் ஹதீசில் நின்றும் ஹக்கு தஆலா வுடைய தவ்ஹீதின் பேரில் அறிவிக்கிற திருவாக்கியங்கள் திடனாக முஹ்கமா யிருக்க வேண்டுவது அத்தியாவசிய மென்பது மறைந்ததல்ல. ஆகவே அது நல்முலாஹி என்னும் வாக்கியமா யிருப்பது கூடாது. ஏனெனில் அதன் வாசக நடை கருதிய பொருளுக்கு நேர்நடையில் நடத்தப்பட்டதல்ல வாதலாலும் தவ்ஹீதின் மேல் அறிவிக்கின்ற வாக்கியத்தின் வாசக நடை பொரு ளுக்கு நேர்நடையா யிருத்தல் வாஜிபாதலாலுமென்க.

இன்னும் அது நஸ்ஸு என்னும் வாக்கியமா யிருத்தலுங் கூடாது. ஏனெனில் நஸ்ஸு என்னும் வாக்கியத்தில் தக்சீசும் தஃவீலுமாகிய குறிப்பித்தல் வலிந்துரை கோடல் என்னும் சந் தேகங்களுக்கு இடமிருப்பதாலும் அது அற்ப சந்தேகமா யிருந் தாலுஞ் சரியே சந்தேகவாக்கியத்தால் தவ்ஹீது ஐயமின்றித் திட மாகத் தரிபடாததலினாலு மென்க.



இன்னும் அது முபஸ்ஸரு என்னும் வாக்கியமா யிருத்தலுங் கூடாது. ஏனெனில் முபஸ்ஸரு என்னும் வாக்கியம் வேறொன் றால் மாற்றப்பட்ட மன்ஸூகாயிருப்பதினாலும் தவ்ஹீதானது ஒருபோதும் மாற்றப்படாதவைகளில் ஒன்றா யிருப்பதினாலு மென்க.

ஆகவே தவ்ஹீதின் மேல் அறிவிக்கிற திருவாக்கியம் முஹ்க மாதில் ஒன்றாயிருக்க வேண்டுவது அத்தியாவசியமாம்.

பின்னர் குர்ஆனில் நின்றும் தவ்ஹீதின் மேல் அறிவிக்கிற முஹ்கமான ஆயத்துகளில் சில வருமாறு.

ஆயத்து:—**லா இலாஹ இல்லல்லாஹு** (அல்லாஹ்வின் வேறான யாதொரு இலாஹும் இல்லை.)

ஆயத்து:—உங்களுக்கு அவனல்லாத இலாஹு ஒன்றுமே யில்லை.

ஆயத்து:—(வானமும் பூமியுமாகிய) அவ்விரண்டிலும் அல் லாவின் வேறான இலாஹுகளிருந்தால் அவ்விரண்டும் கேட்டை யடைந்திருக்கும்.

ஆயத்து:—அவர்கள் சொல்கிறபடி அவனுடன் * இலாஹு களிருந்தால் அப்போது அந்த இலாஹுகள் அருஷையுடைய, அந்த ஆண்டவன் பக்கம்போக ஒரு வழியைத் தேடுவார்கள்.

ஆயத்து:—அவனுடன் ஒரு இலாஹும் இருந்ததில்லை. அப்படி யிருந்தால் ஒவ்வொரு இலாஹும் தான் சிருட்டித்த சிருட்டியைக் கொண்டு போயிருப்பார்கள். ولعلا بعضهم على بعض, இன்னும் அவர்களிற் சிலரைச் சிலர் மிகைத்து மேற்கொண்டிருப் பார்கள்.

ஆயத்து:—அந்த விக்கிரகங்கள் இலாஹுகளாயிருந்தால் அவை நரகத்துக்கு வாரா.

இன்னுமிவைபோல் தவ்ஹீதில் வந்திருக்கிற மற்ற ஆயத்து களையும் ஊகித்தறி.

---

* மேல் ஆயத்துகளிற்போல் இந்த ஆயத்திலும் கீழ் ஆயத்துகளி லும் இலாஹு என்னுமிடத்தில் அவனின் வேறான என்று கூட்டிப் பொருள்கொள்க. அவனுக்கு வேறான.

இனி ஹதீசுகளில் நின்றும் தவ்ஹீதின்மேல் அறிவிக்கிற வாக்கியங்களில் சில வருமாறு:—

ஹதீசு:—**லாஇலாஹ கைறுக** நீயல்லாத அல்லது உன்னின் வேறான யாதொரு இலாஹும் இல்லை (எல்லா இலாஹும் நீயே.)

ஹதீசு:—முஹம்மதுடைய உயிர் யார் வசமிருக்கின்றதோ அந்த ஆண்டவன்மேல் ஆணையாக நீங்கள் நீர் மொள்ளும் பாத்திரத்தைக் கயிற்றுடன் கிழ் பூமியாகிய பாதாளத்துக்கு இறக்குவீர்களாகில் திடனாக அது அல்லாவின் மேல் விழும் (இதனால் பூமியானது அல்லாவின் வேறல்ல என்று தெரியவந்தது.)

இன்னுமறிந்துகொள் பாரவான்களாகிய உலமாக்கள் **லாஇலாஹ இல்லல்லாஹு**வை முதஷாபஹாத் தென்னும் ஐயப் பிரமாணங்களில் சேர்ந்ததென்று எண்ணினார்கள். இதனால் ஜனங்களுக்கு அல்லாஹு தஆலாவின்மீது ஹுஜ்ஜத் தென்னும் எதிர்வாதமுண்டென்பது அந்த உலமாக்களால் பூணுகிறது.

ஏனெனில் முத்தஷாபஹாத்தான வாக்கியத்தின் தஃவீலை அல்லாஹு தஆலாவே யன்றி மற்றவர் அறியார். ஆனால் இல்மில் திடப்பட்ட ஆலிம்கள் அறிவார்கள். உம்மிகளோ இல்மில் திடப்பட்டவர்களல்லர். بعث في الأميين رسولا منهم **உம்மிகளுக்கு அவர்களில் நின்றுமே ஒரு ரஸூலை அனுப்பினான்** என்று திடனாக அல்லாஹு தஆலா திருவுளமா யிருக்கிறான். இதனால் உம்மிகளுக்கு அவன்மேல் எதிர்வாதமிருப்பது கூடாது. இது கூடாதென்ற பயத்துக்காகவே றஸூல்மார்களை அனுப்பினான். ஆகவே **லாஇலாஹ இல்லல்லாஹு** வானது முத்தஷாபஹாத்தில் சேர்ந்ததல்ல வென்றும் முஹ்கமாத்தில் ஒன்றாயிருக்கிறதென்றும் தரிபட்டது.

இனி முஹ்கமானது தஃவீலை ஏற்காது அப்படி யிருக்க மஷ்ரிகு முதல் மக்ரிபு வரையிலுமுள்ள பாரவான்களான உலமாக்களில் முஹத்திசுகளும், முபஸ்ஸிருகளும், முதபக்கிஹுகளும், முத்தகல்லிமுகளும் பொதுவாக எல்லாருமே அல்கலிமத்து தையிபாவில் முதலாவது **இலாஹு** என்ற பதத்துக்கு வணக்கத்துக்குப் பாத்திரமானவன் என்று வலிந்துரை கொண்டார்கள். இரண்டாவது அதன் தொக்கிய பயனிலையாகிய **கைருல்லாஹி** என்பதை

இபாரத் — வசனம்
கலாலத் — ஆதாரங்கள் (தலீல் — ஆதாரம்/ஆதாரமயிருத்தல்)



விட்டு மவ்ஜூதுன் போன்ற சொற்களில் ஒன்றை அதன் பயனிலையாக்கினார்கள். அவர்கள் அந்தக் கலிமாவை நாவால் அங்கீகரிக்க முன்வந்தாலும் தங்கள் வஹ்முகள் விதித்த விதிப்படி வலிந்துரை கோடலாலும் வாக்கியத்தை மாற்றலாலும் தங்களுக்குத் தெரியாதபடி அதைத் தங்கள் முதுகு புறத்தில் தள்ளி விட்டார்கள். இன்னு மந்தக் கலிமாவுக்கு நேர்மாறான இஷ்ராக்கின் பொருள் பொருந்திய ஒரு கெட்ட கலிமாவை அதாவது **லாஇலாஹ இல்லா கைருல்லாஹி** அல்லாவின் வேறாகவே யன்றி யாதொரு இலாஹும் இல்லை யென்பதைத் தங்களுக்குத் தெரியாதபடி தங்கள் கல்பால் அங்கீகரிக்க முன்வந்தார்கள்.

மொத்தத்தில் மூலப்பிரதியான **கலிமத்துல்** ஹக்கின் எட்டு பிரகரணங்களாலும் ஏற்பட்ட சாராம்சங்களான முடிவு ஒவ்வொன்றையும் அடியில் எண்ணிட்டு வரையப்படுகிறது. அவற்றுள்;

முதலாவது:—**லாஇலாஹ இல்லல்லாஹு** என்ற கலிமாவிலும் அதன் தலீலுகளான ஆயத்துகளிலும் சொல்லப்பட்டிருக்கிற **இலாஹு** என்ற பதத்துக்குக் கருதிய பொருள் விக்கிரகங்கள், சிலைகள், உருவங்கள் முதலிய வணங்கப்படுகிற சிருட்டிகள் தான் என்று குறிப்பாய் விட்டதென்பது.

இரண்டாவது:—அந்த இலாஹுவின் வணக்கத்துக்குப் பாத்திரமானவன் என்று வலிந்துரை கோடல் பிசகென்பது.

மூன்றாவது:—அந்த இலாஹு என்ற பெயருக்கு முகாதபு என்னும் முன்னிலையின் எண்ணத்திலிருக்கிற **கைருல்லாஹி** (அல்லாஹ்வின் வேறு) என்பதே தொக்கிய பயனிலை என்று குறிப்பாய் விட்டதென்பது.

நாலாவது அந்த இலாஹு என்ற பெயருக்கு மவ்ஜூதுன் போன்ற சொற்களில் ஒன்றை தொக்கியபயனிலை யாக்கல் பிசகென்பது.

ஐந்தாவது:—பயனிலை தொக்கிய தென்பதற்கு நெருங்கிய அத்தாக்ஷி முன்னிலையின் மனதிலிருக்கிற எண்ணமே தவிர வேறொன்றில்லை என்பதும், யார் மீது கலிமாவை எடுத்தோதப்பட்டதோ அந்த முன்னிலையான முஷ்ரிகு தன்மனதில் **லாஇலாஹ இல்லா கைருல்லாஹி** (அல்லாவின் வேறாகவே யன்றி ஒரு இலாஹும் இல்லை) என்று எண்ணியிருக்கிறான் என்பதுமாம்.



பிரகரணம் — அத்தியாயம்/பகுதி
தொக்கிய பயனிலை — ம பயனிலை தோன்றாமல் மறை[illegible]

ஆறாவது:—**லாஇலாஹ இல்லல்லாஹு** என்னும் கலிமாவானது சிபத்தின் பேரில் மவுசூபை கஸ்ரு செய்கிற வகையில் சேர்ந்ததே யல்லாது மவுசூபின் பேரில் சிபத்தை கஸ்ரு செய்கிற வகையில் சேர்ந்ததல்ல வென்பதும் அந்த கஸ்ருங்கூட கஸ்ருல் இப்ராதியும் கஸ்ருத்த அய்யுனிமா யிராமல் கஸ்ருல் கல்பியா யிருக்கிற தென்பதுமாம். (இவற்றின் விவரத்தை 56-வது பக்கத்தில் காண்க.)

ஏழாவது **லாஇலாஹ இல்லல்லாஹு** என்னும் கலிமாவானது ஆம், உண்டு என்பதும் அல்ல, இல்லை என்பதுமான இரண்டு பொதுவிதிகளை பொதிந்திருக்கிற தென்பதும் அல்லவில்லை என்ற விதி வேறு என்பதை நோக்கியும் ஆமுண்டு என்ற விதி அல்லாவை நோக்கியும் வந்ததென்பது மாம்.

எட்டாவது லாஇலாஹ இல்லல்லாஹு என்னும் கலிமாவானது குர்ஆனுடைய முஹ்கமாத்தில் சேர்ந்த தென்பதும் அது தஃவீலை ஏற்கா தென்பதுமாம்.

ஒன்பதாவது:—லாஇலாஹ இல்லல்லாஹு என்னும் கலிமாவானது முஷ்ரிக்குகள் தங்கள் மருக்ஷியினால் சர்வலோகத்தையும் அல்லாவின் வேறாக எண்ணியிருந்த எண்ணமாகிய கொள்கையை மறுப்பதற்காகவே இறங்கிற்று என்பது.

பத்தாவது:—வஹ்தத்துல் வுஜூதானது யுக்தி, சுருதி யென்னும் இருவிதப் பிரமாணங்களாலும் தரிபட்ட தென்பதும் வஹ்மினாலும் கற்பனையினாலும் வேறாகத் தோற்று... யன்றி மற்றப்படி சர்வ லோகமும் அல்லாவின் வேறல்ல என்பதுமாம்.

பதினொன்றாவது அல்கலிமத்துத் தையிபாவின் தப்ஸீரிலும் தஃவீலிலும் உலமாக்கள் சொல்லி யிருக்கும் வாக்கியங்கள் குர்ஆனுக்கும் ஹதீசுக்கும் மாறாயும், அவர்களின் வஹ்முகளுக்கு நேராயும் இருக்கின்றன வென்பது.



# முதலாவது அத்தியாயம்.

இந்த அத்தியாயத்தில் லாஇலாஹ இல்லல்லாஹு என்னும் கலிமாவினுடையவும் இதுபோல் தவ்ஹீதின் மேல் அறிவிக்கின்ற திருவாக்கியங்களுடையவும் தப்ஸீரான விருத்தியுரை எழுதப்படுகிறது.

அறிந்துகொள்:—இந்நூலின் அஷ்டபிரகரணங்களில் கூறியுள்ள நியாயவாதங்களை நன்குணர்ந்த பிறகே யன்றி **லாஇலாஹ இல்லல்லாஹு** வில் கருதப்பட்ட எதார்த்தமான பொருள் எது வென்பது வெளியாகாது. நீயோ அந்த நியாயவாதங்களை நல்ல விதமாகத் தெரிந்து கொண்டிருக்கிறாய். (அந்த எட்டு பிரகரணங்களில் முந்திய நீங்கலாக மற்ற ஏழும் உரைபடுத்தப்பட வில்லை. ஆதலால் அந்த நியாயவாதங்களை மூலப்பிரதியான கலிமத்துல் ஹக்கில் கண்டு தெளிக.)

ஆகவே லாஇலாஹ இல்லல்லாஹுவில் ஹக்கு தஆலா நாடிய பொருளாகிறது:— லாஇலாஹ ஒரு இலாஹும் இல்லை. (அதாவது:—விக்கிரகங்கள், சிலைகள், உருவங்கள் முதலியவைபோல் எவற்றின் மேல் இலாஹு என்கிற பதம் வழங்கப்படுகிறதோ அந்த இலாஹுகளில் ஒன்றேனும் இல்லை.) கைருல்லாஹி அல்லாவின் வேறாய் இல்லல்லாஹு அல்லாவாகவே யன்றி என்பதாம்.

அல்லாவாகவே யன்றி அல்லாவின் வேறாய் ஒரு இலாஹும் இல்லை. அல்லது எந்த இலாஹும் அல்லாஹ்வின் வேறல்ல என்பது **லாஇலாஹ இல்லல்லாஹு** என்பதின் மொழிப்புரையாம்.

தொக்கிய பயனிலையாகிய அல்லாவின் வேறு என்பதிலிருந்து அல்லாவை நீக்கி நிறுத்திக்கொள்ள அவனின் வேறு என்பது இல்லை என்பதில் புகுந்து அந்த இல்லை என்னும் எதிர்மறைச் சொல்லைச் சார்ந்து நிற்கிற இலாஹுகள் எல்லாமே அல்லாவை யன்றி இல்லை என்றாயிற்று.

ஆகவே அல்கலிமத்துத் தையிபாவின் பொருள் அல்ல, ஆம் என்னும் இரண்டு பொதுவிதிகளை நோக்கி நிற்கிறது. அதாவது:—இலாஹுகளில் நின்றும் ஒன்றேனும் அல்லாவின்

வேறு அல்லவென்பது ஒன்றும், எல்லா இலாஹுகளும் அல்லாவே ஆம் என்பது மற்றொன்றுமாம்.

ஆகவே வணங்கப்படுகிற சிருஷ்டிகளான இலாஹுகள் அல்லாவின் வேறல்லவென்பதும் அவை அல்லாதான் என்பதும் ஆகிய அத்வைதமான தவ்ஹீது முறைகமான அல்கலிமத்துத் தைய்யிபாவின் இபாரத்தான வெளிப்படையான சத்தப் பிரமாணத்தால் ஏற்பட்டுவிட்டது.

இலாஹுகளான சிருஷ்டிகள் அல்லாவின் வேறல்ல என்னும் அவை அல்லாதான் என்னும் எப்போது ஏற்பட்டதோ அப்போதே இலாஹுகளல்லாத மற்ற சிருட்டிகளும் அல்லாவின் வேறல்ல என்னும் அவை அல்லாதான் என்னும் அந்தக் கலிமாவின் தலாலத்தால் (அருத்தா பத்தியால்) ஏற்பட்டுவிட்டது. ஏனெனில் ஒரு சிருட்டிக்கும் மற்றொரு சிருட்டிக்கும் நடுவில் வேறு பிரிக்கும் காரணமில்லை யாதலினாலென்க.

ஆகவே அல்கலிமத்துத் தைய்யிபாவின் இபாரத்தான சத்தப் பிரமாணத்தையும் அதன் தலாலத்தான அருத்தா பத்தியையும் ஒன்று கூட்டிப் பார்க்க உண்டாயிருப்பவை எல்லாமே மொத்தமாக அது இலாஹா யிருந்தாலும் அதல்லவா யிருந்தாலும் ஜுஸ்வாய் (வியட்டியாய்) இருந்தாலும் குல்லாய் (சமட்டியாய்) இருந்தாலும் ஜுஸ்லியாய் (வியட்டி சம்பந்தியாய்) இருந்தாலும் குல்லியாய் (சமட்டி சம்பந்தியாய்) [illegible]ருந்தாலும் ஞானேந்திரியத்துக்குப் புலப்படுவதா யிருந்தாலும் புத்திக்குப் புலப்படுவதா யிருந்தாலும் நல்லதா யிருந்தாலும் கெட்டதாயிருந்தாலும் சரி, எல்லாம் அல்லாவின் வேறல்லவென்ற தவ்ஹீதான அத்வைதம் உண்டாய்விட்டது. இந்தப் பொருளை பொதித்தே பார்ஸி பாஷையில் **ஹமஓஸ்த்** (எல்லாம் அவனாயிருக்கிறான்) என்று சொல்லப்படுகிறது.

எல்லாம் அவனே என்ற இந்தப் பொருள் பொருந்திய தவ்ஹீதான அத்வைதம் வஹ்மு என்னும் பேதபுத்திக்கு விரோதமாயிருந்ததால் அந்த வஹ்முக்கும் வழக்கத்துக்கும் விரோதமான முஃஜிஸாவாகிய அற்புதத்தை அத்துடன் சேர்க்கப்பட்டது எதற்காக வெனில் வஹ்முக்கு விரோதப்படுகிற தவ்ஹீதை அதன் இனமாகிய முஃஜிஸாவினால் தரிபடுத்தவேயாம்.

சமட்டி - மொத்தமாக - Whole
வியட்டி - தனித்தனியாக - Individuality



மேற்கூறிய பொருளே **லாஇலாஹ இல்லல்லாஹு** வின் எதார்த்தமான பொருள் என்பதற்கு **லாஇலாஹ கைருக** என்று ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அருளிய திருவாக்கியம் பொருந்துகின்றது. ஏனெனில் அந்த வாக்கியம் **லாஇலாஹ இல்லல்லாஹு** என்று அல்லாஹு தஆலா அருளின வேத வாக்கியத்துக்கு வியாக்கியானமா யிருக்கிறது. அதெப்படி யென்றால் லாஇலாஹ-இலாஹுகளில் ஒன்றேனும் இல்லை. கைருக-நீயல்லாத வேறாய்-அதாவது:—நீ யல்லாத வேறாய் யாதொரு இலாஹும் அல்லது உன்னின் வேறான யாதொரு இலாஹும் இல்லை என்பது ஹதீஸின் அர்த்தம்.

எப்போது இலாஹுகளான சிருட்டிகள் அல்லாவின் வேறல்ல என்று இந்த ஹதீஸின் இபாரத்தான சத்தப்பிரமாணத்தினால் தரிபட்டதோ அப்போதே இலாஹுகளல்லாத மற்ற சிருட்டிகளும் அல்லாவின் வேறல்லவென்று இந்த ஹதீஸின் தலாலத்தான அருத்தாபத்தியால் தரிபட்டது. ஏனெனில் ஒரு சிருட்டிக்கும் மற்றொரு சிருட்டிக்கும் நடுவில் வேறு பிரிக்கக் காரணமில்லாமை யினாலென்க.

இந்த ஹதீஸ் **லாஇலாஹ இல்லல்லாஹு** என்ற கலிமாவுக்கு எப்படி வியாக்கியானமாயிற் றென்றால் லாஇலாஹ இல்லல்லாஹுவில் விளங்கப்படுகிற மேற்கூறிய இரண்டு பொதுவிதிகளில், அல்ல இல்லை யென்னும் விதியால் ஏற்பட்ட

لا شيئ من الالهة بغير الله

***லாஷெய் அமினல் ஆலிஹத்தி பிகைரில்லாஹி*** என்ற வாக்கியத்திற்கும் லாஇலாஹ கைருக என்ற ஹதீஸுக்கும் நடுவில் வித்தியாசம் ஒன்றுமில்லை. ஆனால் அந்த வாக்கியத்தின் எழுவாயில் ஷை, மின், அல் இவைகளை அதிகப்படுத்தியும் பயனிலையில் பி என்பதை அதிகப்படுத்தியும் இருக்கிறது. ஹதீஸில் எழுவாய் பயனிலை இரண்டிலும் வேறொன்றை அதிகப்படுத்தாமல் இட[illegible]பா யிருக்கிறது. இல்லை யென்னும் விதிக்குள் அடங்கிய மேற்கண்ட வாக்கியத்திற்கு அல்லாவின் வேறான இலாஹுகள் ஒன்றேனும் இல்லை என்பது அர்த்தம். இதேபோல் மேற்கண்ட ஹதீஸுக்கு உன்னின் வேறான யாதொரு இலாஹும் இல்லை அல்லது நீயல்லாத யாதொரு இலாஹும் இல்லை என்[illegible]து அர்த்தம்

ஹதீசோ பஸீஹும் பலீகுமா யிருக்கிறது. மேற்கண்ட வாக்கியம்
அப்படியில்லை. இன்னும் இந்த ஹதீசினால் அறியப்படுவதென்ன
வென்றால், **லாஇலாஹ இல்லல்லாஹு**வில் தொக்கிய பயனி
லையா யிருப்பது உலமாக்கள் எண்ணுகிறபடி மவுஜூதுன்
அல்லது மும்கினுன் போன்ற சொல் அல்ல வென்பதும் மேலும்
**கைருல்லாஹி** என்பதே அதில் தொக்கிய பயனிலையா யிருக்கிற
தென்பதுமாம். இதனாலேதான் இந்த ஹதீசு அல்கலிமத்துத்
தைய்யிபாவுக்கு வியாக்கியானமா யிருக்கிறதென்றது.

இன்னும் எல்லாம் அவனே என்பதுதான் லாஇலாஹ இல்லல்
லாஹுவின் எதார்த்தமான பொருள் என்பதின் பேரில் சூபியாக்க
ளாகிய மஹான்களில் ஒருவரான மவுலானா ரூம் ஜலாலுத்தீன் குத்
திஸ ஸிர்ருஹு வஅஸ்ாருஹும் அவர்கள் மஸ்னவியில் சொன்ன
வாக்கியம் பொருந்துகின்றது: , அது வருமாறு:—

## மஸ்னவி பய்த்து.

தேகலா தர் கத்லே கைரெ ஹக் பிராந்த்
தர்நிகர் ஜாம்பஸ் கெபாதஸ் லாச் செமுந்த்
முந்த் இல்லல்லா வபாகி ஜும்லரப்த்
ஷாத்பாஷ் ஐ இஷ்க் ஷிர்கத் ஸோஜ் ரப்த்

تیغ لا در قتل غیر حق براند    در نگر زان پس که بعد از لا چه ماند
ماند الا الله وباقي جمله رفت    شاد باش اي عشق شرکت سوز رفت.

இதன் கருத்து:—**லா** என்னும் வாளால் அல்லாவின் வேறு
என்பதை அவன் வெட்டினான். பிறகு லாவுக்குப் பின்னால் என்ன
மிச்சப்பட்டிருக்கிறதென்று பார். இல்லல்லாஹு என்பது மிச்சப்
பட்டு மற்றதெல்லாம் போய்விட்டது என்பதே.

இது எல்லாம் அவனே என்ற பொருளுக்குப் பொருந்தி
யிருப்ப தெப்படி யென்றால், லா என்னும் வாளால் அல்லாவின்
வேறு என்பதை வெட்டினான் என்று அவர்கள் சொன்ன வாக்கி
யத்தில் வெட்டல் என்பதில் கருதிய பொருள் அல்லாவின் வேறு
என்பதை நீக்கல் என்பதாம். இந்தச் சொல்லின் இபாரத்தான
சத்தப் பிரமாணத்தினால் இலாஹுகளான சிருட்டிகள் அல்லாவின்
வேறல்ல என்றும் தாலாலத்தான அருத்தாபத்தியினால் இலாஹுக
ளல்லாத மற்ற சிருட்டிகள் அல்லாவின் வேறல்ல என்றும்



வேற்றுமையை நீக்குகின்றது. மற்ற சிருட்டிகள் அல்லாவின்
வேறல்ல என்பதற்கு இது நேர் சத்தமான இபாரத்தல்ல இல்லா
விட்டால் அவர்கள் இல்லல்லாஹு என்பது மிச்சப்பட்டு மற்ற
தெல்லாம் போய்விட்ட தென்று சொன்ன வாக்கியம் எப்படி நிச
மாகும்.

இன்னும் லாவுக்குப் பின்னால் என்ன மிச்சப்பட்ட தென்
பதைப் பார் என்று அவர்கள் சொன்ன வாக்கியத்தில் லா என்னும்
பதத்தைக் கருதவில்லை. அதன் பொருளையே கருதினார்கள்.
அதாவது இலாஹுகளும் மற்ற சிருட்டிகளும் அல்லாவின்
வேறல்ல வென்றான பிறகு என்ன மிச்சப்பட்டது பார் என்பதே
யாம். லா என்னும் பதமே அவர்கள் கருத்தா யிருந்தால் அதைச்
சார்ந்து நிற்கிற எழுவாய்ப் பெயரான இலாஹு மிச்சப்பட்ட
தென்றாகும், இல்லல்லாஹ் அல்ல. இனி **லாஇலாஹ இல்லல்
லாஹு** என்ற கலிமாவில் இலாஹுவுக்கு **கைருல்லாஹி** என்
பதை தொக்கிய பயனிலை யாக்குவது கொண்டேயன்றி மவுஜூ
துன் போன்ற சொற்களில் ஒன்றை பயனிலையாக்குவது பொது
வாக எல்லாவற்றையும் அல்லாவின் வேறல்ல என்பதற்கு இசைந்து
வராதென்பது வெளிப்படை. மவுலானா ரூம் குத்திஸ ஸிர்ருஹு
அவர்களின் வாக்கியமானது நாம் **லாஇலாஹ கைருல்லாஹி
இல்லல்லாஹு** என்று சொன்ன சொல்லுக்கே இசைந்து வரு
கிறது. ஆகவே குர்ஆனுடைய முஹ்கமான லாஇலாஹ இல்லல்
லாஹுவின் இபாரத்தாலும் தலாலத்தாலும் லா என்னும் எதிர்
மறைச் சொல்லாகிய வாளைக்கொண்டு அல்லாவின் வேறு என்பது
எப்போது வெட்டி யொழிக்கப்பட்டதோ அப்போது இல்லல்
லாஹு தவிர ஒன்றும் மிச்சப்படவில்லை. ஆகவே இல்லல்லாஹு
மிச்சப்பட்டு மற்ற தெல்லாம் போய் விட்டதென்று அவர்கள்
சொன்னது மெய்யாயிற்று.

இன்னும் (முஹம்மது சல் அம்) "எல்லா இலாஹுகளையும்
ஒரே இலாஹு என்று ஆக்கி விட்டார்? ஆ! இது வெகு விந்தை
யான பேசசாயிருக்கிறது" என்று முஷ்ரிகுகள் சொன்னதை அல்
லாஹு தஆலா எடுத்துக் கூறிய இந்த வாக்கியமும் நாம் லாஇ
லாஹ இல்லல்லாஹுவில் கூறும் புணர்ப்புக்குப் பொருந்துகின்றது.
அந்த முஷ்ரிகுகள் பாஷைக்காரரா யிருந்தார்கள். அவர்கள்
லாஇலாஹ இல்லல்லாஹுவில் கருதப்பட்ட பொருள் இது வென்

பதையும் இலாஹு அல்லாஹ்தான் என்று அந்தக் கலிமா குறிப்பிடுவதையும் அறிந்தார்கள். அந்தக் குறிப்பு அல்லாவுக்கும் இலாஹுகளுக்கும் நடுவே வேற்றுமையை யொழித்து தவ்ஹீதின் நயத்தைத் தருகிறது. ஆகவே முஹம்மது எல்லா இலாஹுகளையும் ஒரே இலாஹு என்றுஆக்கி விட்டார்? அதாவது எல்லா இலாஹுகளையும் ஒரே இலாஹு தான் என்று அவர் எண்ணுகிறார்? இது வெகு விந்தையான பேச்சா யிருக்கிற தென்று அவர்கள் சொன்னார்கள். இதன் கருத்து (அந்த முஷ்ரிகுகள் இலாஹுகளை கைருல்லாஹி (அல்லாவின் வேறு) என்ணி யிருந்தார்களென்பதும் அவைகள் அல்லாஹ்வின் வேறல்ல அல்லாஹ்தான் என்று லாஇலாஹ இல்லல்லாஹு வினால் வெளியாகுவது அவர்களுக்கு ஆச்சரியத்தை விளைத்தது என்பதுமாம்.)

இன்னும் இந்த ஆயத்தின் வியாக்கியானத்தில் முஹம்மது (சல் அம்) சொல்வது போல் இலாஹு ஒன்றாகவே யிருந்தால் எங்கள் ஹாஜத்துகளை நிறைவேற்ற அந்த ஒரு இலாஹு எங்களுக்குத் தாராளமாகுமா? போதுமா? ஆதலால் அவர் சொல்வது வெகு விந்தையான பேச்சா யிருக்கிறதென்று முஷ்ரிகுகள் சொன்னதாக முபஸ்ஸிருகள் வியாக்கியானித்திருப்பது அவர்களின் வஹ்மா யிருக்கிறது. ஏனெனில் இந்த வியாக்கியானத்துக்கு நேர் வாக்கியம் எப்படி யிருக்கவேண்டு மென்றால், அவர் தம்முடைய இலாஹுவை போது மாக்கிக் கொண்டாரோ அல்லது இலாஹுகளை எல்லாம் விட்டு ஒரே இலாஹுவை எடுத்துக் கொண்டாரோ இது வெகு விந்தையான பேச்சா யிருக்கிறது என்று இப்படி வந்திருக்க வேண்டும். எல்லா இலாஹுகளையும் ஒரே இலாஹு என்று ஆக்கிவிட்டார் என்பது முதல் முடிவு வரையிலுள்ள அந்த ஆயத்து வந்திராது.

ஆகவே (காலியுல் பய்லாவி என்னும்) முபஸ்ஸிரானவர் இந்த ஆயத்தின் தப்சீரில் "எல்லா இலாஹு களுக்கு மிருந்த உலூஹியத் தென்னும் நாயகத்தன்மையை ஒரே இலாஹுக்காக ஆக்கிவிட்டார்"? என்று இப்படி வியாக்யானம் செய்திருப்பது பாத்திலாய் விட்டது. இந்த வியாக்யானத்தின் மொத்தக் கருத்தென்னவென்றால், எல்லா இலாஹுகளுக்கும் பொதுவா யிருந்த நாயகத்தன்மையை அவர் ஒரே இலாஹுவுக்குச் சொந்த மென்று



எண்ணினர்? இது வெகு விந்தையான பேச்சா யிருக்கிறது என்பதுதான்.

இன்னும் நம்முடைய நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஆணையிட்டு உறுதிபடுத்திய வாக்கியம் அதாவது "முஹம்மதுடைய நப்ஸாகிய ஆத்துமா யார் வசமிருக்கிறதோ அந்த ஆண்டவன்மேல் ஆணையாக நீங்கள் நீர் மொள்ளும் பாத்திரத்தை ஒரு கயிற்றினால் பூமியில் இறக்குவீர்களாகில், திடனாக அது அல்லாவின் மேல் விழும்" என்ற வாக்கியமும் பின்பு அதற்கு அத்தாக்ஷியாக "அவனே முன்னவன், அவனே பின்னவன், அவனே வெளிப்பட்டிருப்பவன், அவனே உள்ளீடா யிருப்பவன், அவன் வஸ்துவடங்கலையும் நன்றாய் அறிகிறவன்" என்றெடுத்தோதினதும் தவ்ஹீதின் பொருளுக்குப் பொருத்தமா யிருக்கிறது.

இன்னும் வந்நஜ்மி என்ற சூரத்தில்

والنجم اذا هوي ما ضل صاحبكم وما غوي

(உங்கள் சாஹிபு வழி கெடவுமில்லை வழி தப்பவு மில்லை என்று) அல்லாஹு தஆலா அருளிய திருவாக்கியமானது நம்முடைய நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் விஷயமாக முஷ்ரிகுகள், அவர் தமது கவுமுகளின் மார்க்கத்தை விட்டு விட்டதினால் அவர் வழி கெட்டார் வழிதப்பினார் என்று சொன்னதற்கு எதிர்மறுப்பாக இறங்கி யிருக்கிற தென்று முபஸ்ஸிருகள் வியாக்யானித்திருப்பதும் அவர்களின் வஹ்மேயாம். ஏனெனில் நாயகமவர்கள் தங்கள் கவுமுகளின் மார்க்கத்தை விட்டு விட்டதற்காக முஷ்ரிகுகள் அப்படிச் சொல்லியிருந்தால் நாயகமவர் நபியாகி எழும்புவதற்கு முந்தியே அந்தச் சொல்லை அவர்களால் செவியுற்றிருப்பார்கள். நாயகமவர்கள் நபி பட்டத்திற்குமுன் நாற்பது வருஷகாலம் அவர்களுடன் நிலைத்திருந்தார்கள். அப்போதெல்லாம் அவர்களால் யாதொரு தடித்த சொல்லை அவர்கள் கேட்டதில்லை. மேலும் தங்களைப்பற்றி **அமீனுன் சாதிகுன்** என்ற வார்த்தையை அவர்கள் வழங்கிவாக் கேட்டார்கள். இதனால் அந்த வியாக்கியானம் தப்பென்பது நன்கு விளங்கும்.

இதுவுமன்றி அந்த வாக்கியத்திற்குப்பின் வாக்கியமாக (அவர் தம் இச்சையாகச் சொல்வதில்லை என்கினும் அவர் சொல்வது அவருக்கு அறிவிக்கப்பட்ட வஹியே தவிர வேறல்ல வென்று) வந்திருப்பது இந்த வஹ்மை வெட்டுகிறதினாலும் அந்த வியாக்யானம் தப்பென்பது புலப்படும். ஏனெனில் உங்கள் சாஹிபு வழி கெடவு மில்லை வழிதப்பவு மில்லை என்ற ஆயத்து இறங்கினதற்கு அந்த வஹ்மே அதாவது கவுமுகளின் மார்க்கத்தை அவர்கள் விட்டு விட்டதே காரணமா யிருந்தால் பின்வாக்கியத்தில் அவர் தம் இச்சையாகச் சொல்வதில்லை என்கினும் إن هو إلا وحي يوحى

அவர் சொல்வது அவருக்கு அறிவிக்கப்பட்ட வஹியே தவிர வேறல்ல வென்று வந்திருப்பதற்குப் பதிலாக "அவர் தம் இச்சையாக கவுமுகளில் மார்க்கத்தை விடவில்லை, தமக்கு அறிவிக்கப்பட்ட வஹியினாலேயே விட்டு விட்டார்" என்று வந்திருக்க வேண்டும். அப்படி வந்திருந்தால் மறுக்கப்பட விஷயத்துக்கு மறுப்பு நேர் பொருத்தமா யிருக்கும்.

இன்னும் வந்நஜ்மி என்னும் சூரத்தில் "உங்கள் சாஹிபு வழி கெடவுமில்லை வழிதப்பவுமில்லை" என்கிற வாக்கியம் முஷ்ரிகுகளின் வாக்கியத்திற்கு எதிர் மறுப்பாக இறங்கின தென்றும் அதன் பின் வாக்கியமாகிய "அவர் தம் இச்சையாகச் சொல்வதில்லை; அவர் சொல்வது அவருக்கு அறிவிக்கப்பட்ட வஹியே தவிர வேறல்ல" என்கிற வாக்கியம் குர்ஆனின் இஸ்மத்துக்காக அதாவது குர்ஆனில் மானிடவாக்கியம் கலக்காதபடி அது காக்கப்பட்ட தென்பதைத் தரிபடுத்துவதற்காக வந்ததென்றும் சில தப்ஸீருகளில் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் பிசகென்பதற்கு வேண்டிய நியாயங்களைச் சொல்லி மவுலானா அவர்கள் மறுத்திருப்பது மன்றி அல்கலிமத்துத் தையிபா வாகிய லாஇலாஹ இல்லல்லாஹுவின் இஸ்மத்தைத் தரிபடுத்துவதற்காகவே அந்த ஆயத்து இறங்கின தென்றும் குர்ஆனுடைய இஸ்மத்து முஃஜிஸாவினால் தரிபட்ட தென்று ஸ்தாபித்திருக்கிறார்கள். அதன் விபரத்தை மூலப்பிரதியான கலிமத்துல் ஹக்கில் கண்டு தெளிக.

அறிந்துகொள்: நிடனாக லாஇலாஹ இல்லல்லாஹு என்னும் கலிமாவானது இஷ்ராக்கை நீக்குவதென்று எல்லா உம்மத்துகளிடத்திலும் தரிபட்டிருக்கிறது. ஆதலால் நீ பொறுமையாக



கோட்டமிட்டுப் பார். லாஇலாஹ இல்லல்லாஹு என்று நாம் சொல்லும் சொல்லானது ஆரம்பத்தாலும் இபாரத்தாலும் எந்த வஸ்துவை இல்லை என்று நீக்குகிறது? எந்த வஸ்துவை உண்டென்று தரிபடுத்துகிறது? நிடனாக அது ஆரம்பத்தாலும் இபாரத்தாலும் அல்லாவுக்கும் விக்கிரகங்களுக்கும் நடுவே தோற்றும் வேற்றுமையை இல்லை யென்றொழித்து அந்த இரண்டும் ஒன்றா யிருக்கிற தென்று ஒற்றுமையைத் தரிபடுத்துகிறது. ஆகவே யாராவ தொருவன் அந்த இலாஹுகளுக்கும் அல்லாவுக்கும் நடுவே வேற்றுமையை நிர்ணயங் கொள்ளுவானாகில் நிடனாக அவன் தனக்குத் தெரியாதபடி **லாஇலாஹ இல்லல்லாஹு** என்னும் முற்கமை இன்காரு செய்தவனாவான். **அதை விட்டு நாம் அல்லாவினிடம் காவல் தேடுகிறோம்.** அந்தக் கலிமாவோ இஸ்லாமில் எடுப்புகளாகச் சொல்லப்பட்ட ஐந்து முற்கமான மூலங்களில் நின்றும் முந்தின மூலமா யிருக்கிறது. இன்னும் வேற்றுமையை நிர்ணயங் கொண்ட அவன் அக்கலிமாவுக்கு மாற்றமான ஒரு கெட்ட கலிமாவைக் கொண்டு ஈமான் கொண்டவனாவான். அதாவது **லாஇலாஹ இல்லா கைருல்லாஹி** (அல்லாவின் வேறாகவே யன்றி யாதொரு இலாஹும் இல்லை) என்பதாம்.

இன்னும் நீ அறிந்திருப்பதாவது:—**லாஇலாஹ இல்லல்லாஹு** என்பது இபாரத்தாலும் தலாலத்தாலும் பொதுவாக அல்லாவை யன்றி உண்டாயிருப்பது ஒன்றுமே யில்லை என்ற பொருளில் திரும்புகின்றது. **லாஇலாஹ இல்லா கைருல்லாஹி** என்பது இபாரத்தாலும் தலாலத்தாலும் பொதுவாக அல்லாவின் வேறாகவே யன்றி உண்டாயிருப்பது ஒன்றுமே யில்லை என்கிற பொருளில் திரும்புகிறது.

இன்னு மறிந்துகொள்:—**லாஇலாஹ இல்லல்லாஹு**வின் இபாரத்தாலும் தலாலத்தாலும் ஆம் உண்டு என்னும் விதிக்குள் அடங்கிய அதன் பொருளாகிறது, பொதுவாக உண்டா யிருப்பவை எல்லாம் அல்லாஹ்தானா யிருக்கிறது என்பதாம். இதில் * அப்ராதி என்னும் ஒவ்வொரு வியட்டியும் × மஜ்மூஇ என்னும் ஒவ்வொரு

* அப்ராதி அல்லது வியட்டி என்பது ஏக கூட்டத்தில் ஒரு தனி அங்கமாம். உதாரணம்:—வனத்தின் ஓர் விருக்ஷம் × மஜ்மூஇ அல்லது சமட்டி என்பது பலவின் கூட்டமாம். உதாரணம்:—வனம், தோப்பு.

பார் — ஒருமை

சமட்டியும் அடங்கிவிட்டன. ஆகவே நல்லதாய் அல்லது கெட்டதா யிருக்கிற ஒவ்வொரு வஸ்துவின் மீதும் அல்லாஹு என்னும் நாமத்தை நடத்துவது கூடும். இல்லாவிட்டால் எதை விட்டுத் தப்பித்துக்கொள்ள வேண்டுமோ அதில் விழுவது வந்து பூணும். அது யாதெனில், ஊக்கு வேறு கல்கு வேறு என்கிற எண்ணமேயாம்.

ஆனால் அல்லாஹு என்ற நாமத்தைக் கெட்ட பொருளின் பேரில் நடத்துவதற்கும் கெட்டபொருளின் பெயரை அல்லாஹ்வின் பேரில் நடத்துவதற்கு நடுவே பெரிய வித்தியாசமிருக்கிறது, ஏனெனில் முந்தியது "அல்லாஹு தஆலா எல்லா வஸ்துவையும் சூழ்ந்திருக்கிறான்" என்ற அவனது திருவாக்கியத்தை நோக்குகிறது. இன்னும் லாயிலாஹ இல்லல்லாஹு என்னும் கலிமாவானது அப்படி நடத்துவது ஆகுமென்று வெள்ளிதாக விளக்குகின்றது. பிந்தியது அதாவது கெட்ட பொருளின் நாமத்தை அல்லாவின் மேல் நடத்துவது அப்பொருளால் அல்லாஹு தஆலா சூழப்பட்டிருக்கிறான் என்ற வஹ்மை உண்டாக்குவதினால் அது ஆகுமென்று ஷரகு ஷரீபு அனுமதியளிக்காது. அன்றியும் அதில் அதபுகேடு மிருக்கிறது. முந்தியது அப்படியல்ல ஏனெனில் முந்தியது வேறு என்ற எண்ணமாகிய இஷ்ராக்கை நீக்குவதா யிருப்பதால் அது நல்லொழுக்க மென்பதை விட்டொழியாது. இன்னும் **லா இலாஹ இல்லல்லாஹு** என்ற கலிமா விதிக்கும் விதியினாலும் இன்னும் **நீங்கள் எப்பக்கம் திரும்பினாலும் அங்கு அல்லாவுடைய தாத்து இருக்கிற** தென்று அவன் அருளிய திருவாக்கியத்தினாலும் அது ஆகு மென்பதை நீ அறிந்தே யிருக்கிறாய்.

மேலே சொல்லிவந்த விவரங்களின் முடிவினால்

ولله يسجد من في السموات ومن في الارض

**வலில்லாஹி யஸ்ஜுது மன்பிஸ்ஸமாவாத்தி வமன் பில் அர்லி** (அல்லாவுக்கே வானங்களிலிருப்பவரும் பூமியிலிருப்பவரும் சாஷ்டாங்கமாகப் பணிந்து வணங்குகிறார்கள்) என்று அவன் அருளிய திருவாக்கியத்தின் உண்மை வெளியாயிற்று. இந்த வாக்கியத்தில் வணங்கப்படுகிற அல்லாவை முற்படுத்தி **லில்லா ஹியஜ்ஜுது** என்று சொல்லியிருப்பதானது



வணங்குவது அல்லாவுக்கே யன்றி அவனல்லாத மற்றொன்றுக்கல்ல வென்கிற நயத்தைத் தருகிறது. விக்கிரகங்கள் அல்லாவின் வேறாயிருந்தால் "பூமியிலிருப்பவரும் அல்லாவுக்கே வணங்குகிறார்கள்" ளென்று அவன் சொன்ன சொல் பொய்யென்றாகும்.

இன்னும் இதன்மேல் ان القوة لله جميعا

**அன்னல் குவ்வத்தலில்லாஹி ஜமீஆ** (நிடனாக சர்வ சக்தியும் அல்லாவுக்கே உரியது.) ولله المكر جميعا **வலில்லாஹில் மக்ருஜமீஆ** (அல்லாவுக்கே சர்வ தந்திரமும் உரியது) என்ற வாக்கியங்களையும் ஊகித்துப்பார். சில சக்தியும் தந்திரமும் சிருட்டிகளிலும் காணப்படுகின்றன.

இன்னும் இதன்மேல் ان الله معكم

(நிடனாக அல்லாஹ் உங்களோடிருக்கிறான்,)

இன்னும் ان الله معنا (நிடனாக அல்லாஹ் நம்மோடிருக்கிறான்)

இன்னும் نحن اقرب اليه من حبل الوريد

(நாம் இன்சானிடத்தில் அவனது பிராண நரம்பினும் அதிகமாக நெருங்கி யிருக்கிறோம்) என்ற திருவாக்கியங்களையும் ஒத்திட்டு ஊகித்துப்பார். உடனிருப்பதென்பதும் பிராண நரம்பினும் அதிகமாக நெருங்கி யிருப்பதென்பதும் இன்சான் அவனாகவே யிருப்பதிலன்றி வேறு எவ்விதத்திலும் இசைந்துவராது. (எள்ளுடன் எண்ணெய், மலருடன் மணம், பாலுடன் நெய் என்பது போன்ற எவ்வகை உபமானத்தாலும் அதை ஊகித்தல் தோஷமாய் முடியும்.)

இன்னும் இதனால் لقد كفر الذين قالوا ان الله ثالث ثلثة

நிடனாக அல்லாஹு தஆலா மூவரில் மூன்றானாயிருக்கிறான் என்று சொன்னவர்கள் மெய்யாகக் காபிரானார்கள் என்பதாக நஸாராக்களைக் குறித்து அல்லாஹு தஆலா அருளிய திருவாக்கியத்துக்கும், இன்னும்

ما يكون من نجوى ثلثة الا هو رابعهم ولا خمسة الا هو سادسهم ولا
ادنى من ذلك ولا اكثر الا هو معهم

(மூவர்கூடி இரகசியப்பதில் அல்லா அவர்களில் நாலாமவனாயிருந்தே யன்றி, இன்னும் ஐவர்கூடி இரகசியப்பதில் அவன்

அவர்களில் ஆருளு யிருந்ததேயன்றி இன்னும் மூவரினும் குறைத்தும் ஐவரினும் அதிகப்பட்டும் இரகசிப்பதில் அவன் அவர்களுடன் இருந்தே யன்றி இரகசிக்கிற இரகசியம் ஒன்றும் இராது என்று) அவனருளிய திருவாக்கியத்துக்கும் இடையிலுள்ள வித்தியாசமும் வெளியாயிற்று.

முந்தினது அதாவது:—மூவரில் அல்லா மூன்றாளுயிருக்கிறான் என்று நஸாராக்கள் சொன்னது வெள்ளிய குபுராயும் பிந்தினது அதாவது:—மூவருடன் நாலாளும் ஐவருடன் ஆருளும் இப்படி எல்லாரோடும் அவன் இருக்கிறான் என்று கொள்வது தெள்ளிய ஈமானுயு மிருக்கிறது. வித்தியாசத்தின் வெளிப்பாடு எப்படி யென்றால் முந்தினது பிரிந்ததும் வேருக்கதுமாகிய பொருளை பொட்டி நிற்கிறது. அதுவோ வெள்ளிடையான குபுராயிருக்கிறது. பிந்தினது அவன் அவர்களோடிருந்தே யன்றி என்று வந்திருக்கிற நெருங்கிய அத்தாதஷியினால் சேர்ந்ததும் ஒன்ருக்கதுமான பொருளை பொட்டி நிற்கிறது. சேர்ந்ததும் ஒன்ருக்கதுமே தெள்ளிய ஈமானுகும்.

இன்னும் فان لله خمسه وللرسول ولذي القربي واليتامي والمساكين وابن السبيل

**நீங்கள் சூரையாடின பொருளின் ஐந்திலொரு பாகம் திடனாக அல்லாவுக்காம். இன்னும் அவனுடைய ரஸூலுக்குமாம், இன்னும் ரஸூலுடைய அவுலாதுகளுக்குமாம், இன்னும் தகப்பனை இழந்த அனாதைக் குழந்தைகளுக்குமாம். இன்னும் ஏழைகளுக்குமாம், இன்னும் முசாபிர்களுக்குமாம்.** என்று அல்லாஹு தஆலா அருளிய திருவாக்கியத்தின் உண்மையும் இதனால் வெளியாயிற்று. அந்த வாக்கியத்தில் அல்லாவுக்கு என்று சொன்னது பரக்கத்துக்காக மாத்திரம் என்று உலமாக்கள் தஃவீல் செய்வது சரியல்ல. எப்போது அல்லாவுக்கும், ரஸூல் முதல் முசாபிர் ஈருகச் சொல்லப்பட்ட மற்றவருக்கும் நடுவில் வேற்றுமை இல்லையென்றொழிந்ததோ அப்போது அந்த ஐந்து பாகங்கள் முழுதுமே அல்லாவுக்கே யன்றி அவனல்லாத அன்னியருக்கல்ல என்பது நிசப்பட்டது. ரஸூலுக்கும் என்பது முதல் முசாபிருக்கும் என்பது வரையில் உள்ள வாக்கியத்தை அந்தப் பாகம் அல்லாவுக்கே என்பதை விளக்கு



கிற தப்ஸீராயும், ரஸூல் முதல் முசாபிர் வரையில் சொல்லப்பட்டவர்களை சிறப்பித்து மேன்மை படுத்துவதாயும் அமைத்தான். ஆனால் அப்படிப் பெருமை படுத்தப்பட்டவர்களில் மாத்திரமே அல்லாஹு தஆலா மட்டுண்டிருக்கிறான் என்பதற்காக அல்ல.

இன்னும் இதன்மேல் அடியிற்கண்ட ஆயத்துகளையும் ஒத்திட்டு ஊகித்தறி.

ஆயத்து:— ومن يطع الرسول فقد اطاع الله

எவனொருவன் ரஸூலுக்கு வழிபட்டானோ அவன் திடனாக அல்லாவுக்கு வழிபட்டான்.

ஆயத்து:— وما رميت اذ رميت ولكن الله رمى

நீர் மண்ணை எறிந்தபோது அதை நீர் எறியவில்லை என்கினும் அல்லா எறிந்தான்.

ஆயத்து:— يد الله فوق ايديهم

அல்லாவுடைய கையானது அவர்களுடைய கைகளுக்கு மேலிருக்கிறது.

ஆயத்து:— ان الذين يؤذون الله ورسوله

அல்லாவையும் ரஸூலையும் நோவச் செய்கிறவர்கள்.

ஆயத்து:— فلم تقتلوهم ولكن الله قتلهم

அவர்களை நீங்கள் கத்லு செய்ய வில்லை. என்கினும் அல்லா அவர்களை கத்லு செய்தான்.

ஆயத்து:— ان تقرضوا الله قرضا حسنا

அழகான கடனாக நீங்கள் அல்லாவுக்குக் கடன் கொடுப்பீர்களாகில்,

இந்த ஆயத்துகளில் ஊகித்தறிய வேண்டிய தென்னவென்றால் லாஇலாஹ இல்லல்லாஹுவின் சுயமான அர்த்தம் வேற்றுமையை நீக்குவ தென்றாகா விட்டால் அப்போது ரஸூலுக்கு வழிபடல் அல்லாவுக்கே வழிபடல் என்பதும் ரஸூலின் மண்ணெறிதல் அல்லாவுடைய எறிதலே என்பதும் ரஸூலுடைய கை அல்லாவுடைய கையே என்பதும் எப்படி சரியாகும். இன்னும் ஜனங்களால் அல்லா நோயுறுவ தென்பது எப்படி நேர்பட்டுவரும். இன்னும் உண்மையில் தங்கள் இச்சையாகக் கத்லு

செய்தவர்களின் விஷயத்தில் அவர்கள் கத்லு செய்யவில்லை, அல்லாஹுத்தஆலா கத்லு செய்தான் என்பது எப்படி நேராகும். இன்னுமிதே போல் அல்லாவுக்குக் கடன் கொடுத்த லெவ்ட் தற்கும் பொருள் பூஜ்யமாய் போம் என்பதே.

சுவால்:—மேற்கண்ட ஆயத்துகளில் கூறியுள்ள செயல்களை அல்லாஹுத்தஆலா செய்தான் என்பது ஹகீகத்தாகிய அந்தரங்கத்தை விளக்குவதின் மேல் பொருத்தப்பட்டதா யிருக்கிறது. ஏனெனில் எல்லாச் செயல்களின் எதார்த்தமான வினைமுதல் அல்லாஹ்வா யிருப்பதினாலும் அவைகளை அடியான் செய்தானென்பது உபசார வழக்கா யிருப்பதினாலுமாம் என்பாயாகில் நான் சொல்லுகிறேன்,

ஜவாபு:—நீ சொல்வது அகராதி அர்த்தத்தின் உண்மைக்கு விரோதமாயும் உசூலுடைய காயிதாக்களுக்கு முரணாயு மிருக்கிறது. ஏனெனில் செயல்களின் எதார்த்தமான வினைமுதல் அவைகளைத் தன் இச்சையாகச் செய்தவன் எவனோ அவனே என்றும் இச்சை யின்றிச் செய்தவன் உபசார வழக்கால் மாத்திரம் வினைமுதலா யிருக்கிறான் என்றும் எதார்த்தத்தில் அவன் வினைமுதல் அல்லவென்றும் உசூலுடைய காயிதாவில் தரிபடுத்தப்பட்டிருக்கிறது. இந்த காயிதாவை அனுசரித்தே அனேகம் பிக்ஹு மஸ்அலாக்கள் பிரிந்திருக்கின்றன. உதாரணமாக,—கொலை, களவு முதலிய குற்றங்களில் ஒருவன் தன் இச்சையின்றி கூடியிருந்தானாகில் பழிக்குப் பழி வாங்கல் கையைத் தறித்தல் முதலிய தெண்டனைகள் அவனை விட்டு விழுந்துபோம். இது பகீஹுகளுக்குத் தெரியாததல்ல.

இன்னும் அல்லாவும் சர்வசிருட்டிகளும் ஒன்றே என்று நாம் சொன்ன சொல்லுக்கு அடியில் காணும் ஆயத்தின் பொருளும் பொருந்துகின்றது.

ஆயத்து

فلما اتاها نودى من شاطي الواد الايمن في البقعة المبا ركة
من الشجرة ان ياموسي اني انا الله رب العلمين

மூசா (அ-ம்) அந்த நெருப்பினிடம் வந்தபோது அவ்வெளியின் வலப்பக்கத்திலிருந்து ஓர் மரத்தின் முபாரக்கான ஓர் இடத்தில் ஓ மூசாவே! நிட்சயமாக நான் ஆலமீனுகிய அல்லாவா



யிருக்கிறேன் என்று கூப்பிடப்பட்டது என்பதே. கூப்பிட்டதும் அந்தச் சொல்லைச் சொன்னதும் அந்த மரமேயாம். ஆகவே இந்தச் சொல்லானது இபாரத்தால் அந்த மரம் அல்லாவுடன் ஒற்றுமையுடைய தென்றும் தலாலத்தால் மற்ற சிருட்டிகளும் அல்லாவுடன் ஒற்றுமை உடையன வென்றும் அதாவது மரமும் மற்ற சிருட்டிகளும் அல்லாதான் என்று அறிவிக்கின்றது. ஏனெனில் ஒரு சிருட்டிக்கும் மற்றொரு சிருட்டிக்கும் நடுவில் வேறு பிரிக்கும் காரணம் இல்லாமையினு லென்க.

இந்த ஆயத்துகளெல்லாம் இபாரத்தாலும் தலாலத்தாலும் அல்லாவையும் மற்ற சிருட்டிகளையும் ஒன்று சேர்த்து ஏகமாக்குவதின் பேரில் அறிவிக்கின்ற பிரமாணங்களா யிருக்கின்றன.

---

# இரண்டாவது அத்தியாயம்.

இந்த அத்தியாயத்தில் அடியில் குறித்திருக்கும் ஐந்து ஆயத்துகளின் தப்ஸீரான வியாக்கியானமும் அவைகளின் மதுலூலாகிய லாஇலாஹ இல்லல்லாஹு என்ற கலிமாவுடன் அவை கட்டுண்டிருக்கின்றன என்ற விபரமும் விஸ்தரித்து எழுதப்பட்டிருக்கின்றன.

ஆயத்து "(வானம் பூமிகளாகிய) அவ்விரண்டிலும் அல்லாவை யன்றி அவனின் வேறான இலாஹுகளிருந்தால் அவ்விரண்டும் கேட்டை யடைந்திருக்கும்.

ஆயத்து:— அந்த விக்கிரகங்கள் (அவனின் வேறான) இலாஹுகளா யிருந்தால் அவை நரகத்துக்கு வரா.

ஆயத்து:—அவர்கள் சொல்வதுபோல் அவனுடன் (அவனின் வேறான) இலாஹுக ளிருந்தால் அப்போது அந்த இலாஹுகள் அருஷையுடைய வனுகிய அவன் பக்கம் போக ஒரு வழியைத் தேடுவார்கள்.

ஆயத்து:—அவனுடன் (அவனின் வேறான) யாதொரு இலாஹும் இருந்ததில்லை, அப்படி யிருந்தால் ஒவ்வொரு இலாஹும் தாங்கள் சிருட்டித்த சிருட்டியைக் கொண்டு போயிருப்பார்கள்.

ஆயத்து:—அவர்களிற் சிலரைச் சிலர் மிகைத்து மேற் கொண்டிருப்பார்கள்.

ولعلي بعضهم علي بعض

## இந்த ஐந்து ஆயத்துகளும் முன்னமையே எழுதப்பட்டிருக்கின்றன.

அறிந்துகொள் வாஜிபு என்னும் இன்றியமையாத சத்துப் பொருளாய்ச் சதேதாயமாய் (எப்போது மிருப்பதாய்) விளங்குவது ஒன்றேயன்றிப் பல வில்லை. அது பலவாரா யிருத்தல் கூடாதென்று நேரான புத்தியினிடத்தில் கிரகிக்கப் பட்டிருக்கிறது. இதனாலேயே எவரும் அது பலவென்பதின் பக்கம் செல்லவில்லை. இல்லாவிட்டால் அதாவது அது பலவாயிருப்பதாக எவரும் கொண்டிருந்தால் அந்தக் கொள்கை மிகக் கெட்டதா யிருப்பது பற்றி குர்ஆன் ஹதீதுகளில் அதைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கும். குப்ரும் ஷிர்க்குமாகிய கொள்கைகளில் நின்றும் குர்ஆன் ஹதீதுகளில் கூறப்படாமல் ஒன்றேனும் விடப்பட்டிருப்பதில்லை.

இனி நஸாராக்களும் அவர்களல்லாத சிலரும் மும்கினாகிய ஒரு சிருட்டியையும் அல்லாஹு தஆலாவைப் போல் வாஜிபாகக் கண்டு மருள்கின்றார்களல்லவா. அந்த வாஜிபை மறுக்க வேறு நியாயம் வேண்டியதில்லை. வாஜிபு என்று அவர்களால் எண்ணப்படுகிற மற்றொரு மும்கினுடைய வெளிப்பாடே அந்த மருட்சியை மாய்த்துவிடும்.

(இதன் விபரமாவது எந்த புத்திமானும் வாஜிபு என்னும் சத்துப்பொருள் ஒன்றுக்கு மேல் அதிகமாயிருக்கிற [illegible]து வாதிக்கவில்லை. ஆனால் இலாஹு மூன்றாயிருக்கிறதென்று [illegible]ராக்களும் இன்னும் சிலரும் சொல்கிறார்கள். இதனால் வாஜிபு ப[illegible]யிருக்கிறதென்கிற எண்ணமுண்டாகிறது. ஏனெனில் இலாஹு [illegible] பலவாயிருக்கிறதென்ற எண்ணமானது வாஜிபுக்கு அவசியம[illegible]ன (உம்மஹாத்துஸ் ஸிபாத்தி) ஜீவியம் அறிவு நாட்டம் முதலி[illegible] ஸிபத்துகள் அந்த சிருட்டியில் சிறந்து விளங்கினமை பற்றி அவர்கள் அதை இலாஹு என்று எண்ணியிருப்பார்கள் என்ற பொருளில் பிறக்கிறது. ஆனால் அது அவ்வளவாக மறுக்கப்படவேண்டிய எண்ணமாயில்லை. ஏனெனில் வாஜிபு இன்னது மும்கினு இன்னது



என்று இலக்ஷணங்களை விசாரித்துத் தெளிந்த புத்தியானது எந்த மும்கினு வாஜிபாக முடியாதென்று ஆக்ஞாபிக்கின்றது. ஆகவே இலாஹு என்று பாவிக்கப்பட்ட மும்கினாகிய சிருட்டிக்கு உஜூது அவசியமல்லவென்ற ஞாயமாத்திரமே அந்த சிருட்டியை வாஜிபல்லவென்று மறுக்கின்றது.)

இனி மஜூஸிகள் இரண்டு சிருட்டிகர்த்தாக்களில் ஒவ்வொருவரையும் வாஜிபாக எண்ணுகிறார்களல்லவா? அவர்களுடைய அந்த எண்ணமே அந்த கர்த்தாக்கள் வாஜிபல்லவென்று மறுக்கின்றது. ஏனெனில் அவர்களின் கொள்கைப்படி நன்மையைச் சிருட்டிக்கும் கர்த்தா தீமையையும் தீமையைச் சிருட்டிக்கும் கர்த்தா நன்மையையும் சிருட்டிப்பதற்குச் சக்தியில்லாதவர்களாயிருக்கிறார்கள். இப்படி ஒவ்வொருவரும் சக்தி இழந்தவர்களாயிருப்பதானது அவர்கள் வாஜிபாயிருப்பவரல்லரென்பதை ரூபிக்கின்றது. ஏனெனில் வாஜிபென்பது பூரணத் தன்மையுள்ளதாயிருக்கவேண்டும். குறைவும் சக்தி இன்மையுமான குணம் மும்கினாகிய சிருட்டியின் அடையாளங்களில் ஒன்றாகும். ஆகவே இந்த வாஜிபையும் மறுக்க வேறு நியாயம் சொல்லத் தேவையில்லை.

இனி ஹக்குக்கு கல்கு வேறான வாஜிபா? அல்லது ஹக்கும் கல்கும் ஏகமா? என்பதில் மதுஹபுகள் விகற்பித்தன. அநேகருடைய அபிப்பிராயமானது அவர்களின் வஹ்மு என்னும் பேத புத்திக் கிணங்க ஹக்குக்கு கல்கு வேறுதான் என்று ஸ்தாபித்தது. இன்னும் சிலர் அதை மறுக்க வெழுந்து ஹக்கும் கல்கும் ஏகமென்றதின் பக்கம் சென்றார்கள். அவர்கள் யாவரெனில் லாஇலாஹ இல்லல்லாஹு என்னும் கலிமாவான உபதேசவாக்கியத்தைக் கொண்டு வந்த நபிமார்கள் அலைஹிமிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்கள் அனைவருமேயாம். அந்தக் கலிமாவானது ஹக்கும் கல்கும் ஏகமென்ற பொருளை வெளிதாக விளக்குகின்றது. இன்னும் நபிமார்களை அடுத்து அவர்களைப் பின்பற்றின சித்தசுத்தி பெற்ற பூரண ஞானிகளும் ஹக்கும் கல்கும் ஏகமென்பவர்களாம். ஹக்கும் கல்கும் ஏகமென்று அவர்கள் செப்புவதன் மேல் அவர்களுக்கு ஆதாரமான சுருதிப் பிரமாணங்கள் யாவையெனில்:—"லவ்கான பீஹிமா ஆலிஹத்துன் இல்லல்லாஹு லபஸததா" (வானம் பூமிகளாகிய அவ்விரண்டிலும் அல்லாஹ்

சுருதிப்பிரமாணம் – scriptural evidence
வேதவாக்கியம்

வின் வேருன இலாஹுகள் உண்டாயிருந்தால் அவ்விரண்டும் கேட்டை யடைந்திருக்கும்) என்று அல்லாஹு தஆலா அருளிய திருவாக்கியமும், (இன்னுமிந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் இதன் தொடர்பாக வரைந்துள்ள மற்ற நான்கு திருவாக்கியங்களும் அந்தப் பிரமாணங்களிற் சேர்ந்தவைகளாம்.)

## தமிழ் முதர்ஜிமின் ஓர் அறிவிப்பு.

இந்த அத்தியாயத்தில் இதற்குப் பிறகு ஜனுப் மவுலானு அவர்கள் மேற்குறித்த ஆயத்திற்கும் மேற்கூறிவந்த மற்ற நான்கு ஆயத்துகளுக்கும் தனித்தனி வியாக்கியான மெழுதப் புகுந்து அறபி பாஷைக்குரிய பஞ்சலக்ஷணங்களாகிய நஹ்வு, மன்திகு, மஆனி, பலாஹத்து, பலாகத்து இவைகளின் ஞாயபலத்தால் விரிவாகத் தர்க்கம் புரிந்து அந்த ஆயத்துகளில் கூறியுள்ள இலாஹுகளும் மற்ற சிருட்டிகளும் அல்லாவின் வேருன தனி முதல்களா யிருப்பன வல்ல வென்றும் அவை அல்லாஹ் தானு யிருக்கின்றன வென்றும் ஸ்தாபித்திருக்கிருர்கள்.

அன்றியும் பெரிய பெரிய முபஸ்ஸிருகளாயும் முஹத்திசுகளாயும் முத்தகல்லிமுகளாயும் முத்தபக்கிஹுகளாயு மிருந்த பாரவான்களாகிய உலமாக்கள் இந்த உண்மைக்குள் விரோதமாக வரைந்துள்ள சில வாக்கியங்களை யெடுத்துக் காட்டி அவை அசத்திய வாக்கியங்களெனத் தக்க ஞாயங்களால் தகர்த்திருக்கிருர்கள்.

இதுவுந்தவிர அல்லாவையன்றி ஒன்றுமே யில்லை. அல்லது உண்டாயிருப்பது ஒன்றுமே அல்லாஹ்வின் வேறல்ல என்னும் பொருளுக்குப் பொருத்தமான அறபி வாக்கியம் அடியிற்காட்டியுள்ள:—

லாஷைஅ கைருல்லாஹி — لاشيئ غير الله
அல்லது
லாமவ்ஜூத கைருல்லாஹி — لاموجود غير الله
அல்லது
லாஷைஅ இல்லல்லாஹு — لاشيئ الا الله
அல்லது
லாமவ்ஜூத இல்லல்லாஹு — لاموجود الا الله
அல்லது



லாஆபித இல்லல்லாஹு — لا عابد الا الله

என்ற இந்த வாக்கியங்க ளிருக்க இவைகளில் ஒன்றை உபதேச வாக்கியமாக எடுத்துக் கூருமல் "லாஇலாஹ இல்லல்லாஹு" என்கிற வாக்கியத்தையே அதற்குக் குறிப்பாக்குவானேன்? என்னும் வினு நிகழ்வதற்கு விரிவாக விடையும் தந்திருக்கிருர்கள்.

இன்னும் ஹதீசு குதுஸில் அல்லாஹு தஆலா அருளிய

كنت كنزا مخفيا

**குன்து கன்ஜன் மக்பிய்யன்** (நான் அவ்வியக்கப் புதையலா யிருந்தேன்) என்பது முதல் அந்த ஹதீசின் முடிவு வரையிலுமுள்ள வாக்கியங்களுக்கு விருத்தியுரையும், இன்னும் உஜூதினது மர்த்தபாக்களாக ஆரிபீன்கள் வகுத்திருக்கும் அஹதிய்யத்து, வஹ்தத்து, வாஹிதிய்யத்து, ஆலமுல் அர்வாஹ், ஆலமுல்மிதால் ஆலமுல் அஜ்ஸாம், ஆலமுல் இன்ஸான் என்கிற ஏழு மர்த்தபாக்களுக்கு விரிவான வியாக்கியானமும் எழுதி யிருக்கிருர்கள். இந்நூலுடன் அண்டித்திருக்கும் துஹ்பத்துல் முர்ஸலாவிலும் அந்த மர்த்தபாக்களின் விபரம் சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னும் துவித சித்தாந்திகளான சில உலாமாக்கள் சூபியாக்களின் தவ்ஹீதான அத்வைதத்தை மறுத்தெழுதிய சில கிதாபுகளில் ஷைகுல் ஆரிபீன் பாயஜீதுல் புஸ்தாமி குத்திஸ ஸிர்ருஹு முதலான மஹான்கள் கூறியுள்ள,

سبحاني ما اعظم شاني

**சுபுஹானீ மாஅஃலமஷானீ** (எனக்கே ஸ்தோத்திரம்! ஆ! என் காரியம் என்ன மகிமையுள்ளதா யிருக்கிறது!) என்பது போன்ற வாக்கியங்களை அந்த மஹான்கள் போதம் மாறிப் பரவசமேலிட்ட நிலைமையில் சொன்னவைகள் என்று தள்ளவேண்டுமென்றும் அவைகளை எதார்த்த மெனக் கொள்ளக்கூடா தென்றும் எழுதி யிருப்பதை எடுத்துக்காட்டி அதற்கு மறுப்பும் வரைந்திருக்கிருர்கள். இந்நூலின் இறுதியான அநுபந்தத்திலும் இதைக் குறித்துக் கொஞ்சம் வாதித்திருக்கிருர்கள்.

இன்னும் ஷைகுல் அக்பர் முஹியித்தீ னுப்னு அறபி குத்திஸ ஸிர்ருஹு அவர்கள் புத்தூஹாத்துல் மக்கிய்யாவில்

سبحان من اظهر الاشياء وهو عينها

**சுபுஹானமன் அல்ஹரல் அஷ்யாஅ வஹுவஐனுஹா**
(சகல வஸ்துக்களும் அவன் தானே அவையாயிருக்க அவ்வஸ்துக்களை வெளிப்படுத்தின ஆண்டவன் தூய்யவன்) என்று அந்த தெழுதி யிருப்பதின் மேல் தூஷணமாக ஷைகுலம்முனி றஹிமஹுல்லா அவர்கள் வரைந்துள்ள சில கடின வாக்கியங்களுக்குக் கண்டனம் காட்டியிருக்கிறார்கள்.

இன்னும் ஷைகு அஹ்மது முஜத்திது அல்பஸானி றஹிமஹுல்லா அவர்கள் சூபியாக்களான புகாராக்களைப் பொதுவாகவும் ஷைகுல் அக்பர் முஹ்யித்தீனுபுனு அறபி, ஷைகுல் அத்தாரிஷ் ஷூத்தாரி முஹம்மது கவுசுல் குவாலியாரி குத்திஸ ஸிர்ருஹுமா அவர்களைக் குறிப்பாகவும் தாக்கி, அவர்கள் ஷரீஅத்துக்கு விரோதம் செய்பவர்களெனக் கண்டு தூஷித்து எழுதியிருப்பதையும் எடுத்துக் காட்டி அதற்குப் பரிகாரமும் பகர்ந்திருக்கிறார்கள்.

இன்னும் இவைபோன்ற அநேக அரிய விஷயங்கள் இந்த அத்தியாயத்தின் இடையிடையே எழுதப்பட்டிருக்கின்றன. அறபி பாஷைக்குரிய பஞ்ச லக்ஷணங்களின் ஞாயவாதத்தால் விரிவாக எழுதியுள்ள வாசகத்தைத் தமிழுக்கிசையத் திருப்புவதென்றால் சேர்பட்டுவராது. ஒருவாறு திருப்பினும் அறபிய்யத்தான இல்மில் அனுபவமில்லாதவர்கள் அந்த உரையை வாசிக்கும்போது அவர்களுக்கு விஷயம் விளங்காமையால் மயக்க முண்டாவதுடன் ஊக்கமும் உற்சாகமும் குன்றி அதற்குப் பின்னுள்ள மற்ற விஷயங்களை வாசிக்க மனமில்லாமல் புத்தகத்தை வைத்துவிட நேரிடும். அந்த வுரையோ இந்நூலில் இன்னும் 150-பக்கங்களைத் தனக்கு இடமாக எடுத்துக்கொள்ளும்படி அவ்வளவு விரிவாக விரிந்து முடியும். ஆதலால் அந்த ஆயத்துகளின் வியாக்கியானங்களையும் மேலே கூறிவந்த விஷயங்களையும் விபரமாக அறிய விரும்புகிறவர்கள் இதன் மூலபிரதியாகிய **கலிமத்துல் ஹக்கி** என்னும் கிதாபை அத்வைதிகளாயிருக்கிற ஆலிம்களிடத்தில் காண்பித்து அவர்கள் மூலமாகத் தெரிந்து கொள்ளக் கூடுமென்று இந்த அத்தியாயத்தில் மேலே சொல்லிவந்தது போக மற்றவை உரை செய்யப் படவில்லை. இனி மூன்றாவது அத்தியாயம் ஆரம்பிக்கப்படும்.

---



# மூன்றாவது அத்தியாயம்.

## துவித சித்தாந்திகளுக்கு வஹ்மு என்னும் பேதபுத்தியால் சனித்த சந்தேக விபரீதங்களைச் சங்கரித்தல்

அறிந்துகொள்:— லாஇலாஹ இல்லல்லாஹு என்ற கலிமாவில் தஃவீல் என்னும் வலிந்துரை கோடலால் இலாஹு என்பதை முஸ்தஹக்க வில்இபாதா என்ற பொருளில் அதாவது வணக்கத்துக்குப் பாத்திரமானவன் என்ற அர்த்தத்தில் மாற்ற உலமாக்களின் புத்தி சென்றதற்குக் காரணம் இன்ன தென்பதை நாம் முதலில் கூறுவோம். அதற்குப் பல காரணங்கள் உண்டு.

முதலாவது காரணம்:—லாஇலாஹ இல்லல்லாஹுவில் லா என்னும் எதிர்மறைச் சொல்லைச் சார்ந்து நிற்கிற இலாஹு என்னும் எழுவாய்ப் பெயர்க்கு மவ்ஜூதுன் என்னும் ஒரு பெயரைத் தொக்கிய பயனிலையாக அமைத்து அதன் பிறகு இலாஹுவை முஸ்தஹக்க வில்இபாதா என்று மாற்றாமல் போனால் அந்தக் கலிமா பொய் யென்றாகிறது. மவ்ஜூதுன் என்ற தொக்கிய பயனிலை ஒன்றை அமைக்காமல் போனால் நபிமார்கள் அலைஹி மிஸ்ஸலாமவர்கள் உபதேச வாக்கியமாகக் கொண்டு வந்த முதல் வாக்கியமே புத்திக்குப் பிரத்தியக்ஷ விரோத மென்றாகிறது.

இதன் விபரமாவது:—அல்கலிமத்துத் தைய்யிபாவின் புணர்ப்பில் (அல்ல, இல்லை என்ற அர்த்தங் கொண்ட) லா என்னும் சொல்லைச் சார்ந்த இலாஹு என்னும் பெயர்க்கு (உண்டாயிருப்பது என்று அர்த்தங் கொண்ட) மவ்ஜூதுன் என்னும் ஒரு பயனிலை தொக்கி யிருப்பதாக அமைத்துக் கொண்டால் அப்போது அந்தக் கலிமாவுக்குப் பொருள், “அல்லாஹு தஆலாவே தவிர வேறு யாதொரு இலாஹும் உண்டாயிருப்பதில்லை” என்றாகிறது. ஆகவே இப்படிச் சொல்லுகிற வாக்கியம் சுத்தப் பொய்யாய்ப் போகிறது. ஏனெனில் முஷ்ரிகுகள் வணங்கி வந்த லாத்து உஸ்ஸா போன்ற அநேகம் இலாஹுகள் அப்போது பிரத்தியக்ஷத்தில் உண்டாயிருந்ததினாலென்க. பின்னர் மவ்ஜூதுன் என்னும் சொல்லைத் தொக்கிய பயனிலையாக்குவதில் அந்த வாக்கியம் பொய்யாகிற தென்ற தோஷத்தை நிவர்த்திப்பதற்காக

இலாஹு என்னும் எழுவாய்ப் பெயரை முஸ்தஹக்குல் இபாதா (வணக்கத்துக்குப் பாத்திரமானவன்) என்ற பொருளில் மாற்றினார்கள். மவுஜூதுன் என்னும் பயனிலையை அமைக்காமல் (லாஇலாஹ இல்லல்லாஹு) என்று உள்ளபடியே விட்டு விட்டால் அதன் அர்த்தம் "அல்லாவின் வேறான யாதொரு இலாஹும் இல்லை." (ஒவ்வொரு இலாஹும் அல்லாஹ்தான்.) என்றாகிறது. இந்த அர்த்தம் புத்திக்குப் பிரத்தியக்ஷ விரோதமாயிருக்கிறது. இதனாலேயே கலிமாவுக்குத் தஃவீல் என்னும் வலிந்துரை கோடலின்றி காரியம் பலியாது என்று அவர்கள் எண்ணினார்கள்.

இரண்டாவது காரணம் அல்கலிமத்துத் தைய்யிபாவின் சார்புகளான தலீலுகளில் ஒன்றாகிய **லவ்கான ஹாவுலாயி ஆலிஹத்தன் மாவரதூஹா** (அந்த விக்கிரகங்கள் வணங்கப்படுகிற இலாஹுகளாயிருந்தால் அவை நரகத்துக்கு வரா.) என்ற தலீலில் ஆலிஹத்தன் என்பது கைரல்லாஹி என்ற விசேடக்குறிப்பின்றி பொதுப்படையாக வந்திருப்பதாம். இதுவும் அல்கலிமத்துத் தைய்யிபாவில் இலாஹுவை முஸ்தஹக்கு என்று மாற்றுவதற்கு ஒரு காரணமாம். ஏனெனில் அப்படி மாற்றாவிட்டால் மேற்கண்ட தலீல் பொய் யென்பது வந்து பூணுகிறது. அதெப்படி யெனில்.

மன்திகுடைய காரிதாப்படி ஒரு வாக்கியத்தின் சம்பந்தியாய், அதைத் தொடர்ந்து வரும் பின்வாக்கியப் பொருள் இல்லை யென்றாகுவது முன்வாக்கியப் பொருளை முரண்பட மாற்றும். ஆகவே மேற் கூறிய தலீலின் பின்வாக்கியப் பொருள் இல்லை யென்றாகுவதால் அதாவது விக்கிரகங்கள் நரகத்துக்கு வரா வென்பதில்லை. அவை நரகத்துக்கு வந்தே தீரு மென்றாவதால் முன் வாக்கியப் பொருள் முரணாக மாறுகின்றது. அதாவது விக்கிரகங்கள் வணங்கப்படுகிற இலாஹுகள் அல்ல வென்றாகிறது. அப்படியானால் அல்லாஹு த-ஆலாவுடைய மற்றொரு வாக்கியத்திற்கு இது முரண்படுகிறது. அதென்ன வெனில் "முஷ்ரிகுகள் அல்லாஹ்வை விட்டு அவர்களுக்கு நஷ்டத்தையும் கொடாத இன்னும் இலாபத்தையும் தாராதவைகளை வணங்குகிறார்க ளென்பதாம்" இன்னு மிதே போல் எந்தெந்த தலீலுகளால் இலாஹுகள் வணங்கப்படுகிற தெய்வங்கள் தாம் என்று ஏற்படுகிறதோ அந்த தலீலுகளையும் இதன் மேல் ஊகித்துக் கொள்.



அல்கலிமத்துத் தைய்யிபாவில் இலாஹுவை முஸ்தஹக்குல் இபாதா என்று மாற்றாமலிருப்பதே தலீலுகள் பொய்யாவதற்குக் காரணம் என்று அந்த உலமாக்கள் எண்ணினார்கள். ஏனெனில் தலீலு என்னும் பிரமாணமும் மதுலூலு என்னும் பிரமேயமும் ஒன்றோடொன்று பொருந்தி ஒன்றிருக்க வேண்டியது அவசியமாதலினாலென்க. லவ்கானஹுமா உலாயி ஆலிஹத்தன் என்ற தலீலில் இலாஹு என்பது கைரல்லாஹி என்ற விசேடணத்தால் குறிக்கப் படாமல் பொதுப் பெயராய் வந்திருக்கிறது. ஆகவே அதன் மதுலூலாகிய **லாஇலாஹ இல்லல்லாஹு**விலும், இலாஹுவை அந்த தலீலுக்குப் பொருந்தியிருக்கும்படி பொதுப் பெயராக எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி அதை பொதுப் பெயராக்குவது தலீலுகள் பொய் யென்ற தோஷமுண்டாகக் காரணமாகின்றது. ஆதலால் அவர்கள் கொள்கைப்படி அல்கலிமத்துத் தைய்யிபாவில் இலாஹுவை முஸ்தஹக்குல் இபாதா என்று மாற்றுவது விதியாயிற்று. இந்த மாற்றலால் உண்டான பயன் என்ன வென்றால், தலீலுகளாகிய ஆயத்துகளிலும் அவைகளின் மதுலூலாகிய லாஇலாஹ இல்லல்லாஹு விலும் வருகிற இலாஹு என்ற சொல்லுக்குப் பொருள், வணங்கப்படுகிற யாதொரு இலாஹும் இல்லை யென்றாகாமல் "வணக்கத்துக்குப் பாத்திரமான யாதொரு இலாஹும் இல்லை" யென்று முடிவதால் தலீல் பொய்யாமென்ற தோஷம் நிவாரணமாய் விடுமென்பதே.

மூன்றாவது காரணம்:—லவ்கான பீஹிமா ஆலிஹத்துன் இல்லல்லாஹு லபஸத்தா (வானமும் பூமியுமாகிய) "அவ்விரண்டிலும் அல்லாஹ்வின் வேறான இலாஹுகள் உண்டாயிருந்தால் அவ்விரண்டும் கேட்டை யடைந்திருக்கும்" என்று அல்லாஹு த-ஆலா அருளின திருவாக்கியமாம். இதுவும் இலாஹுவை முஸ்தஹக்க லில் இபாதத்தி என்று மாற்றிக் கொள்ளும்படி ஆக்ஞாபிக்கின்றது. ஏனெனில் ஒருவரை யொருவர் தடுத்தலென்னும் தடையிருலன்றி மற்றப்படி அவை கேட்டை யடைவது ரூபகாரப் படாது. சிருட்டிப் பொருள்களாகிய இலாஹுகள் அல்லாஹு த-ஆலாவைத் தடுக்கு மென்பது பொருந்தாது. ஆதலால் இந்த ஆயத்தில் இலாஹு என்பதற்கு முஸ்தஹக்குன் லில்இபாதத்தி என்ற பொருளைக் கருதியிராவிட்டால் ஆயத்து பொய்யென்றாகும். அதாவது அவ்விரண்டிலும் வணக்கத்துக்குப் பாத்திரமான

இலாஹுகள் உண்டாயிருந்தால் என்று பொருள் கொள்ளாமல் வணங்கப்படுகிற இலாஹுகளிருந்தால் என்று பொருள் கொண்டால் அவ்வகையான இலாஹுகள் அவ்விரண்டிலும் அறவே இல்லை யென்று அர்த்தமாகின்றது. இது பிரத்தியக்ஷ விரோதமாதலால் ஆயத்து பொய்யாமென்ற தோஷமணுகாதபடி வலிந்துரை கொள்ள வேண்டியதாயிற்று.

நாலாவது காரணம்:— **லவ்கான மஅஹு ஆலிஹத்துன் கமா யகூலூன இதன் லப்தகவ் இலாதில் அர்ஷி சபீலா** (அவர்கள் சொல்வதுபோல் அல்லாஹு தஆலாவுடன் வேறு இலாஹுகள் இருக்குமாயின் அப்போது அவை அருஷையுடைய அந்த ஆண்டவனிடம் போவதற்கு ஒரு வழியைத் தேடுவார்கள்.) என்று அருளின திருவாக்கியமாம். ஏனெனில் அருஷையுடைய ஆண்டவனிடம் போக வழிதேடல் உணர்வியுள்ள ஜீவவர்க்கத்தினாலேயே சாத்தியப்படாமலிருக்கும்போது அநேகமாகக் கல்லும் செம்பும் போன்ற தாதுவர்க்கங்களாகிய இலாஹுகள் அங்ஙனம் வழி தேடுமென்பது எங்ஙனம் பொருந்தும். ஆகவே இந்த தலீலும் பொய்யென்றாகிறது. இந்த தோஷம் அணுகாவண்ணம் இதில் வணக்கத்துக்குப் பாத்திரமான இலாஹுகள் இருந்தால் என்று வலிந்துரை கொள்ள வேண்டுவதவசியமாயிற்று.

ஐந்தாவது காரணம்:—"மாகான மஅஹுமின் இலாஹின் இதன் லதஹப குல்லு இலாஹின் பிமா கலக" (அவனுடன் யாதொரு இலாஹும் இருந்ததில்லை. அப்படியிருந்தால் ஒவ்வொரு இலாஹும் தாங்கள் சிருட்டித்த சிருட்டியைக்கொண்டு போயிருப்பார்கள்) என்று அல்லாஹு தஆலா அருளின திருவாக்கியமாம். ஏனெனில் ஒவ்வொரு இலாஹும் தன் சிருட்டியைக் கொண்டு போதலென்பது அதன் சிருட்டித் தொழிலில் உபதொழிலாயிருக்கிறது. அதாவது சிருட்டித்தல் ஒரு தொழிலும் அதைக் கொண்டு போதல் மற்றொரு தொழிலுமாம். உணர்வியுள்ள உயிரினங்களாலேயே சிருட்டித் தொழிலில் வெளியாகாமலிருக்கும் போது மேற் கொண்டு அந்த இலாஹுகளில் அநேகம் கல்லுஞ் செம்புமான தாதுப் பொருள்களாயிருப்பவை சிருட்டித் தொழிலில் புரிந்தன வென்றால் இதெங்ஙன மேற்கப்படும்? ஆகவே இந்த தலீலும் பொய் யென்றாகிறது.



மொத்தத்தில் இலாஹு என்கிற சொல்லில் வணக்கத்திற்குப் பாத்திரமான இலாஹு என்று பொருள் அமைக்கா விட்டால் மேற் சொன்ன நான்கு தலீலுகளிலும் அவற்றின் மதுலூலாகிய அல் கலிமத்துத் தைய்யிபாவிலும் அல்லாஹு தஆலாவுடைய வேத வாக்கியம் பொய்யென்பது வந்து பூணுமாம்.

இனி மேலே கூறிவந்த ஐந்து விஷயங்களுக்கும் விடையளிக்கப் புகுந்த ஜனாப் மவுலானா அவர்கள் பிந்திய நான்கு விஷயங்களின் விடைகளை முதலில் நீ விளங்கிக் கொண்டால் முதல் விஷயத்தின் விடையை நீ நன்குணரக்கூடு மென்று அதை பின் நிறுத்தி முந்தி இரண்டாம் விஷயத்துக்கு விடை யளிக்கிறார்கள். அது வருமாறு:—

"லவ்கான ஹாஉலாயி ஆலிஹத்தன்" என்ற தலீலில் இலாஹுவை **கைருல்லாஹி** என்ற விசேடணத்தால் குறிப்பிடாமல் மொத்தமாகக் கொண்டு வந்ததில் சேர்ந்த விபரீத எண்ணம் நீங்குவதற்கு விடை யாதெனில், "லவ்கான பீஹிமா ஆலிஹத்துன் இல்லல்லாஹு" என்பதில் கொண்டுவந்தது போல் எந்தெந்த தலீலுகளில் கைருல்லாஹி என்ற அர்த்தங் கொண்ட (இல்லல்லாஹு) என்னும் விசேடணத்தால் இலாஹுவைக் குறிப்பிடப்பட்டதோ அந்த இலாஹுவுடன் குறிப்பிடப்படாத பொதுவான இலாஹுவையும் பொருத்திப் பொருள் கொள்ளவேண்டும். அதாவது அல்லாஹ் வல்லாத இலாஹு என்று கைதிடப்பட்டு வந்திருக்கிற இலாஹுவின் பொருளுக் கிணங்க அவ்விதம் கைதிடப்படாமல் மொத்தமாக வந்திருக்கிற இலாஹ்வுக்கும் அல்லாஹ் வல்லாத இலாஹு என்று பொருள் கொள்ள வேண்டு மென்பதாம். அப்படிக் கொள்வதில் ஆயத்து பொய்யா மென்பது பூணாது.

மூன்றாவது விஷயத்துக்கு விடையாவது:—வானம் பூமிகளின் கேட்டுக்கு அவற்றிலிருக்கிற இலாஹுகள் அல்லாவுக்கு வேறாயிருப்பதே காரணமல்லாது ஒன்றை யொன்று தடுத்தலென்னும் தடை அதற்குக் காரணமல்ல வென்று கொள்வதினால் ஆயத்து பொய்யா மென்பது பூணாது.

நாலாவது விஷயத்துக்கு விடையாவது சிருட்டிகர்த்தாவை சிருட்டியின் வேறாகக் கொள்வதின் பேரில் அந்த சிருட்டிகர்த்தா மும்கினாகிய இலாஹுகளில் ஒரு இலாஹா யிருக்க வேண்டுவத

வசிய மென்றானபின் அவனுக்குள்ள (உம்மஹாத்துஸ் ஸிபாத்தி) ஜீவியம், அறிவு, நாட்டம், வலிமை, பார்வை, கேள்வி, வசனம், என்னும் ஸிபத்துகள் போல் சிருட்டிகளுக்கும் அதினும் தாது வர்க்கத்துக்கும் அந்த ஸிபத்துகள் உண்டென்று தரிபட்டதினால் அவை அருஷையுடையவன் பக்கம் போவதற்கு ஒரு வழியைத் தேடலென்பது பூனும். ஆதலால் அந்த ஆயத்து பொய்யென்பது பூணுது. (இதின் விபரமாவது அல்லாஹு தஆலாவினது உஜூது தம் ஸிபத்துகளுமே யன்றி இலாஹுகளுக்குத் தனித்தனி சுயம் பான வுஜூதும் ஸிபத்துகளுமிருந்தால் அப்போது அந்த இலாஹுகள் அவனுடன் எதிர்த்துப்போர் செய்யப் போவதற்கு வழியைத் தேடக் கூடுமென்பதாம்.)

ஐந்தாவது விஷயத்துக்கு விடையாவது சிருட்டியில் நின்றும் ஒரு இலாஹாகிய ஈசா அலைஹிஸ்ஸலாமவர்களால் சிருட்டித் தொழில் வெளிப்பட்டிருப்பது திண்ணம் அதெவ்வாறெனின்

اني اخلق لكم من الطين كهيئة الطير فانفخ فيه فيكون طيرا باذن الله

“நான் உங்களுக்கு மண்ணில் நின்றும் பறவையின் கோலத்தில் ஒன்றைச் சிருட்டிப்பேன். பின்பு அதில் ஊதுவேன். அது அல்லாவுடைய உத்திரவினால் ஒரு பறவையாய்ப்போம்” என்று ஈஸா அலைஹிஸ்ஸலாம் சொன்னதாக குர்ஆன் கூறுகின்றது. இன்னும் மரித்தோரை உயிர்ப்பித்த தொழிலும் அவர்களால் வெளிப்பட்ட தென்பது தெரிந்தவிஷயம். இன்னும் ஒருவனை மரிக்கச் செய்தலும் பிறகு அவனை உயிர்ப்பித் தெழுப்பலுமாகிய இத்தொழில் பிற்காலத்தில் தஜ்ஜால் அலைஹில்லஃனுவால் வெளியாகுமென்று ஸஹீஹ் புகாரியில் வந்திருக்கிறது. தஜ்ஜாலும் சிருட்டிகளினின்றும் ஒரு இலாஹா யிருக்கிறான். இதனால் சிருட்டியாகிய இலாஹுவைக் கொண்டு சிருட்டி யுண்டாவதும் அதைக் கொண்டு போவதும் கூடு மென்று தரிபட்டது.

ஆகவே ஒவ்வொரு இலாஹும் தனது சிருட்டியைக் கொண்டு போவார் என்று அல்லாஹு தஆலா அருளினது நஸாராக்களின் பேரிலும் தஜ்ஜாலுடைய கவுமுகளின் பேரிலுமாம். மற்றவர் பேரில் அல்ல. ஏனெனில், தங்கள் சிருட்டித் தேவர்களால் சிருட்டித் தொழில் வெளியானதாக எண்ணுவதில்லையாதலினு லென்க.



(ஆனால் நம் இந்திய விக்கிரக ஆராதனைக் காரர் சிருட்டி, திதி சங்காரம் என்னும் முத்தொழிலுக்கும் முறையே பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்னும் மூன்று தேவர்கள் உண்டென்றும் அவர்கள் அல்லாவின் வேறான தனிமுதல்க ளென்றும், சிலர் கொள்வதால் அல்லாஹு தஆலா அவர்களையும் நாடியிருக்கலாம். த. மு.)

மேலே கூறிவந்த நான்கு தலீலுகளிலும் ஜனித்த விபரீதமான சந்தேகங்கள் எப்போது நிவர்த்தியாயினவோ அப்போது லாஇலாஹ இல்லல்லாஹுவில் இலாஹுவுக்கு மவுஜூதுன் என்ற பயனிலை அமைக்காமலும் இலாஹுவை முஸ்தஹக்குல் இபாதா என்று மாற்றாமலும் போனால் அந்தக் கலிமா பொய்யாகுமென்ற விபரீத புத்தியும் நீங்கிவிட்டது. இனி அல்லாவுக்கு கல்கு வேறல்ல. அல்லாதான் என்ற அர்த்தம் புத்திக்குப் பிரத்தியக்ஷ விரோத மென்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம். என்றாலும் அது பேத புத்திக்குப் பிரத்தியக்ஷ விரோதமே யல்லாது தெளிந்த புத்திக்கல்ல. தெளிந்த புத்திக்கு அது விரோதமா யிருந்தால் நபிமார்கள் அலைஹிஸ்ஸலா மவர்கள் அக்கலிமாவைக் கொண்டு வரமாட்டார்கள். உண்மைக்கு நேராயும் வஹ்முக்கு மாறாயுமிருந்த பொருளையே அவர்கள் தங்கள் உம்மத்துகளிடம் செலுத்தினார்கள். அது வஹ்முக்கு நேரயிருந்தால் நபிமார்கள் அலைஹிமிஸ்ஸலா மவர்களை அனுப்பினதில் அல்லாஹு தஆலாவுடைய ஹிக்மத் தென்னும் ஆழிய நோக்கம் பயனற்ற தென்று முடியும்.

ஏனெனில், அன்பியா அலைஹிமிஸ்ஸலா மவர்களை அனுப்பின தெல்லாம் மனிதர்களுக்குச் சன்மார்க்கத்தைப் போதிக்கவும் அதை ஒப்புக் கொள்ளாதவர்களுக்கு ஆக்கினை வருமென்று அச்சமூட்டவுமேயாம். எது வொன்று வஹ்முக்கு ஒத்திருக்கிறதோ அதை மறுப்பவர் எவருமில்லை. ஆதலால், அதற்காக ரஸூல்மார்களை அனுப்பத் தேவை யில்லை. ஆனால், மார்க்க சம்பந்தமான அநேகம் விதிவிலக்குகள் வஹ்முக்கு விரோதமானவைகளாயிருக்கின்றபடியாலும் அவ்விதி விலக்குகளைத் தழுவவும் தள்ளவும் கடமைப்பட்ட மனிதர்கள் வஹ்மு என்னும் மயக்க புத்திக்கு வசப்பட்டு அதனால் ஒடுக்கப் பட்டவர்களா யிருப்பதாலும் நபிமார்கள் அலைஹிஸ்ஸலா மவர்கள் முஃஜிஸாக்களுடன் அனுப்பப்

பட்டார்கள். முஃஜிஸாவும் வஹ்முக்கு எட்டாத ஓர் அற்புதமா யிருந்தபடியால் அந்த திருஷ்டாந்தத்தால் மனிதர்கள் தங்கள் புத்திக்கு எட்டாத மார்க்க விதிகளை இருதயத்தில் ஏற்று அவை களை உண்மை யென்று உறுதி கொண்டார்கள். அதாவது நபி மார்கள் அலைஹிஸ்ஸலா மவர்களால் வஹ்முக்கும் வழக்கத்துக்கும் மாறாக அற்புதங்களைக் கண்டபோது அந்த மனிதர்கள் நமது புத்திக்கும் வழக்கத்திற்கும் மாறானவைக ளென்று நாம் நினைக் கிற இந்த மார்க்க விதிகளும் இந்த அற்புதம் போலவே சத்திய மானவைகளா யிருக்கின்றன வென்றும் ஆனால், நம்முடைய புத்தியானது பூர்த்தி குறைவினால் அவைகளின் உண்மை யைத் தெரிந்து கொள்ளாமலிருக்கிற தென்றும் அவர்கள் எண்ணிக் கொண்டார்கள் என்பதாம்.

மொத்தத்தில் மேலே சொல்லி வந்த விபரீத எண்ணங்களுக் கெல்லாம் காரணம் **லாஇலாஹ இல்லல்லாஹு** விலும் அதன் சார்பான தலீலுகளிலும் அல்லாஹு தஆலா நாடிய பொருள் என்ன வென்பதை துவிதசித்தாந்திகள் விசாரித்துத் தெளியாத குற்றமேயாம். இல்லாவிட்டால் அவர்கள் லாஇலாஹ இல்லல் லாஹுவில் இலாஹுவுக்கு முஸ்தஸ்னாக்குல் இபாதா என்று வலித் துரை கொள்ளவும் மவுஜூதுன் என்ற ஒரு பயனில்லை அமைக் கவும் அவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருந்த தில்லை.

மேலே விவரித்து வந்த நியாயங்களால் விபரீத எண்ணங்க ளான அபார சந்தேகங்கள் அகன்றன. இனி சில அற்ப சந்தேகங் களை அகற்றவேண்டும். அதென்ன வெனில்:—ஹக்குக்கு கல்கு வேறு என்ற நேர்சத்தத்தில் வாசகநடை நடத்தப்படாத சில ஆயத்துகளில் ஹக்குக்கு கல்கு வேறு என்ற பொருள் விளங்குவ தாக வஹ்முக்குத் தோற்றுகிற சந்தேகமாம். அந்த சந்தேகமும் நீங்கும்படி அல்லாஹு தஆலாவி னருளால் அவற்றை விளக்கிக் காட்டுவோம்.

**தப்ஸிறதுன்:**—இதானது துவிதபாவனை என்னும் ரோக முள்ள கண்களினின்றும் அந்த ரோகத்தை நிவர்த்திக்கும் பொருட்டு அக்கண்களுக்கு ஸுர்மா இட்ட லென்பதாம்.

அறிந்துகொள்:—கலிமத்துத் தவ்ஹீதாகிய லாஇலாஹ இல்லல்லாஹுவும் இன்னும் இதே போல் லாஇலாஹ வைருகவும்



அதன் சார்புகளான தலீலுகளும் ஆகிய இந்த வாக்கியங்கள் குர் ஆனில் நின்றும் ஹதீஸில் நின்றும் அத்வைதத்துக்கு மூலாதார வாக்கியங்களா யிருக்கின்றன வென்பதை நிடமாக நீ அறிந்து கொண்டாய். இதுவுமன்றி கலிமத்துத் தவ்ஹீதின் பொருளுக்குப் பொருந்தும்படி அதன் தலீலுகளு மிருக்கவேண்டு மென்பதும் கருதிய பொருளின் நேர்சத்தத்தால் வாசகநடையை நடத்த வேண்டு மென்பதும் ஆகிய இவைகளையும் முந்திய அத்தியாயங் களில் அதற்கு மேல் அதிகமாகச் சொல்லமுடியாத அவ்வளவு விரிவாக விரித்துரைத்ததால் நீ தெரிந்து கொண்டிருக்கிறாய்.

பின்னர் அறிந்துகொள், குர்-ஆனில் நின்றும் ஹதீஸில் நின் றும் ஒவ்வொன்றும் கலிமத்துத் தவ்ஹீதாகிய லாஇலாஹ இல்லல் லாஹுவில் கருதிய பொருளின் தாத்தைத் தருவதில் அகத்தியம் அதற்கு விரோதப்படாமல் ஒத்திருப்பது முக்கியத்திலும் மிகமுக் கியமாம். அல்கலிமத்துத் தைய்யிபாவின் சார்புப் பிரமாணங்க ளான எந்தெந்த ஆயத்து ஹதீஸுகள் அதற்கு விரோதமா யிருப்ப தாக வஹ்முக்குத் தோற்றுகிறதோ அந்த ஆயத்துகளும் ஹதீசு களும் பூரணபுத்தியைக் கொண்டு நேரான தஃவீல் என்னும் வலித்துரை கோடலால் அவற்றின் மூலத்துடன் பொருந்தும்படி திருப்பப்பட்டவைகளா யிருக்கின்றன.

குர்-ஆனில் அல்லாஹுக்கு இலாஹு வேறு என்று அறிவிக் கின்ற ஆயத்துகளில் ஒன்று:—

افغير الله تأمروني اعبد ايها الجاهلون

"அல்லாஹுக்கு வேறாயிருப்பதையா என்னை வணங்கச் சொல்லுகிறீர்கள்? ஓ மூடர்களே!" என்பதாம். இந்த வாக்கியம் அல்கலிமத்துத் தைய்யிபாவின் பொருளுக்குப் பொருந்தும்படி தஃவீல் செய்யப்பட வேண்டும். அதெப்படி யென்றால் "உங்கள் கொள்கையில்" அல்லாஹ்வுக்கு வேறா யிருப்பதையா என்னை வணங்கச் சொல்லுகிறீர்கள்? என்பது போலவாம். இதில் உங்கள் கொள்கையில் என்பது வருவிக்கப்பட்டது.

இதேபோல் افغير الله ابغي ربا

"அல்லாஹுக்கு வேறாயிருப்பதையா எனக்கு இறைவனைத் தேடிக்கொள்வேன்?" என்ற ஆயத்தையும். افغير الله اتخذ وليا

“அல்லாவுக்கு வேறாயிருப்பதையா எனக்கு தோஸ்தாகப் பிடித்துக் கொள்வேன்?” என்ற ஆயத்தையும், அல்கலிமத்துத் தைய்யிபாவின் பொருளுக்குப் பொருந்தும்படி பொருள் படுத்த வேண்டும். அதாவது நீங்கள் அல்லாவுக்கு வேறாக நினைக்கிற விக்கிரகங்களையா நான் என் இறைவனாகவும் நேசனாகவும் தேடி எடுத்துக் கொள்வேன்? என்று வலிந்துரை கொள்ளவேண்டும். இன்னும் இதுபோலவே குர்ஆன் முழுவதிலும் வந்திருக்கிற மின்தூனி மின்தூனில்லாஹி, மின்தூனிஹி என்ற * சொற்களையும் கலிமா தைய்யிபாவின் பொருளுக் கிணங்க பொருத்திக்கொள். இல்லாவிட்டால் அதாவது இதுகளில் வலிந்துரை கொள்வது அல்லாஹு தஆலாவுடைய நோக்கமா யிராவிட்டால் இந்த வேறு என்னும் வெளிப்படையான பொருளும் தவ்ஹீது கலிமாவின் பொருளும் ஒன்றுக் கொன்று முரணுகின்றது. இது முன்தரிபட்ட பொருளுக்கு விரோதமாகும், அதாவது கலிமத்துத் தவ்ஹீதானது ஹக்குக்கு கல்கு வேறல்ல ஹக்குதான் என்ற பொருளைத் தருகின்றதென முன் அத்தியாயங்களில் பேசிவந்த தர்க்கத்தால் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது என்பதே.

குர்ஆனில் இன்னும் மேலே கூறிவந்த அந்த ஆயத்துகளால் தான் வேறு என்பது வஹ்முக்கு வெளிப்படையாக விளங்குகின்றது. ஆனல் அவைகளில் எந்த ஆயத்துடைய வாசக நடையும் ஹக்கையும் கல்கையும் வேறு பிரிப்பதின் பேரில் நடத்தப்பட்ட நடையா யில்லை. அப்படி யில்லாததால் அது வேறு பிரிப்பதின் மேல் எப்படி தலீலாகும், வேறு பிரித்தலின் பேரில் தலீலாவதற்கு வாசக நடை உதாரணமாக அடியில் கண்டபடி யிருக்கவேண்டும்.

அல்ஆலிஹத்து கைருல்லாஹி — الالهة غير الله
அல்லது
அஸ்ஸமாஉலைஸ பில்லாஹி — السماء ليس بالله
அல்லது
அல்ஆலமு கைருல்லாஹி — العالم غير الله
அல்லது
கைருக லைஸ பிஇலாஹின். — غيرك ليس باله

* இந்த சொற்களுக்கு முறையே என்னின் வேறு, அல்லாவின் வேறு, அவனின் வேறு என்பது அர்த்தம்.



என்று இப்படி வேறு என்ற பொருளை நேர் அர்த்தத்தில் விளக்குவதாயிருக்க வேண்டும். இந்த வாக்கியங்களின் பொருள் முறையே “இந்த இலாஹுகள் அல்லாவின் வேறானவைகள்” “இந்த வானம் அல்லாஹ் அல்ல.” “சர்வ லோகமும் அல்லாஹ்வின் வேறானவை” “உன்னின் வேறானது அல்லது “நீ அல்லாதது இலாஹு அல்ல” என்பதாம். இவ்வகையான வாக்கியம் குர்ஆனிலும் ஹதீஸிலும் அறவே வந்திருப்பதில்லை. வந்திருப்பதாக வாதிப்பவர் அதை எடுத்துக் காட்டக் கடமைப் பட்டவராவார்கள்.

இனி, الله خالق كل شيء

“அல்லாஹ்வானவன் எல்லாப் பொருட்களையும் சிருட்டிப்பவன்” என்று அவன் அருளின திருவாக்கியத்தால் விளங்கப்படுகிற வேற்றுமையானது கட்டுவோனும் கட்டிடமும் (அல்லது குயவனும் குடமும்) வெவ்வேறு என்ற யுக்திப்படி ஒவ்வொரு சிருட்டிப் பொருளும் வுஜூதில் தன்சிருட்டிக்கர்த்தாவுக்கு வேறானது என்று விளக்கமாகின்றது. பின் வரும் நியாயங்களால் இந்த விளக்கம் பிசகென்றொழிக்கப்படும்.

முதலாவது மேற்சொன்ன கட்டுவோனும் கட்டிடமும் என்ற யுக்தியானது எப்படி அல்லாஹு தஆலாவுடைய வுஜூதுக்கும் அவனுடைய சிருட்டிகளின் வுஜூதுக்கும் நடுவே வேறு பிரித்தலைத் தேடுகிறதோ அப்படியே அவ்விரண்டுக்கும் நடுவே **நௌகு** என்னும் ஜாதியில் ஒத்திருத்தலைத் தேடுகிறது. அதெப்படி யெனில், உபமானத்தில் கட்டுவோனும் கட்டிடமும் வுஜூதில் வேறு பிரிந்தும் நௌகு என்னும் ஜாதியில் அதாவது சடம் அல்லது கண்டம் என்கிற வகையில் ஒன்றை யொன்று ஒத்துமிருக்கிறது. உபமேயத்தில் சிருட்டி கர்த்தாவும் சிருட்டியும் ஒத்திருக்க வில்லை. இதற்கு நீங்கள் அவனை யொத்த பொருள் ஒன்றும் இல்லை யென்று **லைஸகமிஸ்லிஹிஷைஉன்** என்கிற தலீலைக் காட்டினல் நாமும் அவனுக்கு வேறாக யாதொன்று மில்லை யென்று **லாஇலாஹ இல்லல்லாஹு** வையும் அதன் சார்பான வாக்கியங்களையும் ஆதாரமா யெடுத்துக் காட்டுவோம்.

இதன் விபரமாவது சிருட்டி கர்த்தாவும் சிருட்டியும் வெவ்வேறு என்பதற்கு கட்டுவோனையும் கட்டிடத்தையும் உபமானமாக்குவது பொருந்தா உபமானமாம். ஏனெனில் கட்டுவோனும் கட்டிட

மும் வெவ்வேறாகப் பிரிந்திருப்பதுபோல் இரண்டும் கண்டப் பொருள் என்பதில் ஒன்றை யொன்று ஒத்துமிருக்கிறது. இது போல் உபமேயமான சிருட்டி கர்த்தாவும் சிருட்டியும் வுஜூதில் வேறு பிரிந்தும் கண்டப்படுவதில் ஒத்துமிருக்கக் காணும் **லைஸகமிஸ்லிஹி ஷைஉன்** என்ற தலீலின்படி அவனை ஒப்பிடுவதற்கு உண்மையில் ஒரு பொருளுமே யில்லை. பின்னர் குர்ஆனுடைய தலீலைக் கொண்டு இல்லையென்று ஏற்பட்ட இலதான ஓர் யுக்திப்பிரமாணத்தால் அல்லாவுக்கு கல்கு வேறு என்பதை எப்படி ஸ்தாபிக்க முடியும்? வேறு என்பதோ **லாஇலாஹ இல்லல்லாஹு** என்னும் பிரபல சுருதிப்பிரமாணத்தால் இல்லையென மறுக்கப்பட்டிருக்கிறது.

அன்றியும் ஒரு விஷயத்தில் யுக்தியை ஊடாடுவதற்கு அந்த விஷயத்தைப் பற்றி சுருதிப் பிரமாணமாகிய தலீல் ஏதும் வராமலிருக்க வேண்டும். அல்லாவின் வேறு இல்லை என்ற விஷயத்தைப் பற்றி திடமாக தலீல் வந்திருக்கிறது. அது யாதெனில், **லாஇலாஹ இல்லல்லாஹு**வும் இதுபோன்ற பிறவுமாம். ஆகவே இதில் உத்தியை ஊடாடுவது கூடாதென்றொழிந்தது.

இனி முன்சொன்ன வேற்றுமை யென்னும் விபரீத எண்ணத்தை யொழிப்பதற்கு மற்றொரு சமாதானமாவது:—"**அல்லாஹு தஆலா சகல வஸ்துக்களையும் சிருட்டிப்பவன்** என்ற ஆயத்தானது முப்பொருளைப் பயக்குந் தானமாயிருக்கிறது. அவற்றுள்:—சிருட்டிகர்த்தா உஜூதில் அவனே சிருட்டியாய் இருக்கிறான் என்பதும். இரண்டாவது:—சிருட்டி கர்த்தா உஜூதில் சிருட்டியல்லவாயிருக்கிறான் என்பதும், மூன்றாவது:—அல்லாஹு தஆலா ஒவ்வொரு வஸ்துவின் சிருட்டிகர்த்தனும் ஒவ்வொரு வஸ்துவும் அவனது சிருட்டியாயும் இருக்கிறது என்பதுமாம். இந்த மூன்றாவது பொருளுக்கே ஆயத்து பிரமாணமாயிருக்கிறது. எனெனில் அந்த வாக்கியம் அவனது சர்வ கர்த்தத்துவப் பொருளைப் பயக்குகிற வசன நடையாக நடத்தப்பட்டு அப்பொருளை வெளிதாக விளக்குகிற ஒரு வாக்கியமாயிருப்பதினாலேயாம். முந்தின இரண்டு பொருளிலுங்கூட அர்த்தம் மறைந்ததாக இந்த ஆயத்தின் வாசக நடை நடத்தப்பட்டில்லை யென்றால் மேற்கொண்டு அவ்விரண்டிலும் வேறு என்ற அந்த அர்த்தத்தை அது வெளிப்படையாக விளக்குவதும் அது அதற்



குப் பிரமாணமாவதும் எங்ஙனங் கூடும்? கூடாதென்பதே வெளிப்படை.

சிருட்டிக்கு சிருட்டி கர்த்தா வேறு என்ற விபரீத எண்ணத்தை நிவர்த்திப்பதில் நாம் சொன்ன இந்த யுக்தியால் **முஹம்மதுன் அப்துஹூ வரசூலுஹூ** (முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவனுடைய அடியாராயும் அவனுடைய ரஸூலாயுமிருக்கிறார்கள்) என்று நாம் ஓதும் கலிமாவையும் ஷகித்தறி. மேலே கூறிய யுக்தியானது எப்படி அல்லாவுக்கு ரஸூல் வுஜூதில் வேறாயிருப்பதைத் தேடுகிறதோ அப்படியே இவ்விருவரும் **நௌஉ** என்னும் ஜாதியில் ஒத்திருத்தலைத் தேடுகிறது. எனெனில், இந்த வாக்கியமும் எப்படி அப்துக்கும் மவுலாவுக்கும் இன்னும் முர்ஸிலுக்கும் முர்ஸலுக்கும் நடுவில் வேற்றுமையைத் தோற்றுவிக்கிறதோ அப்படியே அவ்விருவருக்கும் நௌவில் ஒத்திருத்தலையும் தேடுகின்றது. பின்னர் மேலே கூறிவந்த திருஷ்டாந்தத்தால் எப்படி அந்த ஒத்திருத்தலென்பது இல்லையென நிவர்த்திக்கப் பட்டதோ அப்படியே அந்த திருஷ்டாந்தத்தால் வேறு என்பது இல்லையென்று நிவர்த்திக்கப்பட்டது. ஆனால் சுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்களுடைய [illegible] ஹுத்ஹுது என்னும் பக்ஷியானது உருவத்தில் அவர்களை ஒத்தில்லாததுபோல் அல்லாவும் முஹம்மதுர் ரஸூலுல்லாவும் அவர்களும் ஒருவரை யொருவர் ஒத்திருக்கவேண்டிய அவசியமில்லை யென்று சொல்லுவாயாகில், நாம் சொல்லுகிறோம் துவித சித்தாந்திகளின் கொள்கைப்படி ஹுத்ஹுது என்னும் பக்ஷி சுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு வேறாயிருந்தபோதிலும் கண்டப்பட்ட சடவருக்கம் என்ற வகையில் அது சுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்களை ஒத்ததேயாம். முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அல்லாஹ்வுக்கு வேறு என்ற பொருளிலுமல்லாமல் அல்லாஹ்தான் என்ற பொருளிலுமல்லாமல் அல்லாவுடைய அடிமையும் அவனுடைய ரஸூலும் என்ற பொருளில் மாத்திரம் நடத்தப்பட்ட நடையாகிய **முஹம்மதுன் அப்துஹூ வரஸூலுஹூ** என்ற இந்த வாக்கியத்தை நாம் மேலே சொன்ன ஆயத்துகளோடு ஒத்திட்டு ஷகித்தறி. அதாவது மேற்சொன்ன ஆயத்தின் வாசக நடையானது சிருட்டிப் பொருள் அல்லாவுக்கு வேறு என்ற பொருளிலாவது அல்லாதான் என்ற

பொருளிலாவது நடத்தப்படாமல் அவன் கர்த்தாவும் மற்றவை அவனது சிருட்டியுமாம் என்ற பொருளில் மாத்திரம் நடத்தப் பட்டிருக்கிறது. **முஹம்மதுன் அப்துஹூ வரஸூலுஹூ** என்ற வாக்கியமும் அங்ஙனமேயாம். ஆனால், வஹ்மானது எஜமானனுக்கும் அடிமைக்கும் நடுவில் இன்னும் முர்ஸிலுக்கும் ரஸூலுக்கும் நடுவில் ஒரு வேற்றுமையையும் ஒரு சமானத் வத்தையும் தனது ஊகத்தால் கற்பிக்கிறது. பின்னர் எந்த நிலில் சமானத்வத்தை நீக்குகிறதோ அதே நிலில் வேற்றுமையையும் நீக்குகிறது.

இன்னும் முன் சொன்ன வாக்கியத்தின் பேரில் அல்லாஹு தஆலாவுடைய கலாமில் நின்றும் வேற்றுமையைக் கற்பிக்கிற மற்ற எல்லா வாக்கியங்களையும் ஊகித்துப்பார். உதாரணமாக:—

ஆயத்து:— ختم الله علي قلوبهم وعلي سمعهم

அல்லாஹு தஆலா அவர்களுடைய கல்புகளின் பேரிலும் அவர்களுடைய கேள்விப்புலன்களின் பேரிலும் முத்திரை பதித் தான்.

ஆயத்து:— இன்னும் لعنة الله علي الظالمين

அல்லாவுடைய லஃனத்து அக்கிரமக்காரர் பேரிலாயிருக்கும்.

ஆயத்து:—இன்னும் لعنة الله علي الكافرين

அல்லாவுடைய லஃனத்து காபிர்கள் பேரிலாயிருக்கும்.

ஆயத்து:—இன்னும் لعنة الله علي الكاذبين

அல்லாவுடைய லஃனத்து பொய்யர்கள் பேரிலாயிருக்கும்.

ஆயத்து:—இன்னும் அல்லாவுடைய லஃனத்து பாவிகுகள் பேரிலாயிருக்கும்.

இப்போது ஊகித்துப்பார். மேலே கூறிவந்த வாக்கியங்களின் நடை: முத்திரை பதித்தவனும் லஃனத்து செய்தவனும் அல் லாஹு தஆலாவாயிருக்கிறான் என்பதும் முத்திரை பதிக்கப்பட்ட வரும் லஃனத்து செய்யப்பட்டவருமானவர் அந்தக் காபிர்களும் அக்கிரமக்காரர்களும் பொய்யரும் பாவிகுகளுமாயிருக்கிறார்க ளென்பதும் ஆகிய இந்தப் பொருள்களில் தான் நடத்தப்பட்டிருக் கிறதேயல்லாமல் முத்திரை பதித்த அல்லது லஃனத்து செய்த



அல்லாவும் முத்திரை பதிக்கப்பட்ட அல்லது லஃனத்து செய்யப் பட்ட காபிர் முதலியவர்களும் ஏகமென்ற பொருளிலாவது அவன் வேறு அவர்கள் வேறு என்ற பொருளிலாவது நடத்தப்படவில்லை. ஆகவே மேற்கூறிய வாக்கியங்களால் வேற்றுமை விளங்கப்படாது. ஆனால் பிசகான வஹ்முடைய ஊகத்தினுல் வேற்றுமை தோன்றும்.

மொத்தத்தில் வஹ்மினுல் வேற்றுமை விளங்கப்படுகிற ஒவ் வொரு சுருதி வாக்கியமும் வேற்றுமை தோன்றுத ஒவ்வொரு பொருளில் நடத்தப் பட்டிருக்கிறது. ஆகவே அந்த சுருதி வாக்கி யம் வேற்றுமை அறிவிப்பதில் மறைவான ஒரு பிரமாணமுமா யிராதென்றால் மேற்கொண்டு அது வேற்றுமையை வெளிப்படை யாய் அறிவிப்பதும் அது பிரமாணமாவதும் எங்ஙனங் கூடும்?

பின்பு நாம் அல்லாஹு தஆலாவுடைய திருவாக்கியங்களா கிய **அல்லாஹ் எல்லா வஸ்துக்களையும் சிருட்டிப்பவன்** என்பதையும் **அல்லாஹ் உங்களைப் படைத்தான்** என்பதையும் வேற்றுமைத் தோற்றத்தில் அவனுடைய வேறு திருவாக்கியங் களின் மேல் பொருத்துவோம். அந்த வாக்கியங்களில் ஒன்று:—

ظالمي انفسهم "அவர்கள் தங்கள் நப்சுகளின்பேரில் கொடுமை செய்கிறவர்கள்" என்பதும்.

இன்னுமொன்று, ولكن كانوا انفسهم يظلمون "என்கினும் அவர்கள் தங்கள் நப்சுகளுக்கு கொடுமை செய்கிறவர்களா யிருக் கிறார்கள்" என்பதுமாம்.

இந்த இரண்டு வாக்கியங்களிலும் தங்களுடைய நப்சு என்ற தில் "உடைய" என்னும் ஆறும் வேற்றுமை யுருபு **என் உயிர்** என்பது போல் உடைமைக்காரப் பொருளும் உடைமைப் பொருளும் வெவ்வேறாகாத ஒற்றுமைப் பொருளில் வந்திருக்கிறது. **என்னுடைய கை** என்பது போல் தற்கிழமைப் பொருளிலாவது **என்னுடைய புத்தகம்** என்பது போல் பிறிதின் கிழமைப் பொருளிலாவது அவ்வுருபு வரவில்லை.

ஆகவே மேற்கண்ட வாக்கியங்களில் தங்களுடைய நப்சு என் றதில் தாங்கள் வேறு தங்கள் நப்சு வேறு என்பது பொருளல்ல. மேலும் தாங்களே நப்சு, நப்சே தாங்கள் என்பதுதான் அர்த்த மாம்.

அப்படியிருக்க, அந்த வாக்கியங்களில் அவர்கள் வேறும் அவர்கள் நப்சு வேறுமாகத் தோற்றும் வேற்றுமை வஹ்மினால் ஏற்பட்ட கற்பனையேயாகும். இல்லாவிட்டால்; அதாவது அந்த வேற்றுமை எதார்த்தமாயிருந்தால் அப்போது அந்த வாக்கியத்தின் அர்த்தம் அவர்களுக்கு வேறான அந்த நப்சுகள் கொடுமை செய்யவில்லையென்றும் அவைகளின் மேல் அவர்கள் கொடுமை செய்தார்களென்றும் பிறிதின் கிழமைப் பொருளாய் முடியும். இது சரியல்ல. மேலும் அந்த நப்சுகளே அவர்களாயிருக்கிறார்கள். ஆகவே கொடுமை செய்தவரும் கொடுமை செய்யப்பட்டவரும் வெவ்வேறாகாமல் ஒருவரேயாவர். வெவ்வேறு என்பது வெறுந் தோற்றமான கற்பனையாயிருக்கிறது. இதேபோல் சிருட்டிகர்த்தாவுக்கும் சிருட்டிகளுக்கும் நடுவில் அவன் வேறு அவை வேறாகத் தோற்றுகிற வேற்றுமையும் கற்பனையே தவிர எதார்த்தமல்ல.

இன்னும் **முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்.** முஹம்மது (ஸ. அ. ம்.) அல்லாஹ்வுடைய ரஸூலாம் என்பதில் உடைமைக் காரப் பொருளையும் உடைமைப் பொருளையும் ஒன்றாக்குவதற்கு அந்த வாக்கியத்தை

ما كان محمد ابا احد من رجالكم

**மாகான முஹம்மதுன் அபா அஹதின்மின் ரிஜாலிக்கும்** "முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) உங்கள் புருடர்களின் ஒருவருக்குப் பிதாவாயிருக்கவில்லை.', என்ற பொருளில் பொருத்திக்கொள். அதாவது உங்கள் புருடர் என்றதில் உங்கள் என்ற உடைமைக் காரப் பொருளும் புருடர் என்ற உடைமைப் பொருளும் உண்மையில் வெவ்வேறாகாமல் ஒரே பொருளாயிருக்கிறது. ஆனால் வஹ்மில் அவ்விரண்டுக்கும் நடுவில் வேற்றுமை தோற்றுகிறது. இது துவித சித்தாந்திகளும் ஒத்துக் கொள்வதாம்.

இதே போல் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அல்லாஹ் உடைய ரஸூல் என்பதில் உடைமைக்கார அல்லாஹ் என்பதும் உடைமைப் பொருளான ரஸூல் என்பதும் உண்மையில் ஒன்றாயிருந்து கொண்டு வஹ்மின் கற்பனையால் வெவ்வேறாகத் தோற்றுகிறது. இதன் சாராம்சம் யாதெனில் "நப்சு முஹம்



மதின்" முஹம்மதுடைய உயிர் என்பது போல் ஒரு பொருள் அது தானாகவே யிருக்கிற தன்னோடு சேர்க்கப் பட்டால் அப்போது உடைமைக் காரப் பொருளும் உடைமைப் பொருளும் வெவ்வேறென்றாகாமல் ஒன்றாகவே யிருந்து கொண்டு வஹ்மில் வெவ்வேறாகத் தோற்றுகிற திருஷ்டாந்தமே இந்த விபரீதத்தைப் போக்குவதற்குப் போதிய சான்றாகும் என்பதே.

அறிந்துகொள் ஊக்கும் கல்லும் ஒன்றே என்ற ஈமானும் துவிதத்தை அத்வைத மாக்கவென்ற தவ்ஹீதும் அடியார்களில் அநேகருடைய இருதயங்களில் நுழைவது ஒட்டகம் ஊசிக்காதில் நுழைவது போல் கஷ்டமேயாம். ஏனெனில் அவர்களுடைய இருதயங்கள் மிகவும் சுருக்கமானவைகள். துவிதத்தை அத்வைத மாக்கவென்னும் தவ்ஹீதோ இருதய சந்திகளுக் கெல்லாம் இராஜாவாயிருக்கிற வஹ்மு என்னும் பேத புத்திக்கு விரோதமாயிருக்கிறது. ஆதலால் இருதயங்கள் அந்த ஈமானுக்கு இடந்தரா. ஆகவே மேலே இலக்ஷணித்த ஈமானும் தவ்ஹீதும் அநேகருடைய இருதயங்கள் ஏற்பதற்குச் சாத்தியமானதல்ல வென்று கரிபட்டது. لا يكلف الله نفسا الا وسعها

"அல்லாஹு தஆலா எந்த நப்ஸையும் அதற்குச் சாத்தியப் படுகிற அளவாகவேயன்றி (அதிகமாக அதற்கு) வருத்தத்தைக் கொடான்" என்று திடனாக குர்ஆன் கூறுகின்றது. ஆதலால் அல்லாஹு தஆலா அந்த அடியார்களுக்கு ஊக்கும் கல்லும் ஒன்றெனக்கூறும் அந்த ஈமான் உண்டாகவேண்டுமென்னும் ஊசிக் காதில் நூல் நுழைவது போல் அவர்களுடைய இருதயங்களில் இலகுவாக அந்த ஈமான் நுழைய வேண்டுமென்றும் நாடினதினால் அல்கலிமத்துத் தையிபாவின் இருபகுதிகளின் பிற்பகுதியாகிய முஹம்மதுர் ரஸூலுல்லாஹியை அதன் முற்பகுதியாகிய லாஇலாஹ இல்லல்லாஹு வோடிணைத்து ஒன்று சேர்த்தான்.

ஆகவே அவர்கள் ரஸூலை அல்லாஹ்வின் வேறாக எண்ணியாயினும் பிற்பகுதியாகிய முஹம்மதுர் ரஸூலுல்லாஹியைக் கொண்டு ஈமான் கொள்வார்களாகில் திடனாக அவர்கள் முற்பகுதியாகிய லாஇலாஹ இல்லல்லாஹுவில் கருதிய பொருளைக் கொண்டு அதாவது எல்லாம் அவனே என்பதைக் கொண்டு ஈமான் வைப்பவரானார்கள். ஏனெனில் பிற்பகுதியில் கொண்ட ஈமானது

முற்பகுதியில் கருதிய ஈமானைத் தனக்குள் அடக்கிக் கொண்டு தான் அதற்குப் பிணியாக நிற்கிறது.

ஆதலால் ஒருவன் ரஸூலே அல்லாவின் வேறாகக் கண்டாயினுஞ் சரியே பிற்பகுதியாகிய முஹம்மதுர் ரஸூலுல்லாஹியைக் கொண்டு ஈமான் கொள்வானாகில் திடனாக அவன் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அல்லாஹு த ஆலாவினிடமிருந்து கொண்டு வந்த ஒவ்வொரு ஹுக்மிலும் அவர்களை உண்மையாக்கி வைத்தான். "எல்லாம் அவனே" யெனக் காணும் ஈமானாகிறது அல்லாஹு த ஆலாவினிடமிருந்து அவர்கள் கொண்டு வந்த ஹுக்முகளின் தொகையில் ஒன்றாயிருக்கிறது. ஆகவே எல்லா ஹுக்முகளிலும் அவர்களை உண்மையாக்கினதில் "எல்லாம் அவனே" எனக் காணும் இந்த ஈமானும் இவனுக்குத் தெரியாதவிதமாக உட்புகுந்து இதையும் உண்மையாக்கினான்.

அறிந்துகொள்:—மேலே கூறிய நிர்ச்சயிப்பான முடிவினால் அத்வைதிகள் மீது துவிதசித்தாந்திகளால் வருகிற பெரிய ஒரு ஆக்ஷேபம் நிவர்த்திக்கப்படுகிறது. அந்த ஆக்ஷேபம் யாதெனில் அத்வைதிகள் தவ்ஹீதாகிய ஈமானை வஹ்தத்துல் வுஜூதில் அதாவது உள்ளது ஒன்றே யெனக் கொள்வதில் கட்டுப்படுத்துகிறார்கள். வஹ்தத்துல் வுஜூதென்பது புத்தியில் அமையாத ஓர் காரியமா யிருக்கிறது. மனிதர்களோ வஹ்மால் மிகைக்கப் பட்டவர்களா யிருக்கிறார்கள். ஆகவே வஹ்தத்துல் வுஜூதைக் கொண்டு ஈமான் கொள்ளும்படி அவர்களை வருத்துவதானது சாத்தியப்படாத ஒரு காரியத்தைத் தழுவிக் கொள்ளும்படி வருத்துவதாயிற்று. அல்லாஹு த ஆலா ஒரு உயிரையும் அதற்குச் சாத்தியப்படாததைச் செய்யும்படி வருத்தப்படுத்தான். ஆனால் தவ்ஹீதைத் தழுவிக் கொள்ளும்படி சந்தேகமின்றி மனிதனுக்கு விதிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே அந்தத் தவ்ஹீது வஹ்தத்துல் வுஜூதைப் பற்றிய தவ்ஹீதல்ல வென்று தெரியவந்தது. இதுவுமன்றி வஹ்தத்துல் வுஜூதிலேயே தவ்ஹீது கட்டுப்பட்டதென்று கற்பித்துக் கொள்வதினால் வஹ்தத்துல் வுஜூதை உண்மை யெனக் கொள்ளாத பெரும்பாலரான முஸ்லிம்களை ஷிர்க்குடையவர்களாகக் காணும்படி நேர்கின்றது என்பதே.

மேலே சொல்லிய ஆக்ஷேபத்திற்குச் சமாதானம் முன்னே இந்நூலில் பல விடங்களில் பல முறையும் பார்த்துத் தெரிந்து கொண்



டிருக்கிறாய். அதாவது:—ஷரகுடைய அனேக ஹுக்முகள் வஹ்முக்கு விரோதமா யிருக்கின்றன. மார்க்க மூலங்களில் முந்திய மூலமான தவ்ஹீதானது உண்மையில் வஹ்முக்கு வெகுதூரப் பட்டதாகவே யிருக்கிறது. இதனாலே தான் அதை உம்மத்துகளுக்கு உபதேசிக்கும்படி நபிமார்கள் அலைஹிஸ்ஸலாமவர்கள் கட்டளை யிடப்பட்டார்கள். அது வஹ்முக்கு மாறா யிராமல் நேரா யிருந்தால் ரஸூல்மார்களை அனுப்பவும் முஷ்ரிக்குகளுடன் சண்டை செய்து அவர்களைச் சங்கரிக்கவும் தேவைபடாது. ஏனெனில் துவிதசித்தாந்தம் வஹ்முக்குப் பொருத்தமா யிருப்பதால் அதை எவரும் எதிர்பாரே யல்லாமல் ஒருவரும் நிராகரிக்கார். மேற் சொல்லிய தவ்ஹீதைத் தழுவல் வேண்டு மென்ற தக்லீபான விதியை கலிமாவில் **முஹம்மதுர் றஸூலுல்லாஹி** என்னும் பிற்பகுதியால் இலபமாக்கப் பட்டிருக்கிறது என்பது தான். இனி வஹ்தத்துல் வுஜூதில் தவ்ஹீதைக் கட்டுப்படுத்துவதில் அவா மென்னும் சாமானிய ஜனங்களையே ஷிர்க்கில் சம்பந்தப் படுத்தாமலிருக்கும் போது அகஸ்ஸுல் கவாஸ்ஸு என்னும் உரிய பெரியோரை ஷிர்க்கில் சம்பந்தப்படுத்துவது எங்ஙனம் கூடும்? கூடாது. ஏனெனில் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவுகிற முஸ்லிம்களில் உயர்ந்தோர் இழிந்தோர் எல்லாருக்குமே **முஹம்மதுர் றஸூலுல்லாஹி**யில் உள்ள முழு நம்பிக்கையாகிய ஈமானின் பாக்கியத்தால் லாஇலாஹ இல்லல்லாஹுவில் உள்ள வஹ்தத்துல் வுஜூதாகிய தவ்ஹீது அந்த ஈமானில் அதிர்புதமாய் மறைந்து அவர்களுக்கு வாய்த்து விடுகிறது.

திடனாக அல்லாஹு த ஆலா தனது கிருபையினாலும் வரிசையினாலும் ஹிக்மத் தென்னும் ஆழிய நோக்கத்தாலும் மதி குன்றிய பேதை ஜனங்களில் நின்றும் பிற்பகுதி ஈமானில் அவர்களுக்குத் தெரியாமல் அதிர்ப்புதமாய் மறைத்துள்ள அத்வைதா நுசாரமாகிய ஈமானில் இவ்வளவைப் போதுமாக்கினான். ஏனெனில் முற்பகுதியாகிய லாஇலாஹ இல்லல்லாஹுவில் கருதிய பொருளுக்குப் பொருத்தமும் எதார்த்தமு மான ஈமான் வஹ்முக்கு முரணாயிருப்பதால் மதிமெலிந்த மாந்தர்களின் இருதயங்கள் அதற்கு இடந்தரா வாதலினாலென்க.

இன்னும் அவர்களில் நின்றும் அந்த ஈமானைப் போதுமாக்கிக் கொண்டதற்குக் காரணம் யாதெனில், தொகுப்பை

ஒருவன் வகுத்துணரா விட்டாலும் அவன் தொகுப்பை விட்டவனாகான் என்பதாம், அதாவது லாஇலாஹ இல்லல்லாஹுவில் பொதிந்துள்ள எதார்த்தமான பொருளை விசாரணையால் விபரித்தறியா விட்டாலும் அவனுக்குத் தெரியாமல் அதில் பொதிந்துள்ள பொருள் உண்மையென்று மொத்தமாக ஈமான் கொள்வதை விட்டவனாகான் என்பதே.

விசாரணையால் தெளிந்து உண்மையைக் காண்பது உற்பூத (ஸ்பஷ்டமான) ஈமான் என்றும் அந்த உண்மை மற்றொன்றில் மறைந்து மூடலா யிருப்பது அநுற்பூத (மறைவான) ஈமான் என்றும் சொல்லப்படும்.

அல்கலிமத்துத் தைய்யிபாவின் பிற்பகுதியாகிய முஹம்மதுர் ரஸூலுல்லாஹியின் பலனாக வர்த்த மேற்கண்ட அநுற்பூத ஈமான் போதுமென்றதற்கு முஸ்லிமுடைய ரிவாயத்தில் வந்திருக்கிற ஒரு ஹதீசு துலக்கமான பிரமாணமா யிருக்கிறது. அது வருமாறு:—முஆவியாகிய ஸலமி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள்:—எனக்கு ஒரு அடிமைப்பெண் இருந்தாள். அவள் என் ஆடுகளை உஹது ஜவானியா என்னும் மலைகளின் பக்கம் கொண்டு போய் மேய்ப்பாள். ஒரு நாள் நான் அவ்விடத்திற்குப் போனேன். திடீரென்று ஒரு ஓநாய் வந்து எங்கள் ஆடுகளில் ஒன்றை அடித்துக் கொண்டு போய் விட்டது. நான் மனுடமக்களில் ஒரு ஆண்பிள்ளையா யிருக்கிறேன். மனிதர் கைசேதப்படுவது போல் கைசேதப்பட்டேன். ஆனால் அவளைக் கன்னத்தில் ஒரு அடி அடித்தேன். பின்பு நான் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் வந்தேன். இது காரியம் எனக்குப் பாரமா யிருந்தது. நான் நாயகமவர்களை நோக்கி யாரஸூலல்லாஹ்! அவளை அடிமைத்தனத்திலிருந்து நீக்கி விடுவிக்க வேண்டாமா? என்று கேட்டேன். நாயகமவர்கள் அவளை என்னிடத்தில் அழைத்துக் கொண்டுவா என்றார்கள். நான் அவளை அழைத்து வந்தேன். நாயகமவர்கள் அவளைப் பார்த்து **அல்லாஹ் எங்கே யிருக்கிறான்** என்று கேட்டார்கள். **வானத்திலிருக்கிறான்** என்று அவள் சொன்னாள். **நான் யார்** என்று கேட்டார்கள். **தாங்கள் அல்லாஹ்வுடைய ரஸூலாயிருக்கிறீர்கள்** என்று சொன்னாள். பின்பு நாயகமவர்கள் என்னைப் பார்த்து அடிமைத்தனத்தி



லிருந்து அவளை விடுவித்துவிடு. **திடனாக அவள் ஒரு மூமினத்தா யிருக்கிறாள்** என்று சொன்னார்கள் என்பதே.

இந்த ரிவாயத்தினால் அல்கலிமத்துத் தைய்யிபாவின் முற்பகுதியாகிய **லாஇலாஹ இல்லல்லாஹு**வில் கருதிய பொருளை உண்மையாக்கல் என்னும் ஈமான் **தாங்கள் ரஸூலா யிருக்கிறீர்கள்** என்று அவள் சொன்ன சொல்லில் மறைந்து அநுற்பூத ஈமான் அவளுக்கும் உண்டாய் விட்டபடியால் அந்த ஈமானை அவளுக்குப் போதுமாக்கினார்களென்று தெரிய வந்தது.

இன்னும் **அல்லாஹ் வானத்திலிருக்கிறான்** என்று அவள் சொன்ன வெளிப்படையான சொல்லானது லாஇலாஹ இல்லல்லாஹுவில் விளங்கப்படுகிற எல்லாம் ஏகமென்ற பொருளுக்கு இடரான சொல்லா யிருந்தும் அந்தச் சொல்லை பாராட்டாமல் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அவளின் ஈமானை ஏற்றுக் கொண்டார்கள். ஏனெனில் அவர்கள் றஹ்மத்துன் லில்ஆலமீன் என்னும் சர்வலோக சமாசக் கருணாநிதியாயும் உம்மத்துக்களின் ஈமானில் பேராவல் கொண்டவர்களாயு மிருந்தார்கள். **மனிதர்களின் ஈமானில் நீர் பேராவல் கொண்டவராயிருந்தாலும் அவர்களின் அநேகர் மூமின்களா யிருப்பதில்லை** என்று அல்லாஹுத் தஆலா திருவுளமா யிருப்பது இதற்கு அத்தாக்ஷியாம். ஆகவே "அல்லாஹ் வானத்திலும் இலாஹா யிருப்பவன் பூமியிலும் இலாஹா யிருப்பவன்" என்ற வேதவாக்கியத்திற் கிணங்க "அல்லாஹ் வானத்திலிருக்கிறான்" என்று அவள் சொன்ன சொல்லை நேர்ப்படுத்திக் கொண்டார்கள்.

# அநுபந்தம்.

*இவ்வநுபந்தத்தில் பல பயன்களிருக்கின்றன. அவற்றுள்:—*

## முதலாவது பயன்.

*சுவால்:—வஹ்தத்துல் வுஜூதை அவாம்களான சாமானிய ஜனங்களுக்கு வெளிப்படுத்தலாமா? அவர்கள் அதன் உண்மையை அறிய வேண்டிய ஹக்குபடி அறியமாட்டார்களே அன்றியும் வணங்குகிற அடிமையும் வணங்கப்படுகிற ஆண்டவனும் ஒன்றாயிருக்கும் போது தொழுகை நோன்பு முதலான விதிகளை அநுஷ்டிக்காமல் விட்டு விட்டால் என்ன குற்றமென்று அவைகளை இலேசாகக் கண்டு இலக்ஷியம் செய்யாமலிருப்பார்கள். இப்படி வெளிப்படுத்துவதில் குப்ரும் துன்மார்க்கமுமான வாசலைத் திறப்பதும் தீங்கிழைத்தல், கேடுவிளைத்தல் மார்க்க விதிகளை அநுஷ்டிக்காமல் சோம்பல் செய்தல் ஆகிய இவைகளுக்கு இடந்தாலும் ஏற்படுகின்றது.* ***கதுரைப் பற்றிய மஸ்அலா பேசப்படுமாகில் நீங்கள் மவுனமாயிருங்கள்*** *என்றும்* ***அதில் யாதொரு தர்க்கமும் தக்ராரும் செய்யவேண்டாம்*** *என்றும் ஹதீஸில் வந்திருக்கிறது. ஆகவே இம்மாதிரியான மஸ்அலாக்களை வெளிப்படுத்துவதும் விரித்துரைப்பதும் வழிகேட்டிலும் கெடுப்பிலும் இழுத்து விடுவதற்கு ஒத்தாசையாயிருக்குமென்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றது. ஆதலால் இதைப் போன்ற மஸ்அலாக்களை வெளிப்படுத்தல் எங்ஙனங்கூடும்? கூடாது என்று சொல்வீராகில் அதற்கு நாம் விடையளிக்கிறோம்.*

*ஜவாபு:—சுபுஹானல்லா! மிக்க அறிந்தவர் நீரோ? அல்லாஹுத் தஆலாவோ? திடனாக அல்லாஹுத் தஆலா தவ்ஹீதை அறபிகளுக்கு அவர்களின் பாஷையில் வெளிப்படுத்தினான். அவர்கள் அதன் பொருளை உள்ளபடி உணர்ந்தார்கள். அப்பொருளைப்பற்றி வியப்படைந்து* ***எல்லா இலாஹுகளையும்*** *(முஹம்மது சல்-அம்)* ***ஒரே இலாஹுதான் என்று ஆக்கிவிட்டார்?*** *என்று அவர்கள் சொன்னதாக குர்ஆன் கூறுகின்றது. அல்லாஹுத் தஆலா தவ்ஹீதை அப்படி வெளிப்படுத்தினதில் என் அடியார்கள் இபாதத்தை விட்டு விடுவார்கள் என்றும் தான்*



*விதித்த விதிகளை அநுஷ்டிக்கார்கள் என்றும் அதைப் பாராட்டவில்லை. ஏனெனில், அவன் நபிமார்கள் அலைஹிமிஸ்ஸலாமவர்களை தவ்ஹீது கலிமாவுடன் அனுப்பி அதைப் பகிரங்கமாகப் பிரஸ்தாபிக்கும்படி செய்தான். முஃஜிஸாத் தென்னும் அற்புதங்களால் அதைப் பரவச் செய்தான். அதன் மேல் அதற்கு அத்தாக்ஷியான பிரமாணங்களை அருளினான். அதை ஏற்காமல் மறுப்பவர்களுக்கு இம்மையில் வெட்டுண்ணல், சிறையிலகப்படல், ஸ்திரீகளைப் பறிகொடுத்தல் முதலான சிறுமையும், மறுமையில் மீளா நரகவேதனையும் உண்டாகுமென்ற அச்சமூட்டலான ஆயத்துகளைத் தனது வேதத்தில் நிறைத்தான்.*

*ஆனால் கதுரு மஸ்அலாவும் அஸ்ஹாபுகள் விஷயமும் இவை போல்வன பிறவும் போல் எவற்றில் தர்க்கமும் தக்ராரும் செய்யாமல் மவ்னமாயிருக்கக் கட்டளையோ அவை தவ்ஹீதின் தானத்தில் இல்லை. ஆதலால் அவற்றோடு தவ்ஹீதை ஒத்திடுவது ஒவ்வாது. மெய்தான் அல்லாஹுத் தஆலா தவ்ஹீதின் மேல் அதன் அத்தாக்ஷியான பிரமாணங்களை அருளாமலும் அதை மறுப்பவர்களுக்கு இம்மை மறுமைகளில் நேரும் கஷ்ட நஷ்டங்களைக் காட்டிப் பயமுறுத்தாமலுமிருந்திருக்கிற பக்ஷம் அப்போது தவ்ஹீதை கதுரு மஸ்அலாவின் மேல் ஒத்திடக் கூடுமாயிருந்தது. தவ்ஹீதை வெளிப் படுத்தலானது மின்ஹாஜை வெளிப்படுத்தல் போல்வதேயாம். மின்ஹாஜும் ஓர் மறைந்த இரகசியமாயிருக்கிறது. அதுவோ மிம்பர்களென்னும் பிரசங்க மேடைகளின் மேல் பிரசுரிக்கப்படுகிறது. இதேபோல் தவ்ஹீதை பிரசங்க மேடைகளின் மேல் அல்ல; மேலும் அதினும் மிக்க உயரமான மெத்தைத் தளத்தின்மேல் நின்று பிரசங்கிக்க வேண்டும். ஏனெனில், தவ்ஹீதானது மின்ஹாஜுக்கு மூலமாயும் முக்கியமாயுமிருப்பதினாலென்க.*

*இனி மறைக்கவேண்டிய இரகசியம் இது வென்றும் வெளிப்படுத்தவேண்டிய பரசியம் இதுவென்றும் அறிவதற்கு ஒரு காயிதா உண்டு. அதாவது நுஸுப்படுத்தும் அத்தாக்ஷியான பிரமாணமில்லாமல் சொல்லப் பட்டிருப்பது எதுவோ அது மறைக்க வேண்டிய இரகசியமாம். எதுபோலெனில், கதுரு மஸ்அலாவும் அஸ்ஹாபுகளுடைய காரியமும் போலாம்.* ***"கதுருடைய மஸ்அலா பேசப்பட்டால் வங்கள் உங்கள் வாயை மூடிக்***

**கொள்ளுங்கள்** என்றும் என் **அஸ்ஹாபுகளைக் குறித்துப்**
**பேசப்பட்டால்** (அதாவது அவர்களுக்குள் நடக்கும் சமர்களைக்
குறித்துப் பேசப்பட்டால்) **உங்கள் வாயை மூடிக்கொள்**
**ளுங்கள்"** என்றும் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல
மவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இனி ரூசுப்படுத்தும்
பிரமாணங்களுடன் சொல்லப்பட்டிருப்பது எதுவோ அது
வெளிப்படுத்த வேண்டிய பராசியமாம். உதாரணமாக:—அல்
லாஹு தஆலா **லாஇலாஹ இல்லல்லாஹு** (அல்லாவின்
வேருக யாதொரு இலாஹும் இல்லை) என்று எடுத்துரைத்து
அதன் மேல் அத்தாக்ஷியாக **லவ்கான பீஹிமா ஆலிஹத்**
**துன் இல்லல்லாஹு லபஸதத்தா** போன்ற முற்கூறிவந்த
பிரமாணங்களை அருளிச் செய்தான். இப்போது நீ பொறுமையும்
நீதமுமான பார்வையைக் கொண்டு தவ்ஹீதானது மறைக்க
வேண்டிய இரகசியத்தில் சேர்ந்ததா? அல்லது வெளிப்படுத்த
வேண்டிய பராசியத்தில் சேர்ந்ததா என்பதை நோட்டமிட்டுப்
பார். இதுவுமன்றி ஐந்து நேரங்களிலும் இரைந்து சொல்லப்
படுகிற பாங்கு சத்தமானது தவ்ஹீதை வெளிப்படுத்துகிற நோக்க
மாகவே ஏற்பட்ட தென்பதாகவும் அறிவிக்கின்றது. அதாவது
ஹக்குக்கு கல்கு வேறல்ல. ஹக்குதான் என்ற இந்த சத்தியம்
மறைக்கப்படவேண்டிய இரகசியமா யிருந்தால் ஐந்து நேரத்
தொழுகைகளின் பாங்கில் **அஷ்ஹது அன் லாயிலாஹ இல்**
**லல்லாஹு** என்று இரைந்து சொல்லப்பட மாட்டாது. ஏனெ
னில் ஹக்குக்கு கல்கு வேறல்ல. ஹக்குதான் என்ற பொருள்
அமைந்த இந்த அறபி வாக்கியத்தை அப்பாஷை தெரிந்த
அறபுகள் நன்கு விளங்கிக் கொள்கிறவர்களா யிருந்தார்கள். அறபி
பாஷையில் வெளிப்படுத்தல் ; ஆகுமென்பதும் இதர பாஷையில்
ஆகாதென்பதுமான ஒரு விஷயம் ஷாகில் கிடையாது. ஆகவே
தவ்ஹீதானது மறைக்கப்பட வேண்டிய ஓர் இரகசிய மென்று
நினைப்பவர்கள் ஐந்து நேரங்களின் பாங்கில் **லாஇலாஹ இல்**
**லல்லாஹு** என்னும் கலிமாவை இரைந்தோதாம லிருக்கக்
கடமைப்பட்டவராவார்கள்.

மொத்தத்தில்: தவ்ஹீது விஷயத்தை அல்லாஹு தஆலா
பகிரங்கப்படுத்தினான். பெரிய பெரிய உல
மிகத் துலக்கமாகப் பகிரங்கப்படுத்தினான். பெரிய பெரிய உல
மாக்களில் நின்றும் அநேகருடைய மனங்களில் அதன் உண்



மையை ஏற்கும் அருளைப் போடவில்லை. என்கினும் ஒரு வஸ்
துவை வெளிப்படுத்துவதற்கும் அதை ஏற்கும் அருளை இருதயங்
களில் போடுவதற்கும் நடுவில் முஃஜிஸாவி லிருப்பதுபோல் பெரிய
வித்தியாச மிருக்கிறது. அதாவது அல்லாஹு தஆலா நபிமார்கள்
அலைஹி மிஸ்ஸலா மவர்களுடைய கைகளின் மேல் அவர்களின்
உம்மத்துக ளிடத்தில் பொதுவாக முஃஜிஸாக்களை வெளிப்படுத்
தினான். ஆனால் அந்த உம்மத்துகளில் மக்பூலானவர்களின்
மனங்களில் தவிர மற்றவர்களுடைய மனங்களில் அதன் உண்
மையை ஏற்கும் அருளைப் போடவில்லை.

இதுபோல் தான் ஹக்கையும் கல்கையும் ஏகமாக்கல் என்னும்
தவ்ஹீதை வெளிப்படுத்தினதிலும் அதன் உண்மையை ஏற்கும்
அருளை சூபியாக்களுடைய கல்புகளில் தவிர அந்த உலமாக்களு
டைய கல்புகளில் போடவில்லை. எவருடைய இருதயங்களில் அந்த
அருளைப் போடவில்லையோ, அவர்கள் அதை எடுத்தோதிய நாயக
மவர்களை மஜ்னூன் (பித்தர்) என்றும் வழிகேடர் என்றும்
சொன்னார்கள். முஃஜிஸாக்களை வெளிப்படுத்தினதில், அவை
களை சூனிய மென்றும் குறிகூறல் என்றும் குரளிவித்தை யென்றும்
சொன்னார்கள். உலமாக்களில் கல்புகளில் தவ்ஹீதின் உண்
மையை ஏற்கும் அருளைப் போடாமையால் அவர்கள் தவ்ஹீதின்
மேல் துலக்கமாக அறிவிக்கின்ற தலீலுகளுக்குத் தாவீல்
செய்ய (வலிந்துரை கொள்ள)த் துணிந்தார்கள். முஃஜிஸாவை
வெளிப்படுத்தியதில் அதன் உண்மையை ஏற்கும் அருளை அவர்
களின் இருதயங்களில் போட்டதினால் அவை உண்மை யென்று
அவர்கள் நம்பினார்கள். பின்னர் அவாம் என்னும் சாமானிய
ஜனங்கள் மார்க்க விதிகளை விட்டு விடுவார்க ளென்கிற பயத்துக்
காக ஹக்கும் கல்கும் ஏகமென்னும் தவ்ஹீதை அவர்களுக்கு
வெளிப்படுத்தக் கூடா தென்பதற்கு குர்ஆன் ஹதீசுகளில்
யாதொரு ஆதாரமு மில்லை, ஹக்கு வேறு கல்கு வேறு என்பதற்கு
அவைகளில் ஆதாரமில்லாதது போல்.

(இங்கு ஒரு கேள்வி பிறக்கின்றது. அதாவது:—வஹ்தத்துல்
வுஜூது மஸ்அலாவானது பண்டிதர் பாமரர் ஆகிய ஒவ்வொரு
வருடைய மனதிலும் அமையாத ஒரு காரியமா யிருக்கிறது.
மனிதர்களுடைய புத்திகள் ஒன்றுக் கொன்று வித்தியாசப்பட்ட
வைகளா யிருக்கின்றன. இன்னும் **நபிமார்களாகிய நாங்கள்**

**மனிதர்களிடத்தில் அவர்களுடைய புத்தியின் பக்குவத்துக்குத் தக்க அளவாகப் பேசும்படி கட்டளை யிடப்பட்டிருக்கிறோம்** என்று ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள். ஆதலால் எது மனிதர்களின் புத்தியில் அமையாதோ அதை அவர்களுக்கு விரித்துரைப்பதும் வெளிப்படுத்துவதும் மேற்கூறிய ஹதீசுக்கு விரோதமா யிருக்கிறது என்பதுதான். இதற்கு ஜனுப் மவுலானு அவர்கள் சமாதானஞ் சொல்லுகிறார்கள்.)

امرنا ان نتكلم الناس علي قدر عقولهم

**மனிதர்களிடத்தில் அவர்களுடைய புத்திகளின் அளவாகப் பேசும்படி எங்களுக்குக் கட்டளை யிடப்பட்டிருக்கிற** தென்று ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீசுக்குப் பொருள் யாதெனில், தவ்ஹீதுடைய இரகசியார்த்தங்களில் பேசும்போது மனிதர்களுடைய புத்திகள் ஏற்கக்கூடிய அளவாகப் பேசும்படி எங்களுக்குக் கட்டளை என்பதும் அசல் தவ்ஹீதில் அல்ல வென்பதுமாம். அதாவது ஹக்குக்கு கல்கு வேறல்ல என்கிற முக்கியமான மூலத் தவ்ஹீதைப் பிரஸ்தாபிப்பதில் மனிதர்களுடைய புத்தி விளக்கத்தின் அளவு பார்த்துப் பேச வேண்டு மென்று எங்களுக்குக் கட்டளை இடவில்லை என்பதாம். மேலும் பண்டிதர் பாமரர் உயர்ந்தோர் இழிந்தோர் என்கிற வித்தியாசம் பாராட்டாமல் எல்லோருக்கும் பொதுவாக தவ்ஹீதை எடுத்தோதும்படி அல்லாஹு தஆலா நபிமார்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறான். அதில் மிக்க விவேகமும் விளக்கமும் உள்ளவர்களாக யிருக்க வேண்டு மென்ற விதியொன்று மில்லை. ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் **லாஇலாஹ இல்லல்லாஹு** என்ற தவ்ஹீது கலிமாவை முதன் முதல் கல்வியில்லாத உம்மிகளா யிருந்த மனிதர்களுக்கே எடுத்தோதி தவ்ஹீதை வெளிப்படுத்தினார்கள். அதைச் செவியுற்ற அந்த ஜனங்கள் பாஷைக் காரரா யிருந்தபடியால் அவர்கள் அதன் பொருளை உள்ளபடி உணர்ந்த நிமித்தம் **முஹம்மது** (ஸல்-அம்) **எல்லாத் தெய்வங்களையும் ஒரே தெய்வமென்று ஆக்கிவிட்டார்!** என்று வியப்பாகச் சொன்னார்கள்.



பிறகு ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சத்தியம் செய்து "முஹம்மதுடைய ஆத்மா யார் வசமிருக்கிறதோ அந்த ஆண்டவன் மேல் ஆணையாக நீங்கள் நீர் மொள்ளும் பாத்திரத்தை ஒரு கயிற்றிற் கட்டி கீழ் பூமியாகிய பாதாளத்துக்கு இறக்குவீர்களாகில் அது நிட்சயமாக அல்லாவின் மேல் விழும்" என்று மறுமுறை தவ்ஹீதை வெளிப்படுத்தினார்கள். இவ்விதம் வெளிப்படுத்தின தவ்ஹீதின் மேல் அத்தாக்ஷியாக **அவனே முன்னவன், அவனே பின்னவன், அவனே வெளியாயிருப்பவன், அவனே உள்ளீடா யிருப்பவன்** என்ற வேத வாக்கியத்தையும் எடுத்தோதினார்கள். பிறகு குர்ஆனில் கூறப்பட்டுள்ள **லவ்கான பீஹிமா ஆலிஹத்துன் இல்லல்லாஹு லபஸதத்தா** என்பதும் இன்னுமிதுபோன்ற பிறவுமான தலீலுகளைக் கொண்டு மூன்றும் முறை தவ்ஹீதை வெளிப்படுத்தினார்கள்.

ஆகவே ஆரம்ப காலத்தில் தவ்ஹீதுடைய மஸ்அலா தலீலுகளைக் கொண்டு வெளியானதில்லை யென்றும் மவ்ஹிபத் தென்னும் அருளிறையாலும் மஃரிபத் தென்னும் ஞானோதயத்தாலுமே அது வெளியாயிற் றென்றும் அந்தியத்திலுங்கூட அது சாதனையாலும் அரிய பிரயாசையாலும் வெளியாவதல்ல வென்றும் மேலும் ஆரிபுகளுக்கு உண்டாகிற ஹாலாத் தென்னும் பரவச நிலைமைகளில் வெளியாவ தென்றும் சிலர் சொல்வது பிசகென்றொழிந்தது.

இன்னும் அல்லாவிலே ஐக்கியமாவதற்குச் செல்ல வேண்டிய ஸ்தானங்களில் ஓர் ஸ்தானமாகிய பனாவுடைய மகாமை அடையாதிருக்கிறவரையில் முவஹ்ஹிதானவன் வஹ்தத்துல் வுஜூதை வெளிப்படுத்தல் கூடாதென்றும் அந்த மகாமை அடைந்ததற்கு அடையாளம் அவன் எந்த கோலங் கொள்ள நாடுகிறானோ அந்த கோலத்தில் தன்னை ஆக்கிக் கொள்வதும், உதாரணமாக பன்றி யுருவெடுக்க நாடினால் பன்றியாய்ப் போவதும் மலத்தைத் தின்பதும் பிறகு முன்போல் தன் சுயவடிவமான மனித ரூபத்துக்கு வந்து விடுவதுமாம் என்று சிலர் சொல்வதும்,

இன்னும் முவஹ்ஹிதானவன் அந்தரங்கத்தில் மன்சூரைப் போல் ஹக்கும் கல்கும் ஒன்றென்பதை ஒப்புக் கொண்டவனாய் பகிரங்கத்தில் அபூஹனீபாவைப் போல் அதைப்பற்றி ஒன்றுஞ்

சொல்லாமல் மவுனஞ் சாதிப்பவனாய் இருக்க வேண்டு மென்று சிலர் சொல்வதும்,

இன்னு மிவைபோல்வன பிறவுமான அநேக வார்த்தைகள அவாம் ஜனங்களில் வழங்குவதும் ஆகிய இந்தச் சொற்களெல்லாம் கற்பனைகளும் மருள் வாக்கியங்களுமா யிருக்கின்றன. இதற்கெல்லாம் காரணம் யாதெனில் கலிமத்துத் தவ்ஹீதில் கருதிய பொருள் இன்ன தென்று உணர்ந்து கொள்ளாத குற்றமே யாம்.

பனாவுடைய மகாமை அடைந்தால் தான் வஹ்தத்துல் வுஜூதை வெளிப்படுத்தலா மென்றும் இல்லாவிட்டால் கூடா தென்றும் வாதிப்பவர் தம்முடைய வாதத்திற்கு ஆதாரமாக குர்ஆன் அல்லது ஹதீதில் நின்றும் யாதொரு பிரமாணம் காண்பிக்கும்படி கேட்கப்படுவார்.

இனி வஹ்தத்துல் வுஜூதை வெளிப்படுத்தல் கூடா தென்பது உம்மத்துடைய உலமாக்கள் ஒற்றோர்மித்த ஓர் காரியமா யிருக்கிற தென்றால்; இந்த ஓர்மிப்பானது ஹக்குக்கு கல்கு வேறான தனிமுதல் என்பதின் பேரில் ஓர்மித்த ஓர்மிப்பு போல் வதேயாம். இதை விட்டு நாம் அல்லாஹ்வினிடம் காவல் தேடுகிறோம்.

வெளிப்படுத்தலை ஹாலத் தென்னும் பரவச நிலைமையின் மேல் பொருத்தினது சரிதான். அதாவது அந்த நிலைமையில் இம்மாதிரியான ஒரு வார்த்தை வெளிப்படலாம் என்பதாம். ஆனால் அந்த வார்த்தையில் அல்லாஹூ தஆலாவை ஒரு மனிதனில் மட்டுப்படுத்தல் என்னும் ஐயமிருக்கிறது. உதாரணமாக ஷைகுல் ஆரிபீன் பாயஜீதுல் புஸ்தாமி றஹிமஹுல்லா அவர்கள் பரவச நிலைமையில் **சுப்ஹானீமா அஃலமஷானீ** என்றும்;

لا إله إلا أنا فاعبدوني

**லாஇலாஹ இல்லா அனா ஃபஃபுதூனீ** என்றும் சொன்னார்கள். இந்த வாக்கியங்களுக்கு அர்த்தம் "எனக்கே பரிசுத்தம். ஆ என் காரியம் என்ன மகிமையுள்ளதா யிருக்கிறது! என்னை யன்றி ஒரு இலாஹும் இல்லை. என்னை வணங்குங்கள்" என்பதாம். இதனால் விளங்கப்படுவ தென்ன வென்றால் அவர்கள் அல்லாஹூ தஆலாவைத் தங்களில் மட்டுப்படுத்தினார்க ளென்பதும் தங்கள் சமுகத்திலிருந்த மற்றவர்களைத் தங்கள்



அடிமைகளாக்கினார்க ளென்பது மாம். இப்படி அவர்கள் அல்லாவைத் தங்களில் மட்டுப் படுத்தினதின் பேரில் அறிவிப்பது அவர்களால் வெளியான இன்னு மொரு வாக்கியமாம். அதாவது:— ليس في جبتي إلا الله

**லைஸ பீஜுப்பத்தீ இல்லல்லாஹ்** (என் சட்டைக்குள் அல்லாவே யன்றி வேறொன்றில்லை) என்பதாம். இதையே மஸ்னவியில் மவ்லானா ரூம் குத்திஸ ஸிர்ருஹூ அவர்கள் சொல்லுகிறார்கள்.

## மஸ்னவீ பைத்து.

கேஸ்த்தந்தர் ஜுப்பஅம் இல்லா குதா
சந்து ஜோயீ தர்ஜமீனோ தர்ஸமா

نیست اندر جبه ام الا خدا    چند جوئي در زمین و در سما

இந்த பைத்தினால் விளங்கப்படுவதென்ன வென்றால் என்னோடு ஹாலிரா யிருக்கிற நீங்கள் என் அடிமைகளா யிருக்கின்றீர்கள், நான் மாத்திரம் அல்லாவா யிருக்கிறேன் என்பதாம். இந்தச் சொல்லிலும் மேற்கூறிய சந்தேக மிருக்கிறது. அதாவது அல்லாஹூ தஆலாவைத் தங்களில் மட்டுப் படுத்தினார்க ளென்ற ஐயமாம். பின்னர் அவர்கள் தங்கள் அந்தியகாலத்தில் "என் ஆண்டவனே நான் எப்போதாவது **சுபுஹானீ மாஅல்லமஷானீ** என்று சொல்லி யிருப்பேனாகில் நான் மஜூஸியா யிருக்கிறேன். ஆதலால் நான் **அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹூ வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரசூலுஹூ** என்னுங் கலிமாவைச் சொல்லி, என்னால் நிகழ்ந்த இஷ்ராக்காகிய துன்னார் என்னும் பூணூலை இதோ அறுத்து விடுகிறேன்" என்று சொன்னார்கள். "சுபுஹானீ மாஅல்லம ஷானீ" என்று அவர்கள் சொல்லிய சொல்லானது அல்லாஹூ தஆலாவைத் தங்களில் ம ப் படுத்தினார்க ளென்ற சந்தேகமுள்ளதா யிருந்ததினாலேயே. அப்படி மட்டுப்படுத்தினது குற்ற மென்றறிந்து அவர்கள் தவ்பா செய்தார்கள். இல்லா விட்டால் அது எதார்த்தமான சொல்லே யாம். அதில் யாதொரு ஷிருக்கும் இல்லை. பின்பு மஜூஸி என்பதும் பூணூலென்பதும் எங்கே யிருக்கிறது.

இதன் சாராம்சம் யாதெனில், **லாஇலாஹ இல்லல்லாஹு** என்பதற்கு இலக்கியார்த்தமான வஹ்தத்துல் வுஜூதை எல்லா நிலைமைகளிலும் வெளிப்படுத்தலாம். அல்லாஹு தஆலாவைக் குறிப்பான ஒரு வஸ்துவில் கட்டுப்படுத்த லென்னும் இஷ்ராக்கின் சந்தேகமுள்ள வாக்கியத்தைக் கொண்டு பேசுவது கூடாது. ஆனால், மனம் அசையாமல் நினைவற்று அல்லாஹ்விலே ஐக்கியமான பரவச நிலைமையில் அப்படிப் பேசினால் பேசினவன் ஷரகின்படி மன்னிக்கப்பட்டவனா யிருக்கிறான். பரவச நிலைமை யல்லாத மற்ற நிலைமைகளில் பேசுவானாகில் அதில் ஷிர்க்கு வந்து லபிக்கிறபடியால் அவன் குற்றவாளியாவான். ஷெய்கு பாயஜீதுல் புஸ்தாமி றஹிமஹுல்லா அவர்கள் பனாவுடைய மகாமை அடைந்த பூரண ஞானியா யிருந்தார்கள். அவர்களால் அந்த வாக்கியம் பரவச நிலைமையில்தான் வெளிப்பட்டது. அப்படி யிருந்தும் அவர்கள் அந்த நிலைமையி லிருந்து மாறி உணர்வை யடைந்த பிறகு அந்த வாக்கியம் தங்களால் வெளிப்பட்ட தென்று தெரிந்து இஸ்திக்பாரு செய்து ஈமானைப் புதுப்பித்து அல்லாஹு தஆலாவுடைய வஹ்தானியத்தையும் அவன் ரஸூலுடைய ரிஸாலத்தையும் அப்தியத்தையும் கொண்டு ஷஹாதத்து கலிமா ஓதினார்கள். எதற்காக வெனில் பெருமை தங்கிய ஷரீஅத்தின் அதபுகள் தங்கள் அநுஷ்டானத்தி லிருந்து நீங்காமலிருக்கவும் அங்கிருந்து அந்த வாக்கியத்தைச் செவியுற்ற பனாவுடைய மகாமை அடையாத முரீதுகள் அல்லாஹு தஆலாவை யாதொன்றில் மட்டுப் படுத்த லென்னும் இஷ்ராக்கின் சந்தேக முள்ள பேச்சுகளை விட்டுப் பேணுகிறவர்களா யிருக்கவுமே யாம்.

அல்லாஹு தஆலாவைத் தன்ஜீஹிலோ அல்லது தஷ்பீஹிலோ மட்டுப்படுத்துவதுபோல் குறிப்பான யாதொரு வஸ்துவில் மட்டுப் படுத்தி அதுவே தங்களுடைய சுத்த ஈமான் என்றும் தவ்ஹீது என்றும் எண்ணியிருக்கிற மனிதர்களின் மேல் நான் மிகவும் பரிதாபப்படுகிறேன்.

حق منزه از تن ومن باتنم

சுவால்:—**ஹக்முனஸ்ஸா அஸ்தனோமன் பாத்தனம்** இது ஷெய்கு பாயஜீதுல் புஸ்தாமி றஹிமஹுல்லா அவர்கள் பரவச நிலைமையல்லாத சாதாரண நிலைமையில் சொன்ன ஓர் வாக்கியத்தின் மொழி பெயர்ப்பாக மஸ்னவியில் மவுலானா ரூம் ஜலாலுத்தீன் றஹ்மஹுல்லா அவர்கள் எடுத்துச் சொன்ன ஒரு பாசுரத்தின் முதலடியா யிருக்கிறது. இதன் பொருள் ஹக்குத் தஆலா தூலாதி சரீரங்களற்ற தூய்யவன். நானோ சரீரத்தோடிருக்கிறேன் என்பதாம். இதனாலும் அவர்கள் அல்லாஹு தஆலாவைத் தன்ஜீஹில் மட்டுப்படுத்தினார்க ளென்பது விளங்கப்படுகிறது. பின்னர் அங்ஙனம் மட்டுப்படுத்தல் எப்படி ஷிர்க்குக்குக் காரணமாகும்?



ஜவாபு:—ஹக்கு தஆலா சரீரமற்ற தூய்யவன். நான் சரீரத்தோடிருப்பவன் என்று ஷெய்கு றஹ்மஹுல்லா அவர்கள் சொல்லிய இந்த வாக்கியமானது ஹக்குத் தஆலாவினது இத்லாகுடைய மர்த்தபாவை அதாவது அவனது அதீத தத்சொரூப அகண்ட பரிபூரண நிலைமையை நோக்கினதாய் அல்லது அவனைத் தன்ஜீஹில் மாத்திரம் மட்டுண்டவன் என்று நினைக்கும் தேறாத முரீதுகளின் கொள்கையை நோக்கினதாய் இருக்கிறது.

சுவால்:—ஷெய்கு றஹிமஹுல்லா அவர்கள் தங்கள் முரீதுகளின் தப்பு கொள்கைகளைத் திருத்தி அவர்களுக்கு உண்மையை விளக்கவேண்டிய கடமையுள்ளவர்களா யிருக்க, அவர்களின் தப்பு கொள்கைகளுக்கு நேராகவும் உண்மைக்கு மாறாகவும் பேசினது என்ன பயனைக் கருதியோ வெனின்,

ஜவாபு:—ஷெய்கு றஹிமஹுல்லா அவர்கள் தேறாத முரீதுகளின் உறுதியான வஹ்மு என்னும் தப்பு கொள்கை நீங்கி நிர்மூலமாக வேண்டு மென்று முதலில் தங்கள் அகீதாவின்படி உண்மையை எடுத்துரைத்தார்கள். அது அவர்களுக்குப் பயன் படாமல் விபரீத மயக்கத்தை யுண்டாக்கினபடியால் அவசர நிமித்தம் அவர்களை அக் கொள்கையின் பேரிலேயே விட்டு

چون چنین گویم ببایدکشتنم **சூஞ்சுனீங்கோயம் பிபாயத் குஷ்த்தனம்.** இனி எப்போதாவது இவ்விதம் சொல்வேனாகில் என்னை கத்லு செய்ய வேண்டு மென்று அந்த முரீதுகளுக்கு அநுமதி கொடுத்தார்கள். பிறகு ஷெய்கு றஹிமஹுல்லா அவர்கள் தங்கள் பரவச நிலைமையில் முன்போல் மொழிவதைக் கேட்ட அந்த முரீதுகள் தங்கள் மருகூபியான அகீதா உண்மை யென்ற தடிப்பினால் ஷெய்கவர்கள் கொடுத்திருந்த அநுமதியைக் கொண்டு

ஷெய்கு றஹ்மஹுல்லா அவர்களைப் பட்டயங்களால் வெட்டத் துணிந்தார்கள். அவர்களில் அனேகர் காயங்களால் இரணப் பட்டும் சிலர் வெட்டுண்டும் போனார்கள். அப்போது உண்மை இன்னதென்று அவர்கள் நன்றாய்த் தெரிந்து கொண்டார்கள். மேலும் இந்த வாக்கியத்தைச் சொன்னது யார் என்றும், இந்தச் சம்பவத்தின் எதார்த்தம் என்ன வென்றும் நேரே கண்டுகொண்டார்கள். பின்பு அவர்கள் தங்கள் தப்பு கொள்கையினின்று நீங்கி, தங்கள் மெஞ்ஞான குருவாகிய ஷெய்கு ரஹிமஹுல்லா அவர்கள் உபதேசித்த மெய்ப் பொருளை உணர்ந்து ஐயமகன்றார்கள். (வஹுவல் லத்தீபுல் கபீர், அவனே சூக்ஷமஞான சொரூபி.)

ஆகவே ஹக்கு தஆலா சரீரமற்ற தூய்யவன் என்ற சொல்லானது மேலே விவரித்து வந்தபடி இத்லாகுடைய மர்த்தபாவையாவது முரீதுகளின் பக்குவத்தையாவது நோக்காமல் சொல்லப்பட்டதா யிருந்தால் அந்தச் சொல் உண்மைக்கு விரோத மென்றாகும். ஏனெனில் எல்லா இலாஹுகளும் அல்லது லாத்து, உஸ்஖ா, மனாத்து, சூரியன், சந்திரன் மற்ற கிருஹங்கள் நக்ஷத்திரங்கள் முதலான அநேகம் இலாஹுகளும் சடமான சரீரங்களேயாம். அவைகள் அல்லாவின் வேறாகாமல் அல்லாவாகவே இருக்கின்றன வென்றும் **லாஇலாஹ இல்லல்லாஹு** வென்ற கலிமாவின் அத்தாக்ஷியால் விளக்க மாகின்றது. பின்பு அல்லாஹு தஆலாவைத் தன்ஜீஹில் மாத்திரம் மட்டுப்படுத்த லென்பது மருண்டவர்களின் மருக்ஷியி லன்றி எதார்த்தத்தில் எங்கே யிருக்கிறது? இதேபோல் **என் சட்டைக்குள் அல்லாவே யன்றி வேறொன்றில்லை** என்று ஷெய்கு றஹிமஹுல்லா அவர்கள் சொன்ன சொல்லில் நின்றும் அல்லாஹு தஆலாவைத் தஷ்பீஹில் மட்டுப் படுத்த லென்பதும் மருண்டவர்களின் மருக்ஷியே தவிர எதார்த்தமல்ல.

இன்னுமந்த பாசுரத்தின் முதலடியில் பொருந்திய வாக்கியமானது மேலே சொல்லி வந்த நோக்கமே உள்ளதென்பதற்கு அதன் இரண்டாம் அடியாகிய **சூஞ்சுனீங்கோயம்பிபாயத் குஷ்த்தனம்** என்பது அத்தாக்ஷியா யிருக்கிறது. (இதன் அர்த்தம் மேலே சொல்லப்பட்டிருக்கிறது) இந்த இரண்டாவது அடியும் ஷெய்கு றஹிமஹுல்லா அவர்களுடைய முரீதுகளின்



அகிதாவை நோக்கியதா யிருக்கிறது. ஹகீகத்து, தரீகத்துகளை நோக்கினதல்ல. ஏனெனில் ஹகீகத்தையும் தரீகத்தையும் உடையவர்களின் சித்தாந்தம் ஹக்கும் கல்கும் ஒன்றேயன்றி வேறல்ல வென்பதா யிருப்பதினா லென்க. இன்னும் அது ஷரீஅத்தையும் நோக்கினதல்ல. ஏனெனில் அல்லாஹு தஆலா **லாஇலாஹ இல்லல்லாஹு** என்று அருளிய உபதேச வாக்கியத்தினால் ஹக்கும் கல்கும் ஒன்றே என்பது தான் ஷரீஅத்தின் மூலக் கொள்கையா யிருக்கிறது. ஆகவே இனியொரு காலம் நான் இவ்விதம் சொல்வேனாகில் என்னைக் கொல்ல வேண்டும் என்று (அவர்களின் அகிதாவை நோக்கி யல்லாது) இப்படிச் சொல்வது ஷரீஅத்தில் தான் எப்படி ஆகும்? தம்மை நியாய மில்லாமல் கொல்லும்படி அனுமதி கொடுப்பது ஷரக்குக்கு விரோதமா யிருக்கிறதே.

மொத்தத்தில் வஹ்தத்துல் வுஜூது மஸ்அலாவை வெளிப்படுத்தல் கூடாது என்று தீர்ப்பளிக்கும் பத்வாவானது முதலாவது அல்லாவின் பேரிலும் அவனுடைய ரசூலின் பேரிலும் அவதூறான கட்டுரையா யிருக்கிறது. இரண்டாவது பூரண பதவியை அடைவதற்குச் சாதகமான மார்க்க வாசலை அடைத்து கஷ்டமடைவதற் கேதுவான வழியைத் திறப்பதா யிருக்கிறது. ஏனெனில் வஹ்தத்துல் வுஜூதை சாமானிய ஜனங்களிடத்தில் வெளிப்படுத்துவதில் பெரும் பிரயோஜன மிருக்கிறது. அவர்களில் சலீமான கல்பை யுடையவனு மிருப்பான். அவன் ஹக்குடைய கலிமாவைச் சிந்தை சிதறா நோக்கமாகச் சிரவணஞ் செய்து சிந்தித்துத் தெளிவான். ஆகவே வஹ்தத்துல் வுஜூதை வெளிப்படுத்துவது கொண்டு இழிந்தோன் உயர்ந்தோனும் மஹானுமாவான். அதை வெளிப்படுத்தினவனுக்குப் பரோபகாரமென்னும் நல்லெண்ண மிருக்குமாகில் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அருளிச் செய்த நற்பதவியைப் பெற்றுக் கொள்வான். அந்த ஹதீசு இது "அல்லாவின் மீதாணையாக உன்னைக் கொண்டு ஒரு மனிதனுக்கு அல்லாஹு தஆலா நேர்மார்க்கத்தைக் காட்டுவதானது உனக்குச் சிவப்பு ஒட்டகங்கள் பல விருப்பதினும் அது உனக்கு அதிக நன்மையா யிருக்கும்" என்பதே. இந்த ஹதீசு சஹீஹ்புகாரி, சஹீஹ்முஸ்லிம் இரண்டிலு மிருக்கிறது. அறபு தேசத்தில் ஒருவனுடைய சுயாதீனத்தில்

சிவப்பு ஒட்டகங்களிருப்பது அவனது மேன்மைக்கும் கனதிக்கும் பெருமைக்கும் அறிகுறியா யிருக்கும். மேற்கூறி வந்த நியாயத்தினால் வஹ்தத்துல் வுஜூதை மறைப்பதினும் வெளிப்படுத்துவதே உசித மென்று விளக்கமாயிற்று.

மெய்தான் அதை வெளிப்படுத்தினால் தனக்கு ஏதாவது இடரெய்து மென்கிற பயத்தின் மிகைப்பால் வெளிப்படுத்தாது ஒருவாறு மவ்னமா யிருப்பானாகில் அவன் குற்றவாளியாகான். ஏனெனில், வினா நிகழ்ந்த பிறகும் வேண்டும்போதுமே யல்லாமல் அதை வெளிப்படுத்தல் அவனுக்கு விதியல்லவாதலினாலும்

لا ضرر ولا اضرار في الاسلام

**இஸ்லாமில் ஒருவன் சங்கட மேய்தலும் ஒருவருக்கு சங்கட மெய்துவித்தலும் இல்லை** என்று ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அருளிய திருவாக்கிருப்பதினாலு மென்க. அன்றியும் தனக்கு இடர் சம்பவிக்குமென்ற பயத்தினால் அதை வெளிப்படுத்தாமல் மவ்னமா யிருப்பது எதனாலென்றால் மிகைப் பென்னும் அக்கிரமம் கல்வி யில்லாத மூடர்களுக்கும் ஈனபுத்தியுள்ள அற்பர்களுக்கும் இயற்கையாயுள்ளது. அவர்கள் தவ்ஹீதின் உண்மையை உணரவில்லை. அதனால் முவஹ்ஹிதாகிய அத்வைத ஞானியை மார்க்கங் கெட்ட முல்ஹிதென் றெண்ணி அவரை இம்சிக்கத் துணிவார்கள். உதாரணமாக:—ஜனாப் மவ்லானா அவர்கள் மஸ்னவி ஷரீபிலிருந்து கீழ்க்காணும் பைத்துகளை நகல் செய்திருக்கிறார்கள்.

چون سفیهان را بود کار دکیا     لازم آمد یقتلون الانبیا
چونکه حکم اندر کف رندان بود     لاجرم ذوالنون در زندان بود
چون قلم در دست غداری بود     لاجرم منصور در داري بود

சூன்ஸபீஹா ராபுவத் காரத் கியா
லாஸிம் ஆமத் யக்துலூனல் அன்பியா
சூங்கெஹுக் மந்தர் கபே ரிந்தாம் புவத்
லாஜரம்சுன் னூன்தர் ஜிந்தாம் புவத்
சூங்கலம்தர் தஸ்தெ கத்தாரே புவத்
லாஜரம்மன் சூர்தர் தாரே புவத்.



இதன் பொருள்:—அற்பர்களின் கையில் அதிகார வாளிருந்ததால் அவர்கள் அன்பியாக்களை கத்லு செய்யும் விதி வந்தது. தங்கள் மயக்கபுத்தி ஒப்பாத உண்மையை மறுப்பவர்களுக்கு அதிகார மிருந்த தினால் சுன்னூனுல் மிஸ்ரீ றஹிமஹுல்லா அவர்கள் மறியற் சாலைக்குப் போகும்படி நேரிட்டது. விசுவாசமற்ற பெருந்துரோகியின் கையில் பேனா யிருந்ததினால் மன்சூர் ஹல்லாஜி றஹிமஹுல்லா அவர்கள் கழுமாத்திலானார்கள் என்பதாம்.

சுவால்:—சலபுசாலிஹு என்னும் பூர்வகாலப் பெரியோர்கள் வஹ்தத்துல் வுஜூது மஸ்அலாவை மறைக்கும் வழக்கமுள்ளவர்களா யிருந்தார்களே தவிர அதை வெளிப்படுத்தும் வழக்க முள்ளவர்களா யிருக்கதில்லை என்பாயாகில்,

ஜவாபு:—நாம் சொல்லுகிறோம். முதலாவது சலபு சாலிஹுகள் அதை மறைத்தார்க ளென்பதை நாம் அங்கீகரிக்கோம். ஏனெனில், சுன்னூனுல் மிஸ்ரீ றஹிமஹுல்லா அவர்கள் ஓர் மதுஹபுக்கு இமாமாகிய மாலிகுபுனு அனசு றஹிமஹுல்லா அவர்களின் தில்மீதா (சீடரா) யிருந்தார்கள். ஆகவே அவர்கள் சலபு சாலிஹுகளில் ஒருவரா யிருந்தார்கள். அவர்கள் வஹ்தத்துல் வுஜூதை வெளிப்படுத்தினார்கள். அதை அவாம் என்னும் சாமானிய ஜனங்கள் மறுத்து அவர்களை மஜ்னூன் (பித்தன்) என்று சொன்னார்கள். இனி இரண்டாவது:—சிலர் வெளிப்படுத்தாதது அதை மறைப்பது கடமை என்றல்ல. மேலும் வெளிப்படுத்தினால் சாமானியர்களுக்கு அதை விளங்கிக் கொள்ள சக்தி யில்லை யாதலால் அது விளங்காதன்றோ அல்லது மன்சூர் அலைஹிர் றஹ்மா அவர்களுக்கு நேர்ந்தது போல் வெளியிடுபவருக்கு ஏதாவது இடர் சம்பவிக்கு மென்றோ அவர்கள் அறிந்ததினால் வெளியாக்கவில்லை. மஸ்னவி ஷரீபில் மவுலானா ரூம் குத்திஸ ஸிர்ருஹு அவர்கள் சொல்லிய ஓர் வாக்கியம் மேலே நாம் சொல்லிய சொல்லுக்கு நேர்பாடா யிருக்கிறது. அது வருமாறு:—

در نیابد حال پخته هیچ خام     پس سخن کوتاه باید والسلام

## பைத்து.

தர்யாபத் ஹாலெபுக்தா ஹேச்காம்
பஸ்ஸுகுன்கோ தாஹ்பாயத் வஸ்ஸலாம்.

இதன் பொருள்:—தத்வ விசாரணையில் தேர்ந்த அத்வைத
சித்தாந்திகளாகிய பக்கா மனிதருடைய வார்த்தையை அவ்
விசாரணை யில்லாத துவித சித்தாந்தியாகிய கச்சா மனிதன் ஒரு
வனும் உணர்ந்து கொள்வான். ஆதலால் பேச்சை (விரிக்காமல்)
சுருக்க வேண்டுவது அவசியம் வஸ்ஸலாம் என்பதாம்.

## இரண்டாவது பயன்.

இலாஹானது அல்லாவின் வேறான வுஜூதென்று கொள்
ளும் கொள்கையிலேயே இஷ்ராக்கு கட்டுண்டிருக்கிற தென்று
முற்கூறி வந்த விசாரணைகளால், يجعلون له اندادا

**யஜ்அலூன லஹூ அன்தாதன்** (அவனுக்கு நித்துகளை
ஆக்குகிறார்கள்.) என்று அல்லாஹு தஆலா அருளிய திருவச
னத்தின் உண்மை வெளியா யிற்று. இல்லையாயின் அதாவது
இலாஹு வேறு வுஜூது என்று கொள்ளும் கொள்கையில்
இஷ்ராக்கு கட்டுண்டில்லையாயின் பின்னர் அவனுக்கு நித்துகளை
ஆக்குகிறார்கள், என்ற சொல் எப்படி உண்மையாகும்? ஏனெனில்
அறபி பாஷையில் நித்து என்பதற்கு அர்த்தம் கவுகு என்னும்
சுஜாதியில் ஒன்றுக்கு மற்றொன்று ஒத்திருப்பதாம். அறபு முஷ்ரி
குகள் இலாஹுகளை அல்லாவுக்கு ஒப்பானவைகள் என்று ஒரு
போதும் சொல்லவில்லை. அல்லாஹு தஆலாவுடைய திரு
வசனமே இதற்கு சாக்ஷியா யிருக்கிறது. அதாவது **வானங்
களையும் பூமியையும் சிருட்டித்தவன் யார் என்று முஷ்ரி
குகளை நீர் கேட்டால் திடனாக அவைகளை அல்லாஹு
தஆலா சிருட்டித்தான் என்று அவர்கள் சொல்வார்கள்**
என்பதே. சிருட்டித்தவன் சிருட்டிகளுக்கு ஒப்பாயிரான். (என்
பது அவர்களுக்குத் தெரிந்த விஷயந்தான்.) ஆதலால் அவனுக்கு
நித்துகளை (சமானர்களை) ஆக்குகிறார்கள் என்று அல்லாஹு
தஆலா அருளிய திருவசனம் மெய்யென்றாகாமல் மயக்கத்தைக்
கொடுக்கிறது. ஆதலால் அந்த திருவசனம் மெய்யென்ற கார
ணத்தை விரித்து விளக்க வேண்டிய தவசியமா யிற்று. அந்தக்
காரணம் யாதெனில் ஆக்கல் என்பது **பஸீத்து** என்றும் முரக்
கபு என்றும் இரண்டு வகுப்பா யிருக்கிறது. பஸீத் என்னும்
ஆக்கலுக்கு ஒரே செயப்படு பொருள் போதும். இதற்கு அல்
லாஹு தஆலாவுடைய திருவசனத்தில் உதாரணமாவது



جعل الظلمات والنور

**அவன் இருட்டையும் வெளிச்சத்தையும் ஆக்கினான்**
என்பதாம். இனி முரக்கபு என்னும் ஆக்கலுக்கு இரண்டு
செயப்படு பொருள்கள் வேண்டும். அதுவும் புறவாக்கல் அக
வாக்கல் என்று இருவகைப்படும். ஆக்கியோனின் ஆக்கவினை
செயப்படு பொருளில் வெளிப் படையாகத் தோன்றுவது புற
வாக்கல் என்றும் செயப்படு பொருளில் ஆக்கவினை தோன்றாமல்
ஆக்கியோனின் அகத்தில் நிகழ்வது அகவாக்கல் என்றும் பெயர்
பெறும். இனி புறவாக்கலுக்கு அல்லாஹு தஆலாவுடைய
கலாமில் நின்றும் உதாரணமாவது அவன்;

جعل الشمس ضياء والقمر نورا

**சூரியனைப் பிரகாசமாகவும் சந்திரனை ஒளியாகவும்
ஆக்கினான்** என்பதாம். அகவாக்கலுக்கு அவனுடைய கலாமில்
நின்றும் உதாரணமாவது:—**அவர்கள் அவனுக்கு நித்துகளை
ஆக்குகிறார்கள்** என்பதாம். இந்த வாக்கியத்தில் ஆக்கல்
அகவாக்கலா யிருப்பது எப்படி யென்றால் முஷ்ரிகுகள் தங்கள்
இலாஹுகளை அல்லாஹ்வின் வேறாக நினைக்கிறார்கள். ஆகவே
அவர்கள் ஒரே வஸ்துவைத் தங்கள் அகத்தில் இரண்டு
வஸ்து வாக்கினவர்களாகிறார்கள். அதாவது ஒரு பொருளை
இரண்டு பொருளாகக் காணும் அஹ்வல் என்னும் சாரக்கண்ணன்
போல் ஒரே மெய்ப் பொருளான ஹக்கு தஆலாவை ஒன்றல்லவாக
அதாவது வுஜூதில் இரண்டாகக் காண்கிறார்கள். பின்னர்
திடனாக அஹ்வலானவன் ஒரு சந்திரனை இரண்டாக்குகிறான்.
அதாவது இரண்டென்று நினைக்கிறான். ஆகவே அவன் சந்திர
னுக்கு ஒரு நித்தை ஆக்குகிறான். அதாவது சந்திரன் போன்ற
ஒரு சந்திரனை உளதாகக் காண்கிறான். இதேபோல் முஷ்ரிகுகள்
அல்லாஹு தஆலாவினது வுஜூதில் அவனுக்கு நித்துகளை
(சமானர்களை) ஆக்குகிறார்கள். அதாவது இலாஹுகள் எதார்த்
தத்தில் அல்லாஹ்வாகவே யிருக்க அவைகளை அல்லாஹ்வின்
வேறான வுஜூதுகள் என்று முஷ்ரிகுகள் தங்கள் இருதயத்தில்
எண்ணி யிருக்கிறார்கள்; ஆகவே அவனுக்கு நித்துகளை ஆக்கு
கிறார்கள் என்றது மெய்யாயிற்று.

இப்படி ஒன்றைப் பலவாக்கல் என்னும் யுக்தியின் பேரில் பலவை ஒன்றாக்கலையும் அல்லாஹு தஆலாவுடைய திருவசனத்தால் ஒத்திட்டுப்பார். அதாவது எல்லா **இலாஹுகளையும்** (முஹம்மது) **ஒரே இலாஹு என்று ஆக்கி விட்டார்? மெய்யாக இது ஒரு விந்தையான பேச்சாயிருக்கிறது** என்பதாம். முஷ்ரிகுகளுடைய வஹமுக்கு நேராக இந்த வாக்கியத்துக்குப் பொருள் யாதெனில், முஹம்மது எல்லா இலாஹுகளையும் ஒரே இலாஹு தான் என்று நினைக்கிறார், அதாவது அவை அல்லாஹ்தான் என்று நினைக்கிறார்? இந்த எண்ணம் உண்மையை ஒத்திருக்குமாகில் திடனாக இது ஒரு விந்தையான பொருளாகவே யிருக்கிறது என்பதாம்.

ஆனால் எதார்த்தத்தில் இதற்குப் பொருள் யாதெனில் திடனாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் இலாஹுகளை எல்லாம் ஒரே இலாஹுதான் அல்லது இலாஹுகள் அல்லாஹ்தான் என்று திடனாக அறிந்திருந்தார்கள் என்பதாம். அதாவது அவை பலவா யிருக்கின்றன வென்பது வஹ்மு என்னும் மயக்க புத்தியிலேயே யல்லாமல் உண்மையில் இல்லை, யாவும் ஒன்றே என்ற இந்த அறிவே எதார்த்தம் முஷ்ரிகுகள் போன்ற மருளாளர்கள் இதை விந்தையாக நினைத்தாலுஞ் சரி.

## மூன்றாவது பயன்,

அறிந்துகொள்:— **லாஇலாஹ இல்லல்லாஹு** என்ற கலிமாவில் இலாஹு என்பதற்குத் தாவீல் செய்து அதை வேறு பொருளில் திருப்புவதும் மவுஜூதுன் என்பதை அதன் தொக்கிய பயனிலை யாக்குவதும் உம்மத்துடைய உலமாக்கள் ஒருங்கு சேர்ந்து ஒப்புக் கொண்ட ஓர் காரியமா யிருக்கிற தென்றும் இன்னும் ஹதீஸில் **என் உம்மத்துகள் வழி கேட்டின்மேல் ஒன்று சேரார்களாதலால் நீங்கள் பெருங் கூட்டத்தைப் பற்றி பிடியுங்கள்** என்று திடனாக வந்திருக்கிறதென்றும் எண்ணப்படுகிற இந்த எண்ணமானது பின் வரும் ஞாயத்தால் மறுத்துத் தள்ளப்பட்டதா யிருக்கிறது. அதாவது:—உலமாக்கள் ஒருங்கு சேர்ந்து ஒப்புக் கொள்வதற்கு இரண்டு காரியம் அவசியம். முதலாவது எந்தக் காரியத்தின்மேல் ஒருங்கு சேர்கிறார்களோ அந்தக் காரியம் ஷாலைச் சேர்ந்த ஓர் காரியமா யிருக்க வேண்டும். இரண்



டாவது:—ஒரு விஷயத்தைச் சிக்கறுத்து விளக்கவும் அதற்கு முடிவு கூறவும் திறமை வாய்ந்த **அஹ்லுல் ஹல்லிவல் அக்தி** களாகிய உலமாக்கள் ஒரே காலத்திலாவது அதை அடுத்தடுத்து வந்த சமீபகாலங்களிலாவது அக்காரியத்தின் மேல் ஒருங்கு சேர வேண்டும்.

ஆனால் முதலாவது காரியமோ கலிமாவில் இலாஹு வுக்குத் தாவீல் செய்து அதை வேறு பொருளில் திருப்புவது மூஹ்கமுக்கு விரோதமாதலால் அது ஷாருக்கு விரோதமான காரியமா மென்று நீ தெரிந்து கொண்டாய். இன்னும் மவுஜூது தென்னும் பதத்தை இலாஹு என்னும் எழுவாய்க்குத் தொக்கிய பயனிலையாக அமைத்துக் கொள்வதும் ஷாலைச் சேர்ந்த காரியமல்ல. ஏனெனில், கிதாபுல் மஜீதாகிய குர்ஆன் அதைப் பொய்யாக்கு வதினா லென்க. இல்லையாயின், **லவ்கான பிஹிமா ஆலிஹத்துன் இல்லல்லாஹு** என்ற விடத்தில் **லவ்கான மஅஹு இலாஹுன் லமாகறஜதா** என்று வந்திருக்கும். இனி இரண்டாவது காரியமும் தரிபடவில்லை. ஏனெனில், **அஹ்லுல் ஹல்லி வல்அக்தி** களாகிய உலமாக்கள் ஒரே காலத்திலாவது அடுத்தடுத்து வந்த சமீப காலங்களிலாவது அக்காரியத்தின் மேல் ஒருங்கு சேரவில்லை. இதுவுமன்றி அஹ்லுல்ஹல்லி வல்அக்தியா யிருப்பவர்கள் **லாஇலாஹ இல்லல்லாஹு** வைக் கொண்டு ஈமான் கொள்ளக் கடமைப் பட்டவர்களா யிருக்கிறார்கள். அப்படியிருக்க அவர்கள் **லாஇலாஹ இல்லா கைருல்லாஹி,** என்பதாக எப்போது ஈமான் கொண்டார்களோ அவர்கள் எப்படி அஹ்லுல் ஹல்லி வல்அக்தி யாவார்கள்? அத்வைதிகளான ஸூபியா குத்திலைத் அஸ்ராருஹும் அவர்களே **அஹலுல் ஹல்லி வல்அக்தி** என்ற பெருமை வாய்ந்த பெரியாராவார்கள்.

அன்றியும் ஜாருல்லாஹ் ஜமக்ஷரீ றஹிமஹுல்லா அவர்கள் பிரக்யாதி பெற்ற உலமாக்களில் ஒருவரா யிருந்தார்கள். அவர்கள் இலாஹுவுக்குத் தொக்கிய பயனிலை வேண்டியதில்லை என்ற கொள்கையுள்ளவர்களா யிருக்கிறார்கள். பின்னர் ஏக காலத்திலோ அடுத் தடுத்து வந்த சமீப காலங்களிலோ அதற்குத் தொக்கிய பயனிலை வேண்டு மென்று உலமாக்கள் ஒருங்கு சேர்ந்து ஒப்புக் கொண்ட தென்பது எங்கே யிருக்கிறது? திருப்பனும்

மவுஜூது என்னும் பயனிலையைத் தொக்கவைத்தலுமான இந்த காரியம் உலமாக்கள் ஒருங்கு சேர்வதன்றி தனித்தவரான ஒரு வரால் முதலில் வெளிப்பட்டது. பின்பு மற்றொருவர் அவரைப் பின்பற்றினர். பின்பு அவரை மற்றொருவர் பின்பற்றினர். இப் படியே ஒருவர் பின் ஒருவராக இதுவரையில் தக்லீதை நீட்டித் திடப்பிரமாணமாகிய **லாஇலாஹ இல்லல்லாஹு** என்னும் முஹ்கமைத் தங்கள் வஹ்மு என்னும் பேதபுத்திக்கு இணங்கப் பொருத்தி கொள்வதற்குத் திருப்பலும் தொக்க வைத்தலுமான காரியத்தைக் கையாடி வந்திருக்கிறார்கள். ஏனெனில், அவர் களிடத்தில் திருப்பலும் தொக்கவைத்தலு மில்லாமல் போனால் அவர்களின் வஹ்மு அந்த முஹ்கமுக்கு முரண்படுகிறதினாலென்க. திருப்பல் செய்த பிறகுங்கூட அவர்களிடத்தில் மவுஜூதுன் என்ற ஒரு பயனிலையைத் தொக்கு விக்க வேண்டிய அவசியமில்லை என்பது முண்டு. ஏனெனில் கலிமாவில் இலாஹ்வை முஸ்தஹக்க என்று திருப்பி லாமுஸ்தஹக்க இல்லல்லாஹு என்று சொன்னால் வணக்கத்துக்குப் பாத்திரமானவன் அல்லாஹு தஆலாவே தவிர அவனுக்கு வேறான லாதது, மனாத்து, உஸ்ஸாக்களில் ஒன்றும் வணக்கத்துக்குப் பாத்திர முள்ள தல்ல என்ற பொருளைத் தரு கிறதினாலேயாம்.

திருப்பலும் மவ்ஜூதுன் என்பதைத் தொக்கவைத்தலு மான இக்காரியம் எக்காலத்தில் வெளிப்பட்ட தென்றால், "பின்பு பொய் பாவி விடும்" என்று ஹதீஸில் சுட்டிய காலத்திலே தான் அது வெளிப்பட்டது. இந்தத் தக்லீது (பின்பற்றல்) முஷ்ரி குகள் சொன்னது போன்ற தக்லீதாம். அவர்கள்

هذا ما الفينا عليه آباءنا

**இந்த விக்கிரக வணக்க மார்க்க மானது எங்கள் பிதாக்கள் இதை அனுஷ்டித்து வர நாங்கள் கண்ட ஓர் மார்க்கமா யிருக்கிறது** என்று சொன்னார்கள். ஆகவே திருப்பலும் மவுஜூதுன் போன்ற ஒரு சொல்லை தொக்கிய பயனிலை யென்றாக்குவதும் உலமாக்கள் ஒற்றோர் மித்த ஓர் காரிய மென்று எண்ணப்படுகிற இந்த ஓர்மிப்பானது "என் உம்மத்துகள் வழி கேட்டின் மேல் ஒருங்கு சேரார்கள். நீங்கள் பெருங் கூட்டத்தைப் பற்றிப் பிடியுங்கள்" என்ற நாயக வாக்கியத்திற்குள்



அடங்காமல் அப்புறப் பட்டதா யிருக்கிறது. இந்த ஒருங்கு சேர்தலானது நஸாராக்கள் அல்லாவை மூன்றாக்குவதின் பேரில் ஒருங்கு சேர்ந்தது போல்வதாம்.

## நான்காவது பயன்.

அறிந்துகொள்:—நிடனாக **லாஇலாஹு இல்லல்லாஹு** வானது ஷரீஅத் தென்னும் குர்ஆனுக்கு பஸ்மலத் தாயும் முஹம் மதுர் ரஸூலுல்லாஹ் வானது அதற்கு ஸூரத்து பாத்திஹாவாயும் இஸ்லாமுடைய ஹக்கான அகாயிதுகள் அதற்கு ஸூரத்துல் கஹ் பாயும் அந்த அகாயிதுகளின் பிரிவாகிய திடப்பிரமாண விதிவிலக் குகள் அதற்கு ஸூரத்துன் நாஸாயும் இருக்கின்றன. பின்னர் குர்ஆனில் நின்றும் பிஸ்மில்லாவைத் தெரிந்து கொள்ளாதவன் எவனோ அவன் அதன் பாத்திஹாவை எப்படி தெரிந்து கொள் வான்? ஆகவே முதன் முதல் பிஸ்மில்லாவில் பிழை யுண்டாய் விட்டால் அந்தப் பிழை மற்ற பாத்திஹா, கஹ்பு, நாஸ் ஆகிய மூன்று ஸூரத்துகளையும் பரவிவிடும். ஷரீஅத்துக்கு பிஸ்மில்லா போன்ற கலிமாவைத் தெரிந்து கொள்ளாதிருந்தால் அதன் அகாயிது, அஃமால்களும் எப்படி பயன் கொடுக்கும்? இந்தத் தெரியாமையை விட்டு நாம் அல்லாஹு தஆலாவினிடம் காவல் தேடுகிறோம்.

இதையே இன்னு மொரு வழியாகச் சொல்லுகிறோம். நிடனாக அல்கலிமத்துத் தைய்யிபாவில் நான்கு பர்ளுகள் இருக்கின்றன. முதலாவது அதன் சொற்களைப் பிழையறச் சரியாக உச்சரிப்பதும் இரண்டாவது அதில் பொதிந்துள்ள பொருளை உள்ளபடி உணர் வதும், மூன்றாவது உணர்ந்தபடி அதை உண்மை யெனக் கொள் வதும் நான்காவது உண்மை யெனக் கொண்டதை நழுவவிடாமல் சதா அதன் மேல் நிலைத்திருப்பதுமாம். இவைகளில் மூன்றாவது மூலபர்லாயும் நாலாவது கிளைபர்லாயும் இருக்கிறது. இல்லையாயின் மதபகிஷ்டனான முர்தத்து கொல்லப்பட மாட்டான். ஏனெனில், அவன் ஒரு தரம் ஈமான் கொண்டதினால் மூமினாயினான். மூமினைக் கொல்லுவது கூடாது. ஆகவே அவன் அந்த ஈமான்மேல் சதா நிலைக்காததே அவனைக் கொல்வதற்குக் காரணமாயிற்று. முந்தின முதலாவது இரண்டாவது காரியங்களுங்கூட அந்த மூன்றாவது அவைகளின் மேல் பொருந்து நிற்பதால் அதன் தொடர்ச்சியால்

பர்லாயின. ஏனெனில் விதிக்கு முக்கியமாய் வேண்டிய முதல் காரியமும் விதியாதலினு லென்க. பின்பு அல்கலிமத்துத் தைய்யி பாவில் பொதிந்துள்ள பொருளைத் தெரிந்து கொள்ளாதவன் எவனோ அவனுக்கு அதை உண்டு யெனக் கொள்ளும் உணர்வு எப்படி உண்டாகு மென்பதை கோட்ட மிட்டுப்பார். அந்த உணர்வு அவனுக்கு உண்டாகவில்லை யானல் பின்பு அவன் எந்த வஸ்துவின் மேல் சதா நிலைத்திருக்கிறது. ஆகவே அவன் கலி மாவின் பொருளை அறியாததினுல் அவனுக்கு மூன்று பர்லுகளும் தப்பி விட்டன. கலிமாப் பொருளை அறியாதவன் நான் இஸ் லாமைத் தழுவிய முஸ்லிம் என்று அவன் எப்படி பிரஸ்தாபிக் கிறது?

## ஐந்தாவது பயன்.

அறிந்துகொள்:—திடனுக அல் உம்மத்துல் மர்ஹூமாவில் நின்றும் அத்வைதிகளான சூபியா குத்திஸத் அஸ்ராருஹூம் ஆகிய ஒரு சாரார் தவிர மற்றவர் முஹ்கமாத் தென்னும் திடப்பிரமாணங்களா யிருக்கிற லாஇலாஹ இல்லல்லாஹூ, அதன் தலீலுகள், இன்னும் அவனது தவ்ஹீதின் மேல் அறிவிக்கிற ஆயத்துகள் இவைகளுக்கு வலிந்துரை கோடல் என்னும் தாவீலால் பொருட்களைப் பேதப்படுத்தி அமைப்புகளை மாற்றி அவைகளை விகாரப்படுத்தி விட்டார்கள். ஆனல் அவர்கள் அல்கலிமத்துத் தைய்யிபாவின் மற்றொரு பகுதியாகிய முஹம்மதுர் ரஸூலுல்லாஹியைக் கொண்டு ஈமான் கொண்டிருக்கிறூர்கள். இந்த ஈமானுட் பொதிந்து அதன் முற்பகுதியாகிய லாஇலாஹ இல்லல்லாஹூ என்னும் முஹ்கமைக் கொண்டுள்ள ஈமான் அவர்களுக்கு உண்டாய் விட்டது. ஆகவே அவர்களுக்கு ஹூக்மிய்யாகிய ஈமான் இருக்கிறது. ஹகீகிய்யாகிய ஈமான் இல்லை. முஷ்ரிகுகளுக்கு ஹகீகிய்யாகிய ஈமானுமில்லை, ஹூக்மிய்யாகிய ஈமானுமில்லை. இதனுல் அல்லாஹூ தஆலா "லம்யகுனில்ல தீனகபரூ மின்அஹ்லில் கிதாபில்வல் முஷ்ரிகீன" என்றும் "வலகத் கபரல்லதீன காலூ இன்னல்லாஹ சாலிசு சலாஸா" என்றும் அருளிய திருவாக்கியங்களில் முஷ்ரிகுகளினின்றும் அஹ்லுல் கிதாபிகளை வேறு பிரித்திருப்பதற்குக் காரணம் வெளியாயிற்று. அப்படிப் பிரித்திராவிட்டால் அந்த விடம் அவ்வாக்கியங்களை முறையே



"லம்யகுனில்லதீனகபரூ மின்அஹ்லில் கிதாபில் வல் அறபி" என்றும் "லகத் அஷ்ரகல்லதீன காலூ இன்னல்லாஹ ஸாலிஸூ ஸலாஸா" என்றும் சொல்ல வேண்டுவதா யிருந்தது. அதாவது, முந்தின ஆயத்திலும் இரண்டாம் ஆயத்திலும் அஹ்லுல் கிதாபிகளாகிய யஹூதுகளை நஸாராக்களை காபிர் என்று சொன்னனே தவிர அவர்களை முஷ்ரிகு என்று சொல்லவில்லை என்பது.

இன்னும் இதனுல் அவர்களுடைய பெண்டுகள் ஹலால் என்ற காரணமும் அதாவது அஹ்லுல் கிதாபிகளின் பெண்களை மூமின் நிகாஹூ செய்து கொள்ளலா மென்ற காரணமும் வெளியாயிற்று. அதெப்படி யெனில் அவர்களில் யஹூதிகள் மூசா அலைஹிஸ்ஸலா முடைய மார்க்கம் உண்மை யென்றும் நஸாராக்கள் ஈஸா அலைஹிஸ்ஸலாமுடைய மார்க்கம் உண்மை யென்றும் எப்போது ஈமான் கொண்டார்களோ அப்போதே தங்கள் நபியின் மீது கொண்ட அந்த ஈமானுக்குள் மறைந்து அவர்களுக்குத் தெரியாதவிதமாக முஹம்மதுர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லமவர்களுடைய ரிஸாலத்தின் மீதும் நுபுவ்வத்தின் மீதும் அவர்களுக்கு ஈமான் உண்டாய் விட்டது. ஏனெனில் தவ்றூத்து இஞ்சீல்களில் முஹம்மதுர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லமவர்களின் ரிஸாலத்து நுபுவ்வத்துகளின் உண்மையைச் சொல்லியிருக்கிறது. அஹ்லுல் கிதாபிகள் அதன் மேல் ஈமான் உள்ளவர்களா யிருக்கிறூர்கள். ஆகவே நாம் முன்னே சொல்லி வந்தபடி எல்லா முஸ்லிம்களுக்கும் லாஇலாஹ இல்லல்லாஹூ வைக் கொண்டு ஹூக்மிய்யான ஈமான் இருப்பது போல் அஹ்லுல்கிதாபிகளுக்கு அந்த ஈமான் ஏதோ கொஞ்சம் இருக்கிறது. முஷ்ரிகுகளுக்கோ எந்த கிதாபின் பேரிலும் எந்த நபியின் பேரிலும் ஈமா னில்லையாதலால் அதினுட் பொதிந்த ஈமான் என்பது மில்லை. ஆகவே அவர்களுக்கு லாஇலாஹ இல்லல்லாஹூவைக் கொண்டு ஹகீகிய்யாகி ஈமானுமில்லை ஹூக்மிய்யாகிய ஈமானுமில்லை.

சுவால்:—முஸ்லிம்களுக்கு எப்படியோ அப்படியே அஹ்லுல் கிதாபிகளுக்கு கலிமா [தைய்யிபாவைக் கொண்டு ஈமான் உண்டா யிருந்தால் பின்பு முஸ்லிமாகிய மூமினுக்கும் அஹ்லுல் கிதாபிகளுக்கும் நடுவில் என்ன வித்தியாச மிருக்கிறது என்பாயாகில்,

ஜவாபு:—இஸ்லாமைத் தழுவிய மூமின்களுக்கு கலிமா தைய்யிபாவின் முற்பகுதியில் ஹூக்மிய்யாகிய ஈமானும் பிற்பகுதியில் ஹகீகிய்யாகிய ஈமானும் இருக்கிறது. அஹ்லுல் கிதாபிகளுக்கு முற்பகுதி பிற்பகுதி யிரண்டிலும் ஹூக்மிய்யாகிய ஈமான் மாத்திரமிருக்கிறது. ஹகீகிய்யாகிய ஈமான் அவர்களுக்கில்லை. இது தான் வித்தியாசம்,

பின்னர் அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹூ தஆலா நேசிப்பதும் அவன் பொருந்திக் கொள்வதுமான புகழனைத்தும் அவனுக்கே உரியவை. இன்னும் அவன் நேசிப்பதும் அவன் பொருந்திக் கொள்வதுமான சலவாத் தென்னும் கருணை அவனது ரஸூல் முஹம்மது ஸல்லல்லாஹூ அலைஹி வஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லமவர்களின் மீதுண்டாவதாக. என் ஆண்டவனே! எங்களுக்கு ஹயாத்து குறுக்கிடாத ஒரு மவ்த்தையும் மவ்த்து குறுக்கிடாத மணமான ஒரு ஹயாத்தையும் கொடுத்தருள். சுப்ஹான றப்பிக்க றப்பில் இஜ்ஜத்தி அம்மா யஸிபூன் வஸலாமுன் அலல் முர்ஸலீன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

முஸ்லிம் அத்வைத மூலமொழி

முற்றிற்று.

ஹூவல்லாஹூ அஹது.

# துஹ்பத்துல் முர்ஸலா.

## மூலம்.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்றஹீம்.

சர்வஜீவ தயாபரனும் பக்தரக்ஷகனுமான அல்லாஹூ தஆலாவினது திருநாமத்தால் தொடங்குகிறேன். புகழனைத்தும் சர்வலோக பரிபாலனாகிய அல்லாஹூ தஆலாவுக்கே உரியவை. ஆகிபத்து என்னும் அழகிய முத்திப்பேறு இகபரங்களான ஈருலகத்தினாசையொழித்தவனுக்கேயாம். சலவாத்தும் சலாமும் **மல்ஹறுல் அதம்மி** என்னும் சம்பூரணோதயஸ்தானமாகிய முஹம்மது அலைஹிஸ்ஸலாத்து வஸல்லமவர்கள் பேரிலாம். இன்னுமவர்களுடைய கிளையார் தோழமார் அனைவர் பேரிலுமாம்.

## வியாக்கியானம்.

நமது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லமவர்களை மல்ஹறுல் அதம்மி அதாவது சம்பூரணோதயஸ்தானமென்றது எதனாலெனில் அவர்களில் அல்லாஹூ தஆலா தன் வுஜூபுதாத் தென்னும் தனதின்றி யமையாச்சுயம்பு தவிர ஆலமாகிய பிரபஞ்சத்தில் வெளிப்பட வேண்டிய அஸ்மாவான திருநாமங்களனைத்தையுங் கொண்டு வெளியானதினாலும், அவற்றுள் ஒரு இஸ்மு மிகைக்காமலும் மற்றொரு இஸ்மு மிகைக்கப்படாமலும் எல்லாம் சமமாக வெளியானதினாலுமாம். சமம் என்பதற்குப் பொருள் எல்லா இஸ்முகளும் நமது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லமவர்களில் சம்பூரண வகையாக வெளிப்பட்டன வென்பதும் வெளிப்பாட்டில் ஒன்றுக் கொன்று சரியொத்திருந்தது என்பதுமாம்.

மற்ற நபிமார்களிலும் ஹக்குத் தஆலா தனது அஸ்மாக்களனைத்தையுங் கொண்டு வெளியாயினான் என்றாலும் அவர்களில் ஒரு இஸ்மு மிகைத்தும் மற்றொரு இஸ்மு மிகைக்கப்பட்டுமிருந்த வகையாக வெளியாயினான். ஆதலால் நம்முடைய நபிகள் நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லமவர்கள் மாத்திரமே மல்ஹறுல் அதம்மியா யிருக்கிறார்கள்.

சுவால்:—ஆலமென்னும் பிரபஞ்சமானது அதன் எல்லாப் பாகங்களும் சேர்ந்து அல்லாஹுதஆலாவினது வெளிப்பாடுகளில் நின்றும் கொஞ்சந்தான் என்று முஹக்கிகீன்களாகிய தத்வ ஞானிகள் ஒற்றோர் மித்திருக்க நபிமார்களிலும் ஒலிமார்களிலும் அல்லாஹுதஆலா தனது எல்லாத் திருநாமங்களையுங் கொண்டு வெளியாயினன் என்பது எப்படி சரியாகும்?

ஜவாபு:—இந்தச் சொல்லினால் அல்லாஹு தஆலா மொத்தமாகத் தனது எல்லா திருநாமங்களையும் கொண்டு வெளியாயினன் என்பது கருத்தல்ல. அவனுடைய திருநாமங்களில் நின்றும் உலகத்தில் ஒவ்வொன்றாகவோ இரண்டிரண்டாகவோ மும்மூன்றாகவோ நவ்வாலாகவோ அதிகமாகவோ வெளிப்பட்ட எல்லா இஸ்முகளையுங் கொண்டு அவன் நபிமார்களிலும் ஒலிமார்களிலும் வெளியானன் என்பதே கருத்தாம்.

## மூலம்

பின்னர் அனிய்யத் தென்னும் கோசபாசத்தில் சிக்குண்ட பாவியான அடிமையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய ஷபாஅத்தின் தேவையுள்ளவனும் ஆகிய முஹம்மது புனுஷெய்கு பள்லில்லாஹி சொல்வது யாதெனில்; இதானது ஹகாயிகு எனனும் தத்துவார்த்தங்களில் கூறியுள்ள வாக்கியங்களினின்றும் பெரும் பொருள் பொருந்திய சிறியதோர் நூலாயிருக்கிறது. அல்லாஹு தஆலா வினது திருவருள் கொண்டு மாத்திரம் இதை நான் சேகரித்தேன். இதன் சவாபாகிய பிரதிபலனை ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களினது ஆத்மாவான ரூஹுக்கு ஆக்கினேன். இன்னு மிதற்கு துஹ்பத்துல் முர்ஸலா (நாயகமவர்களின் சமூகமனுப்பப்பட்ட காணிக்கை) என்று பேரிட்டேன். இதன் சவாபாகிய பிரதிபலனை அந்த நாயகம் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலா மவர்களுக்குச் செலுத்தும்படி அல்லாஹு தஆலாவினிடம் துஆகேட்கிறேன். அவனே சகல வஸ்துக்களின் பேரிலும் சமர்த்துள்ளவனும் துஆவை அங்கீகரிப்பதற்கு அருகனுமானவன்.

## வியாக்கியானம்

அனிய்யத் தென்னும் கோசமென்று நூலாசிரியர் சொன்னதில் அவர் கருத்தாவது அல்லாஹு தஆலா தனது தஜல்லியான



ஆரோபத்தினால் வெளியான என் ஆவி ஆக்கைகளின் உணர்வு எனக்கிருப்ப தென்பதேயாம். (அதாவது ஜீவனை நான் என்றும் தேகத்தை நானென்றும் அபிமானிப்பதென்பதாம்.) சில [illegible] உன் ஹகீகத்தும் அந்தரங்கமும் ஹக்கு தஆலா வல்லாத வேறு வுஜூதென்று நீ எண்ணுவதே அனிய்யத் [illegible] கருத்தாகக் கொள்ளப்படும். ஆரிபீன்களில், [illegible] யிருக்கும் அறபி பைத்தின் உரையாவது:—

فقلت وما ذ نبي فقالت مجيبة وجودك ذنب لا يقاس به ذنب

என் பாவம் என்பது யாது என்று கேட்டேன். உன் வுஜூதே பாவம் என்றும் இதற்கு எந்தப் பாவத்தையும் நிகராக எண்ணப்படாது என்றும், ஒரு மாது விடை பகர்ந்தனள். (இதன் கருத்து:— ஹக்கை யன்றி நீ ஒரு தனிமுதலாக உன்னை நீ எண்ணுவது பெரிய பாதகமாம் என்பது.)

## மூலம்.

அறிந்துகொள்ளுங்கள் என் சகோதரர்களே! அல்லாஹு தஆலா உங்களையும் நம்மையும் நற்பதவியிலாக்குவானாக. நிடனாக ஹக்கு சுபுஹானஹுவத் தஆலாவே வுஜூது என்னும் உண்மைப் பொருளா யிருக்கிறான். (உண்மை யென்றது இன்மைக்கு எதிர்.)

(தன் நிலைக்குத் தானே ஆதாரமாய் சகல பிரபஞ்சங்களும் தன்னிடத்தில் கற்பிக்கப்படுவனவாய் எக்காலத்துங் கெடாமல் சதோதயமாய் விளங்குவது எதுவோ அது வுஜூது என்று வழங்கப்படும். இதைத்தான் சச்சிதானந்தப் பொருள் என்றும் பிரஹ்மம் என்றுங் கூறுவர் இந்துமத அத்வைதிகள். த. மு.)

## வியாக்கியானம்.

இதன் கருத்தாவது:—அல்லாஹு தஆலாவினது வுஜூதே, அவனது தாத்தாகிய தத்சொரூபம் என்பதும் வுஜூதுக்கு தாத்து வேறல்ல வென்பதுமாம். இது வஹ்தத்துல் வுஜூதை ஒப்பினவர்களிடத்தில் தான் அவர்களல்லாத முதகல்லிமுகளிடத்திலோ அவன் தாத்தானது அவனது வுஜூதுக்கு வேறும் வுஜூதை வேண்டுவதுமாம்; இவ்விரண்டில் முந்தினது தான் சரி.

## மூலம்.

அந்த வுஜூதுக்கு உருவமுமில்லை. காலதேசங்களால் எல்லையுமில்லை. அந்த வுஜூது இப்படி பரிசுத்தமா யிருப்பதுடன் உருவமும் எல்லையுங் கொண்டு வெளிப்பட்டு ஆரோபமாகப் பிரகாசித்தது. இப்படி வெளிப்பட்டதினால் அது தனக்கு உருவமின்மையும் எல்லை இன்மையுமான தன்மையை விட்டு மாறவில்லை. மேலும் அதிருந்தபடியே இன்னு மிருக்கிறது.

சுவால்:—ரூபமும் காலதேசங்களின் வரையறையும் இல்லாமல் பரிசுத்தமா யிருக்கிற அந்த வுஜூதே ரூபிகரித்துக் காலதேசங்களின் வரையறையுள்ளதாக வெளியாயிற் றென்பதும் அப்படி வெளியாகியும் அது தன் பரிசுத்தத் தன்மையை விட்டு மாறாமல் இருந்தபடியே இருக்கிற தென்பதும், ஆகிய இவ்வாக்கியங்களின் அர்த்தம் சற்றும் புத்தியில் அமையவில்லை. அரூபமான வுஜூது ரூபமுள்ள உலகாய் வெளிப்பட்ட தெப்படி. உலகாய் விரிந்த வுஜூது முன் இருந்தபடி அரூபமாகவே இருப்ப தெப்படி, இதை உபமானவாயிலாக விளக்கிக் காட்டவேண்டும்.

ஜவாபு:—வுஜூதினது அரூபத்தன்மையைத் **தன்ஜீஹு** என்றும் அதன் ரூபத்தன்மையைத் **தஷ்பீஹு** என்றும் ஆரிபுகளாகிய ஞானிகள் வழங்குவார்கள். தன்ஜீஹு என்பது வுஜூதின் எதார்த்த இலக்ஷணங்களைக் குறித்தும் தஷ்பீஹு என்பது அதன் கற்பித காமாதிகளைக் குறித்தும் விவரிக்கப்படுகிற இரண்டு சொற்களாம். அரூபமான வுஜூதின் எதார்த்த இலக்ஷணங்களுக்கு யாதொரு தோஷமணுகாதபடி அதனிடத்தில் வெறுங்கற்பித நாமரூபங்களான உலகம் உண்டாகலாம். அதெவ்வாறெனின் மனம் என்பது கண், காது, மூக்கு, நா, மெய் ஆகிய பஞ்சேந்திரியங்களுக்குப் புலப்படாத ஓர் அரூபப் பொருளா யிருக்கிறது. அரூபப் பொருளாகிய அந்த மனத்தினிடத்தில் ரூபப் பொருட்களாகிய சொற்பன ஜகம் கற்பிதமாகத் தோற்றுகிறது. சொற்பனத்தில் காணப்படுகிற நிலம், நீர், தீ, கால், வெளி ஆகிய இவை மனத்தின் காரியப் பொருட்களாயும் மனம் காரணப் பொருளாயு மிருக்கிறது. மனமாகிய காரணம் கெடாமல் அதிருந்தபடி யிருக்க, அதனிடத்தில் சொற்பனப் பிரபஞ்சமான காரியம் கற்பிதமாகத் தோற்றுவதுபோல வாஜிபுல் வுஜூதாகிய ஹக்கு கெடாமல் அதிருந்தபடி



பரிசுத்தமா யிருக்க அதனிடத்தில் மும்கினுல் வுஜூதாகிய கல்கு கற்பிதமாகத் தோன்றிற்றென உணர்க.

(பின்னர் இந்துமத அத்வைத ஞானிகள் காரணத்துக்குப் பழுதில்லாமல் அதனிடத்தில் காரியத் தோற்ற முண்டாதலுக்கு விவர்த்தகாரணகாரிய மென்றும், வாஜிபுல் வுஜூதுக்குப் பாமார்த்த சத்து என்றும் மும்கினுல் வுஜூதுக்கு விவகாரிக சத்து என்றும் பெயர் தந்து பரமார்த்த சத்தையன்றி விவகாரிக சத்து ஓர் தனிமுதல் அல்ல வென்றுங் கூறுவது இங்கு ஒத்திட்டு அறியத்தக்கது. த. மு.)

## மூலம்.

இன்னுமந்த வுஜூதானது ஒன்றே ஒன்று தான் உடைகள் பல பேதமும் பலவுமா யிருக்கின்றன. அதாவது அந்த வுஜூது எவற்றில் வெளியாயிற்றோ அந்த சிருஷ்டிகள் நாமரூபங்களால் பேதப் பட்டு பலவாயிருக்கின்றன வென்பதாம். இன்னுமந்த வுஜூதானது சர்வ சிருஷ்டிகளின் பகிரங்க அந்தரங்கங்களுக்கு ஹகீகத்தான மூலமா யிருக்கிறது. அணுவாதி சர்வ சிருஷ்டிகளும் அந்த வுஜூதை விட்டு ஒழிந்திருப்பதில்லை.

## வியாக்கியானம்.

வுஜூது ஒன்றே பலவாகப் பேதப்பட்டிருக்கிறதற்கு உபமானமாகச் சொல்லப் பட்ட ஒரு அறபி பய்த்தும் அதன் அர்த்தமும் வருமாறு:—

وما الوجه الا واحد غير انه اذا انت اعددت المرايا تعدد

வமல்வஜ்ஹு இல்லாவாஹிதன் கைர அன்னஹு இதா அன்த அஃததல் மராயா தஅத்துதா. இதன் பொருள் உன் முகம் ஒன்றே யன்றிப் பலவல்ல, ஆனால் நீ கண்ணாடிகளை அதிகப்படுத்துவாயாகில் அப்போது அந்த ஒரே முகம் அவைகளில் பலவாகப் பிரதி பலிக்கும் என்பதாம்.

## மூலம்.

இன்னுமந்த வுஜூ தென்றது ஆராய்தலால் நிசப்பட்ட தென்கிற அர்த்தங் கொண்டு மல்ல. தேடலாம் கிடைக்கின தென்கிற அர்த்தங் கொண்டு மல்ல. ஏனெனில் இவ்விரண்டும் தொழிற்பெயர்ப் பொருட்களா யிருக்கின்றன. அகத்தில் மாத்திரமே யன்றி புறத்தில் பிரத்தியக்ஷமா யுள்ளவைகளல்ல. பிரத்திய

க்ஷத்தில் உள்ளதா யிருக்கிற மவ்ஜூதாகிய ஹக்கின் பேரில் இந்த அர்த்தங் கொண்டு வுஜூது என்ற பதத்தை வழங்குதல் கூடாது. இதை விட்டு அல்லாஹுத்தஆலா மிக மேலாக உயர்ந்தவன்.

## வியாக்கியானம்.

ஆராய்தலால் நிச்சயப்பட்ட தென்றால் நிசப்படுமுன் சமுசயத்தி லிருந்த தென்றும் தேடலால் சிக்கின தென்றால் சிக்குமுன் தெரியாமல் மறைந்திருந்த தென்றும் ஆகிறது. அல்லாஹுத்தஆலாவோ எவ்வித சமுசயத்திற்கும் இடமில்லாமல் சதோதயமாய் சர்வ பிரபஞ்சங்களிலும் பிரத்தியக்ஷமாக விளங்குகின்றான். சித்த சுத்தியால் தத்சொரூப ஜோதியாய் பிரகாசிக்கின்ற கல்பையுடைய ஆரிபுகள் அந்த வுஜூதை சதா தரிசிப்பவர்களா யிருக்கிறார்கள். ஆதலால் நிச்சயப்பட்டது சிக்கினது என்கிற அர்த்தங் கொண்டு அவனை வுஜூது என்பது கூடாது.

(அன்றியும் மண்ணாகிய பிண்டத்திலிருந்து வனைதலாதித் தொழில்களால் காரியப்பட்டு நாமரூபங்களால் தோற்றுகிற கடத்தை வுஜூது (உளது) என்று வழங்குகிறோம். ஆனால் மண்ணையன்றி கடம் ஓர் தனி முதலான வுஜூதல்ல. ஆகவே கடத்தை வுஜூ தென்றது விவகாரத்தில் மாத்திரமே யன்றி எதார்த்தத்திலல்ல. ஆதலால் இந்த அர்த்தங் கொண்டும் ஹக்தஆலாவை வுஜூது என்று சொல்லப்படாது. த. மு.)

## மூலம்.

மேலும் அந்த வுஜூது என்றதில் நாம் கருதியது இதோ சொல்லப்போகிற இலக்ஷணங்களுள்ள ஓர் பொருளே யாகும். அதாவது:—எது தனதுண்மைக்குத் தானே ஆதாரமோ எதனது ஆதாரத்தின் மேல் சர்வ சிருஷ்டிகளும் உள்ளனவாகத் தோன்றுகின்றனவோ புறம்பில் எதற்கு அன்னிய மென்ப தில்லாமற் போகின்றதோ அதுவே வுஜூ தென்றது.

(வுஜூதை வாஜிபு என்றும் **மும் தனிஉ** என்றும் **மும்கினு** என்றும் மூன்றாகக் கூறுவார்கள். எது எப்போது முளதோ அது வாஜிபு, எது எப்போதும் இலதோ அது மும்தனிஉ. எது ஒரு காலத்திற்றோன்றி குறித்த கால வளவிருந்து பின்பு அழிவை அடைகின்றதோ அது மும்கினு. ஆனால் வாஜிபையன்றி மும்கினு ஓர் தனிமுதல் என்ற அர்த்தங் கொண்டு இந்த பாகுபாடு



சரியல்ல (முஸ்லிம் அத்வைத மூல மொழியைப் பார்) இனி இந்துமத அத்வைதிகள் வாஜிபை சத்து என்றும் மும்தனிஉ அசத்து என்றும் மும்கினை சத்துப்போலி அல்லது அநிர்வசனீயம் என்றும் எடுத்தாளல் இங்கு கவனிக்கத் தக்கது. த. மு.)

இன்னுமந்த வுஜூதானது குன்ஹு என்னும் தனது சுயவடிவத்தால் ஒருவருக்கும் வெளியாகாது. அந்தக் காரணங்களான புத்தியும் பேதமுற்ற மனமும் பஞ்சபுலன்களான ஞானேந்திரியங்களும் அதை உணர மாட்டா. யுக்தியிலும் அது அடங்காது. ஏனெனில் இவையனைத்தும் சிருட்டிகளா யிருக்கின்றன. சிருட்டியோ தன்னைப் போன்ற சிருட்டியையன்றி வுஜூதினது குன்ஹு என்னும் தத்சொரூபத்தை உணராது. அந்த சொரூபம் இந்த உணர்வுகளுக் கெட்டாதபடி மிகவும் மேலாக உயர்ந்தது. யாராவதொருவன் இந்த விதமாக அல்லாஹுத்தஆலாவை அறியகாடி அதில் முயற்சிப்பானாகில் அவன் தன் வாணாளை வீணாக்கினவனாவான்.

இன்னுமந்த வுஜூதுக்கு அனேக மர்த்தபாக்க ளென்னும் ஸ்தானங்கள் உண்டு (அந்த மர்த்தபாக்களை இந்நூலாசிரியர் ஏழாகச் சுருக்கிக் கூறுகின்றார்.)

(குணங்குடி மஸ்தான் சாஹிபுபாடலில் முதற்பாட்டான "மஹ்லியத்தான தாத்துல் கிப்ரியாவில் மறைந்த கன்ஜுல் மக்பியா' என்ற விருத்தத்தில் அந்த ஏழு மர்த்தபாக்களையும் கூறியிருக்கிறார்கள். த. மு.)

## மூலம்.

முதலாவது மர்த்தபா:— குறிப்பில்லாததும் அகண்ட பரிபூரண சூனிய்ஞைதன்ய தாத்து மாத்திரமுமான மர்த்தபாவாம். (அகண்ட மென்றது கண்டத்துக்கு எதிர் என்ற பொருள் கொண்டல்ல மேலும் இவ்விடத்தில் அகண்ட மென்பதினால் விளங்கும் விளக்கமே கருத்தாகும். அந்த வுஜூதோ எவ்விதத்திலும் அதில் கண்டமாக்கல் இல்லை.)

அகண்ட மென்னும் கைதும் கண்டித்தலை ஒழித்த லென்னும் அதன் விளக்கமும் இவ்விரண்டும் இந்த மர்த்தபாவில் இருக்கின்றன வென்ற பொருள் கொண்டல்ல. மேலும் அந்த வுஜூது இந்த மர்த்தபாவில் தன்னிடம் குணங்களையும் பண்புகளையும் சேர்ப்பதை விட்டு சுத்தமான தென்பதும் அகண்ட மென்ற

குறிப்புங் கூடாதென்கிற வரையில் எல்லாக் குறிப்புகளையும் விட்டு துய்தான தென்பதும் ஆகிய இந்தப் பொருள் கொண்டுதான் அகண்ட பரிபூரண மென்றது.

### வியாக்கியானம்.

இதன் விபரம்:-இந்த மர்த்தபாவில் வுஜூதுக்கு நாமமுமில்லை ரூபமுமில்லை குணமுமில்லை பண்புமில்லை உள்ளென்பது மில்லை புற மென்பது மில்லை சமமென்பது மில்லை விசேட மென்பது மில்லை பொது வென்பது மில்லை சிறப்பென்பது மில்லை. மேலும் இவை யெல்லாம் பின்வருகிற அதன் மர்த்தபாக்களையும் ஸ்தானங்களையும் அனுசரித் துண்டானவைகளாம் (رفيع الدرجات ذو العرش) **அருஷையுடையவன் தானங்களால் உயர்ந்தவன்"** என்று அல்லாஹு தஆலா திருவுளமா யிருப்பது இதைக் குறித்த இஷாராவேயாம்.

### மூலம்.

இந்த மர்த்தபாவுக்கு மர்த்தபத்துல் அஹதிய்யத்து என்று பெயர் சொல்லப்படும். அதுவோ ஹக் தஆலாவினது குன்ஹு என்னும் துரியாதீதமான தச்சொரூபமாம். அதற்கு மேலால் யாதொரு மர்த்தபாவு மில்லை.

இரண்டாவது மர்த்தபா தஅய்யுனுல் ஊலா அதாவது முதற் குறிப்பென்னும் மர்த்தபாவாம். அது யாதெனில்; அல்லாஹு தஆலா தன் தாத்தையும் சிபத்துகளையும் வகுக்காமல் தொகுப்பாக அறிந்திருப்பதே இதன் பொருளாம். இந்த மர்த்தபாவுக்கு மர்த்த பத்துல் வஹ்தத்தி என்று பெயர் சொல்லப்படும்.

### வியாக்கியானம்.

இன்னுமிதற்கு மர்த்தபத்து ஹகீகத்தில் முஹம்மதிய்யா என்றும் ஹகீகத்துல் ஹகாயிகி என்றும் சொல்லப்படும். இப்படிச் சொல்வது எதைக் கருதி என்றால் ஹக்தஆலா தனது தச்சொரூப மென்னும் மறைவான அவ்வியக்கத்தில் எதை முதற்குறிப் பாக்கி வெளியானானோ அந்த முதற்குறிப்பும் வெளிப்பாடுமாய் இந்த மர்த்தபா இருப்பதைக் கருதியேயாம். இன்னுமிந்த மர்த்த பாவில் அவன் நிருமித்த முதல் நிருமாணம் அந்த முஹம்மதிய்யா கிய நூரேயாம். ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்

اول ما خلق الله نوري



**அல்லாஹு தஆலா படைத்ததில் முதற்படைப்பு என் ஒளியே** என்று அருளியதில் அவன் அவர்களை முதலில் நிரு மானித்தான் என்ற பொருளைக் கருதினார்கள். இன்னு மிதற்கு மர்த்தபத்துல் ஜாமிஇ என்றும் சொல்லப்படும். ஏனெனில் இது அகண்டத்தையும் கண்டத்தையும் சேர்ப்பதாயும் அவ்விரண் டுக்கும் நடுவே பிரிப்பதாயும் தாத்து சம்பந்த அறிவின் நிருமிப்பு களில் நின்றும் ஷுயூனுகளில் நின்றும் அதில் அடங்கி யிருந்த வைகளைப் பொதிந்ததாயு மிருப்பதினாலென்க. பின்பு அந்த அறி யப்பட்ட நிருமிப்புகளுக்கு இல்மாலும் வுஜூதாலும் பகுப்பில்லை என்கிற கருத்து கொண்டு அவைகளுக்கு ஹுரூபுல் **ஆலியாத் தென்றும்** அல்லாஹு தஆலா வுடைய அனாதிபகுப்பாகிய அறிவில் அவை பக்குவப் பட்டிருக்கின்றன வென்கிற கருத்து கொண்டு அவைகளுக்கு **அஃயான் சாபித்தா** என்றும் பெயர் வைக்கப்படும்.

### மூலம்.

மூன்றாவது மர்த்தபா தஅய்யுனுஸ்ஸானீ, அதாவது இரண் டாங்குறிப்பு என்னும் மர்த்தபாவாம். அதென்ன வெனில் அல் லாஹு தஆலா தனது தாத்தையும் சிபாத்தையும் சர்வ சிருட்டி களையும் ஒன்றினின்று மொன்றை வகுத்து விபரமாக அறிந்திருக் கும் அவனது அறிவேயாம். இதற்கு மர்தபத்துல் வாஹிதிய்யா என்றும் ஹகீகத்துல் இன்சானிய்யா என்றும் பேர் சொல்லப்படும். இந்த மூன்று மர்த்தபாக்களும் (கதீம்) அனாதியானவை இவை களை முன்னும் பின்னுமாக்கிச் சொன்னது தொகுப்பு விளங்கும் பொருட்டாம், காலத்தால் முன்பின் என்பதில்லை.

நான்காம் மர்த்தபா ஆலமுல் அர்வாஹ் அதாவது ஜீவலோகம் என்னும் மர்த்தபாவாம். அதென்ன வெனில் கலப்பற்ற பரவிய தனித்த சிருட்டிகளாய்த் தத்தம் தாத்துகளாகிய சுய நப்சுகளின் பேரிலும் தம்போன்ற பிற நப்சுகளின் பேரிலும் வெளியாகும் பொருள்களே யாம். இதற்கு முந்திய மர்த்தபாவில் ஜீவர்கள் இப்படி அறிவதில்லை. அதாவது அஃயான்கள் அந்த மர்த்த பாவில் தம்மை தாமும் அறியா. மற்றொன்றையும் அறியா. அவை அல்லாமுல் குயூபாகிய அல்லாவுக்கே யன்றி வெளியாகா.

ஐந்தாவது மர்த்தபா:—ஆலமுல்மிதால் என்னும் மாதிரி லோகம், அதாவது சூக்ஷுமலோக மென்னும் மர்த்தபாவாம்.

அதென்ன வெனில் பாகமாக்கலையும் கொஞ்சமாக்கலையும் கிழித்தலையும் சேர்த்தலையும் ஏற்காத நொய்ய அணுக்களால் சேர்க்கப்பட்டசிருட்டிப் பொருள்களாம்.

## வியாக்கியானம்.

அறிந்துகொள் ஆலமுல் மிதாலானது தூல உலகத்திலிருக்கிற உருவங்களைப் பொதிந்ததாயிருக்கும். இன்னுமது அல்லாஹு தஆலா வுடைய இல்மில் அடங்கியிருக்கு முருவங்களில் முந்தின மாதிரி யுருவமாம். இதனால்தான் அதற்கு ஆலமுல் மிதால் என்று பேர் வைக்கப்பட்டது. ஏனெனில் பொருட்களில் நின்றும் ரூஹுகளில் நின்றும் சடங்களில் நின்றும் அதற்குச் சமமும் நிகருமான ஒரு மாதிரி ரூபம் இருந்தே யொழிய ஒரு பொருளாவது ஒரு ஜீவனாவது ஒரு சடமாவது இருப்பதில்லை. ஆகவே இந்த ஆலமுல் மிதால் அர்ஷையும் குர்ஸியையும் ஏழுவானங்களையும் நான்கு பூதங்களையும் இவற்றிலுள்ளவைகளையும் பொருந்திருக்கும்.

## மூலம்.

ஆறாவது மர்த்தபா:—ஆலமுல் அஜ்ஸாம். அதாவது:—சட லோகமென்னும் மர்த்தபாவாம். அதென்ன வெனில் பாகமாக்கலையும் கொஞ்சமாக்கலையும் ஏற்கின்ற தூல அணுக்களால் சேர்க்கப்பட்ட சிருட்டிப் பொருள்களாம்.

ஏழாவது மர்த்தபாவானது முன் சொல்லி வந்த வஹ்தத்து வஹ்தானிய்யத்து ஜிஸ்மானியத்துகளான எல்லா மர்த்தபாக்களையும் சேகரித்துக் கொண்ட மர்த்தபாவாம். அது கடைசியான தஜல்லியும் கடைசியான உடையுமாயிருக்கிறது. அதுவே ஆலமுல் இன்சான் என்று சொல்லப்படும்.

## வியாக்கியானம்.

(பின்னர் அறிந்துகொள்:—அல்லாஹு தஆலா நமக்கும் உனக்கும் நல்லுதவி புரிவானாக. ஹக்கு சுப்ஹானஹு வதஆலா வுடைய அகாதிதாத்தும் அவனுடைய சமமான சிபத்துகளும் சிருட்டிகளை வெளிப்படுத்துவது கொண்டும் அவைகளை வசப்படுத்துவது கொண்டும் காரியங்களை நடத்துவது கொண்டும் அவைகளைப் பண்படுத்துவது கொண்டும் வுஜூதுடைய மர்த்தபாக்களை இறக்குவது கொண்டும் ஷுஹூதுடைய மர்த்தபாக்களை ஏற்றுவது கொண்டும் நாயகத்தன்மையையும் ருபூபியத்தின் இரக



சியத்தையும் வெளியாக்கத் தேடினபோது இக்காரியங்கள் அதற்குச் சிருட்டிகளைச் சிருட்டிப்பதன்றி உண்டாகா வாகையினாலும் அனாதியாகிய அல்லாஹு தஆலாவினது பெருமைக்கும் மடியுந்தன்மையுள்ள சிருட்டியினது சிறுமைக்கும் நடுவே நேர்ச் சம்பந்தம் தூரப்பட்டிருந்த நிமித்தம் அந்தச் சிருட்டிகளின் தோஷமுற்ற செயல்கள் மலிதல் வைக்காகிய அல்லாஹு தஆலாவில் ரூபகாரப்படாதிருந்த படியாலும் ஹக்குத்தஆலா தனக்கு இது காரியங்களில் நாயிபா யிருக்கும் பொருட்டு ஒரு கலீபாவை உண்டாக்கினான். அந்த கலீபாவுக்கு இரண்டு முகங்கள் உண்டு. **ஒரு முகம்** அனாதியாகிய அல்லாஹு தஆலாவை நோக்கி அவனிடத்திலிருந்து அருளை ஏற்பதும், **மற்றொரு முகம்** சிருட்டியாகிய கல்குகளை நோக்கி, அவைகளுக்கு அருளை ஈவதுமாம். இன்னுமந்த கலீபா பூமியிலும் வானத்திலும் ஆக்ஷிசெய்ய இடம் பெறுவதற்காக அவரைத் தன்னுடைய சூரத்தின் பேரில் ஆக்கி அவர் பேரில் தன்னுடைய அஸ்மா சிபாத்துகளை பரிவட்டமாகப் போர்த்தினான். இன்னுமவர் தனக்கும் கல்குகளுக்கும் நடுவே உன் சத்து என்னும் கலத்துறவாடலுக்கு இடம் பெற்றிருப்பதினால் அவருக்கு இன்சான் என்று பேரிட்டான். இன்னும் தன்னுடைய அல்லாஹிரு அல்பாத்தினு என்னும் இரண்டு திருநாமங்களின் விதியால் அவருக்கு பாதினாகிய ஹகீகத் தென்னும் ஒரு உயிரையும் அள்ளாஹிராகிய சூரத் தென்னும் ஒரு உடம்பையும் ஆக்கினான். ஏனெனில் மேலுலகமாகிய மலகூத்திலும் கீழுலகமாகிய பூமியிலும் உயிரும் உடம்புமாகிய அவ்விரண்டாலும் ஆக்ஷி செய்ய இடம் பெறுவதற்கே யாம்.

பின்னர் அவருடைய பாத்தினாகிய ஹகீகத்தென்றது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தங்கள் திருவாக்கால்

ما خلق الله خلقا اعظم من الروح

**ரூஹைக்காண பெரிய ஒருபடைப்பை அல்லாஹ் படைக்கவில்லை** என்று அருளிச் செய்திருக்கிற அந்த * ரூஹுல் அ:

* இந்த ரூஹுல் அஃலம் என்னும் கலீபாவையே இந்து வேதாகமங்கள் மாயாப்பிரதிபிம்பன் என்றும், அந்தரியா மென்றும், இரணிய கர்ப்பன் என்றும், விராட்புருடன் என்றும், கூறுவதாக ஊகிக்கவேண்டியதாயிருக்கிறது. இந்நூலின் இறுதியில் சேர்த்திருக்கும் இந்துமத வேதாந்த பகுதியை முழுதும் வாசித்துப்பார்க்க. (த மு.)

**லமே யாம்.** அதுவே மிகப் பெருமையும் வலிமையும் தங்கிய அல்லாஹுத் தஆலாவுடைய கலீபாவாம்.

இனி அந்த கலீபாவின் லாஹிரான சூரத் தென்றது அருஷு முதல் பருஷுவரையில் இன்னும் விரிந்த பூதங்கள் பௌதிகங்கள் வரையில் சர்வலோகமாம். العالم انسان كبير

**அல் ஆலமு இன்சானுன் கபீருன்.** சர்வலோகமும் பெரிய இன்சான் (விராட்புருடன்) என்று முறைக்கிகூறுகிய தத்வஞானிகள் இஷாரா செய்திருக்கிற "அல் இன்சானுல் அக் பரு" இந்த கலீபாவேயாம். ஆனால் அந்த தத்துவ ஞானிகள்

الانسان عالم صغير

**அல்இன்சானு ஆலமுன் சகீருன்,** இன்சான் சின்ன உலகம் என்று சொல்லி யிருப்பதில் அவர்கள் கருதியது மானிட ஜாதியை இந்த மானிடன் பூமியில் அல்லாவுடைய கலீபாவாகும். அந்தப் பெரிய இன்சானே வானத்திலும் பூமியிலும் அல்லாஹு வுடைய கலீபாவாம்.

இன்னு மறிந்துகொள்:—சின்ன இன்சான் பெரிய ஆலத்தில் நின்றும் தகப்பனுக்குப் பிள்ளைபோல் உண்டான ஒரு நுஸ்கா வாயும் பலனாயு மிருக்கிறான். இவனுக்கும் பாதினாகிய ஒரு ஹகி கத்தும் லாஹிரான ஒரு ஸூரத்தும் யிருக்கிறது. பாத்தினான ஹகீ கத்தென்றது ரூஹுல் அஃலாவில் நின்றும் இவனில் ஊதப்பட்ட (பற்றிப் பாய்ந்த) வியட்டியான ரூஹும் வியட்டியாகிய நப்சும் தபீஅத்து மாம். இவனது லாஹிரான ஸூரத்தென்றது பெரிய ஆலத்துடைய ஸூரத்தில் நின்று முண்டான ஒரு நுஸ்காவும் பலனு மாம். ஆலத்துடைய பாகங்களிலிருந்து அதன் சொச்சப் பொருள் மலினப் பொருள்களான ஒவ்வொரு பொருளிலும் ஏதோ கொஞ் சம் பங்கும் பாகமும் இந்த ஸூரத்தில் சேர்ந்திருக்கிறது.

இன்னு மறிந்துகொள்:— மனிதர்களுடைய சரீரமானது ஆதம் ஹவ்வா அலைஹி மஸ்ஸலா மவர்களுடைய ஸூரத்தில் நின்று முண்டான பலனு யிருக்கிறது. மனிதன் என்பதற்குப் பொருளாகிய ரூஹானது ரூஹுல் அஃலாவில் நின்றும் நப்சுல் குல்லியில் நின்றும் உண்டான பலனாயிருக்கிறது. இன்சானுல் கபீரானவன் ஹக்குல் முபீனாகிய அல்லாஹுத் தஆலா வெளியாகும் தானமா யிருக்கிறான். சின்ன இன்சானே தஅய்யுனாத் தென்னும்



ஆவி ஆக்கைகளின் உணர்வுமாய்வது கொண்டு திடனாக இவன் இன்சானுல் கபீர் உடைய ஸ்தானத்தில் சேர்வான்.

## மூலம்.

இந்த ஏழு மர்த்தபாக்களில் முந்தின மர்த்தபா அவ்வியக்தம் (வெளிப்படாதது) என்றும் மற்ற மர்த்தபாக்கள் ஆறும் சர்வ வியக்தம் (எல்லாம் வெளிப்படுவது) என்றுமாம். இவைகளில் கடைசி மர்த்தபாவான இன்சான் (தனது நப்சு என்னும் பூமியிலி ருந்து அந்தக்கரணம் என்னும் மனம் புத்தியாகிய மறைந்த வானத்துக்கும் அங்கிருந்து தனது மலகூத்தாகிய ஆலத்துக்கும்) ஏறுவானாகில் இன்னும் அந்த ஏற்றத்தில் அவனுக்கு (அஹதியத் தென்ற மர்த்தபா தவிர) மற்ற எல்லா மர்த்தபாக்களிலும் உள்ள வைகள் அவைகளின் விசாலிப்புடன் வெளியாகுமாகில் அவனை இன்சானுல் காமில் நிறைந்த புருடனென்று சொல்லப்படும்.

## வியாக்கியானம்.

அவனில் நாயகத்தன்மையின் மர்த்தபாக்கள் விசாலிப்புடன் வெளியாகுவது எப்படி யென்றால் அவனுடைய தாத்தும் சிபாத் தும் அல்லாஹுத் தஆலாவுடைய தாத்தும் சிபாத்தும் போல் வியா பிக்கும். அதாவது:—அவன் தன்னை அளவிலடங்காத ஓர் பேரொளியாகக் காண்பதும் கண் காது கொண்டு மாத்திரமல்லாமல் அவன் தன் தேக முழுவதாலும் பார்ப்பதும் கேட்பதுமாம். இன்னும் தூரத்திலிருந்து சத்தங்களைக் கேட்பதும் தூரத்தி லிருந்து ரூபங்களைப் பார்ப்பதுமாம். இதே போல் அவனுடைய மற்ற சிபத்துகளும் வியாபித்திருக்கும். இனி அவனில் மலக்கு களுடைய மர்த்தபா விசாலிப்புடன் வெளியாவதற்கு அடையாள மாவது அவனில் மலக்குகளுடைய குணமும் அவர்களின் வியா பகத் தன்மையும் உண்டாகும். மலக்குகள் ஒரு வீட்டுக்குள் அதன் வாசல் வழியால் பிரவேசிப்பது போல் அவ்வீட்டின் சுவர்களாலும் பிரவேசிப்பார்கள். இவ்விரண்டு பிரவேசிப்புகளுக்கும் நடுவில் யாதொரு வித்தியாசமு மிராது. இன்னுமவர்கள் ஆலத்துடைய திறந்த வெளியில் வசிப்பது போல் அழுத்தமான கருங்கல்லி னுள்ளும் வசிப்பார்கள். இன்னுமவர்கள் எரிகின்ற நெருப்பில் நுழைவார்கள். அது அவர்களை அறவே சுடமாட்டாது. அவனில் நெருப்புடைய மர்த்தபா விசாலிப்புடன் வெளியாவதற்கு அடை

யாளமாவது அவனில் நெருப்பின் குணமும் அதன் வியாபகத் தன்மையும் உண்டாகும் அதாவது இமைப்போதிற மஷ்ரிகி லிருந்து மக்ரிபுக்குச் செல்வதாம். ஏனெனில் நெருப்பின் ஹகிகத் தென்பது அதன் உஷ்ணமாம். கண்ணுக்குப் புலப்படுகிற பிர காசம் அதன் ரூபமாம். சூரியன் மஷ்ரிகில் உதயமானால் உடனே அதன் உஷ்ணமான பிரகாசம் இமைப்போதில் அங்கிருந்து மக்ரிபு வரையில் செல்வதில் சந்தேகமில்லை. அவனில் வாயுவின் மர்த்தபா விசாலிப்புடன் வெளியாகுவதற்கு அடையாளமாவது அவனில் வாயுவின் குணமும் அதன் வியாபகத்தன்மையும் உண்டாகும். அதாவது மற்றவர் இரண்டு மாதத்தில் அல்லது ஒரு மாதத்தில் நடந்து தீர்க்கமுடியாத தூலையிட்ட தூரத்தை அவன் ஒரு மணி நேரத்தில் அல்லது அதினும் குறைந்த நேரத்தில் நடந்து விடு வான். இதேபோல் அவனில் வெளியாகிற மர்த்தபாக்களின் அடையாளம் அவனிடத்தில் உண்டாகும்.

## மூலம்.

இந்த ஏற்றமும் வியாபகமும் நமது நபிகள் நாயகம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களில் சம்பூரணவகையா யிருந் தன. இதனாலேயே அவர்கள் காத்தமுன் நபிய்யீனா யிருந்தார்கள்.

## வியாக்கியானம்.

மேலே கூறிவந்தவைகளால் இந்த மர்த்தபாக்க ளெல்லாம் ஒரே வுஜூதிலிருந்து உண்டாயின வென்றும் வேறல்ல வென்றும் ஆனால் இவற்றில் வஹ்தத்தும் வாஹிதியத்தும் போல் சிலது உலூஹியத்தின் மர்த்தபாக்களாயும், ஆலமுல் அர்வாஹும் அதற்குக் கீழான மர்த்தபாவும் போல் சிலது உபூதியத்துடைய மர்த்தபாக்களாயும் இருக்கின்றன வென்றும் வெளியாயிற்றே பின்னர் காரியம் இப்படி யிருந்தால் இவை ஒரே வுஜூதுக்குள்ள மர்த்தபாக்களா யிருக்கிற புறத்தில் ஒன்றன் பேரை மற்றொன் றுக்குச் சொல்லக்கூடுமா என்ற வினா நிகழ்வதை அறிந்த நூலாசி ரியர் அதற்கு விடை பின்னால் கூறுகின்றார்.

## மூலம்.

உலூஹியத்தென்னும் நாயகத்தன்மைக்குரிய நாமங்களை ஆக்கமும் சிருட்டியுமான மர்த்தபாக்களின் பேரில் நடத்துதல் கூடாது.



## வியாக்கியானம்

இதில் ஆசிரியர் கருதியது அல்லாஹு, றஹ்மான், காலிகு இவை போல் அல்லாவுக்கே சொந்தமான நாமங்களைத்தான் மொத்தமாக அவனது நாமங்களை யெல்லா மல்ல. ஏனெனில் அவனு டைய நாமங்களில் அவனுக்குச் சொந்தமாக்கப்படாத சில நாமங் களுமுண்டு. அவனுடைய கிதாபாகிய குர்ஆனில் ஒரு சிருட்டி யைக் கனப்படுத்துவதற்காகவும் மேன்மை படுத்துவதற்காகவும் அந்தச் சிருட்டியின் மேல் அந்த நாமங்களை நடத்தல் வந்திருக் கிறது. உதாரணமாக நம்முடைய நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு ரஊபுன், றஹீமுன், நூருன், ஹாதியுன், ஹக்குல் முபீன் இன்னுமிவை போன்ற சில நாமங் களையும் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலா மவர்களுக்கு சாதிகுல்வஃதி என்ற நாமத்தையும், இஸ்ஹாக்கு அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு அலீமுன் என்ற நாமத்தையும் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலா மவர் களுக்கு ஹலீமுன் என்ற நாமத்தையும் நூஹு அலைஹிஸ்ஸலா மவர்களுக்கு ஷகூருன் என்ற நாமத்தையும் இன்னுமிவை போன்ற அவனுடைய சில நாமங்களையும் நபிமார்கள் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்களுக்கு குர்ஆனில் வழங்கப் பட்டிருக்கின்றன.

## மூலம்.

இன்னுமிதேபோல் இதன் மாற்றுமாம். அதாவது:-ஆக்க மும் சிருட்டியுமான மர்த்தபாக்களுடைய நாமங்களை நாயகத் தன்மையான மர்த்தபாவின் பேரில் நடத்துதல் கூடாது. ஏனெ னில் அந்த நாமங்களின் பொருள் அநாதியாயும் இந்த நாமங்களின் பொருள் அநாதி யல்லாத நூதன சிருட்டியாயு மிருப்பதினா லென்க.

## வியாக்கியானம்.

ஹக்குசுபுஹானஹு வதஆலா தன் தாத்திலும் சிபத்துக ளிலும் அஸ்மாக்களிலும் நிறைந்த இலக்ஷணங்களைப் பொருந் தியவனாயும் வுஜூபிய்யான மர்த்தபாக்களில் அடங்கியுள்ளவை களைக் கொண்டு தனித்தவனாயு மிருக்க, பின்பு அந்த மார்த்தபாக் களில் நின்றும் அழிவுக்கும் நூதனத்துக்கும் குறைவுக்கும் இடமா யிருக்கிற சிருட்டியினுடைய மர்த்தபாக்களில் அவன் இறங்குவ

தென்றால் இது எப்படி சரியாகும் என்ற வினா நிகழ்வதை அறிந்த நூலாசிரியர் பின்வருமாறு விடை பகர்கின்றார்.

### மூலம்.

இன்னுமந்த வுஜூதுக்கு இருவித கமால் என்னும் பூரணத்துவம் உண்டு. அவற்றுள் ஒன்று கமாலுன் தாத்தியுன் தாத்து சம்பந்தப் பூரணத்துவமும் மற்றொன்று கமாலுன் அஸ்மா இய்யுன் நாமசம்பந்தப் பூரணத்துவமுமாம். இனி தாத்து சம்பந்த பூரணத்துவ மென்றது அல்லாஹூ தஆலா தானல்லாத பிறிதொன்றின் பேரில் பிறிதொன்றால் பிறிதொன்றில் பிறிதொன்றிற்காக என்கிற வேறு பொருளும் வேற்றுமையு மில்லாமல் அவன் தன்பேரிலேயே தன்னாலேயே தன்னிலேயே தனக்காகவே வெளியாதல் என்பதாம்.

### வியாக்கியானம்.

இவ்விடத்தில் சிருட்டி யென்பதே இல்லை யாதலால் பிறிதொன்றின் பேரில் அல்லாமல் அவன் தன்பேரிலேயே என்றும், நமக்கு அன்னியமாயுள்ள சூரியவெளிச்சத்தால் நாம் நம்மையும் இதர வஸ்துக்களையும் பார்ப்பதுபோல் அவனுக்கு அன்னியமான பிறிதொன்றாலல்லாமல் அவன் தன்னாலேயே என்றும், புறம்பான பிறிதொன்றில் அல்லாமல் அவன் தன்னிலேயே என்றும், நமக்கு அன்னியமா யிருந்து நம்மைப் பிடித்த நோய்களுக்காகவும் அவற்றின் சிகிச்சைக்காகவும் நாம் நம்மையும் நம்மல்லாதவைகளையும் பார்ப்பது போலல்லாமல் அவன் தனக்காகவே என்றும் சொன்னது.

### மூலம்.

இந்த தாத்து சம்மந்தப் பூரணத்துவத்திற்கு அறவே ஒன்றும் தேவையாகாமை அத்தியாவசியமாம். ஒன்றும் தேவையாகாமை யென்பதற்குப் பொருள் என்னவெனில் ஒன்று என்னும் இலக்கத்தில் மற்ற எல்லா எண்களும் அடங்கியிருப்பதுபோல் அவனுடைய அஹதியத்து என்னும் தாத்துக்குள் எல்லாம் அடங்கி யிருப்பதினால் அவன் தன்னில் தானே எல்லாக் காரியங்களையும் நாயகத்தன்மைக்குரிய எல்லா திருமிப்புகளையும் ஆக்கங்களாகிய எல்லாச் சிருட்டிகளையும் அவற்றின் விதிகளுடனும் அவற்றின் சார்புகளுடனும் அவற்றின் தேட்டங்களுடனும் அவைகளைத் தொகுப்பாக அவன் பார்ப்பதென்பதே ஒன்றும் தேவை



யாகாமை என்பதற்குப் பொருளாம். ஒன்றுந் தேவையாகாமை என்று பேர் வைத்தது எதற்காக வெனில் அல்லாஹூ தஆலா இந்தக் காக்ஷியினால் உலகத்தை வகுப்பாக வெளிப்படுத்துவதை விட்டு வேண்டுதலற்றவனா யிருக்கிறான் என்பதற்கே யாம். உலகத்தையும் அதிலுள்ளவைகளையும் பார்ப்ப தென்கிற இந்தக் காக்ஷி யுண்டாவதில் அவனுக்கு யாதொரு வேண்டுதலு மில்லை. ஏனெனில் அவனுடைய வஹ்தத்துக்குள் எல்லாம் அடங்கி யிருக்கிறதினால் அதில் சகல சிருட்டிகளின் காக்ஷி அவனுக்கு இருக்கவே இருக்கிறது. இந்தக் காக்ஷியானது தொகையில் வகையைப் பார்ப்பது போலும் ஒன்றில் பலவைப் பார்ப்பது போலும் ஒரு விதையில் கிளைகளுடனும் அதன் சார்புகளுடனும் விருக்ஷத்தைப் பார்ப்பது போலும் மறைவிற் காக்ஷியும் அறிவிற் காக்ஷியுமாம்.

இனி அஸ்மாவென்னும் நாமசம்பந்த பூரணத்துவ மென்றது அல்லாஹூ தஆலா தன்பேரில் வெளியாகி புறம்பிலுள்ள சிருட்டியாகிய ஆலத்திலும் அதிலுள்ளவைகளிலும் அவன் தன்னைக் காண்பதாம். இந்தக் காக்ஷியானது வகையிலே தொகையையும் பலவிலே ஒன்றையும் மரத்திலேயும் அதன் சார்புகளிலேயும் விதையையும் காக்ஷிப்பது போல் வெளிக்காக்ஷியும் கண் காக்ஷியுமாம். அஸ்மா சம்மந்தமான இந்தக் காக்ஷி யுண்டாவதும் வெளிப்படுவதும் எதைப் பொருத்த தென்றால், ஆலமும் அதிலுள்ளவைகளும் உண்டாதலைப் பொருத்ததா யிருக்கிறது. ஏனெனில் ஆலம் வகைவகையாக வெளிப்படுவதின்றி அவன் தன்பேரில் வெளியாகி ஆலத்தில் தன்னைப் பார்ப்ப தென்ற பொருள் ஏற்படாதாத லினாலென்க.

### வியாக்கியானம்.

சுவால்:—இதனால் அல்லாஹூ தஆலா தானல்லாத பிறிதொன்றைக் கொண்டு தனக்குப் பூரணத்துவம் தேடுதல் பூணுகிறது. இது பொருந்தா விஷயம் என்று சொல்வாயாகில்,

ஜவாபு:—ஹக்கு சுபுஹானஹூ வதஆலாவினது தாத்து வெளிப்படுவதற்கு யாதொரு மல்ஹரு வேண்டுவதின்றியே அது தன்னிலே பூரணத்வமுடையதா யிருக்கிறது. ஆதலால் சிருட்டிகள் உண்டாவதற்கு முந்தியே தாத்துக்குப் பூரணத்வமுண்டென்றது நிச்சயம். பின்னர் அஸ்மா சம்மந்தமான பூரணத்வம் எதற்

காகவெனில் மல்ஹூருகளான சிருட்டிகளின் பூரணத்துவத்துக்காகவும் அஸ்மாவும் ஷுயூனுமாகிய நாமங்கள் காரியரூபங்கள் இவைகளினுடைய பூரணத்துவத்துக்காகவுமே யாம், அவனுடைய தாத்துக்காக அல்ல. ஆகவே அவனுடைய தாத்துக்கு அவனல்லாத பிறிதொன்றைக் கொண்டு பூரணத்துவம் தேடல் பூணாது.

இனி தாத்துக்குப் பூரணத்துவம் தேடல் பூணாதென்றது சரியே. ஆனால் அவனுடைய அஸ்மாக்களின் பூரணத்துவம் ஆலமுண்டாவதைப் பொருத்ததா யிருக்கிற தென்றனினால் அவனுடைய அஸ்மாக்களுக்கு அவனல்லாத பிறிதொன்றைக் கொண்டு பூரணத்துவம் தேடல் பூணுகின்றதே இதுவும் பொருந்தா விஷயமாயிற்றே என்பாயாகில்,

அதற்கு விடையாவது அவனுடைய அஸ்மாக்களுக்கு அவனல்லாத பிறிதொன்றைக் கொண்டு பூரணத்துவம் தேடல் பூணுவதெல்லாம் எப்போதெனில் .ஆலம் உண்டாவதின் பேரிலேயே அஸ்மாக்களின் பூரணத்துவம் உண்டாவதாயிருந்தால் தான். அஸ்மாக்களின் நிறைவு ஆலமுண்டாவதைப் பொருத்ததல்லவென்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் அவனல்லாத பிறிதொரு சிருட்டி வேண்டுவ தின்றியே எப்படி அவனுடைய தாத்து பரிபூரணமாயிருக்கிறதோ அப்படியே அஸ்மாக்களும் பிறிதொரு சிருட்டி வேண்டுவதின்றியே தன்னிலே பரிபூரணமா யிருக்கிறது. ஆதலால் சிருட்டிகள் உண்டாகு முன்னமே அஸ்மாக்களுக்கும் பரிபூரணத்வம் உண்டு. ஆலமுண்டாவதைப் பொருத்ததா யிருக்கு மென்ற தெல்லாம் அஸ்மாவுடைய பரிபூரணத்வம் சிருட்டிகளின் பேரில் வெளியாகுவதைத்தான். அது தானல்லாத பிறிதொன்றைக் கொண்டு பூரணத்வம் தேட லென்பதை வருத்தாது. பூரணத்வம் தேடலென்பதும் பூணாது.

## மூலம்.

இன்னுமந்த வுஜூது சிருட்டிகளில் விடுதி விட்டிருப்பது மல்ல. அவைகளுடன் கலந்தொன்றாய் போயிருப்பது மல்ல. ஏனெனில் விடுதிவிட்டிருத்தல் கலந் தொன்றாய்ப் போதல் ஆகிய இவ்விரண்டில் ஒவ்வொன்றுக்கும், இரண்டு பொருட்கள் வேண்டும். அப்போதுதான் ஒன்று மற்றொன்றில் விடுதிவிடுவதும் அல்லது ஒன்று மற்றொன்றுடன் கலந்து ஒன்றாய்ப் போதலும் ஏற்படும்.



## வியாக்கியானம்.

விடுதி விடுவதற்கு இரண்டு பொருள் வேண்டு மென்றது எப்படி யென்றால் ஜலமும் குடமும் உருவத்தில் ஒன்றுக்கொன்று வேறாயிருப்பதுடன் குடத்தில் ஜலம் விடுதிவிட்டிருப்பது போலவாம். கலந்து ஒன்றாய்ப் போதலுக்கு இரண்டு பொருள் வேண்டு மென்றது எப்படி யென்றால் ஜெய்து என்பவனும் அம்ரு என்பவனும் உருவத்தில் பேதப்பட்டவர்களா யிருப்பதுடன் ஹகிகத்து மாஹியத்துகளான உணர்வியியவுள்ள உயிரிலும் புருடத்துவத்திலும் இருவரும் கலந் தொன்றாய்ப் போதல் போலவாம். கலந்தொன்றாய்ப் போத லென்பது மூன்று வகையா யிருக்கிறது. அவற்றுள் ஒன்று:—எல்லா விதத்திலும் இதுவே அது, அதுவே இது, என்கிற விதமாக இரண்டு பொருளும் ஒன்றாயிருப்பதாம். இரண்டாவது:—உருவத்தில் வெவ்வேறா யிருப்பதுடன் உயிராகிய ஹகிகத்தில் இரண்டும் ஒன்றாயிருப்பதாம். மூன்றாவது:—இரண்டு பொருட்கள் கலந்து ஒரு பொருளாய்ப் போவதாம். தோஷமுள்ள இந்த மூன்று அர்த்தங்களைக் கொண்டு அந்த வுஜூது சிருஷ்டிகளுடன் கலந்து ஒன்றாயிருக்கிற தென்பது மறுக்கப்பட்டதாகும்.

ஆனால், நாலாவது ஒரு அர்த்தமுண்டு. அதென்ன வெனில், சிருட்டியானது ஹக்குடைய வெளிப்பாடுகளில் நின்றும் ஒரு வெளிப்பாடயிருக்கிற தென்றும், எல்லா விதத்திலும் இது ஹக்குக்கு வேறல்ல என்றும், மேலும் இதன் ஹகிகத்தான அந்தரங்கத்தை நோக்க, இது ஹக்கு தானகவே இருக்கிற தென்றும் இதன் குறிப்பான கண்டமென்ற வெளியரங்கத்தை நோக்க, இது ஹக்குக்கு வேறாயிருக்கிற தென்றும் சொல்வதாம். இந்த அர்த்தம் அந்த வுஜூதில் தரிபட்டிருக்கிறது. முந்தின வகையை மறுப்பது வெள்ளிடையாதலால் ஆசிரியர் அதற்கு அத்தாக்ஷி யொன்றும் சொல்லவில்லை. இரண்டாவது மூன்றாவது வகைகளை மறுக்க சற்று யோசிக்க வேண்டியதா யிருந்தபடியால் அவ்விரண்டுக்கும் அத்தாக்ஷியாக கலந் தொன்றாய்ப் போதலுக்கு இரண்டு பொருள்கள் அவசிய மென்றார்.

## மூலம்.

இனி ஆரிபீன்களுடைய தவுக்கும் அவர்களுடைய விஜ்தானும் சாக்ஷியம் கூறுகிறபடி வுஜூது ஒன்றே ஒன்றுதான்

அதற்கு அறவே எண்ணில்லை, என்னெல்லாம் சிபத்துகளில்தாம்.

## வியாக்கியானம்.

ஆரிபீன்களின் தவுகு என்றது ஹக்கை அவனுடைய மல்ஹருகளான சிருட்டிகளில் தெரிசிக்கும்படி அவர்களை அவனில் ஐக்கியம் செய்விக்கின்ற அதிநுட்பமான ஓர் அரிய சத்தியாம். ஹக்கல்லாததை விட்டு கல்பு பாரக் கொழிந்தாலேயன்றி அந்த சக்தியை மனிதன் அடைய மாட்டான். உதாரணமாக சுவையறிவையும் சிங்குவை என்னும் சக்தியானது ஒரு உணவின் ருசியை அறிவதற்கு மற்றொரு உணவை ருசிப்பதில் நின்றும் அது நீங்கியிருக்க வேண்டும். அதாவது:—மிலஅபா என்னும் கருவியிலிருந்து சுரக்கின்ற அமுதமான திரவம் மற்றொரு உணவை ருசிப்பதில் நின்றும் அது நீங்கியிருந்தால்தான் இந்த உணவின் சுவையை அது உள்ளபடி உணரும். நோயாளிகளுக்கு வாதபித்த சிலேத்துமங்களான தாதுக்களில் ஒன்றன் சேட்டையினால் அவர்களின் சுவையறியும் சக்தி பேதப்படுவதை நாம் பிரத்தியக்ஷமாகப் பார்க்கின்றோம். இதே போல்தான் சாலிக்கு என்னும் யோகியினிடத்தில் அந்த சத்தியின் நிலைமையுமாம். அதாவது, பரமார்த்தமான ஹகாயிகுகளைக் காக்ஷிப்பதற்கு அந்த சத்தியில் திடனாகப் பெலப்பட்டிருக்கிற தடைகளாலும் சம்மந்தங்களாலும் கோட்பாடுகளாலும் அபிப்பிராயங்களாலும் பேதப்படுவதில் நின்றும் அது ஒழிந்திருக்க வேண்டும். அப்படி ஒழியாதவரையில் அந்த ஹகாயிகுகளை உள்ளபடி அது ஏற்பதும் கல்பில் ஹக்குடைய தெரிசனை உண்டாக்கும்படி கல்புக்கு அந்த சக்தியை அருள்வதும் அசாத்தியமேயாம்.

விஜ்தான் என்றது ஹக்குடைய காக்ஷியைக் கொண்டு கல்பிலே விசனத்தையாவது சந்தோஷத்தையாவது வருத்துகிற அல்லது அதை ஒரு கோலத்தில் நின்றும் மாற்றுகிற அல்லது அதன் குணங்களைவிட்டு அதை மறைக்கிற இறையருளால் வந்த அந்தரங்கமான ஒரு சத்தியாம். வஜ்து என்னும் காக்ஷியானது காண்பானில் நிலையுற்ற ஓர் குணமாயும் காண்பான் அழிவது கொண்டு அதுவும் அழிவதாயுமிருக்கிறது. விஜ்தான் என்னும் காக்ஷிப் பொருளோ அல்லாஹு தஆலாவிலே நிலையுற்ற ஓர் சிபத்தாயும் அவன் அழியாமல் தரிப்பது கொண்டு அது நிலைப்பதாயுமிருக்கிறது. உய்த்துணர். (காண்பானை ஞாதுரு என்றும் காக்ஷியை ஞானம் என்றும் காக்ஷிப் பொருளை ஞேயம் என்றும் சொல்வார் இந்து ஞானிகள் த. மு.)



சுத்இய்யாகிய தலீல்களைக் கொண்டு வுஜூதானது தாத்தாலும் ஒன்றே சிபத்துகளாலும் ஒன்றே என்றும் அதில் அறவே எண்ணில்லை என்றும் தரிபட்டிருக்க பின்பு விதிவிலக்குகளைக் கொண்டு வருத்தப் படுத்துவானேன்? அவ்விதி விலக்குகளுக்கு கீழ்ப்படிந்தால் சுகங்கிட்டுமென்று வார்த்தைப்பாடு செய்வானேன்? அவற்றிற்கு விரோதம் செய்தால் வேதனை வருமென்று அச்சமூட்டுவானேன்? இகபரசம்பந்தங்களான பல துன்ப நோய்களைக் கொண்டு சோதிப்பானேன்? ஒருவன் கஷ்ட காரியங்களைக் கொண்டு தன் நப்சைத் தானே வருத்தப்படுத்திக் கொள்ளுகிறான் என்பதும் அந்த நப்சு வழிபட்டால் அதற்குச் சுகத்தைக் கொடுக்கிறான் என்பதும் விரோதம் செய்தால் அதை வேதனைப்படுத்துகிறான் என்பதும் ஆகிய இது மனதில் அமையாத ஒரு விஷயமாயிருக்கிறதே என்னும் வினா நிகழ்வதை அறிந்த ஆசிரியர் பின்வருமாறு விடையளிக்கின்றார்.

## மூலம்.

வணக்கமும் வருத்தங்களும் சொர்க்க சுகங்களும் நரக வேதனைகளும் இவையாவும் சிருஷ்டிகளைச் சார்வனவாம். அந்த வுஜூதினது தாக்கற்ற அகண்ட பரிபூரணமான மர்த்தபாவை நோக்க அது இந்த எல்லாத் தோஷங்களையும் விட்டுத் துய்தாயிருக்கிறது. இன்னுமந்த வுஜூதானது சகல சிருஷ்டிகளையும் சூழ்ந்ததாயிருக்கிறது. அந்த சூழ்தல் எதைப் போல்வதென்றால் ஒன்றுக்கு அத்தியாவசியமாகப் பொருந்தியிருக்க வேண்டிய பொருள்களை அந்த ஒன்று சூழ்ந்தது போலவும் குணத்தைக் குணி சூழ்ந்தது போலவுமாம்; உள்ளூற்றதை வெளியிடம் சூழ்ந்தது போலவுமல்ல, வியட்டியை சமட்டி சூழ்ந்தது போலவுமல்ல.

## வியாக்கியானம்.

ஒன்றுக்கு அத்தியாவசியமாகப் பொருந்தியிருக்கவேண்டிய பொருளென்பதற்கு உதாரணம் மனிதனுக்கு அத்தியாவசியமான பொருள்களில் அவனுடைய வாக்கும் ஒன்றாம். ஆகவே மனித

தனுக்கு அத்தியாவசிய வாக்கை மனிதன் சூழ்ந்திருப்பது எதார்த்தமும் பூரணமுமான சூழ்தலாம். ஆயினும் வாக்கென்னும் அந்த அத்தியாவசிய பொருள் மனிதனிடத்திலிருந்து நீங்கிப் போவதினால் மனுஷத்துவம் இல்லாமல் போமென்பது பூறைது. இதே போல் சர்வ சிருஷ்டிகளுக்கும் மூலாதாரமாய் அவைகளில் தஜல்லி செய்திருக்கிற தாத்திய்யாகிய வுஜூதானது அச்சிருட்டிகளின் அழிவால் அழியாது. ஏனெனில் சிருட்டியானது சிருட்டிகர்த்தாவாலுண்டான ஓர் பிரிவு என்பதும் சிருட்டி யழிவதினால் சிருட்டிகர்த்தா அழிதல் பூறை தென்பதும் தெரிந்த சங்கதியே. உள்ளூற்றதை வெளியிடம் சூழ்ந்ததுபோல் அல்ல வென்றது நீரணுக்கள் சேர்ந்து தடித்த ஜலபிண்டத்தை உள்ளடக்கிக் கொண்டு அந்த பிண்ட முள்ள விடத்தில் தானில்லாமல் அதற்குப் புறம்பே நின்று அதைச் சூழ்ந்திருக்கிற குடம்போல் என்றால் வுஜூது புரையென்ற தோஷமுண்டாதல் பற்றிச் சொன்னது. (சமட்டி யென்பது பல புருடர் கூடிய ஒரு கூட்டம் போல்வது; வியட்டி என்பது அக்கூட்டத்தில் ஒரு புருடன் போல்வது.)

## மூலம்.

இன்னுமந்த வுஜூது தாக்கற்ற அகண்ட பரிபூரணமா யிருப்பதுடன் சகல சிருட்டிகளினுடைய தாத்துகளில் அது எவ்விதமாக வெளியுற்று தஜல்லி செய்திருக்கிற தென்றால், அந்த தாத்துகள் வெளிப்படுமுன் அவை அந்த வுஜூதில் ஷூயூனாய் அஃயான் தாபிதாவாய் அடங்கி யிருந்தபோது தாமே அந்த வுஜூதாய் இருந்தன போல் அந்த வுஜூது சர்வ சிருஷ்டிகளுடைய தாத்துகளிலும் தானே அந்த தாத்துகள் என்கிற விதமாக அந்த வுஜூது அந்த தாத்துகளில் வெளியுற்று தஜல்லி செய்திருக்கிறது.

இதே போல் அந்த வுஜூதுக்குள்ள சிபாத்துன் காமிலத்துன் என்னும் பரிபூரண குணங்கள் சமமாயும் அகண்ட [illegible] இருப்பதுடன் அவை சிருட்டிகளின் சர்வ குணங்களிலு[illegible]மாக வியாபித்திருக்கின்றன வென்றால், சிருட்டிகளின் குணங்கள் வெளிப்படுமுன் அவை அந்தப் பரிபூரண குணங்களில் தாமே அந்தப் பரிபூரண குணங்களாக அமைந்திருந்தன போல் வுஜூதுக்குள்ள பரிபூரண குணங்கள் சிருட்டிகளின் சர்வ குணங்



களிலும் தாமே அச்சிருட்டிகளின் குணமென்கிற விதமாக வியாபித்திருக்கின்றன.

## வியாக்கியானம்.

வுஜூது தானே சர்வ சிருஷ்டிகளின் தாத்துகளா யிருக்கிற தென்றும் வுஜூதினது பரிபூரண குணங்கள் தாமே சர்வ சிருஷ்டிகளின் குணங்களா யிருக்கின்றன வென்றும் சொன்னதில் ஆசிரியர் அந்த வுஜூதினது ஹகீகத்தை மாத்திரம் கருதியே யல்லாது மற்றப்படி வுஜூதுடையவும் அதன் குணங்களுடையவுமான அகண்ட பரிபூரணத்தையும் சிருட்டிகளின் கண்ட அப்பரிபூரணங்களையும் கருதியல்ல. பின்னர் தாத்தாகிய வுஜூதுக்கும் சிருட்டிகளின் வுஜூதுகளுக்கும் இன்னும் தாத்திய்யாகிய வுஜூதுக்குள்ள குணங்களுக்கும் சிருட்டிகளின் வுஜூதுக்குள்ள குணங்களுக்கும் நடுவே அகண்டம் கண்டம் பரிபூரணம் அபரிபூரணம் என்கிற வித்தியாசமே தவிர வேறு வித்தியாச மில்லை.

## மூலம்.

இனி ஆலமானது அதன் சகல பாகங்களுடனும் (அஃராஜு என்னும்) ஆதேயங்களாம். இந்த ஆதேயங்களுக்கு ஆதாரமான நிலைக்களம் அந்த வுஜூதேயாம்.

## வியாக்கியானம்

ஆலமானது சடங்களும் ஆதேயங்களுமா? அல்லது ஆதேயங்கள் மாத்திரமா? என்பதில் அறிவாளர்கள் வாதித்திருக்கிறார்கள். அது சடங்களும் ஆதேயங்களுமாம் என்று அஷாயிராக்கள் ஒற்றோர் மித்தார்கள். அது ஆதேயங்கள் மாத்திரமேயென்று சூபியாக்கள் சொல்லுகிறார்கள். சூபியாக்கள் சொல்வது தான் சரியென்பது இந்நூலாசிரியர் அபிப்பிராய மாதலால் "ஆலமானது அதன் சகல பாகங்களுடனும் ஆதேயங்கள்" என்றார். ஏனெனில் அவர்கள் பொருட்களுக்கு இலக்கணங் கூறினதில் இன்சானுக்கு வசனிக்கும் ஜீவன் என்றும் ஜீவனுக்கு நாட்டங்கொண்டு அசைகின்ற உணர்வுள்ள சடமென்றும் சடத்துக்கு நீளம் அகலம் கனம் என்னும் முப்பண்புகளேற்கின்ற ஆதாரப் பொருளென்றும் ஆதாரப் பொருளுக்கு இருப்பிடம் வேண்டாத மவுஜூ தென்றும் மவுஜூதுக்கு வுஜூதை வுடைய தென்றும் எல்லை கணித்தார்கள். ஆகவே வசனமும் உணர்ச்சியும் நாட்டங்

கொண்ட சைதனும் முப்பண் பேற்றனும் ஓர் இடத்திலிருத்தலும் வுஜூதை வுடைய தென்று மவுஜூதை வுஜூதுடன் சேர்ப்பதும் ஆகிய இவை யெல்லாம் எத்தார்த்த வுஜூதின் மேல் ஆரோபித்த ஆதேயங்களேயாம். இதனால் ஆலமென்பது பல கற்பித சேர்க்கையினாலுண்டான ஆதேயப் பொருட்கள் தாமென்றும் வேறல்லவென்றும் வெளியா யிற்று உய்த்துணர்.

இனி ஆதேயம் கற்பிதமா யிருந்தாலும் எதார்த்தமாயிருந்தாலும் அதற்குப் பிறி தொன்றில் இடம் வேண்டுமாதலால் ஆசிரியர் ஆலம் உண்டாகிற இடங்களைக் கூறத் தொடங்குகிறார்.

## மூலம்.

ஆதேயமாகிய ஆலமுக்கு மூன்று இடங்கள் உண்டு. அவற்றுள் முந்தினது:—தஅய்யுனுல் அவ்வல் என்னும் முதற்குறிப்பாம். அதிலுள்ள ஆலம் ஷுயூனு என்று பேர் சொல்லப்படும் (ஷுயூனு என்பது ஹக்கு தஆலாவுடைய சிபத்துகளுக்குள்ள திருமிப்புகளும் கற்பனைகளுமாம்) இரண்டாவது இடம்:—தஅய்யுனுஸ் ஸானி என்னும் இரண்டாம் குறிப்பாம். அதிலுள்ள ஆலம் அஃயான் தாபிதா என்று பேர் சொல்லப்படும். (அஃயான் தாபிதா என்பது ஹக்கு தஆலாவுடைய இல்மில் அறியப்பட்டிருக்கிற வஸ்துக்களின் கோலமாம். அவை ஆக்கப் பொருள்களாகிய சிருட்டிகளின் ஹகீகத்துக ளென்னும் மூலங்களாம். அவற்றின் சமட்டிகளுக்கு மாஹியத்து என்றும் ஹகாயிகு என்றும் வியட்டிகளுக்கு ஹுவிய்யத்து என்றும் பேர் சொல்லப்படும்.)

## வியாக்கியானம்.

அறிந்துகொள்:—அஃயான் தாபிதாவுக்கு இரண்டு முகங்களான பக்கங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று சிருட்சியினது இன்மையின் பக்கம் சேர்ந்தது.

هل اتي علي الانسان حين من الدهر لم يكن شيئا مذكورا

**“மனிதன் மீது காலத்தில் நின்றும் அவன் உரைக்கப்படுகிற ஒரு வஸ்துவாயு மிராத ஓர் காலம் வந்தது”** என்று அல்லாஹு தஆலா கூறியிருப்பதில் இதன் பக்கம் இஷாரா யிருக்கிறது. மற்றொன்று சிருட்டிகளின் கற்பனுவுஜூதின் பக்கம் சேர்ந்ததாம்.



انما قولنا لشيء اذا اردناه ان نقول له كن فيكون

**“ஒரு வஸ்துவுக்கு நம்முடைய சொல் என்பதெல்லாம், நாம் அதை நாடினபோது ஆகு என்று நாம் சொல்வதுதான் பின்பு அது ஆய்விடும்”** என்று அல்லாஹு தஆலா அருளிச் செய்திருப்பதில் இதன் பக்கம் இஷாரா யிருக்கிறது. ஆகவே சிருட்டியினது இன்மையின் பக்கம் நோக்கிய முகமென்ற வுஜூதின் அருளை ஏற்கும் தகுதி மாத்திரமிருந்து இன்னுமதற்குப் பக்குவம் வராமலிருக்கிற முகமாம். சிருட்டியினுடைய கற்பனு வுஜூதின் பக்கம் நோக்கிய முகமென்றது அவனுடைய குன் என்ற சொல்லால் விளிக்கப்பட்டு நீ கேட்பவனாய் வழிபடுபவனாய் ஹக்குடைய விளித்தலை ஏற்கும் பக்குவ மெய்தியவனாய் இரு என்று சொல்லப்பட்ட முகமாம். ஆகக்கூடி இதன் கருத்தென்ன வென்றால் தீர்ந்த விசாரணையுள்ள ஆசானாகிய ஆரிபிடத்தில் அஃயான் தாபிதாவுடைய வருணிப்பில் ஒரு கருத்துக்கொண்டு அதை கதீம் (அனாதி) என்றும் ஒரு கருத்துக்கொண்டு ஹாதிஷ் (நூதனம்) என்றும் ஒரு கருத்துக்கொண்டு வுஜூது (உளது) என்றும் ஒரு கருத்துக்கொண்டு அதம் (இலது) என்றும் சொல்லலா மென்பதுதான். ஆதலால் சொல்லிய எல்லாக் கருத்துகளின் விதங்களை விளங்கியறி. அப்படி யறிந்தாயாகில் நீ முஹக்கிகூன்களாகிய தத்வஞானிகளில் ஒருவனாயும் கமாலையுடையவனாயு மிருப்பாய்.

(இருந்து, வந்து, தோன்றி, அழிந்தது. இதில் இருந்தது அநாதியும், வந்தது நூதனமும், தோன்றினது உளதும் அழிந்தது இலதுமாம். வித்திலே விருக்ஷம் சத்தியாக அடங்கியிருந்ததை நோக்க விருக்ஷம் அனாதி. அது முளையாய் இலையாய் தண்டாய் கிளையாய் தழையாய் பூவாய் பிஞ்சாய் காய்கனிகளாய் வந்ததை நோக்க விருக்ஷம் நூதனம். அது விருக்ஷ மென்ற நாமரூபங்களுடன் தோன்றி உளதாகக் காட்டுவதை நோக்க விருக்ஷம் உஜூது விருக்ஷம் வித்தினது காரியம் காரணத்தையன்றி காரியம் ஓர் முதலல்ல வென்பதையும் அதன் அழிவையும் நோக்க விருக்ஷம் அதம். இந்த ஏகதேச உபமானப்படி வித்து ஸ்தானத்தில் வாஜிபுல் வுஜூதாகிய ஹக்கு தஆலாவையும் விருக்ஷ ஸ்தானத்தில் அஃயான் தாபிதாவையும் வைத்துப் பார்க்க ஆலம் கதீமுமாய் ஹாதிஷுமாய் வுஜூதுமாய் அதமுமாய் இருப்பது நன்கு விளங்குகின்றது.

ஆனால் வித்துகெட்டு விருக்ஷமாயிற் றென்பதை நோக்க இந்த உபமானம் பொருத்தமுடைய தல்ல, த. மு.)

## மூலம்.

மூன்றாவது இடம்:—புறம்பான சிருட்டியிலாம் அதிலுள்ள ஆலம் அஃயான் காரிஜா என்று பேர் சொல்லப்படும். இதேனெனில் அறிவாகிய வுஜூதில் நின்றும் சிருட்டியென்னும் ஆலத்தில் குன் என்ற உத்திரவின் மூலமாக கண்ணுக்குத் தோற்றுகிற வுஜூதாக அவை வெளிப்பட்டதினா லென்க. இனி அஃயான் தாபித்தா (அதாவது ஆக்க மென்னும் சிருட்டிகளின் மூலதத்துவங்களாய் வஹ்தத்தில் அறிவாய் அடங்கி யிருந்தவைகள்) வெளிப்படையான வுஜூதின் வாடையைப் பரிசிக்கவில்லை. (அவற்றினிடம் இதைச் சேர்ப்பதும் தகாது. ஏனெனில், வாஜிபுல் வுஜூதாகிய ஹக்கு தஆலா தன் வுஜூதைக் கொண்டு, தனியனாயிருப்பதினாலென்க) வெளியான தெல்லாம் அந்த அஃயான்தாபித்தாவுடைய விதிகளும் அடையாளங்களுமே யாம். (அதெப்போதென்றால் அறிவில் அடங்கியிருந்த அவை வெளிக்காக்ஷிக்கு வரும்படி ஹக்கு தஆலா அவைகளைக்கொண்டு, தஜல்லியான போதேயாம்.)

ஒவ்வொரு வஸ்துவிலும் முந்தி உணரப்படுவது அந்த தாத்தியாகிய வுஜூதேயாம். அப்படி யுணரப்படுவது அஸ்மா சிபாத்துகளின் பக்கத்தால் தான். (குன்ஹூ என்னும் தத் சொரூபத்தாலல்ல.) அந்த வுஜூதின் மூலமாகவே அந்த வஸ்து உணரப்படும். எதுபோலெனில் மற்ற உருவங்களையும் நிறங்களையும் நோக்க (சூரியப்பிரகாசம் அல்லது அதுபோன்ற) ஒளிப்பொருள் முந்தி உணரப்படுவது போலென்க. இன்னுமந்த வுஜூது மறையாம லெப்போதும் வெளியாயிருப்பதினாலும் அந்த வெளிப்பாடு அதிக்கர மித்திருப்பதினாலும் இந்த வுணர்வை கவாஸ்ஸூ என்னும் சிறந்த மஹான்களே தவிர மற்ற சாமானியர் அறியார்.

## வியாக்கியானம்.

அறிந்துகொள் ஷுஹூது என்னும் காட்சி இருவகைப்படும். ஒன்று ஜம்ஐ உடையவர்களின் **ஷுஹூது**தாம். அவர்கள் எந்த வஸ்துவைக் கண்டாலும் தங்கள் கல்பால் இந்த வஸ்து ஹக்குடைய வெளிப்பாடு என்றும், இதனால் அவன் தனது அஸ்மா



யென்னும் திருநாமங்களான உடையில் மறைந்து அஃயான் தாபிதாவான கண்ணாடிகளில் வெளியாயினான் என்றும் தெரிசிப்பார்கள். இந்த ஷுஹூதை உடையவர்களும் ஹக்கு லாஹிரும் ஆலம் பாதினுமாம். இதனால்தான் இந்நூலாசிரியர் ஒவ்வொரு வஸ்துவிலும் முந்தியுணரப்படுவது அந்த வுஜூதே யென்றார்.

மற்றொன்று பர்கை உடையவர்களின் ஷுஹூதாம். அவர்கள் யாதொரு வஸ்துவைக் கண்டால் தங்கள் கல்பால் இது அஃயான் தாபிதாவுடைய சாயைகளில் நின்றும் ஓர் சாயையென்றும் அவன் தன் அஸ்மாவுடைய கமாலியத்தான நிறைவை வெளிப்படுத்துவதற்காக தன் வுஜூது என்னும் கண்ணாடியில் இதை வெளிப்படுத்தினான் என்றும் தெரிசிப்பார்கள். இந்த ஷுஹூதை உடையவர்களிடத்தில் ஹக்கு பாதினும் ஆலம் லாஹிருமாம். நீ இந்த இரண்டு ஷுஹூதுகளையும் அறிந்தாயாதலால் நீ மறதியாளரில் ஒருவனென்றாகாம லிருக்கும் பொருட்டு இரண்டையுமாவது ஒன்றையாவது பற்றிக் கொள்ள நீ கடமைப்பட்டவனா யிருக்கிறாய்.

இந்த உணர்ச்சியை சாமானியர் அறியா ரென்றதேனெனில் அந்த வுஜூது சூரியப் பிரகாசம் போல் தோன்றி மறைவதாயிருந்தால் அப்படி மறைந்த காரணங் கொண்டு சாமானியர்களுக்கும் இந்த உணர்ச்சியைப் பற்றிய அறிவும் உண்டாகும் என்கினும் அந்த வுஜூதானது மறையாமல் சதோதயமாக விளங்குவதாம். ஆகவே இந்த உணர்ச்சியைப் பற்றிய அறிவு சிறந்த மஹான்களுக்கே யன்றி மற்றவருக்கில்லை என்றது.

இதற்குபமானம் வௌவாலானது இரவில் பார்க்குமே யல்லாது பகலில் பார்க்காது. அப்படி பார்க்காதது பகல் மறைந்து மூடலா யிருக்கிற தென்றல்ல. மேலும் அதன் வெளிபாடு அதிகரித்திருக்கிறதினால்தான். பின்னர் வௌவாலின் பார்வை பலங்குன்றி யிருக்கிறது. சூரியன் உதயமானால் அதன் பிரகாசம் அதன் பார்வையை மறைத்து விடுகிறது. ஆகவே வௌவாலுடைய பார்வையில் பலங் குன்றியிருப்பதுடன் பகலுடைய பெரும் பிரகாசமானது அதன் பார்வையைத் தடுக்க ஓர் காரணமாம். இதேபோல் சாமானியருடைய மனங்கள் துர்பலமுள்ளவை வஹ்தத்துல் வுஜூதினது ஜமாலாகிய பேரழகோ பெருஞ்சோதியாகும்

பிரகாசிக்கின்றது. சிருட்டிகளினின்றும் ஒரு அணுவாவது அந்த ஜமாலைவிட்டுத் தனிக்கவில்லை யென்கிறவரையில் எல்லாவற்றையும் அது பெரும் பொதித்தலாகப் பொதிந்து பெரும் மூடலாக மூடிக் கொண்டிருக்கிறது. ஆகவே அந்த வெளிப்பாட்டின் பெருக்கானது சாமானியருக்கு அந்தக் காக்ஷியை மறைக்க ஓர் காரணமாம். அதாவது மல்ஹருகளில் அதை அவர்கள் தெரிசிக்காமைக்குக் காரணமாய் விட்டது. இது மாத்திரமல்ல, ஹக்கு இந்த மல் ஹருகளில் வெளியானான் என்ற அறிவும் அவர்களுக்கில்லாமல் போனதற்கும் காரணமாய் விட்டது. ஒவ்வொரு வஸ்துவினும் முந்தியுணரப்படுவது அந்த வுஜூதுதான் என்ற இல்மும் அவர்களுக்கில்லை என்பது மறைந்ததல்ல. சிறந்த மஹான்களோ இவர்கள் போன்றவர் அல்லர். அவர்களுடைய மனங்கள் உறுதியுள்ளவை. வஹ்தத்துல் வுஜூதினது ஜமாலான பேரழகு இந்த மல்ஹருகளில் வெளியாயிற்றென்று அவர்கள் அறிகின்றார்கள். மேலும் அந்த மல்ஹருகளில் அதைத் தெரிசிக்கின்றார்கள். ஆகவே முந்தியுணரப்படுவது அந்த வுஜூதுதான் என்ற அந்த வுணர்ச்சி அவர்களுக் கிருக்கவே யிருக்கும், உய்த்துணர்.

இதுவரையில் ஆசிரியர் வுஜூதையும் தாத்து சிபாத்து அஸ்மா இவைகளின் பக்கத்தால் அந்த வுஜூதினது உலூஹியத்தினுடைய மர்த்தபாக்களையும் அப்ஆலின் பக்கத்தால் அந்த வுஜூதினது சிருட்டிகளின் மர்த்தபாக்களையும் அவ்வவற்றின் சார்புகளுடன் பயான் செய்து முடித்த பிறகு மனிதன் அல்லாஹு தஆலாவினது சமுகத்தை அடுத்து அவனை அடைவதற்குரிய குருபுகளின் வகையைச் சொல்ல ஆரம்பிக்கின்றார். அது வருமாறு:—

## மூலம்.

இனி அல்லாஹு தஆலாவை அடுத்தலென்னும் குர்பு இரண்டு வகையாம். ஒன்று குர்புந்நவாபிலியும் மற்றொன்று குர்புல் பராயிலியுமாம். குர்புந்நவாபிலி யென்பது சிபாத்துல் பஷரிய்யத் தென்னும் மனிதப் பண்புகள் அவனை விட்டு நீங்கி அல்லாஹு தஆலாவுடைய சிபத்துகள் அவனில் வெளியாகுவதாம். அப்போதவன் அல்லாஹு தஆலாவுடைய உத்திரவு கொண்டு மவ்த்தானவர்களை ஹயாத்தாக்குவான். ஹயாத்தானவர்களை மவ்த்



தாக்குவான். கண்காது கொண்டு மாத்திரமல்லாமல் சர்வாங்கத்தாலும் பார்ப்பான், சர்வாங்கத்தாலும் கேட்பான். இதேபோல் பார்ப்பவைகளை தூரத்திலிருந்தும் பார்ப்பான், கேட்பவைகளை தூரத்திலிருந்தும் கேட்பான். மற்ற சிபத்துகளையும் இதன் மேல் ஊகித்துக்கொள். இதுதான் அல்லாவுடைய சிபாத்தில் மனிதனுடைய சிபாத்து பனாவாகுவ தென்பதின் பொருள். இது நப்லான இபாதத்துகளை நிறைவேற்றி வந்ததின் பயனாகும்.

இனி குர்புல்பராயிலு என்பது அடியான் எல்லாச் சிருட்டிகளின் உணர்வற்று தன்னுணர்வுமற்று ஹக்கு தஆலாவுடைய உஜூது ஒன்று தவிர மற்றவை ஒன்றும் அவன் பார்வையில் தரிபடவில்லை என்கிற விதமாக முழு ஐக்கியமாய் அல்லாவிலே ஐக்கியமாய் விடுவதாம். இதுதான் அல்லாவிலே அடிமை பனாவாகுவ தென்பதின் பொருள். இது பர்லான இபாதத்துகளை நிறைவேற்றி வந்ததன் பயனாகும்.

இனி வஹ்தத்துல் வுஜூதை ஒப்புக் கொண்டவர்களில் சிலர் ஹக்கு சுபுஹானஹூவ தஆலா சர்வ சிருஷ்டிகளினுடையவும் அவற்றின் அந்தரங்கத்தினுடையவுமான ஹகீகத்தா இருக்கிறான் என்று ஐயமின்றிய திட அறிவால் அறிந்திருக்கிறார்கள், ஆனால் இவர்கள் ஹக்கு சுபுஹானஹூவ தஆலாவைச் சிருட்டிகளிலே **ஷுஹூது** செய்ய மாட்டார்கள்.

இன்னும் சிலர் கல்பைக் கொண்டு ஹாலிய்யாவான **ஷுஹூ** தாக ஹக்கை கல்கிலே ஷுஹூது செய்வார்கள். இது முந்தின மர்த்தபாவைக்காண அதிக சிறந்ததும் உயர்ந்ததுமான மர்த்தபாவா யிருக்கிறது.

இன்னும் சிலர் ஹக்கை கல்கிலேயும் கல்கை ஹக்கிலேயும் ஷுஹூது செய்வதில் ஒன்றை மற்றொன்று தடுக்காத வண்ணம் ஷுஹூது செய்வார்கள்.

## வியாக்கியானம்.

அதாவது அவர்கள் அகக்கண்ணைக் கொண்டு வுஜூதை ஒன்றாகக் காண்பார்கள். முகக்கண்ணைக் கொண்டு அந்த வுஜூதை அகண்ட பரிபூரண மென்கிற புரத்தில் ஹக்காகவும் கண்ட அபரிபூரண மென்கிற புரத்தில் கல்காகவும் காண்பார்கள். இப்படி

கல்கிலே ஹக்கை ஒன்றாகப் பார்ப்பதும் ஹக்கிலே கல்கைப் பலவாகப் பார்ப்பதும் ஒன்றை ஒன்று பாதிக்காது.

## மூலம்.

இன்னு மிக்தக் கடைசி மர்த்தபாவானது முந்தின இரண்டு மர்த்தபாக்களைக் காண மிகச் சிறந்ததும் உயர்ந்ததுமா யிருக்கிறது. இது அம்பியாக்களுடைய மர்த்தபாவாம். இன்னும் அம்பியாக்களைப் பின்பற்றினது கொண்டு அக்தாபுகளுடைய மர்த்தபாவுமாம்.

## வியாக்கியானம்.

அறிந்துகொள்:—ஹக்கு தஆலாவை சிருட்டியாகிய மல்ஹருகளில் ஷுஹூது செய்வதின் பக்கம் சேர்ப்பிக்கின்ற வழிகள் பல உண்டு. அவைகளில் ஆரிபீன்கள் தெரிந்தெடுத்துக் கொண்ட மூன்று வழிகளில் முதலாவதான ஒரு வழி இவ்விடத்தில் வரையப்படுகிறது, அதாவது நீ அல்லாஹு என்னும் இஸ்மை எடுத்துக் கொள்வதும் அதன் ஹர்புகளை பிக்ரு என்னும் கலத்தைக் கொண்டும் ஷம்ஸிய்யாகிய சாயத்தைக் கொண்டும் கல்பு என்னும் பலகையில் எழுதுவதும் இந்த சூரத்தானது அல்லாஹு தஆலா வெளியாகும் மல்ஹருகளில் ஒரு மல்ஹராயிருக்கிற தென்றும் இதில் அல்லாஹு தஆலா * ஹுலூலும் இத்திஹாது மில்லாமலு வெளியானான் என்றும் நீ நிச்சயித்துக் கொள்வதுமாம்.

## மூலம்.

ஷரீஅத்தையும் தரீகத்தையும் விரோதிப்பவன் யாவனோ அவனுக்கு இந்த மூன்று மர்த்தபாக்களில் மத்திய மர்த்தபா வாய்ப்பதே அசாத்தியமென்றால் மேற்கொண்டு முந்திய இரண்டு மர்த்தபாக்களைவிட மிக்கமேலான கடைசி மர்த்தபா அவனுக்கு வாய்ப்பதும் அசாத்தியமே யாம்.

இனி மவுஜூதாத் தென்னும் சிருட்டிகளெல்லாம் (ஹக்கு தஆலாவினது) வுஜூது என்கிற புறத்தில் அவை ஹக்குதானாகயிருக்கின்றன. அவை கண்டங்களான குறிப்புகளென்கிற புறத்தில் அவை ஹக்குக்கு வேறானவைகளா யிருக்கின்றன. இந்த

---

* ஹுலூல் - ஊடே நுழைதல். இத்திஹாது - இரண்டறக் கலந்து ஒன்றாய்ப் போதல்.



வேறு என்பதோ எதார்த்தமல்லாத கற்பனையா யிருக்கிறது. ஆனால் கற்பனைக்கு ஆதாரம் எதார்த்த மென்பதை நோக்க சகலமும் அந்த ஹக்கு சுபுஹானஹு வதஆலாவேயாம்.

## வியாக்கியானம்.

சுவால்:—சகலமும் ஹக்குதஆலாவே என்றதினால் அவன் தன் தாத்தாகிய தத்சொரூபத்துடன் நஜிசு என்னும் அருவருப்பான ஸ்தானத்திலும் இருக்கிறான் என்பது பூணுகிறது. இது மிகக் கெட்டதும் அசங்கிதமானதுமா யிருக்கிறது என்பாயாகில்.

ஜவாபு:—ஹக்குதஆலாவின் வுஜூது நல்ல மல்ஹருகளில் வெளியாகிறதினால் அதற்கு யாதொரு நன்மையும் அதிகரித்து விடாது. கெட்ட மல்ஹருகளில் வெளியாவதினால் அதற்கு யாதொரு கெடுதியும் குறையும் சம்பவித்துவிடாது. இதற்கு இரண்டு திருஷ்டாந்தங்களுண்டு. அவற்றுள் ஒன்று சூரியனுடைய ஒளியானது சந்தனமும் கஸ்தூரியும் போல் சுத்தமும் மணமுமுள்ள பொருட்கள்மீதும் பிரகாசிக்கின்றது. சாணமும் மலமும் போல் அசுத்தமும் நாற்றமுமுள்ள பொருட்கள்மீதும் பிரகாசிக்கின்றது. சந்தனத்தினால் அதன் தூய்மை அதிகரிக்கவுமில்லை. அவற்றின் வாசனையை அது ஆக்ராணிக்கவுமில்லை. இதேபோல் சாணம் முதலியவைகளால் அதன் தூய்மை கெடவுமில்லை அவ்வருவருப்புகளில் அது உழன்று புறழவுமில்லை. மற்றொரு திருஷ்டாந்தம், மானிட உடம்பில் ஆக்ஷிசெய்து கொண்டிருக்கிற ஆன்மாவானது, அவ்வுடம்பின் சகல அணுக்களோடுங் கூடி அவற்றில் வியாபித்திருக்கிறது. அப்படி யிருப்பதுடன் அவ்வுடம்பின் நஜாசத்தான அருவருப்புகளினின்றும் யாதொரு குணமும் அடையாளமும் அதைத் தீண்டவில்லை. மேலும் அந்த ஆன்மா உடம்புடன் சம்பந்தப் படுவதற்குமுன் எப்படி பரிசுத்தமாயிருந்ததோ அப்படியே அதனுடன் சம்பந்தப் பட்ட பிறகும் பரிசுத்தமாகவே யிருக்கிறது. இனி சர்வசிருஷ்டிகளும் ஒரு விதத்தில் ஹக்கு தானாகவும் ஒரு விதத்தில் ஹக்குக்கு வேறாகவும் இருக்கின்றன வென்பதற்கு ஆசிரியர் உபமானம் கூறுகின்றார்.

## மூலம்.

அது எதுபோலெனில் நீர்மேலெழுந்த குமிழியும் அலையும், உறைந்த பனியாலாகிய கூசாவும் போலவாம். இவை யாவும் ஹகீகத்

தென்னும் சுயார்த்தமான பொருளை நோக்க தண்ணீர் தானாயும் இவற்றின் நாமரூபங்களான குமிழிகளை நோக்க தண்ணீரின் வேறாயும் இருக்கின்றன. இதேபோல் கானல் ஜலமும் ஹகீகத்தை நோக்க கானல் தானாயும் நாமரூபங்களை நோக்க கானலின் வேறாயு மிருக்கிறது. கானல் ஜலமானது எதார்த்தத்தில் கானலேயாம்; அது ஜலரூபமாய் ஆரோபித்துத் தோற்றுகிறது.

இனி வஹ்தத்துல் வுஜூதின் மேல் அறிவிக்கிற தலீலுக ளான பிரமாணங்கள் அநேக மிருக்கின்றன. ஆனால் அவைகளில் நின்றும் குர்ஆனில் வருகிற சில தலீலுகளாவன:—

ஆயத்து:—

ولله المشرق المغرب فاينما تولوا فثم وجه الله

மஷ்ரிகும் மக்ரிபும் அல்லாவுக்கே உடையது. ஆதலால் நீங்கள் எப்பக்கம் திரும்பினாலும் அங்கு அல்லாஹுு தஆலா வினது தாத்து இருக்கிறது.

ஆயத்து:—நாம் இன்சானிடம் அவனுடைய பிராண நரம் பினும் அதிகமாக நெருங்கி யிருக்கிறோம்.

ஆயத்து:—நீங்கள் எங்கே யிருந்தாலும் அவன் உங்களோடி ருக்கிறான்.

ஆயத்து:-மரணத் தருவாயி லிருக்கிற அவனிடம் நாம் உங் களைக் காண அதிக நெருக்கமாக நெருங்கி யிருக்கிறோம். ஆனால் நீங்கள் அதைப் பார்ப்பதில்லை.

ஆயத்து:— (ஓ! முஹம்மது ஸல்-அம் உம்மிடத்தில் கைகொடுத்து) பய்அத்து செய்கிறவர்கள் அல்லாவினிடத்தில் தான் பய்அத்து செய்கிறார்கள். அல்லாவுடைய கையானது அவர் களுடைய கைகளின் மேலிருக்கிறது.

ஆயத்து:-அவனே முன்னவன், அவனே பின்னவன், அவனே வெளிப்பட்டிருப்பவன், அவனே உள்ளீடாயிருப்பவன், இன்னு மவன் வஸ்துக ளடங்கலையும் நன்றாய் அறிகின்றவன்.

## வியாக்கியானம்

அறிந்துகொள்:—இந்த ஆயத்தானது இரண்டு விதத்தில் தவ்ஹீதின் மேல் அறிவிக்கின்ற வெள்ளிய தலீலா யிருக்கிறது.



ஒரு விதம் இந்த ஆயத்தின் அறபி மூலவாக்கியத்தில் அல் அவ் வலு, அல்ஆகிரு, அல்லாஹிரு, அல்பாதினு என்று வ்ந்திருக்கிற நான்கு இஸ்முகளிலும் அல் என்னும் சொல்லை சிபத்தின் பேரில் புகுந்த மவுசூலத்து என்று ஆக்குவாயாகில் அப்போது அந்த ஆயத்திற்குப் பொருள் சர்வசிருஷ்டிகளின் வுஜூதுகளுக்கு முந்தின முன்னவன் அவனே என்றும் சர்வலோகமான தன் மவுஜூதுடைய மவுஜூதை விட்டு தன் வெளிப்பாடு பிந்தின பின்னவன் அவனே என்றும் ஆலமுஷ் ஷஹாதத்தும் ஆலமுல் முல்கும்போல் ஞானேந்திரியங்களுக்குப் புலப்படும்படி வெளிப் பட்டிருப்பவன் அவனே என்றும் சமட்டி வியட்டிகளான ஆன்ம ஜீவலோகங்க ளென்னும் ஆலமுல் அர்வாஹுகள் போல் ஞானேந் திரியங்களுக்குப் புலப்படாதபடி உள்ளீடா யிருப்பவன் அவனே என்றும் ஆகின்றது. ஆகவே இந்தப் பொருள் ஹக்கு சுப்ஹா னஹுு வதஆலா சகல சிருட்டிகளின் ஹகீகத்தா யிருக்கிறான் என்கிற புரத்தாலன்றி வேறு விதத்தால் பொருந்தாது.

மற்றொரு விதம் அந்த அல் என்ற சொல்லை தஃரீபுடைய ஹர் பென்றாக்குவாயாகில் ஹஸ்ருடைய நயத்துக்காக சுபருகிய பயனில்லையின் தஃரீபுக்கும் அதைக் கொண்டுவா. அப்போது அதன் பொருள் முன், பின், வெளி, உள் என்கிற எல்லா சிபத்து களும் வேறு என்பதன் பக்கம் கடக்காத விதமாக வுஜூதுல் முத்லகாகிய அல்லாஹுு தஆலாவிலேயே கட்டுண்டிருக்கின்றன வென்றாகின்றது. ஏனெனில் அவனல்லாத வேறு என்பது அறவே உண்டாயிருப்பதில்லை யாதலினாலென்க.

## மூலம்.

ஆயத்து:— وفي انفسكم افلا تبصرون

உங்களுடைய நப்ஸுகளிலேயே இருக்கிறது நீங்கள் ஆராய்ந் தறிய வேண்டாமா?

ஆயத்து:—என் அடியார்கள் என்னைக் குறித்து உம்மைக் கேட்டால் நான் சமீபத்தில் அடுத்திருக்கிறேன் (என்று நீர் அவர் களுக்குச் சொல்வீராக.)

ஆயத்து:—(காபிர்களின்மீது) நீர் மண்ணை எறிந்தபோது அதை நீர் எறியவில்லை என்கினும் அல்லாஹுு தஆலாவே அதை எறிந்தான்.

ஆயத்து:—அல்லாஹு தஆலா சகல வஸ்துக்களையும் சூழ்ந்தவனாயிருக்கிறான்.

இவையல்லாமல் வஹ்தத்துல் வுஜூதின்மேல் அறிவிக்கின்ற ஆயத்துகள் இன்னும் அநேக மிருக்கின்றன.

இனி ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுடைய ஹதீசுகளில் நின்றும் வஹ்தத்துல் வுஜூதின் மேல் அறிவிக்கின்ற திருவாக்கியங்கள் பல உண்டு. அவற்றுள் சில வருமாறு.

ஹதீசு:—அறபுகள் சொல்லிய வாக்கியங்களில் லபீது என்பவருடைய வாக்கியம் மிகவும் உண்மையானது.

الا كل شيئ ما خلا الله باطل

அஃதுயாதெனில்; அல்லாவே யன்றி மற்ற யாவும் பாதில் (பொய்) என்றறி என்பதாம்.

ஹதீசு:—

ان احدكم اذا قام الي الصلاة فانما يناجي ربه فان ربه بينه وبين
القبلة لايزال عبدي يتقرب الي بالنوافل حتي احبه فاذا احببته
كنت سمعه الذي يسمع به وبصره الذي يبصر به ويده التي يبطش بها
ورجله التي يمشي بها ان الله تعالي يقول لعبده مرضت فلم تعدني
وجعت فلم تطعمني وسئلتك فلم تعطني الي آخره

ஒருவன் தொழுகைக்கு நின்றானாகில் அவன் தன் றப்பிடத்தில் வசனிக்கின்றான். ஆகவே அவனுடைய றப்பு அவனுக்கும் கிப்லாவுக்கும் மத்தியிலிருக்கின்றான்.

இன்னும் அல்லாஹு தஆலா திருவுளமானதாக ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அருளிய ஹதீசு குத்ஸிகளில் ஒன்று:—என் அடியான் அவனை நான் உவந்து கொள்ளுகிற வரையில் நப்லான இபாதத்துகளைக் கொண்டு இடைவிடாமல் என்னிடம் நெருங்கிக் கொண்டிருப்பான். எப்போது நான் அவனை உவந்து கொள்ளுகிறேனோ அப்போது நான், அவன் கேட்கும் அவனது செவிப்புலனாயு மிருக்கிறேன். அவன் பார்க்கும் அவனது கட்புலனாயு மிருக்கிறேன். அவன் பிடிக்கும் அவனது கையாயு மிருக்கிறேன். அவன் நடக்கும் அவனது காலாயு மிருக்கிறேன் என்பது.



இன்னு மொன்று:—நான் நோய் கொண்டிருந்தேன். நீ என் வியாதி வினவ வரவில்லை. நான் பசித்திருந்தேன். நீ எனக்கு உணவளிக்கவில்லை. நான் கேட்டேன், நீ எனக்குக் கொடுக்கவில்லை என்று இவ்வாறாக கியாமத்துநாளில் அல்லாஹு தஆலா தன் அடிமையை நோக்கிச் சொல்லுவான் என்பது.

இன்னும் திருமதி ரஹிமஹுல்லா அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிற ஒரு நீண்ட ஹதீசு:—முஹம்மதுடைய ஆன்மா யார் வசமிருக்கிறதோ அந்த ஆண்டவன்மேல் ஆணையாக நீங்கள் நீர் மொள்ளும் பாத்திரத்தை கயிற்றுடன் பூமியில் இறக்குவீர்களாகில் நிடமாக அது அல்லாவின்மேல் விழும் என்று நாயக மவர்கள் இவ்வாக்கியத்தை அருளியபின் "அவனே முன்னவன் அவனே பின்னவன், அவனே வெளிப்பட்டிருப்பவன், அவனே உள்ளீடா யிருப்பவன், அவன் சகல வஸ்துக்களையும் நன்றாய் அறிகின்றவன்" என்கிற ஆயத்தையும் எடுத்தோதினார்கள்.

இன்னுமிவைபோல வஹ்தத்துல் வுஜூதின்மேல் அறிவிக்கின்ற ஸஹீஹான ஹதீசுகள் அநேகமிருக்கின்றன.

இனி ஹக்கை அறிந்த ஆரிபீன்களுடைய வாக்கியங்களில் நின்றும் வஹ்தத்துல் வுஜூதின்மேல் அறிவிக்கின்ற வாக்கியங்கள் எண்ணிலடக்கிச் சொல்லமுடியாத அவ்வளவு அதிகமா யிருக்கின்றன. ஆகையினால் அவைகளை நாம் சொல்லவில்லை. நீ அவைகளை அறிய நாடுவாயாகில் அவர்க ளியற்றியுள்ள நூல்களைப் பார்வையிடு. அப்போது நீ அவைகளைக் கண்டுகொள்வாய், இன்ஷா அல்லாஹு தஆலா.

தேட்டமுள்ள தாலிபானவனே! (குர்புந்நவாபிலி, குர்புல் பாராயிலிகளில் கூறிவந்தபடி) அல்லாஹு தஆலாவினிடம் ஐக்கியமாக நாடுவாயாகில் முந்தி நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைச் சொல்லாலும் செயலாலும் அந்தரங்கத்தாலும் வெளியரங்கத்தாலும் பின்பற்றி நடப்பதைப் பலமாகப் பிடித்துக் கொள். அதன் பிறகு இரண்டாவதாக அல்கலிமத்துத் தையிபாவின் சுயார்த்தமான பொருளாயிருக்கிற வஹ்தத்துல் வுஜூதின் முராகபாவாகிய யோக சாதனையைச் செய்ய முயலு. அதற்கு ஒழுவு வேண்டுமென்ற விதியில்லை. ஒழுவிருந்தால் உத்தமந்தான். இதர நேரமல்லாத இன்ன நேரத்தில்தான் செய்யவேண்டுமென்ற

விதியுமில்லை. இன்னும் மூச்சு புகுவதையும் புறப்படுவதையும் முராகபாவில் கோட்டமிட வேண்டுமென்ற விதியுமில்லை. இன்னும் அல்கலிமத்துத் தைய்யிபாவின் ஹுருபுகளான அக்ஷரங்களை கோட்டமிட வேண்டு மென்ற விதியுமில்லை. மேலும் (துவிதத்தை நீக்கி அத்வைதத்தை நிலைநிறுத்த லென்னும்) அதன் பொருளை மாத்திரமே யன்றி மற்றொன்றையும் நீ கோட்டமிட வேண்டியதில்லை. இன்ன நிலைமையில்தான் முராகபா செய்ய வேண்டு மென்பது மில்லை. நீ நின்றவனாய் அல்லது உட்கார்ந்தவனாய் நடக்கிறவனாய், அல்லது படுத்திருக்கிறவனாய், தொழில் செய்கிறவனாய் அல்லது சும்மா இருக்கிறவனாய், உண்கிறவனாய், அல்லது குடிக்கிறவனாய், இப்படி நீ எந்த நிலைமையிலிருந்தாலும் முராகபா செய்.

இனி முராகபா செய்யும் முறையாவது:—முந்தி நீ உன்னுடைய அனிய்யத்தை நீக்கவேண்டும். அனிய்யத் தென்பது உன் ஹகீகத்தும் அந்தரங்கமும் ஹக்கல்லாத வேறாயிருக்கிற தென்று நீ எண்ணுவதாம். இந்த எண்ணத்தையேயன்றி வேறொன்றையும் நீ நீக்கவேண்டுவதில்லை. இதுதான் **லா இலாஹ** என்று நீ சொல்வதின் சுயமான அர்த்தம். அதன் பிறகு, இரண்டாவதாக ஹக்கு சுபுஹானஹூ வதஆலாவை உன் கல்பில் தரிபடுத்து. இதுதான் **இல்லல்லாஹு** என்று நீ சொல்வதின் சுயமான அர்த்தம்.

மொத்தத்தில் லாஇலாஹ இல்லல்லாஹு என்ற கலிமாவை நீ அப்பியாசிக்கும்போது நீ உன் மனதில் நினைக்கவேண்டிய தென்ன வென்றால் ஹகீகத்தான சுய அர்த்தத்தை நோக்க நான் அல்லாவுக்கு வேறல்ல. மேலும் நான் அவனாகவே யிருக்கிறேன் என்பதுதான்.

எப்போது வுஜூது ஒன்றுதான் என்றாகி அதன்வேறு என்பதில்லை என்று தீர்ந்ததோ பின்பு எந்த வஸ்து நீக்கப்படுவது? எந்த வஸ்து தரிபடுத்தப்படுவது? என்று கேட்பாயாகில் நான் சொல்லுகிறேன். சிருட்டிக்கு ஜனித்த வேற்றுமை என்பதும் துவிதம் என்பதுமான வஹ்மு என்னும் பேதபுத்தி நீக்கப்பட வேண்டுவது. இந்த வஹ்மு பாத்தில் (பொய்) இதற்கு யாதொரு சுயம்பில்லை. ஆகவே முந்தி நீ அந்த வஹமை நீக்கி, பின்பு



இரண்டாவதாக உன்னுடைய கல்பில் ஹக்கு சுப்ஹானஹூ வதஆலாவைத் தரிபடுத்தக் கடமைப் பட்டவனா யிருக்கிறாய்.

தேட்டமுள்ள தாலிபானவனே!

انك تتصور في كل حال من احوالك لا انا من حيث الحقيقة
مغاير لله بل انا هو

அல்லாஹு தஆலாவுடைய அருளினால் உன்மீது பாவச நிலைமையாகிய ஹால் மிகைத்து மேற்கொள்ளுமாகில் நீ வஹ்மியத் தென்னும் உன் அனிய்யத்தை நீக்க வருந்தமாட்டாய். மேலும் உன்னிலே ஹக்கு சுபுஹானஹூ வதஆலாவினது தரிபாடேயன்றி வேறொன்றும் மிச்சப்பட்டு நிற்பதில்லை. அல்லாஹு தஆலா நமக்கும் உங்களுக்கும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுடைய ஹா மத்தாகிய பெருமையின் பொருட்டால் இந்த மகாமை ஈந்தருள்வானாக ஆமீன்.

## அஸ்ஸைருல் பாத்தினு.

اعلم ان السير الباطن علي ستة انواع احدها السير لله وهو
السير من الجهل الي العلم والثاني السير الي الله وهو السير من
العلم الي العمل والثالث السير في الله وهو الفناء والرابع السير من
الله وهو البقاء بالرجوع من المحو الي الصحو والخامس السير
بالله وهو بقاء البقاء الذي هو التحقق بصفات الله واسمائه و
السادس السير مع الله وهو التصرف في عالم العلو وعالم السفل

அறிந்துகொள்:—ஆரிபுகளாகிய ஞானிகள் அகத்தில் படிப்படியாகக் கடந்துசெல்லும் ஞானபூமிகள். * அறுவகைப்பட்டிருக்கின்றன. அவை:—அஸ்ஸய்ரு லில்லாஹி; அஸ்ஸய்ரு இலல்லாஹி அஸ்ஸய்ரு வ்பில்லாஹி, அஸ்ஸய்ரு மினல்லாஹி, அஸ்ஸய்ரு பில்லாஹி அஸ்ஸய்ரு மஅல்லாஹி என்பவைகளேயாம்.

---

* இந்துமத வேதாந்த நூல்கள் ஞானபூமிகளை ஏழாக வகுத்துக் கூறுகின்றன. அவை:—சுபேச்சை, விசாரணை, தனுமானசி, சத்துவாபத்தி, சமுசத்தி, பதார்த்தாபாவனை, துரியம் என்பவைகளாம். இவற்றின் விபரம் இப்புத்தகத்தின் இறுதியில் சொல்லப்பட்டிருக்கிறது, அங்கு கண்டு தெளிக.

## இவற்றின் விபரம்.

அறிவின்மையான மூடத்தைவிட்டு ஹக்கை அறிதல் என்னும் ஞானத்தை அடைய முயல்வது அஸ்ஸய்ரு லில்லாஹி என்றும்,

ஞானத்தேர்ச்சியினால் யோகசாதனையான அமலின் பக்கம் செல்வது அஸ்ஸய்ரு இலல்லாஹி என்றும்,

தியானயோக முதிர்ச்சியினால் ஹக்கிலே தன் நினைவு பனாவாய் மாய்ந் தொழிவது அஸ்ஸய்ரு ஃபில்லாஹி என்றும்,

ஜீவத்வமான மனிதப் பண்பாதி குணங்கள் மடிந்து தன் எதார்த்த நிலையில் தரிப்பது அஸ்ஸய்ரு மினல்லாஹி என்றும்,

ஹக்குடைய அஸ்மா ஸிபாத்துகளைத் தனதாகக் கொண்டு தரிப்பினும் பொருந்தரிப்பாக நிலைப்பது அஸ்ஸய்ரு பில்லாஹி என்றும்,

மேலுலகத்திலும் கீழுலகத்திலும் ஆக்ஷி அநுபவங்கள் புரிதல் அஸ்ஸய்ரு மஅல்லாஹி என்றும் சொல்லப்படும்.

**துஹ்பத்துல் முர்ஸலா**

முற்றிற்று.

# இந்துமத வேதாந்த பகுதி.

வஹ்தத்துல் வுஜூது என்னும் தவ்ஹீதாகிய அத்வைத உண்மையை இந்து வேதாந்திகள் நிராட்க்ஷேபமாய் ஒப்புக்கொள்வது மாத்திரமல்ல, அதை மறுக்கும் துவிதசித்தாந்திகளுக்கு ஸ்ருதி, யுக்தி, அனுபவங்களென்னும் முப்பிரமாண நியாயவாதாரங்களைக் காட்டி தக்க சமாதானங்களும் வரைந்திருக்கிறார்கள். அன்றியும் துஹ்பத்துல் முர்ஸலாவும் பிறவுமான நமது அத்வைத நூல்களில் சிருஷ்டி கிரமம் சொல்லப்பட்டிருப்பதுபோல் இந்து மத வேதாந்த நூல்களும் ஒருவாறு சிருஷ்டிக்கிரமம் கூறுகின்றன. அவைகளை ஒத்திட்டு உண்மையை ஊகித்தறிய நம்மவர்க்கு உதவியாயிருக்குமெனக்கருதி கைவல்ய நவநீதம் முதலிய வேதாந்த நூல்களிலிருந்தும் நாநாஜீவவாத கட்டளையிலிருந்தும் இன்னும் துவிதசித்தாந்தத்தை மறுத்து அத்வைதிகள் எழுதியுள்ள சில தருக்க நூல்களிலிருந்தும் சிலவற்றை அவர்களின் பரிபாஷையிலேயே சுருக்கமாக எடுத்து எழுதுகிறேன். நண்பர்கள் அவைகளைத் துவேஷமற்ற சுத்தபுத்தியைக் கொண்டு சிந்தித்துத் தெளியுமாறு ஏக பரிபூரணஞான சொரூபியான இறைவன் அருள் புரிவானாக.

## வேதாந்த வாக்கியங்கள்

வருமாறு:—

### சூதசங்கிதை.

ஒன்று மாய்ப்பலவுமாகி யுருவமா யருவுமாகித்
தோன்றுமாய்ப்புதிதுமாகித் தூரமாய்ச் சமீபமாகி
யின்றுமாயென்றுமாகி யிருளுமாயொளியுமாகி
நன்றுமாய்த்தீதுமாகி நயந்தரும்பொருளே போற்றி.

## சொரூப ஞான தேசிகர்.

* உன்னைத் தவிரமற்றிங் கொன்றுமில்லை யுன்றனை
பொன்னைத்தவிர விலாப் பூடணம்போல்—பொன்னையுரு
வேறுக்கிப் பேருரைத்த வேற்றுமைபோலெம்மையுமவ்,
வாறுப்பகுத்துரைத்தோமால்.

## அத்தியாரோபமும் அபவாதமும்.

அத்தியாரோப மென்றும் அபவாதமென்றும் இரண்டு யுக்திகள் உண்டு. கானலானது ஜலமாகத் தோன்றும் போது அதை மெய்யாகவே ஜலமெனக்கண்டு மருள்வது போன்றது அத்தியாரோபமாம். அது கானலே யன்றி ஜலமல்ல வென்று தெளிவது போன்றது அபவாதமாம். மருளாரா அத்தியா ரோபத்தில் நிலைப்பது ஐக்கிய முத்திக்குப் பாதகமும் தெளிவான அபவாதத்தில் தரிப்பது அதற்குச் சாதகமுமாம். சுருக்கிச் சொன்னால் ஆரோபமாகிய பொய்மை அதன் ஆதாரமாகிய மெய்யில் அடக்கி அந்த ஆதார நாட்டமே மிகைக்கும்படி சிரவணம், மனனம், நிதித்தியாசனம், (கேட்டல், சிந்தித்தல், தெளிதல்) ஆகிய அரிய முயற்சிகள் செய்துவருவது ஐக்கிய முத்திக்கு முக்கியமான மூல காரணமாம்.

இதன் தாத்பரிய மென்னவென்றால்; இரண்டென்பதில்லாமல் ஏகபரிபூரண ஞான சொரூபியாய் விளங்கும் சாக்ஷாத் கடவுளான பிரம்மத்தினிடத்தில் (கானலில் ஜலம்போல்) கற்பிதமாகத் தோன்றிய × ஜக ஜீவ பரங்களென்னும் திரிபதார்த்தங்களையும் அப்பிரம்மத்திற்கு வேறான மெய்ப் பொருள்களென மருண்டு அம்மருக்ஷியிற் சிக்குண்டிருக்கிற ஜீவர்களின் அஞ்ஞான சந்தேக விபரீதங்களான தடைகளை நீக்கி, அவர்களுக்குத் திடஞானமான தெளிவை யுண்டாக்கும் பொருட்டு, வேதாந்த நூல்களில் அத்தியாரோப யுக்தியும் அபவாத யுக்தியும் கூறப்பட்டிருக்கின்றன.

---

* தன்மையிடமாயிருந்ததை முன்னிலை இடமாக்கியது பரம் பொருளைத் தித்தற் பொருட்டென்றறிக.

× உணர்வியலில்லாச் சடவருக்கம் ஜகம் என்றும் உணர்வியலுள்ள உயிரினங்கள் ஜீவன் என்றும் பிரமஞதி திரிமூர்த்தங்கள் பரம் என்றும் சொல்லப்படும். ஜகஜீவபரங்களென்பது உம்மைத் தொகை. அதாவது ஜகமும், ஜீவனும், பரமும் என்பதாம்.



அவற்றின் கருத்து, கானலில் கற்பிதமாகத் தோற்றும் ஜலத்திற்கு நாமரூபங்களே தவிர ஜலமென்பதற்குக் கானலையன்றி எதார்த்தமான பொருளில்லாவாறு போன்று பிரம்மத்தினிடத்தில் கற்பித மாகத் தோன்றும் ஜகமாதி திரிபதார்த்தங்களுக்கு நாம ரூபங்களே தவிர அவற்றிற்கு பிரமத்தையன்றி எதார்த்தமான பொருட்கள் இல்லை என்பதாம்.

பின்னர் அந்தக் கற்பிதமான சிருட்டி வந்த வகைதான் எப்படியெனின், இந்திரஜாலவித்வான் தன் மந்திரவித்தையால் காட்டும் காக்ஷிப்பொருள்கள் அந்த வித்தையில் அடங்கி, அவனது சுழுத்தியான நித்திரையின்போது அவனில் அவ்வியக்தமாயிருக்க காலக் கிரமத்தில் அவன் விழித்து அவைகளை வெளிப்படுத்த விரும்புவது போல் பிரம்மசத்தியான மூலப்பிரகிருதியில் அனாதியாய் அவ்வியக்தமாய் அடங்கி யிருந்த பாமாதி திரிபதார்த்தங்களையும் அந்தப் பிரம்மம் வெளிப்படுத்த நாடினபோது அந்த மூலப்பிரகிருதி என்னும் சக்தியானது சத்துவம் இராசதம் தாமதம் என்னும் முக்குணங்களாக வெளிப்பட்டன.

இந்த வெளிப்பாட்டை வேறொரு விதமாகவும் சொல்வார்கள். அதாவது அவ்வியக்தமான அந்த மூலப்பிரகிருதியே மகதத்வமாய் மகதத்வம் அகங்காரதத்வமாய் அகங்காரதத்துவம் மேற்கண்ட முக்குணங்களாய் வெளிப்பட்டன என்பதாம். இந்த முக்குணங்களில் ஏதாவதொரு குணம் ஏனைய இரண்டு குணங்களையும் மிகைத்து நிற்கும்.

முக்குணங்களில் முதற்குணமாகிய சுத்தசத்வ குணத்திற்கு மாயை என்று பெயர். அந்த மாயையிற் பிரதிபலித்த பிரம்மச் சாயையான ஞான நிழலுக்கு அந்தரியாமி என்னும் மாயாசகித வீசனென்னும் பெயர். இவ்வீசனுக்கு இந்த சத்வகுணமே சுழுத்தி அவஸ்தையும் காரணசரீரமும் ஆனந்த மயகோசமுமாம். (கோசம் அல்லது கவசம் என்றால் மூடுகிற உரை என்பது அர்த்தம்.)

இனி இரண்டாங் குணமாகிய இராசதகுணம் அனேக ரூபங்களாய் பிரிந்து அவித்தைகள் என்று சொல்லப்படும். (அவித்தை-அஞ்ஞானம்.) இந்த அவித்தைகளில் பிரதிபலித்த பிரம்ம நிழலுக்கு ஜீவன் என்று பெயர். இந்தச் சந்தர்ப்பத்தில் ஜீவன்

பிராக்ஞன் என்னும் பெயரைப் பெறும். இந்த ஜீவனுக்கு இவ் விராசத குணமே காரணசரீரமும் சுழுத்தி அவஸ்தையும் ஆனந்த மயகோசமுமாம்.

இதுவரையில் சத்துவம் இராசதம் என்னும் இரண்டு குணங்களாலும் வந்த ஈசஜீவர்களின் காரண சரீர கற்பிதங் கூறப் பட்டது. இனி சூக்கும சரீர கற்பிதஞ் சொல்லப்படும்.

ஜீவர்களுக்குப் போக சாதனமுண்டாகும் பொருட்டு மாயா சகித வீசனுடைய அனுக்கிரகத்தினாலே மூன்றாங் குணமாகிய தாமத குணமானது ஆவரணம், விக்ஷேபமென இரண்டு சத்திக ளாகப் பிரிந்து நின்றது. ஆவரண மென்பது மறைக்கும் சக்தி, விக்ஷேப மென்பது தோற்றும் சக்தி. மறைக்கும் சக்தியான ஆவரணம் மாயா சகித வீசனையும் தன்னையறிந்த ஞானிகளையும் தவிர மற்ற ஜீவர்களை எவ்வாறு மறைக்கு மெனின், விட்சேப சத்தில் தோன்றிய தூலதேகாதி சரீரங்களையும் சித்துப் போலி யாகிய ஜீவனையும் "தான்" என்று அபிமானிக்கும்படி செய்து சுயஞ்சை தன்யமாகிய சாக்ஷித் கடவுளே தானுயிருக்கிற உண்மை அந்த ஜீவர்களுக்குத் தெரிய வொட்டாமல் மறைக்கும்.

இனி தோற்றுஞ் சக்தியான விக்ஷேபத்திலிருந்து சூக்ஷம ஆகாயமும் அவ்வாகாயத்திலிருந்து சூக்ஷமவாயும் அவ்வாயுவி லிருந்து சூக்ஷம அக்னியும் அவ்வக்னியிலிருந்து சூக்ஷம அப்புவும் அவ்வப்புவிலிருந்து சூக்ஷமபிருதுவியும் தோன்றின. இவ் வைந்தும் சூக்ஷம பஞ்ச பூதங்களென்றும் பஞ்சதன் மாத்திரைக ளென்றும் பெயர்பெறும். இந்த சூக்ஷம பூதங்களி லிருந்து ஜீவர் களுக்குப் போக சாதனங்க ளுண்டாயின. அதெவ்வாறெனின் மேற்கண்ட முக்குணங்களிலும் இந்தச் சூக்கும பூதங்கள் ஐந்துங் கூடியிருக்கும் சூக்ஷமபஞ்சபூதங்களின் சத்துவாம்சத்திலே பூதத்துக்கு ஒவ்வொரு மாத்திரையாக எடுத்து தனித்தனியே வைத்தது முறையே சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்ராணம் என ஐந்து ஞானேந்திரியங்க ளாயின.

(சுரோத்திரம்-செவியுணர்வு, இது சத்தத்தை மாத்திர மறியும், துவக்கு-மெய்யுணர்வு, இது பரிசத்தை மாத்திரமறியும், சட்சு-கண் உணர்வு, இது ரூபத்தை மாத்திரமறியும், சிங்குவை நாவுணர்வு, இது ரசத்தை மாத்திரமறியும். ஆக்ராணம்-நாசி



யுணர்வு, இது கந்தத்தை மாத்திரமறியும், இவ்வைந்தும் புறக் கரணம். ஞானேந்திரியம்-அறிகருவி.)

இன்னுமந்த பஞ்சபூதங்களின் சத்துவாம்சத்திலே பூதத் துக்கு ஒவ்வொரு மாத்திரை யெடுத்து ஒன்றாகக் கூட்டி வைத்தது உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என ஐந்துங்கூடி அந்தக்கரண மாயிற்று. (இவ்வைந்தும் அகக்கரணம்.)

(உள்ளம் ஆகாயத்தைப்போல் சால கேள்விகளுக்கும் இடங் கொடுத்துத்தரிக்கும். மனம் வாயுவைப்போல் அலையும். புத்தி அக்கினியைப்போல் இது இன்னது இது இன்னது என்று விளக்கும். சித்தம் அப்புவைப்போல் விடையங்களைப் பற்றி யிழுக்கும். அகங்காரம் பிருதுவியைப் போல் கடினமாக நின்று நானென்றபிமானிக்கும். அந்தக்கரணத்தில் ஐந்து மாத்திரையும் ஒன்றாய்க்கூடினது கொண்டு ஐந்து இந்திரியங்களினாலும் ஐந்து விடைகளையும் அறியும்.)

இன்னுமந்த பஞ்சபூதங்களின் இராசதாம்சத்திலே பூதத் துக்குஒவ்வொரு மாத்திரையாக எடுத்துத் தனித்தனியேவைத்தது முறையே வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபத்தம் என ஐந்து கன்மேந்திரியங்களாயின.

(வாக்கு-வசனிக்கும் சக்தி. பாணி-இடுதல், ஏற்றல் செய்யும் சக்தி. பாதம்-நடக்கும் சக்தி. பாயுரு-மலஜலங்களை வெளியே தள்ளும் சக்தி. உபத்தம்-மாணியிலும் யோனியிலும் இன்பத்தை யுண்டு பண்ணும் சக்தி. கன்மேந்திரியம்-தொழிற்கருவி.)

இன்னுமந்த பஞ்சபூதங்களின் இராசதாம்சத்திலே பூதத் திற்கு ஒவ்வொரு மாத்திரை யெடுத்து ஒன்றாகக் கூட்டிவைத்தது வியானன், பிராணன், அபானன், சமானன், உதானன் என ஐந்து வாயுக்களாயின.

(வியானவாயு சர்வாங்கமும் வியாபித்திருக்கும். பிராணவாயு இருதயத்திலிருந்து நாசியாதிபரியந்தம் அலையும், அபானவாயு குதத்தைப்பற்றி நின்று உண்டவுணவுகளைச் செமிப்பிக்கும். சமானவாயு நாபித்தானத்தில் நின்று உண்டவுணவுகளின் சாரத்தை யிழுக்கும். உதானவாயு கண்டத்தைப்பற்றி நின்று உண்டவுணவு களைக்கடையும்.)

இந்தப் பஞ்சவாயுக்களை யல்லாமல் வாந்தி செய்விக்கின்றவன் நாகனென்றும் இமைத்து விழிப்பிக்கின்றவன் கூர்மனென்றும் குறுகுறுத்துத் தும்பச் செய்கின்றவன் கிரிகரனென்றும் கொட்டாவி கொள்ளச் செய்கின்றவன் தேவதத்தன் என்றும் வீங்கச்செய்கின்றவன் தனஞ்சையன் என்றும் வேறே ஐந்து வாயுக்களுண்டென்று சிலர் சொல்லுவார்கள். இவ்வைந்தும் பிராணனுடைய தொழிலானபடியால் வேறல்ல.

ஆகவே மேலே கூறிவந்த சுரோத்ராதி ஞானேந்திரிய பஞ்சமும், உள்ளமாதி அந்தக்கரண பஞ்சமும், வாக்காதி கன்மேந்திரிய பஞ்சமும், வியானாதி வாயுபஞ்சமும் ஆக இருபது தத்துவங்களுஞ் சேர்ந்து வானவர், மக்கள், நாகர், விலங்கு முதலிய உயிர்களனைத்திற்கும் சூக்ஷமசரீரமாம். ஆனால் கைவல்யக் காரர் அந்தக்கரண பஞ்சத்தில் உள்ளம் சித்தம் அகங்காரம் ஆகிய மூன்று தத்துவங்களையும் மனத்திலடக்கி மனம் புத்தி யென அந்தக்காணத்தை இரண்டாக்கியதால் சூக்கும சரீரதத்துவங்கள் பதினேழென்றார்.

இந்த சூக்ஷமசரீரத்தை நானென்று அபிமானிக்கும் ஜீவனுக்குத் தைசதனென்றும் ஈசனுக்கு இரணியகருப்பனென்று பெயர். ஜீவனும் ஈசனுமாகிய இருவருக்கும் இது சூக்கும சரீரமாம்; இந்த சரீரத்திற்கு பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம் என கோசங்கள் மூன்றும். இன்னுமிது சொர்ப்பனா வஸ்தையுமாம்.

(பிராணவாயுவும் கன்மேந்திரியங்களுங் கூடியது பிராணமய கோசமென்றும் மனமும் ஞானேந்திரியங்களுங்கூடியது மனோமய கோசமென்றும் புத்தியும் ஞானேந்திரியங்களுங் கூடியது விஞ்ஞானமய கோசமென்றும் சொல்லப்படும்.)

இப்படி சூக்கும சரீர கற்பிதம் கூறப்பட்டது. இனி தூல சரீரகற்பிதமும் சொல்லப்படும்.

ஜீவர்களுக்குத் தூலதேகமும் போகமும் உணடாகும் பொருட்டு மாயாசகித வீசன் பஞ்சீகரிக்கப்படாத சூக்ஷம பஞ்சபூதங்களைப் பஞ்சீகரித்தான். அதெவ்வாறெனின், சத்துவ ராசதாம்சங்கள் போக மிச்சப்பட்டு நின்ற தாமதாம்சமான ஐந்து பூதங்களில் ஒவ்வொன்றையும் இரண்டாகப் பகுத்து முற்பாதி ஐந்தில் ஒவ்



வொன்றையும் நவ்வாலாக்கி இரண்டாம்பாதி ஐந்தில் தனதம்சத்துடனே கூட்டாமல் மற்ற நான்கு பூதங்களுடன் அரைக்கால் அரைக்கால் மாத்திரையாகக் கொடுக்க பஞ்சீகரணமாம், அதாவது ஒவ்வொரு பூதத்திலும் மற்ற நான்கு பூதங்கள் சேர்ந்து ஒவ்வொன்றும் ஐந்தைந்தாயிற்று என்பதாம். இப்படிப் பஞ்சகரித்ததினால் தூல ஆகாயமும் தூலவாயுவும் தூலஅக்னியும் தூல அப்புவும் தூலப்பிருதுவியும் உண்டாயின. இந்த தூலமகா பூதங்களி னின்றும் தூலசரீரங்களும் அண்டகோடிகளும் அவற்றுளொன்றாகிய பூமியும் போகங்களும் உண்டாயின.

இந்தத் தூலதேகத்தை நானென்றுஅபிமானிக்கும் ஜீவனுக்கு விசுவன் என்றும் ஈசனுக்கு விராட்புருடன் என்றும் சொல்லப்படும். இத்தூலதேகமே இவ்விருவருக்கும் ஜாக்ராவஸ்தையும் அன்னமய கோசமுமாம்.

(அன்னபானாதி ஆகாரங்களால் தோலும் இரத்தமும் சதையும் நரம்பும், எலும்பும், கொழுப்புமாக விருத்தியடைகிருக்கிற ஆறு தத்துவங்களாகிய தூலதேகமே அன்னமய கோசமாம்.)

இப்படி தூலசரீர கற்பிதங் கூறப்பட்டது. இனி ஜீவனுக்கு எப்படியோ அப்படியே ஈசனுக்கும் * சரீரத்திரயம் + அவஸ்தாத்திரயம் ‡ அபிமானத்திரயங்களான † உபாதிகளிருக்க அவ்விருவருக்கும் உள்ளபேத மெப்படித் தெரிவது மெனக் கேட்பாயாகில் ஜீவன் காரிய உபாதி, ஈசன் காரண உபாதி. ஜீவன் தன் தேகத்தில் மாத்திரம் கலந்து நிற்கிற ° வியட்டிசரீரி. ஈசன் எல்லாத்தூல தேகங்களையும் தனக்கோர் தூலதேகமாகவும்

---

• காரணம், சூக்குமம், தூலம் ஆகிய மூன்று சரீரங்களும் சரீரத்திரயமாம்.

+ சுழுத்தி, சொர்பனம், ஜாக்கிரம் ஆகிய மூன்று அவஸ்தைகளும் அவஸ்தாத்திரயமாம்.

‡ ஈசனது காரண, சூக்கும தூல சரீரவபிமான நாமங்களான அந்தரியாமி, இரணியகருப்பன், விராட்புருடன் என்பனவும், ஜீவனது காரண சூக்கும, தூல சரீரவபிமான நாமங்களான பிராக்ஞன், தைசதன், விசுவன் என்பனவும் அபிமானத்திரயமாம்.

† உபாதி- தடை அல்லது மறைப்பு.

° வியட்டி சரீரி- ஒரு தனி யுடம்பைத் தேகமாகக் கொண்டவன்.

எல்லாச் சூக்கும தேகங்களையும் தனக்கோர் சூக்கும தேகமாகவும் எல்லாக்காரண தேகங்களையும் தனக்கோர் காரணதேகமாகவும் கொண்டு சமஸ்த பிரபஞ்சங்களிலும் கலந்து நிற்கிற ↑ சமட்டி சரீரி. ஜீவன் சிற்றறிவுள்ள கிஞ்சிக்ஞன். ஈசன் பேரறிவுள்ள சர்வக்ஞன். இன்னுமிவைபோன்ற பல ஏதுக்களால் ஜீவனுக்கும் ஈசனுக்கும் பெருத்தபேத முண்டென்றறிக. சொல்லி வந்த இந்த கற்பித காக்ஷிகளை யெல்லாம் சொர்பனக் காக்ஷிபோல் பொய் யென்று சிந்தித்துத் தெளிந்தவன் யாவனோ அவனே ஞானி யாவான். அத்தியாரோப யுக்தி முடிந்தது. இனி அபவாதயுக்தி கூறுவோம்.

பழுதையைப் பாம்பாகவும் கட்டையைக் கள்ளனாகவும் கண்டு மயங்கிய ஓர் புருடனது மயக்கத்தைத் தெளிக்கும் பொருட்டு மற்றொருவன் அது பாம்பல்ல பழுதை யென்றும் அவன் கள்ளனல்லன் கட்டையென்றும் தெரிவிப்பதினால் அவன் மயக்கம் தெளியுமாறு போன்று பரிபூரண ஞான சொரூபியாக விளங்கும் பிரம்மத்தினிடத்தில் (பழுதையில் பாம்புபோல்) ஆரோபித்த தூலதேகாதிப் பிரபஞ்சங்களைத் தானாகக்கண்டு மருள்கின்ற புருடன் ஞானசிரியரது உபதேசத்தினாலும் ஞான நூல்கள் விளக்கிக்கூறும் வெளிச்சத்தினாலும் அவனது மருட்சி யகன்று தானெனப்படுவது தேகாதி பிரபஞ்சங்களுமல்ல, அவற்றிற் காதாரமான பஞ்சபூதங்களுமல்ல, மேலும் ஞான சொரூபியான பிரம்மமேதா னெனப்படுவதென்று ஐயமறத் தெளிவது அபவாதமாம். இந்த உண்மைக்கு ஆதாரமான பிரபல வேத சுருதிகளில் "அது நீயாயிருக்கிறாய்" என்ற பொருள் பொருந்திய தத்துவம் அசி என்னும் உபதேச வாக்கியமும் ஒன்றாம்.

இன்னும் மண்குடம் பொன்நகை நூல்ஆடை என்பவைகளில் குடமும் நகையும் ஆடையும் முறையே மண் பொன் நூல் இவைகளின் காரியங்களாம். காரணத்தையன்றி காரியத்துக்கு கற்பித நாமரூபங்களே தவிர பொருளில்லை. ஆதலால் காரண காரியங்கள் இரண்டும் ஒன்றேயாம். காரியத்தைக் காரணத்தி லடக்கி குடத்தை மண் என்றும் நகையை பொன் என்றும் ஆடையை நூல் என்றும் பார்ப்பது போல் கற்பித காரணகாரியங்

↑ சமட்டிசரீரி—எல்லாவுடம்புகளையும் தன் தேகமாகக் கொண்டவன்.



களாய் தேகாதிப் பிரபஞ்சம் முதல் பிரம்மசக்தியான மூலப்பிரகிருதி ஈறாக ஒன்றி லொன்றுதித்துவந்த முறைப்படியே அவைகளைத் திருப்பி அவ்வவற்றின் காரணங்களில் ஒடுக்கிக் கொண்டு போக கடைசியாக மிச்சப்பட்டு நின்ற ஏகமாகிய பிரம்மத்தைத் தன்னியமே மெய்ப் பொருளான மூலகாரணமென்றும் பிரம்மத்தையன்றி தான் என்ற தனி முதல் ஒன்றுமே இல்லை யென்றும் அதுவே நானாயிருக்கிறேன் என்றும் ஐயமறத் தெளிவதே அபவாத உபாயமாம்.

(சிருட்டிகள் ஒடுங்குமுறை எப்படி யெனில்; சகல ஜீவர்களிடத்தும் தோல், உதிரம், சதை, நரம்பு, எலும்பு, கொழுப்பு என்று ஆறு தத்துவங்களா யிருக்கிற தூலசரீரங்களெல்லாம் தமக்கு ஆதாரமான தூல பூதங்களிலே மடிந்து பூதமாத்திரமாக ஒடுங்கும். இந்தத் தூல பூதங்களும் பஞ்சீகரணம் விட்டுத் தன் மாத்திரைகளான தமோகுண பூதங்களாய் மிஞ்சும். சூக்ஷும சரீர தத்துவங்களான (அந்தக் கரணபஞ்சம், ஞானேந்திரிய பஞ்சம், கன்மேந்திரிய பஞ்சம், வியானாதிபஞ்சம்.) இருபது தத்துவங்களும் கட்டவிழ்ந்து பூதங்களுடைய சத்துவகுணமும் ரஜோகுணமுமாக ஒடுங்கும். அதெவ்வாறெனின்:-சகல பிராணிகளிடத்திலுமிருக்கிற அகங்காரமும் ஆக்ரா ணேந்திரியமும் உதானவாயுவும் உபஸ்தேந்திரியமும் பிருதுவியில் ஒடுங்கும். சித்தமும் சிங்குவையும் சமானனும் பாயுரும் அப்புவில் ஒடுங்கும். புத்தியும் சட்சுவும் அபானனும் பாதமும் அக்கினியில் ஒடுங்கும். மனமும் துவக்கும் பிராணனும் பாணியும் வாயுவில் ஒடுங்கும். உள்ளமும் சுரோத்திரமும் வியானனும் வாக்கும் ஆகாசத்தில் ஒடுங்கும். அப்போது பழையபடியே முக்குண பூதங்களாகும். இந்தச் சூக்கும பூதங்களுள் பிருதுவியானது அப்புவில் கரைந்து ஒடுங்கும். அப்புவும் அக்கினியில் சுவறி ஒடுங்கும், அக்கினியும் விளக்கைப் போல் வாயுவில் அணைந்து ஒடுங்கும். வாயுவும் ஆகாசத்தில் ஒய்ந்து ஒடுங்கும். ஆகாயம் விட்சேப சக்தியில் ஒடுங்கும்.மி ஆவரணசக்தியும் விட்சேபசக்தியும் மூலப் பிரகிருதியின் தமோகுண மாத்திரமாய் ஆல்விருக்ஷம் வித்தில் ஒடுங்கினாற்போலிவன் இன்னும் ஒரு சிருட்டிக்கு வித்தாக மாயையிலும் அவித்தையி தத்து ஒடுங்கும். இந்த மாயையும் அவித்தையும் அதிருட்டமான கின்றது பிரகிருதி என்று கூறப்பட்ட விந்துதத்துவத்தில் ஒடுங்கும்.

விந்துதத்துவமும் பாம்பென்கிற பெயர் போய் பழுதையாகக் கண்டாற்போல தனக்கு அதிஷ்டானமான பிரம்மசைதன்னிய மாத்திரமாக ஒடுங்கும்.

இப்படித்தோன்றி ஒடுங்கின தத்துவங்கள் முப்பத்தாறு அவையாவன:—பூதங்கள் 5, ஸ்தூலசரீர தத்துவங்கள் 6, சூக்ஷும சரீர தத்துவங்கள் 20, காரண சரீரமான மாயை அவித்தை 2, இவற்றில் பிரதிபலித்த ஈசன் ஜீவன் 2, இவைகளுக் கெல்லாம் அதிஷ்டானசைதன்னியமா யிருக்கிற பிரம்மம் 1 ஆக தத்துவங்கள் 36.

இவைகளில் பூதங்கள் ஐந்தும் மாயை ஒன்றும் மாயாப்பிரதி பிம்பவீசன் ஒன்றும் பிரம்மம் ஒன்றும் ஆக எட்டும் சகல பிராணிகளுக்கும் பொதுவாக அனுபவிக்கப்படும் மற்ற இருபத்தெட்டும் அவனவனுக்கு வேறுவேறாக அனுபவிக்கப்படும். அதெப்படி யெனில்; பிருதுவிதத்துவம் ஒன்று இறக்கில் எல்லோருக்கும் ஆகாரமில்லை, மழைமறுக்கில் எல்லோருக்கும் ஜலமில்லை, தேவில்லா திருந்தால் பாகமில்லை. வாடை தேன்ற லில்லாவிட்டால் வாயுவியக்க மில்லை, ஆகாசம் இறக்கில் ஒருவருக்கும் இடமில்லை, மாயையும் மாயாப் பிரதி பிம்பவீசனும் இறக்கில் சகல சமயங்களுக்கும் தெய்வமில்லை. பிரமம் இல்லையேல் ஒருவருக்கும் அறிவில்லை. ஆகையால் இந்த எட்டும் எல்லாருக்கும் பொதுவாம். வெவ்வேறாக அனுபவிப்பதெப்படி யெனின் ஒருவனுக்கு தூலசரீரம் இறக்கில் எல்லோருக்கும் தூலசரீரம் இறவாதபடியினாலும் சூக்ஷுமசரீரத்தில் ஒருவனுக்கு அங்கப்பழுது வந்தால் எல்லோருக்கும் வாராதபடியினாலும் முத்தராயிருந்த சுகர், வாமதேவர் முதலான பேருக்கு அவித்தையும் ஜீவனும் இறந்து போயிருக்க மற்றப் பேருக்கெல்லாம் அவித்தையும் ஜீவனும் இறவாதபடியினாலும் இந்த இருபத் தெட்டு தத்துவங்களும் அவனவனுக்கு வெவ்வேறு என்பதில் சந்தேக மில்லை.

இந்தத் தத்துவங்கள் முப்பத்தாறில் எப்போதும் தானாகவே
னப்படுகிற தத்துவம் ஒன்று. எப்போதும் தனக்கன்னிய
க் காணப்படுகிற தத்துவம் ஏழு. தானாகவும் தனக்கன்னிய
ம் அனுபவிக்கப்படுகிற தத்துவங்கள் இருபத்தெட்டு.
படி யெனில்:—



ஜாக்ரசொப்பன சுழுத்தி அவஸ்தைகள் மூன்றிலும் சாக்ஷியா ிருக்கிற பிரம்மசைதன்னியம் அவ்வவஸ்தைகளில் தானாக விளங்கு கையினாலும் மற்றதத்துவங்கள் போல தனக்கன்னியமாக விளங் காதபடியினாலும் அந்த பிரம்மசைதன்னியம் ஒன்று மாத்திரம் தானாகக் காணப்படுகிறது.

பஞ்சபூதங்கள் 5, மாயை 1 மாயாப்பிரதிபிம்பவீசன் 1 ஆக ஏழும் தத்தம் தொழிலான வெட்டு குத்து உழவு பஞ்சகிருத்தியம் தசாவதாரம் முதலானவை தன்னுடைய தொழிலாகக் காணப் படாதபடியினாலே தனக்கன்னியங்களே யல்லாமல் தானாக மாட்டா.

மற்ற இருபத்தெட்டு தத்துவங்களுள் நான் பிராமணன், நான் க்ஷத்திரியன், நான் வைசியன், நான் சூத்திரன், நான் பிரமசாரி, நான் கிருகஸ்தன், நான் வானப்பிரஸ்தன், நான் சன்னியாசி, நான் ஆண்மகன், நான் பெண்மகன், நான் கரியன், நான் சிவப்பன், நான் இளைத் கட்டையன், நான் நெட்டையன், நான் பருத்தேன், நான் இளைத் தேன் என்று தானாகவழங்குகிற தூலசரீரம் ஆறு தத்துவமும் மற்றொரு வேளையில், தனக்குப் புறம்புபட்டு என் மாடு என் கன்று என்றாற் போல என் சரீரம் பருத்தது, என் சரீரம் இளைத்தது, என் மயிர் நரைத்தது, என் சரீரம் பிறந்து இத்தனை நாளாயிற் றென்று தான்வேறு தூல சரீரம் வேறாக வழங்குகிற படியினாலும்; நான் கண்டேன், நான் கேட்டேன், நான் தொட்டேன், நான் போகித்தேன், நான் கொடுத்தேன், நான் வாங்கினேன், நான் நடந் தேன், நான் புசித்தேன், நான் சிந்தித்தேன், நான் நிச்சயித்தேன் நான் இந்தப் பஞ்சத்திற்கு ஜீவித்தேன் என்று தானாக வழங்குகிற சூக்ஷும சரீர தத்துவங்கள் இருபதும் மற்றொரு வேளையில் தனக் குப் புறம்பட்டு என் வீடு என் உடமை என்றாற்போல என் கண், என் காது என் மூக்கு என் நாக்கு என் கை என் கால் என் மனம் என் புத்தி என் அகங்காரம் என் சித்தம் என் பிராணம் என்று தான் வேறு அவைகள் வேறாக வழங்குகிறபடியினாலும் நான் அறி வேன் நான் அறியேன் என்று தானாக வழங்குகிற அஞ்ஞானமும் சிதாபாசனும் மற்றொரு வேளையில் என் அஞ்ஞானம் என் ஜீவன் என்று வழங்கக்கண்ட படியினாலும் இந்த இருபத்தெட்டு தத்து வங்களும் தானாகவும் தனக்கன்னியமாகவும் வழங்குகின்றது சித்தம்.

வினா:—இந்த இருபத்தெட்டு தத்துவங்களும் தானான சாக்ஷியைப்போல ஒரு தன்மையாகத் தோற்றவேண்டுமே யல்லாமல் பஞ்சபூதங்களைப்போல தனக்கன்னியமாகக் காணக்கணக்கில்லை. இந்த இருபத்தெட்டும் தனக்கன்னியமேயானால் எப்போதும் புறம்பு பட்டேயிருக்க வேண்டுமன்றித் தானாக வழங்கக் கணக்கில்லை. தானுமாய் தனக்கன்னியமுமாய் இருக்குமென்றது இருட்டாயித்த னென்றாற் போலும் வெள்ளாழ தீக்ஷிதன் என்றாற்போலும் விருத்தமாமே யெனின்,

**விடை:**—பரமார்த்தமாகத் தான் என்கிறது ஒரு வகையும் அத்தியாசத்தினாலே தான் என்கிறது ஒரு வகையும் ஆக இரு வகையும் உண்டு. சாக்ஷி சைதன்னியத்தைத் தான் என்கிறது பரமார்த்தமல்லாமல் உபசாரமல்ல. தனக்கன்னியமா யிருக்கின்ற இந்த இருபத்தெட்டையும் தான் என்கிறது கட்டையை கள்ள னென்றாற் போலும் பழுதையைப் பாம்பென்றாற்போலும் மயக்கமே யல்லாமல் உண்மை யல்ல. ஆகையினால் அஞ்ஞான காலந் தொடங்கி தானல்ல வென்று காணப்பட்ட தத்துவங்கள் ஏழு. இப்போது இப்படிப்பட்ட விசாரம் பண்ணின பிற்பாடு தானல்ல வென்று காணப்பட்ட தத்துவங்கள் இருபத்தெட்டு ஆக இந்த 35-தத்துவங்களையும் அததற்குச் சொன்ன குணங்குறிகளுட னேயும் காண்கின்ற அறிவானது (கடத்தைப் பார்க்கிறவன் கடத்துக்குப் புறம்பாகவே இருந்து கடத்தைப் பார்க்கின்றது போல) அவைகளுக்குக் கன்னியமாகவே இருந்து அவைகளை அறி கிறதென்றும் முப்பத்தாறாந் தத்துவமாகிய அதுவே தானென் றும் அதுவே பரமசிவமென்றும் கலக்கமறத் தெளிந்தவனே சிவதரிசனமுடைய ஜீவன் முத்தன் என்று சொல்லப்படுவான்.

வினா:—இத்தத் தோற்றமும் ஒடுக்கமும் கூறுகிற பிரமாணமான வேதசுருதி ஏதேனு முண்டா!

விடை:—அநந்தமுண்டு. அவைகளில் ஒன்று:—உற்பத்தி காலத்தில் பிரம்மத்தினிடத்திலிருந்து ஆகாயமும் ஆகாயத்தி லிருந்து வாயுவும் வாயுவிலிருந்து அக்கினியும் அக்கினியிலிருந்து அப்புவும் அப்புவிலிருந்து பிருதுவியும் உண்டாயின என்றும்,

லயகாலத்தில் பூமியை ஜலத்திலும் ஜலத்தை அக்கினியிலும் அக்கினியை வாயுவிலும் வாயுவை ஆகாயத்திலும் ஆகாயத்தை



அகங்காரத்திலும் அகங்காரத்தை மகதத்துவத்திலும் மகதத்து வத்தை அவ்வியக்தத்திலும் அவ்வியக்தத்தைப் புருஷனிலும் கிரமமாக லயிருக்கச்செய்கிறான் என்னும் சுக்கிலயஜுர் வேதம் பைங்களோப நிஷத்துமுறையே 1, 3, அத்தியாயங்களில் சொல் லப்பட்டிருக்கின்றன.

வினா:—மேலே சொல்லிய வேதவாக்கியங்களால் சகல பிரபஞ் சங்களுக்கும் பிரம்மமே மூலகாரணமென்று நன்கு விளங்குகிறது. ஆனால், காரணத்தின் தன்மையை விட்டு, வேறு தன்மையாகக் காரியம் விரியுமோ அதினும் வேறு ஜாதியாக விரியுமோ அதினும் எதிர் ஜாதியாக விரியுமோ என்கிற ஓர் சந்தேகம் ஜனிக்கின்றது. கடத்தில் மண் தன்மையும் படத்தில் பஞ்சின் தன்மையும் இருக்கக் காண்கிறோம். மண்ணுக்குப் படமும் பஞ்சுக்குக் கடமும் வேறு ஜாதி யாதலால் மண் படமாகாது. பஞ்சு கடமாகாது; பிரம்மத்திலிருந்து உலகு உதித்த தென்றால் பிரம்மத்தின் தன்மை உலகிலிருக்கக் காணோம். பிரம்மத்துக்கு உலகு வேறு ஜாதியா யிருக்கிறது. அன்றியும் எதிர்ஜாதியாயு மிருக்கிறது. பிரம்மம் அருவப் பொருள், உலகு உருவப் பொருள்; பிரம்மம் சத்துப் பொருளாய் சதோதயமாய் விளங்குவது, உலகு முன்னு மில்லாமல் பின்னுமில்லாமல் இடையில் தோன்றுவது; பிரம்மம் சித்துப் பொருள், உலகு சடப்பொருள்; பிரம்மம் ஆனந்தப் பொருள், உலகு துக்கப் பொருள். பிரம்மம் நித்தியப் பொருள், உலகு அனித்தியப்பொருள்; பிரம்மம் நிர்க்குணப் பொருள், உலகு சகுணப்பொருள். பிரம்மம் அழியாப் பொருள், உலகு அழியும் பொருள். இப்படிப் பலவகையிலும் தனக்கு வேறு ஜாதியாயும் எதிர் ஜாதியாயு மிருக்கிற உலகாக அந்தப் பிரம்மம் விரிந்த தென்றால் இது பஞ்சாகிய காரணம் தனக்கு வேறு ஜாதி யான கடகலசாதிகளாய் அல்லது அக்கினியாய் விரிந்ததென்றாற் போல விருத்தமாமே யெனின்.

விடை:—காரணம் கெட்டுக் காரியப்படுவது ஒரு வகையும் கார ணம் கெடாமல் விகாரமடைந்து காரியப்படுவது ஒருவகையும் காரணங் கெடாமலும் விகாரமடையாமலும் காரியப்படுவது ஒரு வகையும் ஆக மூன்றுவகை காரண காரியங்களுண்டு. வித்து காரணம், விருக்ஷம் காரியம். வித்துகெட்டு விருக்ஷமாகக் காரி யப்பட்டது. மண் காரணம், கடகலசங்கள் காரியம் மண்கெடாமல்

விகாரமடைந்து கடகலசங்களாகக் காரியப்பட்டது. கானலில் தோன்றும் ஜலத்தில் கானல் காரணம், ஜலம் காரியம். கானல் கெடாமலும் விகாரமடையாமலும் ஜல ரூபமாகக் காரியப்பட்டது. இந்த மூன்றாவதை விவர்த்த காரண காரியமென்று சொல்லப்படும். பிரம்மம் உலகாய் விரிந்த தென்றால் வித்து விருக்ஷமானது போலுமல்ல. மண் கடகலசங்களானது போலுமல்ல. பின்னை எப்படியெனின், கானல் ஜல மானதுபோலென்க. கானலின் வேறு ஜாதியும் எதிர் ஜாதியுமான ஜலம் அதில் கற்பிதமாகத் தோன்றுவது போல் பிரம்மத்தின் வேறு ஜாதியும் எதிர் ஜாதியுமான சகல பிரபஞ்சங்களும் அதில் கற்பிதமாகத் தோற்றுகின்றன. வித்து எதார்த்தத்தில் மரமானதினால் வித்துகெட வேண்டியதாயிற்று. மண் எதார்த்தத்தில் கடமானதினால் மண் விகாரமடைய வேண்டியதாயிற்று. கானல் எதார்த்தத்தில் ஜலமாகாமல் அதில் ஜலரூபம் கற்பிதமாகத் தோன்றினதினால் கானல் கெடாமலும் விகாரப்படாமலும் இருந்தபடி கானலாகவேயிருக்கிறது.

மண்ணில் கடசக்தியும் பஞ்சில் படசக்தியும் அடங்கியிருப்பதுபோல் கானலில் ஜலத்தோற்ற சக்தி அடங்கியிருக்கிறது. மண்ணில் படசக்தி யில்லாததினால் மண் படமாகிறதில்லை. பஞ்சில் கடசக்தி யில்லாததினால் பஞ்சு கடமாகிறதில்லை. கானலில் கடத்தோற்ற சக்தி, அல்லது படத்தோற்ற சக்தி யில்லாததினால் கானல் கடபடங்களாகத் தோற்றுவதில்லை. பிரம்மத்தில் சர்வ சக்தியுமிருப்பதினால் அது சகல பிரபஞ்சங்களையும் தன்னிடத்தில் கானலில் ஜலம்போல் கற்பிதமாகத் தோற்றுவிக்கின்றது. அந்த சக்தி பிரம்மத்தில் இருப்பதுமல்ல, இல்லாததுமல்ல. அவாந்தர சக்தி, அந்த சக்தி பிரம்மமுமல்ல, பிரம்மத்தையன்றி வேறுமில்லை. அதுதான் மாயா சக்தியென்று சொல்லப்படுவது. மாயையென்பது பிரம்மத்தின் சக்தியேயல்லாது அது ஓர் தனிமுதலான பொருளல்ல.

## பிரமகீதை கேனோபோப நிடதம்.

எப்பொருளு மாயையினா லெனச்சிலவரியம் புவர்கண்
மெய்ப்பரமன் றனையொழிய வேறொரு மாயையுமில்லை
ஒப்பரிய பரனொழிய வொருமாயை யுண்டாகில்
அப்பரமன் றன்பெருமைக் கதுகேரே யழிவன்றோ.



## கைவல்லிய நவநீதம்

சத்தி சத்தனைத்தவிர வேறன்று காண்சத்தனுமாயாவி
வித்தைகாட்டிய விந்திரஜாலம் போய்வித்துவ னும்போல
புத்திமைந்தனே சத்திமனாகிய பூரணவான் மாவாம்
வத்துநிர்ணயஞ் சொன்னதிட்டாந்தத்தின் வழிகண்டு தெளிவாயே.

வினா:—கானலானது கண்ணுக்குப் புலப்படுகிற எதார்த்தமான உருவப் பொருளா யிருப்பதால் அதில் கற்பிதமான ஜலரூபம் தோற்றக் கூடும். உருவமே யில்லாமல் அருவப் பொருளா யிருக்கிற எதார்த்த பிரம்மத்தில் உருவப் பொருட்களான கற்பிதப் பிரபஞ்சம் எப்படித் தோற்றும்?

விடை:—கானலில் ஜலம்போல் பிரம்மத்தில் உலகம் என்ற உபமானம் ஒரு எதார்த்தப் பொருளில் மற்றொரு கற்பிதப்பொருள் தோன்றலாம் என்பதற்கு மாத்திரமேயாம். எதார்த்தமான அருவப் பொருளில் கற்பிதமான உருவப்பொருள் தோற்றுவதற்கு கனா உலக திருஷ்டாந்தம் கூறப்படும். அதெவ்வாறெனின்; மனமென்பது கண்ணாதி ஞானேந்திரியங்களுக்குப் புலப்படாத ஓர் அருவப் பொருளாயிருக்கிறது. அந்த அருவப் பொருளான மனதில் கனாக்காக்ஷியான கற்பித உலகம் தோன்றுகிறதல்லவா? அதேபோல் அருவப் பிரம்மத்தில் உருவப் பிரபஞ்சம் தோன்றுகிறது.

வினா:—சொற்பன உலகத்தைப் பொய்த்தோற்ற மென்பது யாவர்க்கு மனுபவ மாதலால் பொருந்தும். ஜாக்ரஜகத்தை அவ்வாறு பொய்த் தோற்ற மென்பது பொருந்துமா?

விடை:—ஏன் பொருந்தாது? சொற்பனப் பொருள்கள் அற்ப நேரம் அனுபவிக்கப்படுகின்றன. ஜாக்ரப் பொருள்கள் அதிக காலம் அனுபவிக்கப்படுகின்றன. சொற்பன உலகம் அற்பநேரமிருந்து அழிகின்றது. ஜாக்ரஜகம் அதிககால மிருந்து அழிகின்றது. ஜாக்கிரத்தில் எப்படியோ அப்படியே சொர்ப்பனத்தில் கண்ட அன்ன பானாதிகளை அருந்துவதும் அதிற் கண்ட கன்னிகையைக் கலந்து கலிதமாய்ப் போவதும் அனுபவமே. மொத்தத்தில் சொர்ப்பனக் காக்ஷி போல்வதுதான் ஜாக்ரக்காக்ஷியும். ஆனால்அது கணசொர்ப்பனம், இது தீர்க்க சொர்ப்பனம்; இதுதான் வித்தியாசம். அன்றியும் தூலசரீர சம்பந்தமில்லாமல் சூக்கும

சரீரம் மாத்திரம் தனித்து நிற்கு மவசரத்தில்: காணப்படுவது சொற்பனஜகம். தூலசரீரமும் சூக்கும சரீரமும் கலந்து நிற்கு மவசரத்தில் காணப்படுவது ஜாக்ர உலகம். சூக்கும தேகத்தி லிருந்து சொற்பன வாழ்க்கையில் அற்ப நேரம் சுகதுக்காதிகளை அநுபவிப்பவனும் சூக்குமதூல தேகங்களிலிருந்து ஜாக்ரவாழ்க் கையில் அதிககாலம் இன்பதுன்பங்களை அநுபவிப்பவனும் ஒரு வனேயா யிருக்க அவனால் அற்ப நேரமநுபவிக்கப் பட்ட பொருளை பொய்த்தோற்ற மென்பது பொருந்து மென்றும் அதிக காலமநுப விக்கப்பட்ட பொருளை அப்படிச் செப்புவது பொருந்தா தென்றும் சொல்வதற்கு என்ன ஞாயமிருக்கிறது.

### கைவல்லிய நவநீதம்.

கற்பனைவந்தவாறு காட்டினேன் காண்ப வெல்லாஞ்
சொர்ப்பனம் போலவெண்ணித் துணிந்தவன் ஞானியாவான்

### கைவல்ய நவநீதம்,
### சீடன் வினா

யங்க யாசனன் முதற்பல தேவரும் பாருள பெரியோரும்
கங்கை யாதியாந் தீர்த்தமுந் தேசமுங் காலமு மறைகாலும்
அங்க மாறுமந் திரங்களுந் தவங்களு மசத்திய மெனச்சொன்னால்
எங்க ளையக னேயத னாற்குற்,” ‘மில்லையோ மொழிவீரே.

### ஆசிரியர் விடை:—

சொற்ப னந்தனிற் கண்டதைப் பொய்யென்று சொல்வது பிழையானால்
அற்ப மாயையிற் றோன்றிய ஜகங்களை யசத்தெனல் பிழையாமே
சொற்ப னந்தனிற் கண்டதைப் பொய்யென்று சொல்லலாமெனின்மைந்தா
வற்ப மாயையிற் றோன்றிய ஜகமெலா மசத்தியெ மெனலாமே.

வினா:—கற்பிதப் பிரபஞ்சத்துடன் எதார்த்தப் பிரம்மம் எவ் வாறு சம்மந்தப்பட்டிருக்கிறது?

விடை:—ஆகாயத்தினின்று முதித்த மற்ற நான்கு பூதங்களி லும் அவ்வாகாயம் கலந்துங் கலவாது தாக்கற்றிருப்பது போல் பிரம்மத்தினின்று முதித்த அவ்வாகாயாதி பிரபஞ்சங்களில் அப் பிரம்மம் கலந்துங் கலவாது தாக்கற்றிருக்கிறது. இதுவுமன்றி பல்



வேறுபட்ட நீர் நிலைகளில் வான சூரியன் ஒன்றே பலவாகப்பிரதி பலித்திருப்பதுபோல் பல்வேறுபட்ட சடஜீவர்களில் ஞானசூரிய னான ஒரே பிரம்மம் பலவாகப் பிரதிபலித்திருக்கிறது.

### ஆரியப்புலவர் பாகவதம்.

அருவமா மறிவானவனுக்கைகள் பலவும்
ஒருவனாகியே யுறைகுவ னென்பதை யுணர்ந்தேன்
பரிதிவானவன் ஒருவனே யாய்பல கடத்தின்
மருவுநீர்தொறு நிழல்பலவா யுறன் மதித்தேன்.

### கைவல்ய நவநீதம்.

அகமெனுமான்மா பூரணமேக மனேக விதஞ்சீவன்
அகமெனு மந்தக் காணவுபாதிக ளளவில்லையாதலினால்
சகமுழுதுங்குளிர் சந்திரனேகஞ் சலசந்திரர் பலவாஞ்
சகமதிலேரி குளஞ்சிறு குழிசால்சட்டி குடம்பலவால்.

வினா:—ஐக்கியமுத்தி கிட்டுவதற்குச் செய்யவேண்டிய பிரயத் தனம் என்ன?

விடை:—அது இலகுவில் கிட்டுவதல்ல. வேதாந்த நூல்கள் கூறும் ஞானபூமிகளைப் படிப்படியாக கடந்து செல்வதால் ஐக்கிய முத்திவாய்க்கும்.

வினா:—ஞானபூமிகள் எவை? அவற்றின் பெயர்கள் யாவை? அவற்றைக் கடந்து செல்வதென்றால் என்ன?

விடை:—வேதாந்த நூல்கள் ஞானபூமிகளை ஏழாக வகுத்துக் கூறுகின்றன. அவை முறையே சுபேச்சை, விசாரணை, தனு மானசி, சத்துவாபத்தி, சமுசத்தி, பதார்த்தாபாவனை, துரியம் எனப்பெயர் பெறுவனவாம்.

இவற்றின் விபரம்:—மித்தை (பொய்) யான ஜகஜீவபரங்களை சத்தியமெனக் கொள்ளும் துர்ச்சன சகவாசத்தை விட்டு சத்திய மான ஆன்ம (பிரம்ம) ஞானத்தை யடையவேண்டு மென்ற விருப் பம் வருவது சுபேச்சை என்றும்,

சத்தியமான பிரம்மம் ஒன்றே உளதெனக் கொள்ளும் சற் சனசங்கத்தை யடுத்து அவர்களின் உபதேச மொழிகளைக்கேட்

டும் ஞான நூல்களை ஆராய்ச்சி செய்தும் வருவது விசாரணை யென்றும்.

அவற்றில் முழு நம்பிக்கையுண்டாகி அதன் பயனாக ஈடணாத்திரயம் என்னும் மனைவி மக்கள் தனம் ஆகிய இம் மூன்றில் பற்றிய அவாவை அறுத்தல் தனுமானசி என்றும்,

இம்மூன்று ஏதுக்களாலும் மனதில் ஆன்ம (பிரம்ம) ஞானம் உதிப்பது சத்துவாபத்தி என்றும்,

மெய்ப்பொருளாகிய ஆன்மாவில் (பிரம்மத்தில்) மனமழுந்தி பொய்ப்பொருட்களாகிய சர்வத்தையும் மறந்துவிடுவது சமுசத்தி என்றும்,

அத்துவிதானந்தம் வந்துகாண்பான் காக்ஷி, காக்ஷிப்பொருள் என்னும் திரிபுடியுணர்வு போய்விடுவது பதார்த்த பாவனை என்றும்.

மெய்ப்பொருளாகிய பிரம்ம வஸ்துவிருந்த நிலையே தனது நிலையாய் அதுவே தானாயிருக்கக்கண்டு அதனாலெய்தும் மவுன சுபாவமே துரியம் என்றும் சொல்லப்படும்.

சொல்லிவந்த ஞானபூமிகள் எழில் சுபேச்சை விசாரணை தனுமானசியாகிய முந்தின மூன்று பூமிகளையும் கடந்து நாலாம் பூமியாகிய சத்துவா பத்திக்கு வாராதவர் அப்பியாசிகள் என்றும், நாலாம் பூமியைக்கடந்தவர் **பிரம்மவித்து** என்றும், சமுசத்தி என்னும் ஐந்தாம் பூமியைக் கடந்தவர் **வரன்** என்றும், பதார்த்த பாவனை என்னும் ஆறும்பூமியைக் கடந்தவர் **வரியான்** என்றும், துரியம் என்னும் ஏழாம் பூமியை அடைந்தவர் **வரிட்டன்** என்றும் சொல்லப்படுவார். பிரம்மவித்து, வரன், வரியான், வரிட்டன் ஆகிய இந்த நால்வரும் ஜீவன் முத்தர்களாம். இவர்கள் தாம் ஐக்கியமுத்தி வாய்க்கப் பெற்றவர்கள். அப்பியாசிகளோ படிப்படியாகப் பதவி முத்தியடைந்து ஐக்கிய முத்தி சேருவார்கள்.

ஏக பரிபூரண ஞானசொரூபியாய் விளங்கும் பிரம்மத்தில் இரண்டறக்கலந்து பிரம்ம வஸ்துவே தானாகிப் பிரம்மாநந்தத்தை யடைதல் ஐக்கிய முத்தியென்றும் சுவர்க்கபோகாதி சுகங்களில் இன்புற்று வாழ்தல் பதவி முத்தியென்றும் சொல்லப்படும்.



## கைவல்லிய நவநீதம்

### ஞானபூமிகளின் தொகை.

புலவர்கழ் முதற்பூமி சுபேச்சை விசாரணையிரண்டாம் பூமியாகு
நலதனுமா னசிமூன்றும் பூமிசத்து வாபத்தி நாலாம்பூமி
சொலுஞ்சமுசத்திப்பேரும் பதார்த்தாபா வனைப்பேருந்துரியப்பேரு
மலினமறு மகனேயைந் தாறேழு பூமிகளா வகுத்தார் மேலோர்.

### ஞானபூமிகளின் வகை.

துற்சங்க நிவர்த்திவந்து சிவஞானம் விரும்புவது சுபேச்சையாகும்
நற்சங்க மொழிவினவி ஞானநூல் பழகல்விசா ரணையாகும்பி
முற்சங்க வீடணைகள் விடறனுமா னசியிந்த மூன்றினாலுஞ்
சற்சங்க மனதிலுண்மை யறிவுதித்தல் சத்துவா பத்திதானே.

தத்துவத்தின் மனமுறைந்து மித்தையெலாமறத்தல் சமுசத்தி
[யாகும்
அத்துவிதா னந்தம்வருந் திரிபுடிபோம் பதார்த்தாபா வனையதாகும்
வத்துநிலை யிருந்தபடி யிருந்தமவு னசுபாவந் துரியமாகும்
இத்துரிய பூமியைமுன் றுரியாதீ தப்பதமென் றதுவுங்கேளாய்.

### அப்பியாசிகளும் ஜீவன் முத்தரும்.

முன்னிலங்க ளேறியமு வருமப்பி யாசிகளா முத்தரல்லர் [மாகுஞ்
பின்னிலங்கள் வரன்வரியான் வரிட்டனெனுஞ் சீவன்முத்தர் பேத
சொன்னநடுப் பூமிவந்த ஞானிடே பிரமவித்தாந் தூயமுத்தன்
இன்னமுமப் பூமிகளின் பெருமைத்தனை நீயறியயான்சொல்வேனே

நாலம்பூ மியின்வருமுன்மூன்றுபூ மியுமடைந்து நடந்துமாண்டோர்
மேலான பதமடைந்து பிறந்துமெல்ல மெல்லவந்து வீடுசேர்வார்
மாலான பவத்தில்விழார் முதற்பூமி கிடைப்பதுவே வருத்தமைந்தா
காலான முதற்பூமி கைவந்தான் முத்தியுங் கைவந்த தாமே.

குறிப்பு:—இஸ்லாமிய முவஹ்ஹிதுகளும் இந்து வேதாந்திகளும் இறைவனை எவ்வாறு ஒன்று படுத்துகிறார்களென்பதையும் எந்தெந்த விஷயங்களில் இருதாத்தாரும் ஏகோபித் திருக்கிறார்களென்பதையும் ஊகித்தறிவதற்கே இவ்வேதாந்த பகுதி இந்நூலுடன் இணைக்கப்பட்டது.

---